Vivaharabodini Series.

TAMIL

Revenue Board Standing Orders.

தமிழ்
ரெவினியூ போர்ட் ஸ்டாண்டிங்
ஆர்டர்கள்—என்னும்
ரெவினியூ சட்டம்.

BY

R. Subramanya Aiyar,

LAW PUBLISHER.

PUBLISHED

BY

M. V. Book Depot,

VEPERY-MADRAS.

1905.

 [*Price Rs. 1-4-0.*

2

ஸ்ரீ [illegible] புஸ்தகம்.

[illegible]

Vivaharabodini Series.

TAMIL

REVENUE BOARD STANDING ORDERS.

தமிழ்

ரெவினியூ போர்ட் ஸ்டாண்டிங் ஆர்டர்கள்.

லா பப்ளிஷர்

ஆர். சுப்பிரமணிய அய்யர்

அவர்களால்

மொழிபெயர்க்கப்பட்டது.

M. V. BOOK DEPOT,

VEPERY - MADRAS.

1905.

[Price Rs 1—4—0.

Printed at the Presidency Press, Vepery, Madras.

ரெவினியூ போர்ட் ஸ்டாண்டிங் ஆர்டர்கள்.

I-வது அத்தியாயம்.

1. நிலத்துக்குத் தீர்வை ஏற்படுத்துவதைப்பற்றிய நிபந்தனைகள்.

(போர்ட் ஸ்டாண்டிங் ஆர்டர் நெ. 1.)

1. ரயத்துவாரி நிலங்களுக்குத் தீர்வைபோடுவதைப்பற்றிய ஏற்பாடுகள்.

1. நிலங்களின் மாதிரியை யனுசரித்துத் தீர்வை ஏற்படுத்த வேண்டுமேயொழிய மற்றக்காரணங்களினாலல்ல.

2. கூடியவரையில் பூமியின் தரத்தின் வகுப்பு எங்கும் ஒரேமாதிரியா யிருக்கவேண்டும்.

3. தீர்வை, ஒருநிலத்தின் ஆதாயத்தில் பாதிபாகத்துக்குக் குறைவாகவே யிருக்கவேண்டும்.

4. புஞ்சை நிலத்துக்கு இருபோகத்தீர்வை ஏற்படுத்தக்கூடாது. தண்ணீர் பாய்ச்சலாதாரமுள்ள இருபோக நிலத்துக்கு இருபோகத் தீர்வைபோடலாம். இரண்டாம்போகத் தீர்வை முதல் போகத்தீர்வையில் சரிபாதியிருக்கவேண்டும். தண்ணீர் பாய்ச்சலுக்கில்லாவிட்டால் தீர்வையை வஜாசெய்யவேண்டும்.

5. தண்ணீர் பாய்ச்சல் குறைவாயிருந்தால், சமயத்துக்குத் தக்கபடி மூன்றில் ஒருபாகம், கால்பங்கு அல்லது அதற்குக் கீழ்ப்பட்டாவது இரண்டாந் தீர்வை வசூல் செய்யவேண்டும்.

6. நிலங்களை சாதாரணமாய் நஞ்சைபுஞ்சை யென்று இரண்டுவகுப்பாகப் பிரிக்கவேண்டும்.

7. ஒரு கிணற்றுக்குப் பத்துகஜத்துக்குள்ளாகவிருக்கிற நிலத்துக்கு நஞ்சைத் தீர்வைபோடவேண்டும்.

8. நிலங்களைப் பிரித்து, அந்த நிலங்களின் சராசரி இருபது வருஷத்து வரும்படியின்பேரில் தீர்வைபோடுவதும், பிறகு நிலங்களுக்கு தரம் ஏற்படுத்தி வேண்டிய ஏற்பாடுகள் செய்வதும் செடில்மெண்டாருடைய வேலை.

9. தீர்வை ஏற்படுத்தப்பட்ட நிலங்களில் சாகுபடி செய்த மாகூலைத்தவிற, உலோகவர்க்கங்களை வெட்டி எடுத்தால் அதற்கு வேறு தீர்வை விதிக்கப்படும்,

10. ஏற்பட்ட தீர்வை முப்பது வருஷத்திற்கொருதரம் மாற்றப்படும்.

11. போர்டார் அவர்களுடைய அனுமதியன்னியில் பைமாஷிலாவது, செடில் மெண்டிலாவது மாறுதல் செய்யக்கூடாது.

12. தீர்வை ஜாஸ்தியான நிமித்தம் நிலத்தை யொருவன் விட்டு விட்டு ஓடினல், அந்த சங்கதியைக்கீழ் உத்தியோகஸ்தர்கள் கலெக்டருக்கு அறிக்கை செய்யவேண்டும்.

13. இரண்டுவிதமான மாகூலை ஒரே தடவையில் சாகுபடி செய்து, இரண்டுதரம் அறுத்தாலும், ஒருபோகத் தீர்வைமட்டும் ஏற்படுத்தவேண்டும்.

2. ஜமாபந்திகாலத்தில், கணக்கிலிருப்பதைக்காட்டிலும் அதிகமாகவாவது, குறைந்தாவது இருக்கும் நிலத்திற்குத் தீர்வை.

கணக்கில் ஏற்பட்ட விஸ்தீர்ணத்திற்கு 100 - க்குப் பத்துமடங்கு அதிகமாக விருக்கிற நிலங்களுக்குத் தீர்வை போடவேண்டும். அதற்குக் குறைவாக நிலமிருந்தபோதிலும் மேலேசொன்னவிதமாகவே தீர்வை போடவேண்டியது.

அதிகத்தீர்வை நிலத்தின் விஸ்தீரணத்தால் உண்டானதாக எண்ணக்கூடாது. ஆனல், முதலில் ஏற்படுத்திய தீர்வை நிலத்தின் சாகுபடியைக்கொண்டு ஏற்படுத்தினதாக எண்ணவேண்டும்.

3. புஞ்சைக்குத் தண்ணீர்தீர்வை.

		முதல்வகுப்பு ஏரி, நதி, வாய்க்கால்.	இரண்டாம் வகுப்பு.
(1)	புஞ்சைநிலத்தில் நஞ்சை சாகுபடி செய்தால் ஏக்ரா. 1-க்கு.	4—0—0	3—0—0
(2)	இரண்டாம்போகத்திற்கு.	2—0—0	1—8—0
(3)	கரும்பு ,வெற்றிலே, வாழை,மஞ்சள், முதலான தோட்டப்பயிர்களுக்கு ஏக்ரா. 1-க்கு,	6—0—0	4—8—0
(4)	புஞ்சைநிலத்துக்குத் தண்ணீர் எப்போதாவது ஒரு சமயம் பாய்ச்சி சாகுபடி செய்தால்.	2—0—0	1—8—0
(5)	புஞ்சைநிலத்துக்கு சதாகாலம் தண்ணீர் பாய்ச்சினல், முதல் போகத்துக்கு.	3—0—0	2—4—0
	இரண்டாம்போகத்துக்கு.	2—0—0	1—8—0

1. புஞ்சைநிலங்களில் நஞ்சை தானியங்களை சாகுபடி செய்தால், அடியில்கண்ட மாதிரியாக தீர்வை ஏற்படுத்தவேண்டும்.

2. தண்ணீர்த் தீர்வை, சாதாரணமாய் எவ்வளவு விஸ்தீரணமுள்ள நிலம் சாகுபடி செய்யப்பட்டிருக்கிறதோ அதன்பேரில் ஏற்படுத்தவேண்டும்.

3. ஒரேநிலத்தில் பலவிதமான தானியங்களை சாகுபடி செய்தால், அந்தந்தப் பயிர்கள் எவ்வளவு விஸ்தீரணம் சாகுபடி செய்யப்பட்டதோ அதற்குத் தகுந்தபடி தீர்வை ஏற்படுத்தவேண்டும்.

4. பட்டாவில் சேராத நிலம் சாகுபடி செய்யப்பட்டால், சாகுபடிசெய்த நிலத்துக்குமட்டும் தீர்வை ஏற்படவேண்டும்.

மேல்கண்ட 1, 4 பாராக்களில் கண்டவிதிகள், தஞ்சாவூர், மதுரை, திருநெல்வேலி, மலையாளம், தென்கன்னடம், இந்த ஜில்லாக்களில் பிரயோசனப்படமாட்டாது.

5. புஞ்சைநிலத்தில் நாற்றுப்போட்டுத் தண்ணீர்பாய்ச்சினால் அதற்குத் தீர்வை விதிக்கக்கூடாது,

6. யாதொரு ஜலாதாரத்திலிருந்து ஊறிக் கசிந்துபோகும் ஜலத்தைப் பாய்ச்சினால் அதற்குத் தீர்வை கிடையாது.

7. கிராம அதிகாரி, ரிவினியூ இனிஸ்பெக்டர், இவர்களுத் திரவன்னியில் சர்க்கார் பாய்ச்சல் ஜலாதாரத்தின் ஜலத்தை சாகுபடிக்கு உபயோகிக்கக்கூடாது. அப்படி யுபயோகித்தால் தண்டத்தீர்வை விதிக்கப்படும்.

8. காட்டாற்றினின்று வரும் ஜலத்தை உபயோகித்தால் தீர்வை கிடையாது.

4. சொந்தக்கிணறுகள்.

1. சொந்தமாகக் கிணறுகள் வெட்டிக்கொண்டு அதினின்றும் ஜலத்தைப் பாய்ச்சிக்கொண்டால், அதற்குத் தீர்வை அதிகமில்லை. ஆனால், ஜில்லா முழுமைக்கும் தீர்வை அதிகரித்தால் அதற்கும் அப்போது தீர்வை அதிகரிக்கும்.

2. கிணறுகள் வெட்டுவதைப்பற்றி கலெக்டருக்கு தெரியப்படுத்துவது அனுவசியம். கர்ணன் தன் கணக்கில் பதிவுசெய்

துகொண்டதைக் கொண்டு கலெக்டர் தன் கணக்கில் பதிவுசெய்து கொள்வார்.

3 சர்க்கார் ஜலாதாரத்துக்குச் சமீபமாகக் குடிகள் சொந்த நிலத்தில் கிணறுகளை வெட்டிக்கொள்ளலாம். அப்படி வெட்டின கிணற்றிலிருந்து புஞ்சைநிலங்களுக்குத் தண்ணீர் பாய்ச்சினுல், அதற்குத் தண்ணீர் தீர்வை கிடையாது.

4. கலெக்டர் அனுமதியின்பேரில், சர்க்கார் ஜலாதாரத்தினின்றும் ஏற்ற முதலியவைகளால் தண்ணீரிறைத்தால், அப்படிப்பட்ட நிலங்களுக்கு முக்கால் தண்ணீர்த்தீர்வை விதிக்கப்படும்.

5. சொந்த ஏரிகளைக் கட்டிக்கொள்வது.

1. சொந்த ஏரிகளைக் கட்டிக்கொள்ள முதலில் கலெக்டருக்கு மனுச்செய்து, அவரால் உத்தரவுபெற்ற தாசீல்தார் அப்படி ஏரிகட்டிக்கொள்வதினுல் சர்க்கார் ஜலாதாரத்துக்காவது, கால்வாய்முதலிய ஜலாசயத்துக்காவது இடையூறு நேரிடாத ஸ்திதியிலிருப்பதாக அரிக்கை செய்ததின்பேரில், கலெக்டர் ஏரி கட்ட உத்திரவு கொடுப்பார். கலெக்டருக்கு தெரிவிக்காமல் எவனுவது ஏரிகட்டினுல், அதினுல் யாதொருவிதமான இடையூறு இல்லாதிருந்தபோதிலும், அதை நிறுத்திவிடவும், கட்டிமுடிவாயிருந்தால் அதை அவனுடைய பாத்தியத்திலிருந்து நீக்கவும் கலெக்டருக்கு அதிகாரமுண்டு.

2. சொந்த ஏரிகட்டும் விஷயத்தில், அந்த ஏரியிருக்கும் விஸ்தீரணத்தின் 10-வருஷ நிலத்தீர்வையை முன்னதாகக் கட்டிவிடவேண்டும். அதில்வரும் ஜலம் மற்றொருவனுடைய நிலத்தில் பிரவேசித்துத் தேங்கினுல், அவனுக்கு அவ்விஸ்தீரணமுள்ள பூமியை வேறொரு இடத்தில் கொடுக்கவேண்டும்.

3. ஏரிகட்டி முடிவானபிறகு, மராமத்து இலாகா அதிகாரி ஒருவரால் மேற்பார்வை பார்க்கவேண்டும். அப்படிப் பரிசோதனை செய்த உத்தியோகஸ்தர் பெரிய கலிங்கல் கட்டவேண்டுமென்றுவது, கனத்த கரைபோடவேண்டுமென்றுவது சொன்னதையனுசரித்து கலெக்டர்கொடுத்த கால அளவுக்குள், சொந்தக்காரன் அவைகளைக் கட்டாயம் செய்யவேண்டும். அப்படி அவைகளை மராமத்துச் செய்யாவிட்டால் சர்க்காரில் மராமத்துச்செய்து அவர்கள் வசத்திலே வைத்துக்கொள்வார்கள். பிறகு தண்ணீர்த் தீர்வையை வஜா செய்யமாட்டார்கள்.

4. வேலை துவக்குமுன் மராமத்து இலாகா அதிகாரிஸ்தல பரிசோதனை செய்யவேண்டியதில்லை. ஆனால், அப்படிப்பட்ட வேலை நடத்தவேண்டிய இடத்துக்குச் சமீபத்திலுள்ள சர்க்கார் ஜலாதாரத்துக்குக் கெடுதி நேரிடாதென்று மராமத்திலாகா அதிகாரிமூலமாய் திருப்திகரமான அபிப்பிராயம் ரிவினியூ அதிகாரிக்கு உண்டானபிறகுதான், அவர் அப்படிப்பட்ட ஏரியைக்கட்ட உத்தரவளிக்கவேண்டும்.

6. ஜீர்ணமான சர்க்கார் ஏரிகளை குடிகள் மராமத்துச்செய்வது.

1. ஐந்து வருஷத்திற்கு மேற்பட்டு சீர்கேடான நிலைமையிலிருக்கிறதும் மராமத்து இலாகாதார்ரர் மராமத்துவிஷயமான ஏற்பாடு செய்யாததுமான ஏரிகளைக் குடிகள் சொந்தச்சிலவைக்கொண்டு சீர்ப்படுத்தலாம். ஆனால், அந்த ஏரிக்குச் சம்பந்தப்பட்ட நிலத்திற்கு போர்டாரால் அந்தந்த ஜில்லாவுக்கு ஏற்படுத்தப்பட்டிருக்கிற தீர்வையாவது, குத்தகையாவது, அப்போதைக்கப்போது கலெக்டரால் ஏற்படுத்தப்பட்டபடி கட்டிவிடவேண்டும்.

2. மழையினால் நிரம்புகிற ஏரிகளென்பது:—யாதொரு ஏரியானது, மழைபெய்தபொழுது சுற்றுப்பக்கங்களில் நிரம்பிப் பிரவாகிக்கும் ஜலத்தால் நிரம்புகிறதோ அந்த ஏரியென்று பெயர். யாதொரு கலெக்டரானவர் அந்த ஏரியை ரிப்பேர்செய்ய உத்திரவுகொடுக்கலாம். ஆனால், அப்படிப்பட்ட ஏரி மழையினால் நிறைகிற ஏரியாவென்று மராமத்திலாகா உத்தியோகஸ்தரால் தெரிந்துகொள்ளவேண்டியது.

3. மேலும் கலெக்டர் மராமத்திலாகா உத்தியோகஸ்தருடன் கலந்து பேசி, கவர்ன்மெண்டாருடைய பாத்தியதைக்காவது குடிகளுடைய சுதந்திரத்துக்காவது பாதகமாக ஏற்படும் விஷயங்களைத் தீரவிசாரித்து நீக்கவேண்டும். அதுவுமல்லாமல் ஏரிகளெப்போது கட்டப்பட்டது, அதற்கு ஜலம் எப்படிவருகிறது, எத்தனை காலமாக மராமத்துச்செய்யாமலிருக்கிறது, புதிதாக ஏரிகட்டிய பொழுது சிலவழிந்த தொகையின் ஏறக்குறைய மொத்தம், முன் பத்துவருஷங்களில் மராமத்துக்காகச்சிலவான மொத்தத்தொகையும், கடைசியாக அப்படிச்செய்த மராமத்தின் மொத்தத்தொகையும், மராமத்துசெய்த ஏரியின் பாசனத்திலிருக்கிற நிலத்தின் விஸ்தீர்ணம்,

மராமத்துச்செய்தால் அதிலிருக்கும் ஆயக்கட்டு நிலத்தின் விஸ்தீ ரணம், அப்படிச்செய்தபின் சர்க்காருக்கு ஜலாதாரத்துக்கு பிர யோசனப் படுமாவென்றும், ரிபேர்செய்வதினல் பிறருடையசுதந் தரத்துக்கு ஏதாவது கெடுதிநேரிடக்கூடியதாவென்றும், சொந்தச் சிலவில் சீர்திருத்திக் கொள்வதால் அந்த ஏரிக்கு பாத்தியஸ்தர் களாயிருப்பவர் கவெல்லாரும் சேர்ந்திருக்கிறர்களாவென்பதும், டிஸ்ட்ரிக்ட் இஞ்சினீயரும் கலெக்டரும் யோசித்து தங்கள் அபிப் பிராயங்களை பாதகமின்றி போர்டாருடைய உத்திரவுக்கு தெரிவி த்து அனுமதிபெறவேண்டும்.

4. கலெக்டருக்கு மனுக்கொடுத்தால் அந்தமனுவைகலெக் டர் இஷ்டமிருந்தால் அங்கீகரிக்கலாம். கலெக்டர், கவர்ன்மெண் டாருக்கு இலாபத்தைக் கொடுக்கக் கூடியதாயிருக்கிற தென்கிற காரணத்தால் மனுவை ஏற்றுக்கொள்ளக் கூடாது. அந்த ஏரியின் ஆயக்கட்டிலுள்ள கால்வாசி நிலம் நஞ்சைப்பயிர் சாகுபடியாய்க் கொண்டிருந்தால் கலெக்டர் மனுவைத் தள்ளிவிடலாம்.

5. மராமத்து இல்லாமல் ஐந்துவருஷம் யாதொரு ஏரிபா ழாயிருந்தாலும், அந்த ஏரியின் கீழுள்ள நிலங்களில் கால்பங்கு சாகுபடியானல், அந்த ஏரியைப் பாழடைந்த ஏரியென்று எண் ணக்கூடாது. யாதொரு ஏரியைக் குடிகளுக்கு விடுவதினல் சர்க் கார் தீர்வை சாசுவதமாகக் குறைவதாயிருந்தால், அந்த ஏரியை விடும் விஷயத்தில் பிரதேச கவர்ன்மெண்டாருடைய அனுமதி பெறவேண்டும்.

6. மேலேகண்ட நிபந்தனைகளின்படி ஏரிகளை ஜனங்களுக்கு விட்டால் நிஷ்கரிஷையான ஆயக்கட்டுக்குத் தீர்வை, சாகுபடி செய்தாலும் செய்யாவிட்டாலும் கொடுக்கவேண்டியது.

7. எவர்களுக்கு யாதொரு ஏரிவிடப்பட்டதோ அவர்களுக்கு ரெவினியூ உத்தியோகஸ்தர்கள் 6 - வது பாராவில் கண்டவிஷய த்தை வற்புறுத்திச் சொல்லவேண்டும். சர்க்கார் பாக்கிக்காகக் கொஞ்சம் நிலம் ஏலம்போடப்பட்டால், அந்த நிலத்தை எடுக் கிறவனுக்குத் தண்ணீர்பாத்தியமுமுண்டு. ஏரிகளில் ஜனங்கள் செய்யும் மராமத்து விஷயமாய் கவர்ன்மெண்டார் யோசிக்கவே ண்டியதில்லை. ஆனல், ரிபேர்செய்யத்தவறினல் கலெக்டர் உத்திர வை ரத்துசெய்துவிடலாம்.

8. மேலேகண்ட நிபந்தனைகளின்படி ஒரு ஆயக்கட்டுக்கு மொத்தபாத்தியதை யுடையவன், கலெக்டருடைய உத்திரவன்னியில் அந்தபாத்தியதையை விட்டுவிடக்கூடாது.

7. தாங்கல்களை குடிகள் சொந்த மராமத்துச்செய்வது,

1, 50 ஏகரா விஸ்தீரணமுள்ள நிலத்திற்குப் பாயும்படியான ஜலமுள்ள ஏரியை அது பாழாயில்லாமலிருந்தால் நிலச்சொந்தக்காரனை மராமத்துசெய்துகொள்ளும்படியாய், அந்த ஏரியை கவர்ன்மெண்டார் விட்டுவிடலாம். ஆனால், அப்படி விடுகிற விஷயத்தில் சர்க்கார் வருமானத்திற்குக் குறைவுண்டாகக்கூடாது.

2. மேல்கண்ட விஷயத்துக்கு, கலெக்டருக்காவது, டிவிஷனல் உத்தியோகஸ்தருக்காவது மனுச்செய்து கொள்ளலாம். இது விஷயத்தில் கலெக்டருடைய தீர்மானம் கடைசியானது.

8. காட்டாறுகளிலிருந்தும், மடுவுகளிலிருந்தும் ஜலம்பாய்கிற நிலங்களுக்குத் தீர்வை.

1. காட்டாறு, மடுவு இவைகளினின்று ஒருநிலத்திற்குத் தண்ணீர்பாய்ந்தாலும், பாய்ச்சப்பட்டாலும், அந்த நிலங்களுக்குத் தீர்வைஜாஸ்தி, அல்லது, பசலி ஜாஸ்தியாவது விதிக்கக்கூடாது. அப்படிப் பாய்ச்சிக்கொள்வதனால் சர்க்கார் ஜலாசயத்துக்குக் குறைவுநேரிடக்கூடாது. எவனாவது மேலேகண்ட காட்டாற்றுக்கு அணைகட்டிவிட்டு தண்ணீர் பாய்ச்சிக்கொள்ள இஷ்டப்பட்டால் இதனடியில் கண்ட விதியை அனுசரிக்கவேண்டும். அந்தவேலையைச்செய்ய உத்தேசித்தவன், தான்செய்யவேண்டிய வேலையின் சுபாவத்தையும், இடத்தையும் விவரமாய் கண்டெழுதி கலெக்டருக்கு மனுச்செய்யவேண்டும். அப்படிவந்த மனுவை கலெக்டர் தாசில்தார் அல்லது மற்ற ரிவினியூ உத்தியோகஸ்தருக்காவது அனுப்பி, அதில்கண்ட இடத்தை நேரில பரிசோதனைசெய்து, அப்படி வேலைசெய்வதினால் சர்க்கார் ஜலாதாரத்துக்காவது, மற்றக் குடிகளின் உபயோகத்திலுள்ள சொந்த ஏரி, ஆறுமுதலிய ஜலாதாரங்களுக்காவது கெடுதிநேரிடுமாவென்பதையும், பக்கநிலங்களிலுள்ள பயிர்களுக்கு கெடுதியுண்டாகுமாவென்பதையும் விசாரித்து அறிக்கைசெய்யும்படியாய்ச் செய்யவேண்டும்.

அப்படியாதொரு இடஞ்சலுமில்லையென்று ரிப்போர்ட்டுவந்ததன்மேல், கலெக்டர் மனுதாரனுக்கு வேலையை நடத்த உத்தர

வளிக்கலாம். அப்படிச்செய்யும் வேலையை, மராமத்து இலாகா உத்தியோகஸ்தர் சரியென்று ஒப்புக்கொள்ளவேண்டும்.

மராமத்திலாகா உத்தியோகஸ்தர் சிலவேறுபாடுகள் செய்ய வேண்டுமென்றபிப்பிராயப்பட்டால் அவர் சொல்லுகிறபடியே செய்யவேண்டும். கலெக்டரால் உத்திரவுகொடுத்தபடி சரியான காலத்திற்குள் அப்படிப்பட்ட மாறுதல்களைச்செய்யத்தவறினல், கவர்ன்மெண்டார் யாதொரு காம்பன்சேஷன் கொடாமலே தங்கள்வசம் எடுத்துக்கொண்டு அந்தவேலையைச்செய்து, பிறகு அதிக தண்ணீர் தீர்வை விதிப்பார்கள். அப்படிப்பட்ட வேலையால் பிறருக்கு இடஞ்சல் நேரிடுகிறதாயிருந்தால், அவர்கள் ஆட்சேபணம் செய்கிறதில்லையென்கிற சம்மதிப்பத்திரத்தை தாக்கல் செய்ய வேண்டும். மேற்குறித்த விதிகளெல்லாம் காட்டாற்றைக்குறித்தவை.

9. தனிமரங்களும், சர்க்கார் தோப்பு நிலங்களும்.

1. பட்டாமூலமாகவாவது, இனமாகவாவது, புறக்கடையிலாவது யாதொருவிதமான நிபந்தனையில்லாமல் விடப்பட்ட நிலங்களிலிருக்கும் மரங்களை சர்க்காருத்தரவன்னியில் உபயோகப்படுத்திக்கொள்ளலாம்.

2. மலையாளம், திருநெல்வேலி, தஞ்சாவூர்இந்த ஜில்லாக்களில் தவிர, மற்ற ஜில்லாக்களில் பட்டாநிலங்களில் விருட்சங்களைப்பயிர்செய்தால், அவைகள் அந்த நிலத்துப் பட்டாதாரனுடையதாகும். இதனல்நிலங்களும், புறக்கடைகளிலு மிருக்கிற விருட்சங்களுக்கு மரத்தீர்வை கிடையாது.

3. ஜலாதாரமில்லாத புஞ்சைநிலங்களில் விருட்சங்களை வைத்து சர்க்கார் ஜலாதாரத்தினின்று தண்ணீரிறைத்து விருத்திசெய்தால் தண்ணிர் தீர்வைகொடுக்கவேண்டாம். ஆனல், தென்னை வாழை முதலிய விருட்சங்களை ஜலாதாரமுள்ள நஞ்சையில் பயிர்செய்தாலும், நிலத்தின் மாதிரிக்குத் தக்கபடி ஒருபோகத் தீர்வையோ அல்லது இருபோகத் தீர்வையோ கொடுக்க வேண்டும்.

4. புறம்போக்கு நிலத்துக்குப் பட்டா எற்படவேண்டியிருந்தால் தார்காஸ்து மூலமாய் அந்த நிலத்தையடைந்தவன் அவ்விடத்திலுள்ள மரங்களின் கிரயத்தைக் கொடுக்கவேண்டும்.

5, சர்க்கார் தோப்புகளை, தரத்தீர்வை கொடுக்கும்படியாய் ஏற்பாடுசெய்து குடிகளுக்கு விட்டுவிடலாம். அப்படி விடுகிறவிஷயத்தில், தோப்புவைத்து வளர்த்தவனுடைய சந்ததியார்களுக்கு முதல்பாத்தியமுண்டு.

6. மரத்தீர்வை யேற்பட்ட விருட்சங்கள் புறம்போக்கு நிலத்திலிருந்தால், அந்த நிலத்தை எவனாவது தர்க்காஸ்துசெய்தால், அவனுக்கதை விடுவதற்குமுன், அந்த விருட்சங்களுக்கு மரத்தீர்வை கட்டுகிறவன் தானே தரத்தீர்வை கட்டுவதாக ஒப்புக்கொண்டால் அவனுக்கே அதை விட்டுவிடவேண்டும். தரத்தீர்வையைக் காட்டிலும் மரத்தீர்வை அதிகமாயிருந்தால் அந்த நிலத்தை தர்க்காஸ்தில் விடக்கூடாது.

7. குடிகளுக்கு இந்தவிதம் மரங்களுள்ள நிலத்தை விடுவதில் கலெக்டர் தீர விசாரித்துவிடவேண்டும். ஆனால், அசாத்தியமான மரங்களிருந்தால் அந்த நிலத்தை சர்க்காரில் சொந்தமாகவே வைத்துக்கொள்ளவேண்டும்.

8. சில நிலங்களிலுள்ள மரங்களுக்குக் கிரயம் வாங்காமலே அந்த நிலங்களை தர்க்காஸ்துதாரனுக்குக் கொடுக்கலாம். ஆனால், தர்க்காஸ்துதாரன் அம்மரங்களின் பலனைமட்டும் அனுபவிக்கலாமேயொழிய அவைகளை வெட்ட அதிகாரமில்லை.

9. நிலத்தீர்வை வசூலாகாத தோப்புகளை கலெக்டர் மரத்தீர்வைக்கு விட்டுவிடலாம்.

10. சிலவிடங்களில் நிலப்பட்டா ஒருவன்பேரிலும் மரப்பட்டா ஒருவன்பேரிலுமிருந்து, மரப்பட்டாதாரன் நிலப்பட்டாதாரனிடம் தீர்வையைக் கொடுக்கமாட்டேனென்றால், கலெக்டர் ஒவ்வொருவரிடத்திலும், அவனவன் கொடுக்கவேண்டிய வரியை வசூல்செய்யலாம். வரிகட்டத் தவறினால் மரத்துடன் நிலத்தை ஏலம் போடலாம். ஆனால், மரத்தைமாத்திரம் தனியாக ஏலம் போடப்படமாட்டாது. தசபந்தம் இனாம்தார்கள் மாமூல்பிரகாரம் ஏரிகளிலிருக்கும் விருட்சங்களை உபயோகப்படுத்திக்கொள்ளலாம். ஏரிகளை நல்ல ஸ்திதியில் வைத்துக்கொள்ளும் நிமித்தம் ஏரிக்கரையிலிருக்கும் விருட்சங்களும் அவர்களுக்குச் சொந்தமானது.

10. பொதுஜன உப்யோகத்திற்கும், சொந்தத்திற்கும் வைக்கப்படும் தோப்பு.

1. தர்ம காரியத்திற்கு தோப்பு வைக்கவேண்டுமென்று நினைப்பவன், முதலில் டிவிஷனலாபீசர் அனுமதி பெற்றுக்கொள்வது அவசியம் அப்படிச் செய்யாவிட்டால் அதற்கு முழுத்தீர்வை கொடுக்கவேண்டும். யாதொரு சத்திரம் அல்லது பொதுமடம் இவைகளுக்கருகில் தோப்பு வைத்துக்கொள்ளலாமென்று கலெக்டர் உத்திரவுகொடுத்தால் அவ்வுத்திரவுபெற்றவன் அந்தத் தோப்பின் மரங்கள் பெரிதாகும்வரையில் அந்த நிலத்தில் ஏதாவது சாகுபடி செய்துகொள்ளலாம். மரங்கள் பெரிதாகியபின்னர் அவைகளிலிருந்து உண்டாகும் பலனைத் தர்மத்துக்கு உபயோகப்படுத்தினால் கலெக்டர் தீர்வையை வஜாசெய்துவிடுவார்.

2. சுவயப் பிரயோசனத்துக்காக விறகு முதலிய எரி கருவிகளைப் பயிரிடுவதற்காக நிலங்களில் தோப்பு வைக்கவேண்டுமென்று கலெக்டரைக்கேட்டால் அவர் அதற்கு அனுமதிகொடுப்பார். சாகுபடி செய்தாலும் செய்யாமற்போனாலும் அதில் 20 வருஷத்திற்குத் தீர்வையில்லை. இதன்படி கொடுக்கப்பட்ட நிலம் 10 வருஷகாலமாகக் கரம்பாகவிருக்கிற நிலமாகவிருக்கவேண்டும். சாகுபடி ஆகக்கூடிய நிலத்தில் தோப்புவைத்தால், அதில் செடிவைத்த காலமுதல் சாகுபடியானாலும், ஆகாவிட்டாலும் பூராத்தீர்வை கொடுக்கவேண்டும். மேலே சொன்ன 20 வருஷத்திற்குப் பிறகு பூராத்தீர்வை வசூல்செய்யப்படும்.

3. மரத்தீர்வை இனும் செய்யப்பட்ட தோப்புகளுக்கு சர்க்கார் ஜலத்தைப் பாய்ச்சினால் அதற்குத் தண்ணீர்த்தீர்வை வசூல் செய்யப்படும். மேலே கண்டவிதமாக நிலத்தைப்பெற்றவன் கவுலில்கண்ட ஷரத்தை மீறி நடந்தால் அப்படி மீறி நடந்த நாள் முதல் அந்த நிலத்துக்கு முழுத் தீர்வை கொடுப்பதுடன் கவுலும் ரத்தாய்விடும். மேலே கண்ட நிபந்தனைப்படி நிலத்தைப்பெற்றவன், அதில் கொஞ்சங்கொஞ்சமாக மரங்களைவைத்து 5 வருஷங்களுக்குள்ளாக தோப்பைப் பூர்த்திசெய்யவேண்டும்.

11. அக்கிரமமாய் நிலங்களில் ஆக்கிரமித்தல்.

1. பட்டணங்கள், கிராமங்கள் அல்லது அதற்குச் சமீபமாயிருக்கப்பட்ட சர்க்கார் நிலங்களிலும், இராஸ்தாக்களிலும், தெருக்

களிலும், சதுரங்களிலும், மைதானங்களிலும், யாவரும் ஆக்கிரமிக்காதபடி பார்த்துக்கொள்வது ரிவினியூ உத்தியோகஸ்தருடைய வேலை.

2 மேலும் அவர்கள் கிராமப் பொதுப் பிரயோசனத்துக்காக ஏற்பட்டிருக்கிற ஸ்மசானம், சந்தை தோப்பு முதலான நிலங்களில் யாரும் பிரவேசிக்காதபடி பார்த்துக்கொள்ளவேண்டியது. ஆனால் மேலே குறித்த நிலங்கள் அவசியமாய் உபயோகிக்கவேண்டிய இடத்துக்கு அதிகமாயிருந்தால், அப்படி அதிகமான இடத்தைமட்டும் தர்க்காஸ்துமூலமாய் விடலாம். இது விஷயத்தில் வெகுநாளாக அனுபவித்துவருகிற கிராமத்தாரின் சுதந்தரத்தைக் கெடுத்து அல்ப வரும்படிக்காக ஆசைப்பட்டு சர்க்காரில் அதைப் பட்டா செய்துகொடுக்க உடன்படார்கள்.

12. இருபோகசாகுபடி.

1. ஒருபோகத்தீர்வை ஏற்பட்ட நஞ்சையில் இரண்டாம் போகம் சாகுபடிசெய்தால், அந்த விரண்டாம்போகத்திற்கு தண்ணீர்த்தீர்வை கொடுக்கவேண்டும். தண்ணீர்த்தீர்வை பிரத்தியேகமாக ஏற்பட்டிருந்தால் அதையும் கொடுக்கவேண்டும்.

2. இரண்டுக்கு மேற்பட்ட மூன்றும்போகத்திற்கு தீர்வை கிடையாது.

3. நஞ்சையில் புஞ்சைப்பயிரை சர்க்கார் ஜலத்தால் சாகுபடிசெய்தால், அதற்கு நஞ்சைத்தீர்வை வசூல்செய்யப்படும். அந்தப் பயிரை இரண்டாம்போகத்தில் பயிர்செய்தால் அதற்குப் புஞ்சைத்தீர்வைமட்டும் ஏற்படும்.

4. தர்மத்துக்காக ஏற்பட்ட ஒருபோக நஞ்சையில் இரண்டாம்போகம் பயிர்செய்தால், அந்த விரண்டாம்போகத் தீர்வையை சாகுபடிசெய்தவனிடமிருந்து வாங்கவேண்டும். கவலையால் ஜலத்தையிறைத்து நிலத்துக்குப் பாய்ச்சினால், அந்தந்த ஜில்லாவுக்கு ஏற்பட்ட விதிப்படித் தீர்வையில் கொஞ்சம் வஜாசெய்யவேண்டும். வஜா ஏற்படாத பட்சத்தில், குறைந்தது ஏகரா ஒன்றுக்கு ஒரு ரூபா அல்லது கால்வாசித் தண்ணீர்த் தீர்வை போடவேண்டும்.

13. ஜலாதாரமில்லாத நஞ்சை நிலம்.

யாதொரு பாழான ஏரியை மராமத்திலாகாதார் கட்டவேண்டுமென்கிற ஆலோசனையில்லாதவர்களாயிருந்தும், அப்படிப்பட்ட

ஏரியின்கீழ் ஐந்துவருஷகாலமாக நஞ்சைநிலமென்று தரமேற்பட்டிருக்கிற நிலங்களையும், எவ்வித ஜலாதாரமாவதில்லாத நிலங்களையும், நில விஸ்தீரணத்திற்குத் தகுதியான புஞ்சையாக விட்டுவிடவேண்டும். ஆனல், அப்படிப் பாழான ஏரியை மறுபடி சீர்ப்படுத்தவும் அதன்பிறகு தண்ணீர்த்தீர்வை போடவும் அல்லது அதை எவனுக்காவது சீர்ப்படுத்திக்கொடுப்பது முதலான சுதந்திரங்களை கவர்ன்மெண்டார் விட்டுவிடக்கூடாது.

14. உடைந்துபோன ஏரியின் உள்வாயிலுள்ள நிலங்கள்.

1. யாதொரு ஏரி எடுபட்டுப்போய்விட்டால், அதன் உள்வாயிலுள்ள நிலங்களை ஆயக்கட்டுக்குக் கீழ்க்கொண்டுவந்து, அரை ஏகருக்கு அதிகப்படாத துகங்களாகப் பிரித்து ஏலம்போடவேண்டும். அப்படி எடுத்துவிட்ட ஏரியின்கீழ் இனும் நஞ்சைநிலங்களிருந்தால் அதற்கேற்பட்ட தீர்வையைப் புஞ்சைத்தீர்வையாக மாற்றவேண்டும், அல்லது அந்த நிலத்தின் விஸ்தீரணத்திற்குச் சரியானபடி வேறு இடத்தில் ஜலாதாரமுள்ள நஞ்சை நிலத்திற்குப்பதிலாக மாற்றிக்கொள்ளலாம்.

15. ஹுக்குசாசனம்.

1. சர்க்காரால் விற்கப்பட்ட புறம்போக்கு நிலத்துக்குத் தீர்வை ஏற்படுத்தி வசூல்செய்வதற்கும், ஹுக்குசாசனம் எழுதுவதற்கும் அடியில் கண்ட நிபந்தனைகளை அனுசரிக்கவேண்டும். இந்தப் பத்திரத்தைத் தயார்செய்ய கலெக்டர் ஒரு உத்தியோகஸ்தனை உத்திரவாதியாக நியமிக்கவேண்டும்.

2. அந்த சாசனப் பத்திரத்தின் தலைப்பிலுள்ள கலங்களை கவர்ன்மெண்டு செகிரிடெரி எழுதிப் பூர்த்திசெய்யவேண்டும். அது விஷயமாய் கலெக்டருக்கு எவ்வித பாத்தியமுமில்லை.

ஹுக்குசாசனம் அல்லது 12 - வருஷம் சர்க்கார்த் தீர்வை செலுத்திவந்தால், 2-வது பாராவில் கண்டபடி நோட்டீசுகொடுத்து, அதற்கு ஒருவரும் ஆட்சேபணை மனுப்போடாமலிருந்தால் பட்டாவை மாற்றிவிடலாம். இவ்விதம் மாற்ற ரிவினியூ அதிகாரிகள் தாங்களேயாவது, மனுவின்பேரிலாவது செய்யலாம்.

3. பத்திரங்களின் பிரதிகள் ஒன்றுபோல் ஒரேமாதிரியாயிருப்பதுடன், பிளானும் அவைகளுடன் அப்படியே யிருக்கவேண்டும்.

4. பத்திரத்தில் இடமிருந்தால் பிளானை அதில் எழுதிவிட லாம். இடமில்லாவிட்டால் பிரத்தியேகமாக வெழுதி அதில் சேர்க் கவேண்டும். அதில் சர்க்கார் செகிரிடெரி கையெழுத்துவைப்பார்.

5. போர்டாருக்கனுப்பப்படும் பிளானில் தேதி எழுதியிருக் கவேண்டும்.

6. பத்திரத்தில் கண்ட இருதரத்தாருடைய முழுப்பெயரும், அதற்குமுன் ("மிஸ்டர்") அல்லது "ம-ா-ா-ஸ்ரீ" என்றும், குடி யிருப்பு இடம், தொழில் அல்லது உத்தியோக முதலியவைகளை விவரமாய் எழுதவேண்டும்.

7. பத்திரத்தில் காலியிடமிருந்தால் அதில் கோடு கிழித்துவி டவேண்டும்.

8. விற்பனை செய்யவேண்டிய நிலத்தின் சுற்றெல்லைகளை விவ ரமாய்க் காட்டவேண்டும்.

9. நிலத்தின் விஸ்தீரணத்தை எழுத்தால் விவரமாயெழுத வேண்டும்.

10. பெயர்களையும், இடத்தையும் எழுத்துப் பிழையின்றி எழு தவேண்டும்.

11. பத்திரமெழுதி முடிந்தவுடன், அதைக் கலெக்டர் ரிவி னியூ போர்ட் துவாராவாக, சர்க்கார் செகிரிடெரியின் கையெழுத் துக்கனுப்பவேண்டும்.

12. செகிரிடெரி கையெழுத்துச்செய்துப் பத்திரம் திரும்பி கலெக்டருக்கு வந்ததும் அதில் நிலம் வாங்கினவன் கையெழுத்துப் பெற்றுக்கொண்டு நிலத்தை விடவேண்டும்.

13. பத்திரத்தில் ஒரு சாட்சி போட்டால் போதும்; சாட்சி தன் ஊர், பெயர் முதலியவைகளை விமரமாயெழுதவேண்டும்.

14. பத்திரத்தில் கண்ட தப்பிதங்களை சர்க்கார் செகிரிடெரியே இனிஷியல் செய்யவேண்டும். கலெக்டர் செய்யக்கூடாது.

15. ஒவ்வொரு பத்திரத்திற்கும் நெம்பர் கொடுத்தெழுதவே ண்டும். அந்த நெம்பரைப் பிரதிவருஷமும் புதுப்பிக்கவேண்டும்.

16. கையெழுத்துச் செய்யும் உத்தியோகஸ்தன், கையெழுத்தைத்தவிர முத்திரை முதலியவை போடக்கூடாது.

17. 16-வது பாராவில் சொல்லியிருக்கிற சங்கதி ரயித்துவாரி நிலங்களின் பட்டாவுக்கு ஏற்பட்டதல்ல.

16. பட்டாவை மாற்றவேண்டிய விதிகள்.

1. ஒருவன் தன் சுயேச்சையாகவும், கோர்ட் டிகிரிக்காவது ஏலமெடுத்தபோதும், வார்சுபாத்தியத்தால் அடைந்தபோதும் பட்டா மாற்றப்படும்.

2. சுயேச்சையாய், சாசுவதமாயும், கொஞ்சகாலத்திற்கும் பட்டாவை மாற்றலாம்.

ஒரு பட்டாதாரன் தன் சுதந்தரத்தை வேறொருவனுக்கு மாற்றினால், அவர்களிருவரும் தாங்களாவது, தங்களதிகாரம்பெற்ற ஏஜெண்டுகளாவது ரிவினியூ அதிகாரிகளிடம் நேரில் மனுக்கொடுக்கவேண்டும். அப்படி மாற்றிக்கொள்ளும்போது இஷ்டமிருந்தால் கிராம முன்சீப் கர்ணன் இவர்களுடைய கையெழுத்தை அதில் வாங்கி அனுப்பியிருந்தால் அவர்களே சாட்சியாக எடுத்துக்கொள்வார்கள். அந்த மனுவின்பேரில் கலெக்டர் அல்லது மற்ற ரிவினியூ உத்தியோகஸ்தர் அப்படி மாற்றிக்கொள்ள உத்திரவு கொடுக்கலாம். இரண்டுபேரும் மனுவைக் கொடாமல் ஒருவன்மட்டும் கொடுத்தால் கொடாதவனிடம் வக்காலத்து வாங்கி ஆஜர்செய்யவேண்டும். உடனே கலெக்டர் இதை ஜில்லா கெஜட்டில் பிரசுரம் செய்வார். மூன்றுமாத காலத்திற்கு யாதொரு ஆட்சேபணையும் வராவிட்டால் பட்டாவை மாற்றிவிடலாம். ஏதாவது ஆட்சேபணை ஏற்பட்டால் அதை விசாரித்துத் தான் பட்டாசெய்யவேண்டும்.

3. குத்தகை, ஒத்திமுதலிய காரணங்களுக்காக நிலத்தை வேறொருவனுக்கு மாற்றியிருந்தால் அக்காலத்தில் பட்டாவை மாற்றுவது அனுவசியம். ஆனால், கொடுக்கிறவன், வாங்குகிறவனிரண்டுபேரும் இஷ்டப்பட்டால் கலெக்டர் முதலிய ரிவினியூ உத்தியோகஸ்தர் மாற்றிவிடலாம். மாற்றும்படி கொடுத்தமனுவில் கிராம முன்சீப், கணக்கன் இவர்கள் கையெழுத்திடாமற் போனால் மாற்றக்கூடாது.

4. கட்டாயப்படுத்திப் பட்டாவை மாற்றுதல் :—கோர்ட்டாருடைய முடிவான தீர்ப்பின்பேரிலாவது, ஏலமெடுத்த ஹக்கின்பேரிலாவது, பட்டாவை மாற்றுவிப்பதற்கு, அந்தக் கோர்ட்டுத்தீர்ப்பு, விற்பனை சர்ட்டிபிகேட்டு, அந்த நிலத்தை சுவாதீனப் படுத்துவதற்காகக் கொடுத்த கோர்ட்டார் உத்திரவு, இவைகளுக்குக் காபியை வாங்கி தாக்கல்செய்தால், அதன்பேரில் கலெக்டராவது, மற்றரிவினியூ உத்தியோகஸ்தராவது பட்டாவைமாற்ற உத்திரவு கொடுக்க வேண்டும். அப்படி நகல்களை வாங்கி ஆஜர்செய்வது சாத்தியப்படாத பட்சத்தில், மேல் 2 - வது பாராவின் கடைசியில் சொன்ன மாதிரி நடவடிக்கை நடத்தவேண்டும். பட்டாவைமட்டும் வேறொருவன்பேரில் மாற்றவேண்டுமென்று கோர்ட்டில் தீர்ப்பாயிருந்தால், அந்தத் தீர்ப்பின்படி கலெக்டர் பட்டாவை மாற்றிவிடலாம்.

இருகட்சிக்காரரும் பட்டாமாறுதலுக்கு மனுச்செய்துகொள்ளாதபட்சத்தில் அதை கிராமக்கணக்கன் தன்கணக்கில் எழுதிக்கொண்டு, ஜமாபந்திக்குப் பத்துநாள்களுக்குமுன் மேலுத்தியோகஸ்தர்களுக் கனுப்பவேண்டும். உடனே தாசில்தார் அது விஷயமாய் சம்பந்தப்பட்டிருக்கும் பேர்வழிகளை நோட்டீசு மூலமாய் வரவழைத்து விசாரித்துப் பட்டாவை மாற்றிவிடலாம்.

5. வாரிசுதாரனுக்குப் பட்டாவை மாற்றுவது—ஒருவனிறந்துபோனபிறகு பட்டாவை மாற்றுவதும், 7 வருஷகாலம் ஊரிலில்லாததினாலுண்டாகும் மாறுதல்களும் இதன்கீழ் விவரித்திருக்கின்றன.

ஒருவனிறந்தபிறகு அவனுடைய வார்சுக்கு விசாரணையில்லாமலே உடனேயாவது, ஜமாபந்திகாலத்திலாவது பட்டாவை மாற்றிவிடலாம். வார்சு ஏற்படும் விஷயத்தில் விவாதமுண்டானால், உடனே கலெக்டர் சம்மெரியாக சம்பந்தப்பட்டவர்களை விசாரித்து, விசாரணையில் ஏற்பட்ட ருசுவின்பேரில் தனக்கு இன்னார் பேருக்குப் பட்டாவைமாற்ற இஷ்டமிருக்கிறதென்று ஜில்லா கெஜட்டில் பிரசுரஞ்செய்யவேண்டும். அப்படிப் பிரசுரஞ்செய்த மூன்றுமாதத்திற்குள் மற்ற வார்சுதாரர்கள் சிவில்கோர்ட்டில் தாவாசெய்து, பிராதின்நகலை, கலெக்டருக்கு அனுப்பினால், அவர் அந்த தாவா முடிகிறவரையில் பட்டாவை மாற்றமாட்டார். அப்படிப் பிராதின்நகலை யனுப்பத் தவறினால் மூன்றுமாதங் கழிந்தவுடன் பட்டா

வை மாற்றிவிடலாம். ஜில்லா கெஜட்டில் பிரசுரஞ்செய்த நோட்டீசை, பட்டாமாறுதல் விஷயமாய் ஆட்சேபஞ்செய்த ஒவ்வொரு பேர்வழிக்கும் கொடுக்கவேண்டும். இறந்துபோனவனுடைய வார்சுதாரர்கள் ஒரே குடும்பமாயிருந்தால் அக்குடும்பத்தின் எஜமானனும் மானேஜராயும் இருக்கிறவன்பேரில் பட்டாசெய்யப்படும். வார்சுதாரர்கள் எல்லோரும் நிலங்களில் ஹக்கு ஏற்படுத்திக்கொண்டால் அவர்கள் பேருக்குக் கூட்டுப் பட்டாவாக மாற்றிவிடலாம்.

ஒருவன் ஏழுவருஷகாலமாக தேசாந்திரம்போய், உயிருடனிருக்கிறனென்று தெரிந்துகொள்வது அசாத்தியமாயிருந்தால், அவனிறந்தவனேப்போல மதிக்கப்பட்டு அவனுடைய பட்டாவை அவன் வார்சுக்காவது, வார்சில்லாவிட்டால் அந்த நிலம் எவன் அனுபோகத்திலிருக்கிறதோ அவன்பேரிலாவது பட்டாமாற்றப்படும்.

6. பட்டாவைமாற்ற யாருக்கு மனுச்செய்து கொள்வது—கலெக்டர், டிவிஷனல் ஆபீசர், தாசில்தார், டிப்டி தாசில்தார், தாலுகா சிரஸ்த்தார், ஹெட் அகவுண்டாண்டு, ரிவினியூ இனிஸ்பேக்டர், ரிஜிஸ்ட்ரேஷனபீசர், இவர்களிடம் மனுக்கொடுத்துப் பட்டாவை மாற்றிக்கொள்ளலாம். பட்டாதாரன் இறந்துபோனல், அவனுடைய வார்சின் பெயரை உடனே தாசீல்தாருக்கு கிராமக்கர்ணன் தெரிவிக்கவேண்டும். கலெக்டர், டிவிஷனல் ஆபீசர், தாசில்தார் இவர்கள் கடைசியாக பட்டாவைமாற்ற உத்திரவளிக்கலாம். ஆனல், கலெக்டரும் டிவிஷனல் ஆபீசரும், தாசீல்தார் அல்லது டிப்டி தாசீல்தார் இவர்களுடைய ரிப்போர்ட்டின்பேரில் பட்டாவை மாற்ற உத்திரவுகொடுக்கவேண்டும். டிப்டி தாசீல்தாரும், ரிவினியூ இனிஸ்பேக்டரும் தங்களிலாகாவில் உண்டான பட்டாவை கடைசியாக மாற்றிவிடலாம். ஆனல், பட்டாவைமாற்ற வேண்டுமென்று அதுவிஷயத்தில் சம்பந்தப்பட்ட இருகட்சிக்காரரும் நேரில் மனுக்கொடுத்துக் கொண்டால்மட்டும் ரெவினியூ இனிஸ்பேக்டர் அப்படிப்பட்ட மாற்றனுத்திரவைக் கொடுக்கலாம்.

யாதொரு சொத்தின் டிரான்சுபர் பத்திரத்தை ரெஜிஸ்டர் செய்யக். கொண்டுபோனல், அக்காலத்தில் அந்தப் பத்திரத்தை ரெஜிஸ்டர் செய்கிற ஆபீசர், பட்டமாற்றுதலுடன் டிரான்ஸ்பர் செய்யவேண்டுமா, வேண்டாமாவென்பதை விசாரித்து, அவர்கள்

சம்மதப்பட்டால் பத்திரம் ரெஜிஸ்ட்ரானவுடன், அவர்களிடத்தில் பட்டா மாறுதலுக்காக ஏற்பட்ட பாரத்தில் எழுதிய ஒரு மனுவை வாங்கி அதை டிப்டி தாசில்தாருக்காவது அனுப்பவேண்டும். தாசீல்தார் அந்த மனுவை அங்கிகரித்து உடனே பட்டா மாறுதலுக்கு உத்திரவுகொடுக்கலாம்.

மேல் பாராவில் கண்ட சங்கதி, சாஸ்வதத்தீர்வை ஏற்பட்டிருக்கிற நிலங்களுக்கும், இனும் நிலங்களுக்கும், மரங்களுக்குமட்டும் உரித்தானது. சாஸ்வதத்தீர்வை யேற்பட்ட, கிராமங்களுக்காவது அவைகளின் பாகத்துக்காவது பட்டா மாற்றவேண்டியிருந்தால் கலெக்டருக்கு மனுக்கொடுக்கவேண்டும்.

ரிஜிஸ்ட்ரார் முன்பாகவாவது, தாசீல்தார் முதலிய ரிவினியூ உத்தியோகஸ்தர் முன்பாகவாவது, பட்டாவை மாற்றக்கொடுத்த மனுவின்பேரில் பட்டா மாறுவதற்குள், பட்டாதாரன் தான் கொடுத்த மனுவை ரத்துசெய்துகொள்ளலாம்.

பட்டாவை மாற்றும்படி கொடுக்கும் மனுவில் ஒரு அணாஸ்டாம்பொட்டவேண்டும்.

பட்டாதார் பெயரை யெழுதியிருக்கும் ரெஜிஸ்டரில், அந்தந்தத் தேதிவரையில் சரியான பட்டாதாரருடைய பெயரை எழுதிவைக்கவேண்டும்.

17. நிலங்களை மாற்றுவது.

ஒரு கிராமத்திலுள்ள சொல்ப நிலங்களை மற்றொரு கிராமத்தில் சேர்க்க செட்டில்மெண்டு உத்தியோகஸ்தருக்கும் கலெக்டருக்கும் அதிகாரமுண்டு. பெரும்பாகத்தைச் சேர்க்கிறதாயிருந்தால் போர்டார் அனுமதிபெறுவதவசியம். ஒரு தாலூகா நிலங்களை மற்றொரு தாலூகாவிலும், ஒரு ஜில்லா நிலத்தை மற்றொரு ஜில்லாவிலும் சேர்க்கிற விஷயத்தில் கவர்ன்மெண்டார் உத்திரவு செய்யவேண்டும்.

18. ஜமாபந்தி.

1. ஜமாபந்தி அல்லது வருஷவாரி பைசலை ஒவ்வொரு தாலூகாவிலும் மூன்று விடங்களில் குறையாமல் செய்யவேண்டும். மறுநாளில் பைசல்செய்யவேண்டிய கிராமங்களின் பெயரை முதல் நாளே பயிரங்கமாகத் தெரிவிக்கவேண்டும். அப்படிப் பயிரங்கப்ப

டுத்தினுல்தான் கிராமக்குடிகள் தங்கள் குறைகளைச் சொல்லிக்கொள்ளவர சாதகமாயிருக்கும்.

2. தாலூகாவில், பசலிவருஷம் முடிவதற்குள் ஜமாபந்தி நடந்து அதற்குமேல் 15 தினங்களுக்குள் தாலூகாவின் பாக்கி வசூல் ஜாபிதா தயார்செய்யவேண்டும்.

3. ஐந்து வருஷத்திற்கொருதரம் ஜில்லா கலெக்டர் ஒவ்வொரு தாலூகாவின் கணக்குகளையும் தனிக்கைசெய்து ஜமாபந்தியை நடத்தவேண்டும்.

4. ஜமாபந்திகாலத்தில், ரயித்துவாரி கிராமக் கணக்குகளையும், சாஸ்வதத்தீர்வை யேற்பட்டிருக்கிற நிலங்களின் கணக்கையும், மைனர் இனும் கிராமக்கணக்கையும், சரிவரத் தனிக்கைசெய்து பார்க்கவேண்டும்.

5. ஜமாபந்தியில் கணக்குகளை கிராமக்கர்ணனை வைத்துக் கொண்டு செய்யலாம்.

19. ரிமிஷன் அல்லது வரி தள்ளுபடி.

(a) செடில்மெண்டான கிராமங்கள்.

1. ஜலக்குறைவு அல்லது வெள்ளப்பாழ் முதலிய காரணங்களினுல் பட்டா ஏற்பட்ட நஞ்சைகளில் சாகுபடி செய்திருந்த மாசூல் எல்லாம் நாசமாகப் போயிருந்தாலும், அப்படிப்பட்ட ஜலக்குறைவு அல்லது வெள்ளம் நிலக்காரனுடைய அஜாக்கிரதையால் உண்டாகாததாயிருந்தாலும், நிலக்காரன் வழக்கமாகச் செய்யவேண்டிய மராமத்து முதலிய வேலைகளைச் செய்யாத காரணத்தினுல் அப்படிப்பட்ட சேதமுண்டாகா திருக்கிறபட்சத்தில், அப்படிப்பட்ட நஞ்சைநிலத்தின் தீர்வை முழுமையும் வஜாசெய்யலாம்.

2. ஒரு வயல் முழுவதும் சாகுபடிசெய்யாமலிருக்கிற தருணத்திலும், பலவிதமாக முழு நஷ்டம் ஏற்பட்டபோதும் ரிமிஷன் கொடுக்கப்படுமேயொழிய, ஒரு வயலில் சாகுபடியாகாத கொஞ்ச பாகத்துக்குமட்டும் ரிமிஷன் கொடுக்கப்படமாட்டாது.

3. நிலத்தில் சாகுபடிசெய்த மாசூல் பூராகவாவது சாவியாய் போனுலும் ரிமிஷன் கொடுக்கப்படும். அப்படி ரிமிஷன் கொடுப்பது 4 அணு மதிப்புள்ள வரும்படிகூட கிடைக்காதபோதுமட்டும்.

4. ரிமிஷன் கொடுக்கவேண்டுமென்கிற பட்டாதாரன், ரெவினியூ இனிஸ்பெக்டருக்கு சரியானகாலத்தில் நோட்டீசு கொடுக்கவேண்டும்.

(b) செடில்மெண்டாகாத கிராமங்கள்.

1. செடில்மெண்டான நிலங்கள் விஷயத்தில் அனுசரிக்கவேண்டிய விதிகளையே இதற்கும் யனுசரிக்கவேண்டும்.

2. செடில்மெண்டாகாத சில நிலங்களுக்கு ரிமிஷன்செய்யவேண்டியபோது, நஷ்டம் நேரிட்ட அனேக நிலங்களின் நஷ்டத்தை சராசரியாகக் கணக்குப்பார்த்து ரிமிஷன்செய்யவேண்டும்.

(c) நஞ்சையில் புஞ்சை மாசூல் கிடைக்காதபோது ரிமிஷன்.

1. நஞ்சையில் புஞ்சைப்பலம் கிடைக்காவிட்டால், கிராமத்திலுள்ள புஞ்சைக்கு ஏற்பட்ட உயர்ந்த தீர்வை அந்த நிலத்திற்கு விதிக்கப்படும். அந்தத் தீர்வை அதிகமாயிருந்தால், அசல் முதல் தரம் புஞ்சைக்குக் கொடுக்கவேண்டிய தீர்வை கொடுக்கும்படியாய் கலெக்டர் விதிக்கலாம்.

2. புஞ்சைக்குத் தண்ணீர் பாய்ச்ச லாதாரமில்லாதபோதும் அல்லது அதிக ஜலத்தால் பயிர் நாசமடைந்தபோதும் ரிமிஷன் கொடுக்கப்படும்.

3. ரிமிஷன் கொடுக்கப்பட்டால், வசூல்செய்திருந்த பணங்களைத் திருப்பிக் கொடுக்கப்படும். விதையின் கிரயத்தை ரிமிஷன் கொடுப்பதில் எடுத்துக்கொள்ளக்கூடாது. மாமூலாய் தரிசையாயிருக்கிற நிலங்களுக்கு ரிமிஷன் கிடையாது.

(d) கார்லர்காலத்து ரிமிஷன்.

1. சரியானகாலத்தில் மழை பெய்யாததினாலாவது, ஜலக்குறைவாலாவது சாகுபடி சரியாக ஆகாவிட்டாலும் போர்டார் அனுமதியின்பேரில் கொஞ்சம் ரிமிஷன் கொடுக்கலாம். அந்த ரிமிஷன் எல்லா நிலங்களுக்கும் சராசரி ஒரேமாதிரியாக ஏற்படவேண்டும்.

2. புஞ்சைகளுக்கு ரிமிஷன் கொடுக்கலாமென்று கலெக்டர் போர்டாருக்குத் தெரிவித்து அவர்களநுமதியின்பேரில் ரிமிஷன் கொடுக்கலாம்.

3. வழக்கமாய் கண்டு முதலாகும் மாசூலில் காலேவீசங் கண்டால் ரிமிஷன் கிடையாது; அதற்குக் கீழ் கால்வாசி பலனுக்கு

மேல் கண்டிருந்தால், கால்தீர்வைமுதல் அரைத்தீர்வை வரையில் ரிமிஷன் கொடுக்கலாம். அரைக்கால் முதல் கால்வாசிவரையில் பலன் கிடைத்திருந்தால் அரைமுதல் முக்கால்வரையில் ரிமிஷன் கொடுக்கப்படும். அரைக்காலுக்கும் குறைந்து பலன் கிடைத்திருந்தால் முக்கால் முதல் பூராத்தீர்வை வரையில் ரிமிஷன் கொடுக்கலாம்.

20. பட்டா நிலங்களில் பட்டாதாரருக்கிருக்கும் சுதந்திரமும், கடமைகளும்.

1. யாதொரு நிலத்தின் பட்டாதாரன், அந்த நிலத்தின் தீர்வையைச் செலுத்தவும், பாக்கிக்கு உத்திரவாதியாகவும், சொந்தக்காரனாகவுமிருக்கிறான். ஆனால், அந்த நிலம் சர்க்கார் பாக்கிக்காவது, கோர்ட்டு டிகிரிக்காவது ஏலம்போடப்பட்டால் அவனுடைய பட்டா பாத்தியம் போய்விடும். சாகுபடி செய்யாமல் தரிசையாய் விடப்பட்ட நிலங்களை பட்டாவினின்று நீக்கக்கூடாது.

2. யாதொரு பட்டாதாரன் தன்னுடைய நிலத்தை முழுமையுமாவது, யாதொரு பாகத்தையாவது, மற்றொருவனுக்குக் கொடுக்கவும், குத்தகைக்கு விடவும், ஒத்திவைக்கவும், விற்பனைசெய்யவும், தானமாகக் கொடுக்கவும், வேறேவிதமான வினியோகஞ்செய்யவும் பாத்தியமுள்ளவனாயிருக்கிறான்.

3. மேலே கண்ட வினியோகங்கள் பட்டாதாரன் வெகு நாளாக ஊரிலில்லாமலிருந்தாலும் செய்யலாம்.

4. பட்டாதாரன் தன்னுடைய நிலத்தின் விர்த்தியாம்சத்தை உத்தேசித்து கிணறுகளை வெட்டிக்கொள்ளலாம். அதற்குத் தீர்வை தள்ளிக்கொள்ளும்படி கெவரன்மெண்டாரைக் கேட்கக்கூடாது. மேலும் கெவரன்மெண்டாரும் அதற்குத் தீர்வையை அதிகப்படுத்தக்கூடாது.

5. பட்டாதாரன் தன்னுடைய நிலத்தில் சாகுபடி செய்தாலும் செய்யாவிட்டாலும் கெவரன்மெண்டுத் தீர்வையைக் கொடுத்துவிடவேண்டும்.

21. கூட்டுப்பட்டா.

1. கூட்டுப்பட்டாவில் சேர்ந்த வார்சுகளில் ஒருவனிறந்தபோது அவன் பெயரை மாற்றவேண்டியிருந்தால், ஏக பட்டா அடைந்தவன் இறந்தகாலத்தில் செய்யவேண்டிய நடவடிக்கைகளைச் செய்யவேண்டியது.

2. கூட்டுப்பட்டாவில் சேர்ந்த ஒருவன் தன்னுடைய பாத்தியத்தை வேறொருவர் பேருக்குமாற்ற இஷ்டப்பட்டால் அவர்களுடைய அனுமதியை முன்னுடிப் பெற்றுக்கொள்ளவேண்டியதில்லை. அப்படிப்பட்ட மாறுதல்களுக்கு புதுப்பட்டா ஏற்படவேண்டுமென்று இஷ்டப்பட்டால், மற்றவர்களுடைய சம்மதம் அவசியம்வேண்டும்.

3. கூட்டுப்பட்டாவில் சேர்ந்த பெயர்களை மாற்றவேண்டியிருந்தால், அவனுடைய அனுபோகத்திலிருக்கும் நிலத்தின் விஸ்தீரணத்தைக் காட்டவேண்டியதில்லை.

4. கூட்டுப்பட்டாவாக நிலத்தை யனுபவிக்கிறவர்கள் தனிரெசீதுகேட்டால், சப்ரசீது புஸ்தகங்கள் கொடுக்கலாம். அப்படிப்பட்ட புஸ்தகங்களில் கண்ட பதிவுகளை பிரதான ரசீது புஸ்தகங்களில் எழுதவேண்டிய நிமித்தம் கிராம நவுக்கர்களிடம் ஆஜர்செய்யும்போது பதிவுசெய்யவேண்டும். சப்ரசீது புஸ்தகத்தில் நில விஸ்தீரணத்தைக் காட்டவேண்டியது அனுவசியம்.

22. பட்டாகொடுத்தல்.

குடிகள் புதுப்பட்டா கொடுக்கவேண்டுமென்று கேட்டால் கொடுக்கவேண்டும். பட்டாநிலங்களில் எவ்விதமான மாறுதலில்லாமலிருந்தால் புதுப்பட்டா அவசியமில்லை. ஒவ்வொன்றிலும் பட்டாவில்கண்ட பூமியின் சங்கியை காட்டவேண்டும்.

புதுப்பட்டா பெற்றபோது அதற்கு பக்கம் இரண்டுக்கு கால் அணு மேனிக்கு விலை கொடுக்கவேண்டும். ஆனல், 10 ரூபாய்க்குக் குறைந்த தீர்வை செலுத்துகிறவனுக்குக் கிரயமில்லாமலே பட்டா கொடுக்கவேண்டும்.

23. நிலங்களை உட்பிரிவாகச்செய்வது.

1. டிமார்க்கேஷன் கற்களை எல்லைகளில் சரியாக நட்டு உட்பிரிவைப் பிரிக்கவேண்டும்.

2. உட்பிரிவுசெய்த நிலத்துக்கு வெவ்வேறு லெட்டர்கள் கொடுக்கவேண்டும்.

3. உட்பிரிவுசெய்த பூமிகளெல்லாம் ஒரே இடத்திலிருக்கவேண்டும்.

4. சோடி ராஜீநாமா கொடுக்கிற விஷயத்தில், நஞ்சையை ஒரு ஏகர் நிலமாகவும், புஞ்சையை இரண்டு ஏகர் நிலமாகவும் சப்

டிவிஷன் செய்யவேண்டும். ஜமாபந்தி பைசல்வரையில், உட்பிரிவு ஊர்ஜிதமாகாது. ஜமாபந்தியில் உட்பிரிவு அங்கீகரிக்கப்பட்டால், அதன்பிறகு அதைத் தனிநெம்பர் நிலமாகவே எண்ணப்படும்

கிராமத்தில் செய்த உட்பிரிவுகளை கர்ணம் தன்னுடைய நில அளவு புஸ்தகத்தில் எழுதிவைக்கவேண்டும்.

24. கவுல்கள்.

1. நெருங்கின சிறுகாட்டு நிலங்களையும், சதுப்பு நிலங்களையும், கோரைமுளைத்திருக்கிற நிலங்களையும், சீர்ப்படுத்தி சாகுபடி செய்வதற்காக மிதமான தீர்வை யேற்படுத்தி கவுல்கொடுப்பது சில சந்தர்ப்பங்களில் நேரிடும். யாதொரு தரிசுநிலத்திலிருக்கிற சப்பாத்துக் கள்ளியை வெட்டி சாகுபடிசெய்ய ஐந்து வருஷத்துக்குக் குறையாமல் இருபது வருஷம் வரையில் தீர்வையில்லாமலே கலெக்டர் கொடுக்கலாம்.

2, பிரதிவருஷமும் சீர்ப்படுத்தி சாகுபடிக்குக் கொண்டுவருகிற நிலத்தின் விஸ்தீரணத்தைக் கவுலில் குறிக்கவேண்டும். எவனாவது கவுலில் கண்ட ஷரத்துக்கு விரோதமாய் நடந்தால் கவுல் ரத்தாய்விடும். கவுலில் எழுதிய ஷரத்துப்படி அதை எழுதிக்கொடுத்தவனைச் செய்யும்படி கட்டாயப் படுத்தலாம்.

25. தீர்வைக்காக நிலத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டிய விதிகள்.

தீர்வை ஏற்பட்ட நிலத்தை அடையவேண்டியிருந்தால், ஒருவன் முதலில் தாசில்தாருக்கு மனுக்கொடுக்கவேண்டும். உடனே அவர் இதனடியில்கண்ட விதிப்படி தர்க்காஸ்துமூலமாக அந்த நிலத்தைக் கொடுக்கலாம்.

1. பொது ஜனப்பிரயோசனத்துக்காக ஏற்பட்ட நிலத்தைக் காப்பாற்ற தர்க்காஸ்து மனுவந்தால், அதை தாசில்தாராவது, மற்றரிவினியூ உத்தியோகஸ்தராவது கலெக்டர் உத்திரவன்னியில் வாங்கக்கூடாது. அப்படி நிலங்கள் ரிஸர்வ் நிலங்களென்று பைமாஷிலும், கிராம அடங்கல் கணக்கிலும் கண்டிருக்கவேண்டும். பைமாஷில் ரிஸர்வ பாரஸ்டுகள் ஏற்பட்டிருக்கிற நிலங்களை ரிவினியூ உத்தியோகஸ்த ரனுமதியின்றி பட்டாவின்கீழ் கொண்டுவரக்கூடாது.

2. யாதொரு ரிஸர்வ் பாரஸ்டுக்கு பக்கத்திலிருக்கிற நிலங்களை, பாரஸ்டுக்காக ரிஸர்வ்கள் முற்றும் ஏற்படாத ஜில்லாக்களில் பாரஸ்டுக்குச் சமீபத்தில் 18 மாதகாலமாக சாகுபடி செய்யாத நில

த்தை டிஸ்ட்ரிக்ட் பாரஸ்டு ஆபீசர் உத்திரவன்னியில் சாகுபடிக்கு கொடுக்கக்கூடாது. இன்னும், பெரிய தோப்புள்ள நிலத்தையும், மரப்பட்டா ஏற்பட்ட நிலத்தையும், ரெயில்வே ஸ்டேஷன்களுக்குப் பக்கத்திலுள்ள நிலங்களையும், வீடுகட்ட உபயோகமுள்ள கற்கள் அகப்படும் இடங்களையும், விலையுயர்ந்த இரத்தினங்கள், உலோகங்கள் அகப்படும் பூமிகளையும், கவர்ன்மெண்டு கிஸ்திக்காக கைவிடப்பட்ட நிலங்களையும், அதிலுள்ள சொத்துக்களையும், கவர்ன்மெண்டு கிஸ்திக்காக சர்க்காரிலேயே ஏலமெடுத்த நிலங்களையும், பொது நலத்துக்காக சர்க்காரில் காம்பன்சேஷன் கொடுத்துவாங்கின நிலத்தையும், ஏரியின் உள் நிலங்கள், சிறிய தீவுகள், நீலகிரி மலையிலுள்ள புறம்போக்கு நிலங்களையும், கவரன்மெண்டார் அதிகப்பணஞ் செலவழித்து பாய்ச்சலாதாரத்துக்காக ஏற்பட்ட ஜலாசயத்துக்குக் கீழுள்ள நிலங்களையும் தர்க்காஸ்து அடமானத்துக்கு ஒருவருக்கும் விடக்கூடாது.

26. தர்க்காஸ்தின் விதிகள்.

3. நீர்வையேற்பட்ட நிலங்களை தர்க்காஸ்து மூலமாய் வாங்க, அதன் விஸ்தீரணம் முதலியவற்றை விவரமாயெழுதி மனுவை எந்தக் காலத்திலும் கொடுக்கலாம். மனுவில் கண்ட நிலம் தரிசாகவும், கவரன்மெண்டுக்கு ராஜிநாமாசெய்த நிலமாகவு மிருக்கவேண்டும்.

4. தர்க்காஸ்து மனுவை தாசில்தாரிடமாவது, கிராம வுத்தியோகஸ்தரிடமாவது கொடுக்கலாம். அந்தமனுவை தாசில்தார் பைசல் செய்துவிடலாம்.

5. தாசில்தாருக்கு மனுக்கொடுத்தால், அதை அவர் கிராம உத்தியோகஸ்தரிடம் அனுப்புவார். அதை கிராம வுத்தியோகஸ்தன் (சி.) ரிஜிஸ்டரில் பதிந்துகொண்டு மனுவின் சங்கதியை கிராமத்தில் பகிரங்கப் படுத்தவேண்டும். பிறகு, 15 நாளானதும் (எ.) மெமோராண்டம் டூப்ளிகேட்டுடன் தயார்செய்து, கணக்கனும், மணியக்காரனும், கையெழுத்துச்செய்து, இரண்டு சாட்சிகளின் கையெழுத்தையும் வாங்கி, அதை தாசில்தாருக் கனுப்பவேண்டும். சாட்சிகள் பக்கநிலக் காரராயிருக்கவேண்டும். அவர்கள் கையெழுத்துப் போடமாட்டேனென்றால் அதன் காரணத்தை (எ.) பாரத்தின்கீழ் எழுதியனுப்பவேண்டும்.

6. ஒரு சர்வே நெம்பர் உள்ள நிலத்தை உட்பிரிவாகப் பிரித்து மனுக்கொடுக்கலாம்.

7. கிராம வுத்தியோகஸ்தன் ரிப்போர்ட்டில் யாதொரு ஆட்சேபமும் இல்லாதிருந்தால், தர்க்காஸ்து தாரனுக்கு தர்க்காஸ்து உறுதிசெய்யப்படும்.

8. இரண்டு மூன்றுபேர் தர்க்காஸ்து மனுக்கொடுத்தால் அடியில்கண்ட விதியை யனுசரிக்கவேண்டும்.

(எ) தர்க்காஸ்து நிலத்தில் மரங்களிருந்து, அம்மரங்களுக்குப்படா ஒருவன்மே லிருந்தாலும், அந்த நிலத்திலிருக்கிற கிணறு ஜலத்தை ஒருவன் இரைத்துக்கொண்டிருந்தாலும், அப்படிப்பட்டவனுக்கே தர்க்காஸ்து அடமானஞ் செய்யவேண்டும்.

(பி) சர்வே நெம்பர் முழுமையும் தர்க்காஸ்து செய்தவனுக்குக் கொடுக்கவேண்டுமேயொழிய சில பாகத்தைமட்டும் கேட்டவனுக்கு விடக்கூடாது.

(சி) பக்கநிலக் காரனுக்கும், கிராமத்தில் முதல் பட்டாதாரனுக்கும், முதன் முதலில் மனுக்கொடுத்தவனுக்கும், அதிகபாத்தியமுண்டு.

(டி) பப்ளிக்ரஸ்தாவுக்குச் சமீபமாக 132 அடி அகலம் விட்டும், இரிகேஷன் வேலைக்குக் கீழ் 75 அடிவிட்டும் அப்புறமிருக்கிற நிலத்தை தர்க்காஸ்து கொடுக்கலாம்.

(இ) தர்க்காஸ்து மனுவின்மேல் ஏற்பட்ட உத்திரவை, அதில் சம்பந்தப்பட்ட எல்லாருக்கும் தெரிவிக்கவேண்டியது.

(எப்) ஒரு தர்க்காஸ்து நிலத்தை இன்னவிதமாய் பைசல்செய்வதென்று தாசில்தார் அல்லது டிவிஷன் ஆபீசருக்குத் தோன்றிவிட்டால் அந்த நிலத்தை ஏலம் போட்டுவிடலாம். அப்படிப்பட்ட ஏலத்தை கலெக்டர் அங்கீகரிக்கவேண்டும்.

(ஜி) தாசில்தார் செய்த உத்திரவின்மேல் டிவிஷனல் ஆபீசருக்கு 30 நாள்களுக்குள்ளும், அதன்மேல் கலெக்டருக்கும் கலெக்டர் உத்திரவின்மேல 40 நாள்களுக்குள் போர்டாருக்கும் அப்பீல் செய்துகொள்ளலாம். அப்பீலை விசாரிக்கிற உத்தியோகஸ்தர் கேசைத் தீரவிசாரியாமல் தள்ளக்கூடாது. அப்பீல் மனுவுடன் கீழ் உத்தியோகஸ்தர்களின் உத்திரவின் காபிகளை யனுப்பாவிட்

டால், அதை கவனிக்கப்படமாட்டாது. கேசில் சம்பந்தப்பட்ட இருகட்சிக்காரரையும் விசாரித்துப் பைசல்செய்து, அப்பைசல் உத்திரவை விசாரணைசெய்த உத்தியோகஸ்தன் தானேயாவது, தன்னுடைய குமாஸ்தாவினுலாவது எழுதி அவைகளைக் கட்சிக் காரர்களுக்குத் தெரியப்படுத்தவேண்டும்.

சர்கியூட்போன கிராமங்களில் தர்க்காஸ்து மனுவிருந்தால், தாசில்தார் அவ்வவ்விடங்களிலேயே விசாரித்து பைசல்செய்யலாம்.

26. தீர்வை ஏற்படாத நிலங்கள் தர்க்காஸ்து.

1. தீர்வை ஏற்படாத நிலங்களைத் தர்க்காஸ்து செய்யக்கொடுக்கும் மனுவை அரைரூபாய் ஸ்டாம்பு ஒட்டி, தாசீல்தாருக்காவது, டிவிஷனல் ஆபீசருக்காவது கொடுக்கவேண்டும். தர்க்காஸ்துதாரனுக்கு அந்த நிலத்தை விடுவதில் பாதகம் ஒன்றுமில்லாதிருந்தால், அதை அயனின் கீழ்கொண்டுவந்து தர்க்காஸ்துக்கு விட்டுவிடலாம்.

ஒருவன் உத்திரவில்லாமல் தீர்வை ஏற்பட்ட நிலத்தை சாகுபடிசெய்து, அதற்குண்டான தீர்வையைக் கட்டிவிடுகிறேனென்ருல், அதை தர்க்காஸ்துக்குக் கொடுத்துவிடலாம். அப்படிக் கில்லாவிட்டால் சிவாய்ஜமா விதிக்கப்படும். மேலே உத்திரவில்லாமல் சாகுபடிசெய்த நிலங்களின் விவரத்தைப் பிரதிமாதமும் தாசீல்தாருக்குத் தெரியப்படுத்தவேண்டும்.

2. ஒருநிலம் தர்க்காஸ்து கொடுத்தவனுக்கு விடுகிறதாக உறுதிப்பட்டால், அவன் அதற்கேற்பட்ட தீர்வையைக் கட்டத் தயாராயிருக்கவேண்டும். உத்திரவில்லாமல் சாகுபடிசெய்த நிலம், அவனுக்கு தர்க்காஸ்து அடமானமானுல் அவன் 30 நாள்களுக்குள் பூராத்தீர்வையும் கட்டவேண்டும். டிமார்க்கேஷனை புரம்போக்கு தர்க்காஸ்தடமானமானுல் டிமார்க்கேஷன் சிலவை தர்க்காஸ்துதாரன் கட்டவேண்டும்.

3. தர்க்காஸ்து சம்பந்தமாய் ஏற்பட்ட (எ.) (பி.) பாரத்தில் கண்ட எல்லாகலத்தையும் சரியாக எழுதவேண்டும். (எ.) பாரம்

5 - வது கலத்தில் நஞ்செய் அல்லது புஞ்செய் என்பதையும், 12 - வது கலத்தில் வழி, வரப்பு, கால்வாய், சிறுகால்வாய் இதுகளையும், 13 - வது கலத்தில் தர்க்காஸ்து மனுக்கொடுத்தவர்கள் பெயரையும், தர்க்காஸ்தை ஆட்சேபித்தவர்கள் பெயரையும், விவரமாய் எழுதவேண்டும். 1 - முதல் 16 - வது கலம்வரைக்கும் கிராம வுத்தியோகஸ்தர் எழுதி கையெழுத்துப்போட்டு தேதியுடன், மனுக்கொடுத்த 20 நாள்களுக்குள் தாசில்தாருக் கனுப்பவேண்டும். 17, 18 இந்த கலங்களை தாசில்தார் பதிவுசெய்து, கிராமவுத்தியோகஸ்தருக்கு அனுப்பியதன்மேல் 19 - வது கலத்தை கர்ணன்பதிவுசெய்து தாசில்தா ருத்திரவை அமுலுக்குக்கொண்டு வரவேண்டும். (எ. பி.) மிமோராண்டம் பையில்கள், (சி.) ரிஜிஸ்டர் கிராமத்தி லிருக்கவேண்டும். தாலூகா மானியூலில் கண்ட 4-வது ஸ்டேட்மெண்டு தாலூகாவிலிருக்கவேண்டும். ஜமாபந்தி காலத்தில் தாலூகா கணக்கையும் கிராமக் கணக்கையும் ஒத்திட்டுச் சரிபார்த்து தாசில்தார் கையெழுத்துச் செய்யவேண்டும்.

27. குடிகள் நிலத்தை ராஜிநாமா செய்வது.

1. குடிகள் ராஜிநாமா கொடுத்தால், அந்த நிலத்தை வேறொருவன் பயிரிடும்படியான காலத்தில் எழுத்துமூலமாய்க் கொடுக்கவேண்டும்.

2. அந்தந்த ஜில்லாக்களில் முதல் மழைபெய்வது வித்தியாசமாயிருப்பதால், நிலத்தை ராஜிநாமா கொடுக்கவேண்டிய காலமும் வித்தியாசப்படுகிறது. அதை அடியில் காட்டியிருக்கிறோம்.

சர்க்கில் நெ.	ஜில்லாக்களின் பெயர்.	நிலம் ராஜிநாமா கொடுக்கவேண்டிய காலம்
1-வது சர்க்கில்	தென்கன்னடம் மலையாளம். நீலகிரி.	எப்பிரல்மீ 30உ
2-வது சர்க்கில்	கஞ்சம். விசாகபட்டணம். கோதாவரி. கிருஷ்ணா.	மேமீ 31உ

3-வது சர்க்கில்	அநந்தபுரம். பெல்லாரி. கர்னூல். கடப்பை. நெல்லூர். வட ஆர்க்காடு. சேலம். கோயம்புத்தூர்.	ஜூலைமீ 15உ
4-வது சர்க்கில்	செங்கல்பட்டு. தென் ஆர்க்காடு. திருச்சிராப்பள்ளி. தஞ்சாவூர். மதுரை. திருநெல்வேலி.	ஆகஸ்டுமீ 1உ

3. பட்டாதாரன் சுற்றுப்பக்கத்து நிலங்களைத்தான் வைத்துக்கொண்டு, நடுவிலிருக்கும் நிலத்தை ராஜிநாமா கொடாமல், வரத்துப்போக்குக்கு சாதகமாயுள்ள நிலத்தைமட்டும் ராஜிநாமா கொடுக்கவேண்டும். ராஜிநாமா கொடுக்கிற நிலத்தின் விவரத்தையும் தீர்வையையும் கண்டு, மணியக்காரன் கர்ணன் இவர்கள் கையெழுத்தும் வாங்கிய ஒரு கடுதாசியில், எழுத்து மூலியமாய் ராஜிநாமா கொடுக்கவேண்டும். சர்க்கார் கிஸ்தி பாக்கி யிருக்கிறதென்று ராஜிநாமாவைத் தள்ளிவிடக்கூடாது. வேறு நிலத்தை ஜப்திசெய்து அதை வசூல்செய்யலாம்.

4. ஒரு கூட்டுப்பட்டாவில் ஒருவன் ராஜிநாமா கொடுத்தால், மற்றவர்கள் சம்மதமில்லாமல் பட்டா ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

29. தீர்வை ஏற்படாத புறம்போக்குத் தரிசி நிலங்களை இனுமாகக் கொடுப்பது.

1. நிலங்களை இனுமாகக்கொடுக்க கலெக்டருக்கு கவர்ன்மெண்டார் உத்திரவு ஆவசிகமானதாயிருந்தாலும், கிராமநத்தத்தை அவர்களுத்திரவன்னியில் குடிகளுக்குக் கொடுக்கலாம்.

நிலம் வேண்டியவர்கள் அதன் விஸ்தீரணம், எல்லை முதலிய விவரங்கண்டு கலெக்டருக்கு எழுத்துமூலமான தர்க்காஸ்து மனுக் கொடுக்கவேண்டும். சாதாரணமான விடங்களில் 500 ஏகராவுக்கு மேற்படாமலும், பட்டணங்கள், கிராமங்கள், ரெயில்வே ஸ்டேஷன், உஷ்ணகாலத்தில் வாசயோக்கியமாயுள்ள மலைப்பிரதேசம்

இப்பேர்ப்பட்ட விடங்களில் 10-ஏகராவுக்கு மேற்படாமலும், சதுரமாகவுமிருக்கிற பூமியை தர்க்காஸ்து கொடுக்கவேண்டும். அப்படிக்கேட்ட நிலத்தை சர்வே முடிந்து எல்லை யேற்படுகிறவரையில் விடக்கூடாது. அந்த நிலம் விலையுள்ளதாயிருந்தால், சர்வேக்கல் முதலானதற்குச் சிலவான சிலவை தர்க்காஸ்துதாரன் கொடுக்க வேண்டும். மேற்படி சிலவைக் கொடுக்கும்படி டிமாண்டு ஏற்பட்ட 6 வாரத்துக்குள்ளாக செலுத்தத் தவறினல் தர்க்காஸ்து ரத்தாய்விடும். பிறகு சர்வேயானதும் அந்த நிலத்தை விற்பனைசெய்யலாம். அப்படி விற்கப்போகிறதாக மூன்றுமாதத் தவணை யேற்படுத்தி, கலெக்டராபீசு, தாலூகா கச்சேரி, முனிசிப் கோர்ட், போலீஸ் ஸ்டேஷன் முதலான விடங்களில் நோட்டீசுமூலமாய் பிரசுரஞ்செய்யவேண்டும்.

2. இந்த விதிப்படி ஒரு நிலத்துக்கு தர்க்காஸ்து மனு வந்தவுடன், அந்நிலத்துக்கு ஆட்சேபனைகள் ஏற்படுமென்று கலெக்டர் நினைத்தால் அதை தர்க்காஸ்துதாரனுக்குத் தெரிவிக்கவேண்டும். சர்வேச்சிலவு முதலியதை தர்க்காஸ்துதாரன் கொடுக்கவேணடும். ஆனல், தர்க்காஸ்துதாரனுக்கு யாதொருவிதமும் தெரிவிக்காமலிருந்து, நில விற்பனைக்கு ஏதாவது ஆட்சேபமுண்டானல் அப்போது சர்க்காரிலேயே சர்வே முதலியவைகளுக்கு நேரிடும் சிலவைக் கொடுக்கவேண்டும்.

3. முதலில் சொல்லும் ஏல விலையை மரக்கிரயம், சர்வேசெய்த சிலவு இதுகளைச் சேர்த்துச் சொல்லவேண்டும். ஏலம் போடுவதற்கு முன் யாரும் ஆட்சேபிக்காதிருந்தால், உயர்ந்த விலைக்கு நிலம் விற்கப்படும். ஏலமெடுத்தவன் ஏலத்தொகையில் 100 - க்கு 15 வீதம் உடனே கட்டவேண்டும். பாக்கிப்பணத்தை ஒருமாதத்திலாவது அல்லது 100 - க்கு 6 வீதம் வட்டியோடு 3 வருஷத்திற்குள்ளாவது செலுத்தவேண்டும்.

4. ஏலத்திற்குமுன் ஆட்சேபனை மனுக்கொடுத்தால் அதை விசாரித்து முடிவுசெய்கிற வரையில் ஏலம்போடக்கூடாது. மேலும்மேய்ச்சலுக்காக ஏற்பட்ட ரிசர்வ் நிலங்கள், விறகுமுதலிய எரிகருவிகள் சேகரிப்பதற்காகவும், கிராமநத்தத்திற்காகவும் ரிசர்வ் செய்யப்பட்ட நிலங்கள், உத்தியானவனங்கள் முதலியவைகளை கவர்ன்மெண்டார் அனுமதியில்லாமல் விற்கக்கூடாது.

இந்த விதிகள் பிரகாரம் விற்கப்பட்ட நிலங்களுக்கு நிலவரியி ல்லே. மற்றவரிகள் உண்டு. இந்த விதிகள் தஞ்சாவூர், சென்ன பட்டணம் இந்த இரண்டு விடங்களுக்கும் உபயோகப்படாது. மே லேகண்ட தரிசுநிலங்களில் உலோகங்கள், இரத்தினங்கள் முதலிய வை யிருப்பதாக சந்தேகித்தால் அந்த நிலத்தை விடக்கூடாது.

5. பட்டணங்களுக்குச் சமீபத்தில் தீர்வை யேற்பட்ட நிலங் களிலிருந்து அதில வீடுகட்ட அதை விலேக்குக் கேட்டால், ஒரு ஏகர் முதல் 4 ஏகர் வரையில் விற்கலாம்; விற்பணேக்கு ஆரம்பிக் கும் துகை இரண்டு வருஷத் தீர்வைக்குக் குறையக்கூடாது.

30. வீடுகட்ட நிலங்கொடுப்பது.

1. கிராமநத்தம்.

1. வீடுகட்டுவதற்காக கிராமநத்தத்தை தர்க்காஸ்து செய்கிற வர்களுக்கு, வருஷம் 1-க்குரூபா 50 - க்குமேல் வாயிதா கட்டும் பட் டாதாரனுக்கு 10-செண்டுகளும், அதற்குக் கீழ்பட்ட ரூபா செலுத் தும் பட்டாதாரனுக்கு 5 செண்டுகளும், பட்டாவில்லாதவனுக்கு 4 செண்டுகளும் கொடுக்கவேண்டும். மேலேகண்ட விதிப்படி நிலம் விட தாசில்தாருக்கும் டிப்டி தாசில்தாருக்கு மதிகாரமுண்டு. அந் தவிதிக்கு மேற்பட்ட நிலம் வேண்டியிருந்தால, டிவிஷனல் ஆபீசர் உத்திரவுவேண்டும். வீடுகட்டக் கொடுக்கும் மனுவை கிராம அதி காரியிடம் கொடுத்தால், அவன் தன்னுடைய அபிப்பிராயத்துடன் தாசில்தாருக் கனுப்பவேண்டும். சர்க்காரனுமதியின்றி வீடுகட்டி ணல், அப்படிப்பட்டவனேக் குற்றஞ் சாட்டுவதுடன், அந்த நிலத் தீர்வையை அவனிடம் வசூல்செய்யப்படும். கிராமநத்தத்தில் பயி ர்செய்தால் தண்டத்தீர்வை விதிக்கப்படும். பட்டா அதற்கு கொ டுக்கப்படமாட்டாது. ஆனல், கிராமநத்தம் அதிகமாயிருந்து சப்பா த்துக் கள்ளியால் மூடப்பட்டிருந்தால். கிராமத்துக்கு வேண்டிய துபோக மிகுதியை பட்டாவுக்குக் கொடுத்துவிடலாம்.

2. கிராமத்தில் அதிக ஜனங்களிருந்து வீடுகட்ட இடம் வே ண்டியிருந்தால், தீர்வை ஏற்பட்ட நிலங்களே நத்தமாக மாற்றி வீடு கட்டவிடலாம். புதிதாக விருத்தியடைந்த பட்டணங்களிலுள்ள கிராமநத்தத்தை குயிட்ரெண்டுக்காக விடவேண்டும். குடியான வர் அப்படிப்பட்ட பட்டணங்களுக்குச் சமீபத்தில் வீடுகட்டிக்

கொள்ள வேண்டுமென்றால் தீர்வை ஏற்பட்ட நிலங்களை புறம்போக்காகமாற்றி வீடுகட்ட நிலம்விடலாம். முனிசிபாலிடி சரகத்துக்குள் அவருடைய நிலமிருந்தால், அந்த முனிசிபாலிடியாருடைய அனுமதி அவசியம் பெறவேண்டும்

2. கிராமநத்தத்துக்கு வெளியிலுள்ள நிலங்கள்.

3. கிராமநத்தமாக ஏற்படாத நிலத்தில் வீடுகட்டிக் கொண்டால், அந்நிலத்திற்குண்டான தீர்வையைக் கொடுக்கவேண்டும். புதிய பட்டணங்களுக்குச் சமீபத்தில் வீடுகட்டிக் கொண்டால், 2400 சதுர அடியுள்ள மனை ஒன்றுக்கு அணா 8 வீதம் குயிட்ரெண்ட் வசூல் செய்யப்படும். அந்தவீடு கட்டக்கூடிய நிலம் அதிக கிரயமுள்ளதா யிருந்தால் அதை ஏலத்தில் விற்கப்படும். கன்டோன்மெண்டிலுள்ள வீடுகளின்மேல் வசூலாகும் குயிட்ரெண்டை ரெவினியூ கணக்கில் சேர்த்துவிடப்படும்.

31. ஜமீன்சொத்துக்கு வார்சுதாரனாவது.

இறந்துபோன ஒரு ஜமீன்தாரின் சொத்துக்கு அனேகவார்சுகள் ஏற்பட்டு விவாதப்பட்டால், கலெக்டர் பிரவேசித்து கேஸை விசாரித்து வம்சபரம்பரையின் வரிசைமுதலியவைகளை விவரமாய் எழுதி கவர்ன்மெண்டுக்கு தெரிவித்து அவர்கள் அனுமதியின்பேரில் ஜமீனுக்கு நியாயமான வார்சை ஏற்படுத்தவேண்டும்.

2-வது அத்தியாயம்.

32. கிஸ்தியைச் செலுத்துவது.

சர்க்காருக்குச் செலுத்தும் கிஸ்திப் பணத்தை பவுனாகவும், கவர்ன்மெண்ட் நோட்டாகவும் செலுத்தலாம். அல்லாமலும் யாதொரு பட்டாதாரன் கவர்ன்மெண்டுக் கடன்பத்திரங்களை சர்க்கார் கஜானாவில் வைத்து, அதன் வட்டியை தான் கொடுக்கவேண்டிய கிஸ்திப்பணத்துக்குச் செல்லுவைத்துக் கொள்ளும்படியாய் கவர்ன்மெண்டாரைக் கேட்டாலும் அவர்களவ்விதம் செய்யக்கட்டுப் பட்டிருக்கிறார்கள்.

ரயத்துவாரி நிலங்களுக்கு கிஸ்திசெலுத்தும் மாதிரி. 16 அணா கிஸ்தியானல் ஒவ்வொரு மாதத்திலும் செலுத்தவேண்டிய மொத்தம்.

ஜில்லா.	நவம்பர்	டிசம்பர்	ஜனவரி	பிப்ர	மார்ச்	ஏப்ரல்	மே	ஜூன்	மொத்தம்.
	அணா	அணா	அணா	அணா	அணா	அணா	அணா	அணா	அணா
செங்கல்பட்டு	,,	,,	4	4	4	4	,,	,,	16
வடஆர்காடு சந்திரகிரி, சித்தூர், குடியாத்தம், பலமநேரி, வாலாஜாபேட்டை.	,,	4	4	4	4	,,	,,	,,	16
மற்றதாலூகாக்கள்.	,,	,,	4	4	4	4	,,	,,	16
தென் ஆர்காடு.	,,	,,	4	4	4	4	,,	,,	16
திருச்சிநாப்பள்ளி.	,,	4	4	4	4	,,	,,	,,	16
திருநெல்வேலி.	,,	,,	4	4	4	4	,,	,,	16
கோயம்புத்தூர்.	,,	,,	4	4	4	4	,,	,,	16
சேலம்.	,,	4	4	4	4	,,	,,	,,	16
மதுரை, பழனி தாலூகா மலை கிராமங்கள் தவிர.	,,	,,	,,	4	4	4	4	,,	16
மலை கிராமங்கள்.	,,	,,	,,	8	,,	8	,,	,,	16
தஞ்சாவூர் நஞ்சை. கார்	,,	3	6	7	,,	,,	,,	,,	16
சம்பா.	,,	,,	,,	2	4	6	4	,,	16
புஞ்சை பாதி சாகுபடியானல் அக்டோபர் வரையில்	3	6	7	,,	,,	,,	,,	,,	16
தஞ்சாவூர் மற்ற நிலங்களுக்கு.	,,	,,	,,	2	3	5	4	2	16
கட்டுக்குத்தகை கிராமங்கள்.	1	2	3	1	2	3	3	1	16
நீலகிரி.									
வைநாடு தாலூகா.	,,	,,	6	,,	6	4	,,	,,	16
மற்றதாலூகாக்கள்.	,,	4	4	4	4	,,	,,	,,	16

மேற்கண்ட டேபில்பிரகாரம் அந்தந்த ஜில்லாவிலுள்ள மிராசுதாரர்கள் தாங்கள் கொடுக்கவேண்டிய கிஸ்தியைச் செலுத்தவேண்டும். அந்தந்த மாசம் 10-ந் தேதிக்குள் செலுத்தாவிட்டால் டிமாண்டு பிறப்பிக்கப்படும். ஒரு ரூபாய்க்குக் குறைந்த தீர்வையானல் ஒரேதடவையிலேயே பூராத் தீர்வையையும் செலுத்திவிடவேண்டும். பட்டாவில் ஏற்பட்ட தொகையை கிஸ்திப்படி பிரிப்பதில் சில்லரை வந்தால், அச்சில்லரையை கடைசி வாயிதாவில் வசூல்செய்யவேண்டும். கிஸ்திபந்தி ஜமீன் நிலங்களுக்கு முரித்தானது. ஆனல், ஜமீன்தாரர்கள் கட்டும் பேஷ்கிஸ்திக்குஉரித்தானதல்ல. அவர்கள் கொடுக்கவேண்டிய பேஷ்கிஸ்தியை, சன்னதில் கண்டபடி செலுத்தவேண்டும்.

32. வருஷவாரி கிஸ்தி வசூல்.

ஒவ்வொரு வருஷ ஆகீருக்குள்ளாக அந்தந்த வருஷத்திய தீர்வையை கலெக்டர் தமது ஜில்லாவில் வசூல்செய்யவேண்டும். வசூல்செய்யாமல் பாக்கி வைத்தால் ஜனங்களுக்குக் கஷ்டமுண்டாகும். அந்தந்த வருஷத்திய ஜமாபந்தியில் பாக்கித் தொகையை தனிக்கை செய்து வசூல்செய்து, வராத பணத்தைத் தள்ளிவிட அனுமதி பெற்றுக்கொள்ளவேண்டும்.

33. கிஸ்தி வசூலைத் தள்ளிவைத்தல்.

காலத்தில் மழையில்லாத நிமித்தம் சாசுவதத் தீர்வையை ஏற்பட்ட கிராமங்களுக்கு கிஸ்தியை ஒத்திவைக்கவேண்டியதாயிருந்தால், கலெக்டர் போர்டாருடைய அனுமதியைப் பெறவேண்டியது அவசியம்.

34. பழமுதல் பாக்கிவஜா.

பழமுதல் பாக்கியை வஜா செய்யும்போது, தாழ்ந்த ரிவினியூ உத்தியோகஸ்தர்கள் மிராசுதாரர்களிடம் பணம் சம்பாதித்துக்கொள்ளாதபடி பாக்கிதாரர்களுக்கு அவர்கள் செலுத்தவேண்டிய பாக்கியை தள்ளிவிட்டதாக, ஹுசூர் கச்சேரியிலும், தாலூகா கச்சேரியிலும், பகிரங்கமாகத் தெரியப்படுத்தவேண்டும். நிலத்துக்கு ஏற்பட்ட கிஸ்தியை வஜாசெய்தால் மற்ற செஸ்களும் வஜாசெய்யப்பட்டதாக எண்ணப்படும்.

36. கிஸ்தி வசூல்செய்தல்.

கிராமங்களில், மணியக்காரன் கிஸ்தியை வசூல்செய்யவேண்டுமேயொழிய, கிராமக்கர்ணனுடைய வேலையல்ல. பட்டாதாரன் தான் செலுத்தின பணத்துக்குக் கொடுத்த ரசீதில் கிராமக்கர்ணன் கையெழுத்துச் செய்யவேண்டுமென்று கேட்டால் அவன் அப்படியே செய்யவேண்டும்.

37 - 1864ஆம் வருஷத்து 2 - வது ஆக்டின்படி நடத்தவேண்டிய நடவடிக்கை.

1. 1 - வது பிரிவில்கண்ட "பூமியையுடையவன்" என்னும் பதம் சர்க்காருக்கு கிஸ்தியைச் செலுத்திக்கொண்டு நிலத்தைத் தன் சுவாதீனத்தில் வைத்துக்கொண்டிருக்கிறவர்கள் எல்லாரையும் சேர்க்கிறது. இவர்கள் 1802ஆம் வருஷத்திய சட்டப்பிரகாரம் "பூஸ்வாதிகாரி" என்று சொல்லப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்களா யிருந்தபோதிலும், அல்லது ரயத்துவாரி பூமிக்குடையவர்களா யிருந்தபோதிலும், சர்க்காருக்குச் சேலுத்தவேண்டிய தீர்வையை வசூல் செய்வதற்காக, ஒரே நிபந்தனைக்குள் ஏற்படுத்தப் பட்டிருக்கிறார்கள். மிராசுதாரர்கள் பூமிக்காகக் கட்டும் பணத்துக்கு "ரெவினியூ" என்று பெயர். பூமியை யுடையவனுக்குக் குடிகள் செலுத்தும் பணத்துக்கு "ரெண்ட்" என்று பெயர்.

2. சர்க்கார் பாக்கிக்காக பாக்கிதாரனுடைய ஸ்தாவர ஜங்கம சொத்தையாவது அல்லது இரண்டையுமாவது விற்பனைசெய்து, அதற்காக நேரிட்ட செலவையும் சேர்த்து வசூல்செய்யக் கலெக்டருக்காவது, தாசீல்தாரருக்காவது அதிகாரமுண்டென்று 5, 6, பிரிவுகளில் ஏற்பட்டிருக்கிறது. மேற்படி அமுலை ரயத்துவாரிலும், ஜமீன்சொத்துக்களிலுங்கூடச் செலுத்தலாம். சன்னதின் பிரகாரம் பூமியைவைத்திருப்பவனா யிருந்தால், சன்னதில் ஏற்பட்ட ஷரத்துப்படி பாக்கியை வசூல்செய்யவேண்டும். முதலில் அவனுடைய அசையும் பொருளை ஜப்திசெய்து அந்தப்பணம் வசூலாகாவிட்டால் பிறகு ஸ்தாவர சொத்துக்களை ஜப்திசெய்ய வேண்டும். ஜங்கம சொத்துக்களிலிருந்து பணம் வசூலிக்கக்கூடியதா யிருந்தால், குடியிருக்கும் வீட்டை ஜப்திசெய்யக்கூடாது. மிராசுதாரர்களுடைய ஜங்கமசொத்தை ஜப்திசெய்வதில், சாகுபடிக் குபயோகமான கருவிகளையும் ஒரு ஏர்மாட்டையும் விட்டுவிட்டு மற்றப்பொ

ருள்களை மட்டும் ஜப்திசெய்யவேண்டும். பட்டாவில்லாமலும், உத்திரவில்லாமலும் சாகுபடி செய்யப்பட்ட நிலத்தின் தீர்வையை வசூல்செய்வதிலும் மேலேகண்டபடி நடத்தவேண்டும். ரயத்து, அனேகம் பட்டாக்களுக்கு பாக்கிசெலுத்தவேண்டியதாயிருந்தால், ஜப்திசெய்கிற ஒவ்வொரு தடவையிலும் ஒரு ஜதை ஏர் மாட்டை விட்டுவிட்டு மற்றதை ஜப்திசெய்யவேண்டும்.

3. சர்க்கார்பாக்கிக்கு வருஷம் 1க்கு 100க்கு 6 வீதம் வட்டி செலுத்தவேண்டுமென்று 7 - வது பிரிவில் சொல்லப் பட்டிருக்கிறது. இந்தவட்டி ஜமாபந்தி பைசலுக்குப் பிறகு தான் ஏற்படும். ஜமீன்தாரர்கள் தங்கள் குடிகளிடத்தில் 100க்கு 12 வீதம் வட்டி வசூல்செய்யலாம்.

4. சாதாரணமாய் சொத்தை ஜப்திசெய்யவும், மறியல்செய்துவைக்கவும் தாசில்தார் உத்திரவு கொடுக்கவேண்டும். ஜப்திசெய்கிற உத்தியோகஸ்தன் டிமாண்டுநோட்டீசை பாக்கிதாரனுக்குக் கொடுக்கவேண்டியது. பாக்கியை செலுத்தாவிட்டால் சொத்தை ஜப்திசெய்யவேண்டியது. (பிரிவுகள் 8 - 21). 11, 17 - வது பிரிவுகளின் கடைசி உட்பிரிவுகளின்படி பயிர்களை மறியல்செய்யக் கூடாதென்கிற ஏற்பாடு தள்ளிவிடப்பட்டது.

4. ஜப்திசெய்த சொத்தை ஏலம்போடுவதைப்பற்றி 15 நாள் முன்பாகவே விளம்பரஞ் செய்யவேண்டும், அப்படிக் குறிக்கப்பட்ட தினத்திற்குள் எப்போதாவது ஜப்திச்சிலவுடன் பணத்தை செலுத்திவிட்டால் அந்தக் குடியானவனிடம் அவன் சொத்துக்களைக் கொடுத்துவிடலாம். (22, 24 - வது பிரிவுகள்)

6. பாக்கிதாரனுடைய நிலத்தை ஜப்திசெய்து ஏலம்போடவேண்டியிருந்தால், அப்படி ஜப்திசெய்வதற்குமுன், அவனுக்கு டிமாண்டைக் கொடுத்தும், அதன்மேல் அந்த டிமாண்ட் நகலை பகிரங்கமான விடத்தில் ஒட்டியும், டிஸ்டிரிக்ட் கெஜட்டிலும் பிரசுரஞ் செய்யவேண்டியது. (பிரிவிகள் 25. 35)

7. நிலத்தீர்வைக்காக மறியல்செய்யப்பட்ட நிலங்களை, அபூர்வமான சில சந்தர்ப்பங்களில்மட்டும் போர்டாருடைய உத்திரவின் பேரில், அவைகளைக் கலெக்டர் தன் பார்வையின் கீழ் வைத்துக்

கொள்ளலாமே தவிர மற்ற சமயங்களில் அப்படி வைத்துக் கொள்ளக்கூடாதென்று போர்டார் அபிப்பிராயப்படுகிறார்கள். சர்க்கார் கிஸ்திபாக்கியை அதிகமாக வைத்துக்கொண்டிருந்தால், அப்படிப் பட்ட நிலங்களை, அவற்றின்பாக்கி தீர்ந்த பிறகு சொந்தக்காரருக்கு மறுபடியும் சேர்க்கும்படியான கருத்துடன் கலெக்டர் வைத்திருக்கக்கூடாது. சர்க்கார் பாக்கியை வசூல் செய்யவேண்டிய நிலங்களை ஏலம்போடுவது முதலிய நடவடிக்கை நடத்தவேண்டும். ஜமீன் அல்லது மிட்டா இதுகளின்பேரில் கிஸ்தி பாக்கியிருந்தால், அந்தபாக்கி தீருகிறவரைக்கும் அப்படிப்பட்ட ஜமீன் அல்லது மிட்டாவின் மானேஜ்மெண்டை கவரன்மெண்டார் எடுத்துக் கொள்ளக்கூடாது (பிரிவுகள் 28. 33.)

8. சாகுபடி செய்கிறவர்களும், நிலங்களை கொதுவை வைத்தவர்களும், ஜப்திசெய்து ஏலம்போடப்போகிற பூமிவிஷயமாய் தங்களுக்கு பாத்தியமுண்டென்று வாதிக்கிறவர்களும், அப்படிப்பட்ட நிலத்தின் பாக்கியைத்தீர்த்து, ஜப்தியிலிருந்து விடுதலை செய்துகொள்ள பாத்தியமுள்ளவர்களா யிருக்கிறார்கள். (பிரிவுகள் 35. 37.)

9. ஜப்திசெய்த நிலங்களை ஏலம்போடுவதில், ஜமீன்தாரி நிலங்களைத் தவிற, மற்றநிலங்களை விற்பனைசெய்ய போர்டாருடைய உத்திரவு வேண்டியதில்லை. ஜப்தி நோடீசுடன், ஏல நோடீசையும் கொடுக்கவேண்டும். அப்படிப்பட்ட நோடீசை இங்கிலீஷிலாவது சுவதேச பாஷையிலாவது, ஒருமாதத்துக்கு முன் கொடுக்கவேண்டும். ஏலம்போடுஞ் சமயத்தில் அந்த நோடீசை அங்குவந்திருக்கிற எல்லோருக்கும் கேட்கும்படியாய்ப் படிக்கவேண்டும். பூர்விகமாக ஏற்பட்டிருக்கும் ஜமீன்களை ஏலம் போடாத வழியை கலெக்டர் தேடவேண்டும். சாஸ்வதத்தீர்வை ஏற்பட்ட நிலங்களை, ஒரு சிவிலியனாவது, டிப்டி கலெக்டராவது ஏலம்போடவேண்டும். அற்பநிலங்களின்பேரில் ஏற்பட்ட சொல்பபாக்கியை தாலூகாகச்சேரியில் தாசீல்தார் ஏலம்போடலாம். (பிரிவுகள் 36. 46.)

10. ஸிவிலியன்களும், டிப்டி கலெக்டரும் தாசீல்தார் போட்ட ஏலத்தை ஸ்திரப்படுத்தலாம். ஷ ஏலத்தின்பேரில் கலெக்டரிடம் அப்பீல்செய்து கொண்டால், நியாயப்பிசகா யிருக்கிறதென்று அபிப்பிராயப்பட்டால் ஏலத்தை மாற்றிவிடலாம்.

11. ஜமீன்தாரர்களுக்கும், அவர்களுக்குள் இனும் கமிஷனரால் செடில்மெண்டு செய்யப்பட்ட இனும்தாரர்களுக்கும், யாதொரு சம்பந்தமும் கிடையாது. இனும்தாரர்கள் செலுத்த வேண்டிய குயிட்ரெண்டை இந்த ஆக்ட்படி வசூல்செய்யவேண்டியது.

12. தோணி அல்லது பரிசல்துறைக் குத்தகைகளை ஷை ஆக்ட் 52 - வது பிரிவுப்படி வசூல்செய்யவேண்டும்.

13. சர்க்கார் அதிகாரிகள் தவிற, மற்றவர்கள் ஏலத்தில் விற்கப்படுகிற நிலத்தை வாங்குவதில் யாதொரு நிபந்தனையுமில்லை.

14. பாக்கிக்குத் தகுந்தபடி ஏலம்போடுகிற நிலமானது, ஒரே நெம்பருள்ள நிலமாகவிருக்கவேண்டும். ஒரு நெம்பர் நிலத்தின்பாகமாக விருக்கக்கூடாது.

15. பாக்கிக்காக செக்யூரிடி வாங்கிக்கொண்டு, கலெக்டர் ஏலத்தை நிறுத்திவைக்கலாம்.

16. சர்க்கார் பாக்கியை எவனாவது வேண்டுமென்று கொடாமலிருந்தாலும், அப்படிக்கொடுக்கவேண்டியதைத் தள்ளிக்கொண்டு வந்தாலும், அவனை வாரண்டில் பிடித்து அடைக்கலாம். அவனுக்கு ஜெயிலில் படிகட்டவேண்டும்.

17. தீர்வை பாக்கிக்காக ஜப்திசெய்யாமல் விடப்பட்டப் பயிரின் மாசூலை அறுவடைசெய்தால், அதைத் தடங்கல் செய்யக்கூடாது.

18. ஜப்திமுதலியவற்றில் செலவாகும் பணத்தை, கிஸ்தியை வசூல்செய்வதுபோல் வசூல்செய்யவேண்டும்.

19. கிஸ்திப்பணத்தைச் செலுத்துகிற வர்களுக்கெல்லாம், கலெக்டராவது, அல்லது அவர் அனுமதிபெற்றவேறே எவராவது, ரசிதுகொடுக்கவேண்டும்.

20. ஒரு பட்டாவில் ஏற்பட்ட நிலத்தை அனேகர் அனுபவித்து வந்தால், அவரவர்கொடுக்கும் தீர்வைக்கு ரசிதுகொடுத்து, பட்டாரசிது புஸ்தகத்திலும் பதிவுசெய்யவேண்டியது.

21. ஜப்தி நோட்டீசை கலெக்டர் உத்திரவின்றி வேறு ஜில்லாக்களுக்கனுப்ப, டிவிஷனல் ஆபீசருக்கு அதிகாரமில்லை.

இந்தச் சட்டத்தில் சம்மன்களை சார்வ்செய்வதற்கும் அதன் படி நடவடிக்கை நடத்துவதற்கும் காலஅளவு ஏற்படுத்தாததினால், போர்டார் அதற்கு 20 நாள் வாயிதாவென்று ஏற்படுத்தி யிருக்கிறார்கள்.

22. இந்த ஆக்டிலுள்ள நிபந்தனைகளை சகல குடிகளும் எளிதில் தெரிந்துகொள்ளும்படியான ஏற்பாட்டை கலெக்டர் செய்ய வேண்டும்.

1. நெம்பர் பாரம்.

8 - வது பிரிவு. மறியல் உத்திரவு

திண்டுக்கல் தாலூகா 1-வது டிவிஷன் முதல்கிளாஸ் ரிவினியூ இன்ஸ்பேக்டராகிய சுந்தரராஜய்யருக்கு, இதனடியில்கண்ட பாக்கிதாரன் கொடுக்கவேண்டிய சர்க்கார் கிஸ்திக்காக அவனுடைய சொத்தை மறியல்செய்கிறதற்கு அதிகாரங் கொடுக்கப் பட்டிருக்கிறது.

கிராமத்தின் நெம்பரும், பெயரும்.	பாக்கிதாரன் பெயர்.	எந்த வருஷத்திற்கு கிஸ்தி பாக்கியா யிருக்கிறது.	கிஸ்தி மொத்தம்.			எந்த தேதியில் பாக்கியானது.	மறியல்செய்கிறவனுக்குப் படி.	இந்த தேதிவரையில் வட்டியும், மேழுமொத்தமும், மறியல் செய்ச்சுக்கும், மறியல் நோட்டீஸின் பிரதிகொடுக்க கேட்கும், மறியல் செலவும், யாக விஷயத்தில், அப்படிப்பட்ட பாக்கிக் கூட்டுத்தொகையும்.
			ரூ	அ	பை			

ஒருவனுடைய ஆஸ்தியை மறியல் செய்ததற்காக நேர்ந்த சிலவும், படியும் சேர்ந்து முன்னதாகவே கொடுபடாதபட்சத்தில், மறியல்செய்யப்பட்ட ஆஸ்திகளை உடனே பஹிரங்கமாய் ஏலம் போடப்படுமென்று, பாக்கிதாரனுக்குத் தெரியப்படுத்தவேண்டியது.

குறிப்பு.—மறியல் செய்கிற வுத்தியோகஸ்தன் மேலேகண்ட உத்திரவை பாக்கிதாரனுக்குக் காண்பித்து, அவன் கொடுக்கவேண்டியமொத்தத் தொகையையும் பாக்கிதாரன் உடனே தீர்க்காதிருந்தால், அவனுடைய ஆஸ்தியை மறியல்செய்து, அந்த தேதியிலே

யே, மேலேகண்ட உத்திரவின் நகலின் பேரில் மறியல் செய்யப்பட்ட ஆஸ்தியின் ஜாப்தாவையும், அது வைக்கப்படுகிற விடத்தையும் எழுதி, அதை அவனுக்குக் கொடுக்கவேண்டியது. 1864 ளுத்து 2 - வது ஆக்ட் 8 - வது பிரிவு 1 - வது உட்பிரிவு.

தேதியும் அ. கு.
இடமும் (ஒப்பம்) தாசில்தார்.

2 நே. பாரம்.

9 - வது பிரிவு மறியல்செய்யப்பட்ட ஆஸ்தியின் ஜாபிதா.

தங்கச்சியம்மா பட்டிகிராமம் மிராசுதார் ஷண்முகம்பிள்ளை என்பவன் செலுத்தவேண்டிய சர்க்கார்த் தீர்வைபாக்கிக்காக அவனுடைய ஜங்கமசொத்துக்களை ரிவினியூ இன்ஸ்பெக்டர் சுந்தரராஜய்யரால் மறியல்செய்து அந்தத் தாலூகா தாசீல்தாருக் கனுப்பிய மறியல் செய்த ஜங்கம சொத்துக்களின் ஜாபிதா.

மறியல்செய்த சாமான்களின்பெயர்.	உத்தேசமதிப்பு.			செலுத்தவேண்டிய தீர்வைபாக்கியின் மொத்தம்.			மறியல்செய்ததேதியும் மறியல்நோடீசின் நகலை பாக்கிதாரனுக்கு கொடுத்ததேதியும்.
	ரூபா.	அணா.	பை.	ரூபா.	அணா.	பை.	

இடமும் (ஒப்பம்) சு. அய்யர்
தேதியும் ரிவினியூ இன்ஸ்பெக்டர்.

3 நே. பாரம்.

22 - வது பிரிவு ஜங்கமசொத்துக்களை விற்பனை செய்வதற்கான நோட்டீசு.

திண்டுக்கல் தாலூகாவைச் சேர்ந்த தங்கச்சியம்மாபட்டியிலிருக்கும் ஷண்முகம்பிள்ளை சர்க்கார் தீர்வையைக் கொடாமல் பாக்கிவைத்திருப்பதால், இதனடியில் கண்ட அவனுடைய ஆஸ்திகளை ஷை கிஸ்திபாக்கிக்காக மறியல் செய்யப்பட்டது. அப்படிப்பட்ட பாக்கியையும், அதன்வட்டியையும், மற்ற இதரச் சிலவுகளையும் சே

ர்த்து முன்னதாகவே கொடாதபக்ஷத்தில், ௵ம் மீ ௳ கிழமை ஷை கிராமம் இராமசந்திரையர் வீட்டுக்கருகில் சர்க்காரால் பஹிரங்கமாக ஏலம்போட்டு அப்படிப்பட்ட சொத்துக்களை விற்பனைசெய்யப்படுமென்று இதனால் அறிவிக்கப்படுகிறது. இந்த ஏலம் காலை 11-மணிக்கு ஆரம்பித்து நடத்தப்படும். மேலும் சொத்துக்களை உயர்ந்த விலைக்குக் கேட்பவர்களுக்கு ரொக்கம்பத்திக்கொண்டு உடனே ஒப்புவிக்கப்படும். ஏலத்தில் அவைகளை வாங்கினவன் பணமுழுவதையும் கொடாமல் சொத்தை எடுத்துப்போகக்கூடாது.

ஏலமெடுத்தவர்கள் ஏலத்துகையை செடுப்படிக் கொடுக்கத் தவறினல், அதை மறு ஏலத்தில் விற்பதற்காக ஏற்பட்ட சிலவுகளையும், நேர்ந்த நஷ்டங்களையும் அவனிடம் வசூல்செய்யப்படும்.

பாக்கிதாரன் வீட்டிலாவது, மறியல்செய்யப்பட்ட அவனுடைய சொத்துக்களிருக்கிற வீட்டிலாவது இந்த நோடீசை ஒட்டவேண்டியது.

மறியல்செய்த சொத்துக்களின் ஜாபிதா.

இடம் (ஒப்பம்) அ. கு

தேதி. தாசில்தார்.

குறிப்பு.—இந்த நோடீசு ஒட்டிய 15 நாள்களுக்குப் பிறகு சொத்தை ஏலம்போடவேண்டியது.

4 நெ. பாரம்.

25 - வது பிரிவு.—பூமியை மறியல்செய்வதற்குமுன், செலுத்தவேண்டிய கிஸ்திப்பணத்துக்கு அனுப்பவேண்டிய அறிக்கை நோட்டீசு.

திண்டுக்கல் தாலூகாவைச்சேர்ந்த தங்கச்சியம்மாபட்டியிலிருக்கும் ஷண்முகம்பிள்ளைக்கு, அவன் கொடுக்கவேண்டிய கிஸ்தியைச் செலுத்தவேண்டுமென்று தெரிவிக்கிற டிமாண்டு நோட்டீசு.

5 நெ. பட்டாதாரனுகிய ௲. நெ-பசலிக்கு ரூ.—அ.—பை. உள்ள மொத்தத்தீர்வை கொடுக்கவேண்டியவனுயிருப்பதால், அந்தத் துகையைச் செலுத்தும்படி திண்டுக்கல் தாலூகா தாசில்தாரராகிய நான் இதனுல் உத்திரவுசெய்கிறதென்னவென்ருல், இந்த நோடீஸ் கண்ட

தேதிமுதல் 10 தினத்துக்குள்ளாக மேலே கண்ட தொகையைச் செலுத்திவிடவேண்டியது.

சேவகன் படிக்காக அணு 3. நீ கொடுக்கவேண்டியது.

ஒப்பம் அ. கு.

தாசில்தார்.

குறிப்பு — இந்த நோட்டீசைக் கொண்டுபோகிற சேவகன், நோடீசின் நகல் ஒன்றை, பாக்கிதாரனுக்காகிலும், அவன் ஆஜராயி ல்லாவிட்டால், அவனுடனிருக்கிற வயதுவந்த ஒரு ஆண்பிள்ளை யினிடத்திலாவது, அவன் அனுமதிபெற்ற வீட்டுக்காரியஸ்த னிட த்திலாவது ஒப்புவிக்க வேண்டியது. வயதுவந்த ஆண்பிள்ளை ஒரு வருமில்லாவிட்டால் அவன் குடியிருக்கிற வீட்டில் பகிரங்கமான விடத்திலாவது ஒட்டவேண்டியது, அல்லது மறியல் செய்யப்போ கிற சொத்துக்களிருக்கிற விடத்திலாவது ஒட்டவேண்டியது. இன் னவிதம் செய்யப்பட்டதென்பதை அந்த வுத்தியோகஸ்தன் அசல் நோடீசின் பின்பக்கத்தில் எழுதவேண்டியது.

5. ரே பாரம்.

27 - வது பீரிவு ஜப்திநோட்டீசு.

திண்டுக்கல் தாலூகா தங்கச்சியம்மாபட்டி கிராமத்திலிருக் கும் ஷண்முகம்பிள்ளையினுடைய சொத்துக்களை ஜப்திசெய்வதற் காக நோட்டீசு.

நீ - கொடுக்கவேண்டிய ரூ யைச் செலுத்தும்படியாய் உனக்கு எழுத்து மூலமாய்த் தெரிவித்தும், நீ கிஸ்தியைக்கொடாம லும், அப்படிக்கொடாமல் பாக்கி வைத்திருப்பதற்குக் காரணத் தைத் தெரிவிக்காமலு மிருப்பதால், உன்னுடைய சொத்துக்களை ஜப்திசெய்து, ஸ்ரீ ௳ க்குள்ளாக நீ கொடுக்கவே ண்டிய பாக்கித்தொகையையும், அதன் வட்டி, மற்றச்சிலவுகள் இவைகளையும் சேர்த்துக்கொடா திருந்தால், உன்னுடைய சொத் துக்களை விற்கப்படுமென்று இதனால் தெரிவிக்கப்படுகிறது.

இடம் ஒப்பம் அ. கு.

தேதி. தாசில்தார்.

குறிப்பு.—ஜப்திசெய்யப்பட்ட நிலத்தில் பயிரங்கமான விடத் தில் இந்த நோடீசின் நகலை ஒட்டவேண்டியது. மேலும் ஜப்திசெ

யித்விஷயத்தைப் பற்றி அந்த நிலத்தினருகே பகிரங்கமாய்ப் பிர சுரப்படுத்தி, ஜில்லா கெஜட்டிலும் பிரசுரஞ் செய்யவேண்டியது. (1864 ஞூத்து 2 - வது ஆக்ட் 27 - வது பிரிவு.)

6 நே. பாரம்.

29 - வது பிரிவு—இதரசொத்தின் காரிய நிர்வாகத்தை கவர்ன்மெண்டார் நடத்துவதைக் குறித்த நோட்டீஸ்.

திண்டுக்கல் தாலூகா தங்கச்சியம்மாபட்டிகிராமத்திலிருக்கு ஷண்முகம்பிள்ளை யென்பவனுடைய பூஸ்திதியின் காரிய நிர்வாகத்தை வகித்தலின் விஷயமாய் நோட்டீசு.

1904ஞூம் ஜூலைமீ 5உயில், ஜப்திசெய்த உன்னுடைய பூஸ்திதிகளை, 1864ஞூத்து 2 - வது ஆக்ட் 28 - வது பிரிவுப்பிரகாரம் கவரன்மெண்டாருடைய விசாரணையில் வைக்கப்பட்டதென்றும், அந்த ஸ்திதிகளின் பரிபாலனத்திற்காக வீராசாமி என்பவனை ஏற்படுத்தியிருக்கிறதென்றும் நீ அறிந்து கொள்ளவேண்டியது.

இடம்.
தேதி.

ஏ. பி.
(ஒப்பம்) கலெக்டர்.

குறிப்பு.—இந்த நோட்டீசை சேர்ப்பிப்பதற்கு நியமிக்கப்பட்டவுத்தியோகஸ்தன், எவன் பேருக்கு அந்தநோட்டீசு பிறந்ததோ அந்த பாக்கிதாரனுக்காவது அவனில்லாவிட்டால் அவன்வீட்டில் வசிக்கிற அவனுக்குச் சொந்தமான வயதுவந்த ஆண்பிள்ளையினிடத்திலாவது. அல்லது அவனுடைய அதிகாரம்பெற்ற காரியஸ்தன் அல்லது ஏஜண்டினிடத்திலாவது சேர்ப்பிக்கவேண்டும். அப்படிச்சேர்ப்பிக்க முடியாவிட்டால், அவன் வழக்கமாய் குடியிருக்கிற வீட்டில் பகிரங்கமாய்த் தெரியும்படியான விடத்தில் ஒட்டவேண்டியது. அன்றுமுதல் அந்தஸ்திதியின் காரிய நிர்வாகம் கவரன்மெண்டாரைச் சேர்ந்ததென ஜில்லா கெஜட்டிலும் பிரசுரஞ் செய்யவேண்டியது.

7. ரே பாரம்.

36 - வது பிரிவு பூமிகளைவிற்கிறதற்காக நோட்டீசு.

1. பூமித்தீர்வை கொடாமல் பாக்கிவைத்துக்கொண்ட பாக்கிதாரனும், தற்காலம் ரெஜிஸ்டர் புத்தகத்தில் பெயர் பதிப்பிக்கப்பட்ட பூஸ்திதியையுடையவனுமிருக்கிற யாதொரு நபர் கொடுக்கவேண்டிய பாக்கித்துகைக்காக ஜப்தி செய்யப்பட்ட அவனுடைய பூமிகளில் இதன்கீழ் விவரிக்கப்பட்டிருக்கிற சிலவற்றில் அவருக்குள்ள பாத்தியதைகளை 1904ளுடம் அக்டோபர்மீ 10உ திங்கட்கிழமைதினம் பகல் 11 மணிக்கு ஆரம்பித்து மதுரை ஜில்லா திண்டுக்கல் தாலூகா தங்கச்சியம்மாபட்டியில் பகிரங்கமாக விற்கப்படும். உயர்ந்ததுகை கேட்பவருக்கே விற்பனை ஊர்ஜிதம் செய்யப்படும்.

2. பூமியை வாங்குகிறவர், நடக்கிற பசலிக்கு முழுமையுமாவது அல்லது சங்கதிக்குத் தக்கபடி யாதொரு பாகத்தையாவது, இதனடியில் கண்டிருக்கிற விவரப்படி அந்த பூமிக்குள்ள தீர்வையைக்கொடுக்கவேண்டும்.

3. ஏலமெடுத்தவன் ஏலத்தின் தொகை மொத்தத்தில் 100-க்கு 15 வீதம் உடனேகட்டிவிடவேண்டும், பாக்கித்துகையையேலமெடுத்ததேதிமுதல் 30 நாள்களுக்குள்ளாக கட்டத்தவறினால் அவன் முன் கொடுத்தபணத்தை இழந்துவிடவேண்டியது.

4. அப்படி முதலில் பணத்தைக்கொடாமலும் இருக்கும் பட்சத்தில், அந்தப் பூமிகளை மறுஏலம்போட்டு விற்று, நேர்ந்த சிலலவை முதல் ஏலதாரனிடத்தில் வசூல்செய்யப்படும்.

5. ஏலங்கேட்பவர்கள் தங்களுக்காகவோ அல்லது தங்கள் எஜமானனுக்காகவோ ஏலம் கேட்பதை விவரமாய்ச் சொல்லவேண்டியது. இதராளுக்காக ஏலங்கேட்பதாயிருந்தால் அப்படிப்பட்ட எஜமானன் அல்லது இதராளுடைய அதிகாரப்பத்திரத்தை ஆஜர்

செய்யவேண்டும். அப்படி ஆஜர் செய்யத்தவறினால் அவர்கள் கேட்கும் ஏலம் ரத்துசெய்யப்படும்.

6. பாக்கிதாரனாவது. அவனுக்காக வேறே யாராவது, அல்லது அந்த நிலத்தில் பாத்தியமிருக்கிறதென்று சொல்லுகிறவனாவது, பாக்கித் தொகையையும், அதற்குள்ள வட்டியையும், மற்றச் செலவுகளையும் ஏலத்தேதிக்கு முந்தினதினம் சூரியாஸ்தமனத்திற்குள் கொண்டுவந்து செலுத்தினால், ஏலத்தை நிருத்தப்படும்.

7. அப்படிப்பட்ட ஏலம் கலெக்டரால் ஊர்ஜிதம் செய்யப்படுகிறவரையில் பூர்த்தியாகமாட்டாது.

8, ஏலமெடுத்தவன் தொகைசெலுத்தியிருந்து, அந்த ஏலத்தை கலெக்டர் உறுதிசெய்தவுடன், நிலங்களை ஏலமெடுத்தவனுடைய சுவாதீனமாக்கப்படும். பிறகு ஏலமெடுத்தவன் பெயரை ரிஜிஸ்டரில் தாக்கல் செய்து, கலெக்டருடைய கையெழுத்தும், முத்திரையும் போடப்பட்ட ஏல சர்டிபிகேட்டு ஒன்று அவருக்குக் கொடுக்கப்படும். கவர்ன்மெண்டார் நிலத்தைக்குறித்த விவரத்துக்கும், விஸ்தீரணத்தில் ஏற்பட்ட குறைவுக்கும் பாத்தியஸ்தர்களல்ல.

9. ஏலத்தினால் நஷ்டமடைந்ததாக எண்ணுகிற பாத்தியஸ்தர்கள், ஏலத்தேதிமுதல் 30 தினங்களுக்குள்ளாக எழுத்துமூலமாய் கலெக்டருக்குத் தெரிவிக்கவேண்டும். அதன்மேல் கலெக்டர் நியாயா நியாயங்களை விசாரித்து முடிவான உத்திரவைச் செய்வார்.

தாலூகா.	கிராமம்.	பாக்கிதாரனுக்குச் சொந்தமான நஞ்சை புஞ்சை அல்லது தோட்டம், வீடு கட்டப்பட்டிருக்கிற முதலியவைகளின் விவரம்.	நிலம்.			உத்தேச விஸ்தீரணம்.		தீர்வை.			ஏலத்தேதிக்குப் பிறகு ஏலமெடுத்தவன் கட்டிற பசலிக்குக் கொடுக்கவேண்டிய பாக்கித்தீர்வை.
			சர்வே நெம்பர்.	லெட்டர்.	நஞ்சை அல்லது புஞ்சை.	ஏ. செ.	நெ	ரூ.	அ.	ப.	

குறிப்பு.—விளம்பரத்தை இங்கிலீஷிலும், சுதேசபாஷையிலும் எழுதியிருக்கவேண்டும். எலத்தேதிக்கு முந்தி குறைந்த பட்சம் ஒருமாசம் வரையில், கலெக்டர் கச்சேரி, தாலூகாகச்சேரி, போலீஸ்ஸ்டேஷன் இந்த இடங்களிலும், விற்பனைசெய்யவேண்டிய நிலத்தில் நன்றாய் தெரியும்படியான விடத்திலும் பகிரங்கமாய் அந்த விளம்பரத்தை ஒட்டவேண்டியது.

8-ம் நே. பாரம்.

38 - வது பிரிவு ஏலசர்டிபிகேட்.

மதுரைஜில்லா திண்டுக்கல் தாலூகா, தங்கச்சியம்மாபட்டி கிராம மிராசுதாரராகிய கிருஷ்ணய்யர் என்பவர், ஷை கிராமம் ஷண்முகம்பிள்ளை கொடுக்கவேண்டிய ரிவினியூ பாக்கிக்காக அவனுக்குச் சொந்தமான இதனடியில் விவரித்திருக்கிற நிலங்களில் அவனுக்குள்ள பாத்தியதையைப் பிடுங்கி ஏலம்போட்டுவிட்டதாலும், ஏலத்தில் ஷை கிருஷ்ணய்யர் அந்த நிலத்தை அதிக துகைக்குக் கேட்டுப் பூராவாய்த் துகையைச்செலுத்திவிட்டதாலும், அந்த நிலங்களை கிருஷ்ணய்யர் பெயரால் ரிஜிஸ்டரில் இன்றுபதிந்து, அந்த பூமிக்குள்ள சகல சுதந்திரங்களையும் கிருஷ்ணய்யர் அனுபவிக்கவேண்டியதென்று இதனால் அறியவேண்டியது.

தாலூகா கிராமம்.	நஞ்சை, புஞ்சை, தோட்டம் இதில் [illegible] ரம்.	நிலத்தின் விவரம்.			விஸ்தீரணம்.			தீர்வை.			விக்கிரயதேதி.
		சர்வே நெம்பர்.	வெட்டர்.	பெயர்.	ஏ	செ	ரெ	ரூ	அ	ப	

கலெக்டராபீஸ் இடம் ஞ மீ ௳.

(ஒப்பம்) ஏ. பி. கலெக்டர்.

9 - ம் நே. பாரம்

38-வது பிரிவு. விற்ற பூமியைப்பற்றிய ரிஜிஸ்டர்.

வது பசலிக்காக ஜில்லாவில் 1864ஞூ 2-வது ஆக்ட்படி

ஏலம்போட்டு விற்ற நிலங்களின் ரிஜிஸ்டர்.

தாலூகா.	கிராமம்.	பாக்கிதாரன் பெயர்.	செலுத்தவேண்டிய பாக்கித்தொகை.	எந்த பசலிக்கு பாக்கி.	விற்ற பூமியின் விவரம்.				விற்பனையில் வசூலான மொத்தம்.	வாங்கினவன் பெயர்.	விற்பனை தேதி.	அதிகம் அல்லது குறைவு.	ஷரா.
					ஒவ்வொரு பிரிவின் நெம்பர்.	நிலத்தின் நெம்பர்.	விஸ்தீரணம்.	தீர்வை.					
1	2	3	4	5	6	7	8	9	1	11	12	13	14

இடம் }
தேதி }

(ஒப்பம்) எ. பி.
கலெக்டர்.

குறிப்பு.—நிலத்துக்குச்சரியான விலை கிடைக்காதபோது அதன் காரணத்தை ஷரா கலத்தில் எழுதவேண்டும்.

10-ம் நே. பாரம்.

39-வது பிரிவு பூமியை வாங்கினவிஷயத்தைப்பற்றி விளம்பரம்.

மதுரைஜில்லா., திண்டுக்கல் தாலூகா தங்கச்சியம்மாபட்டியி லிருக்கும் கிருஷ்ணய்யர் என்பவர் ஷை கிராமத்திலிருக்கும் ஷண் முகம்பிள்ளை என்பவன் அவனுடைய அனுபோகத்திலிருக்கிற நில த்திற்குத் தீர்வைகொடாமல் பாக்கிவைத்திருந்ததற்காக, அவனு டைய ஸ்வாதீனத்திலிருக்கிற அடியில் கண்டிருக்கிற நிலங்களை சர்க்காரில் ஏலம்போட்டு, அந்த ஏலத்தில் ஷை கிருஷ்ணய்யர் உய ர்ந்த தொகைக்குக்கேட்டு மொத்தத்தொகை ரூ. யும் செலுத் தினபடியால் அவர் பேரால் அந்த நிலங்களை தாக்கல் செய்யப் பட்டதென்று எல்லாரு மறியவேண்டியது. ஆகையால், மேற்சொ ல்லிய நிலத்தில் ஷண்முகம்பிள்ளைக்கிருந்த சகலசுதந்தரங்களையும் கிருஷ்ணய்யர் அடையவேண்டியது.

தாலூகா.	கிராமம்.	நஞ்சை புஞ்சை அல்லது தோட்டம் அதிலுள்ளவீடு வகையரா.	நிலத்தின் விவரம்.		உத்தேச விஸ்தீரணம்.		தீர்வை.		
			சர்வே நெ.	மெட்டர்.	ஏகர்.	செ.	ரூ.	அ.	பை.

இடம் }
தேதி. }

(ஒப்பம்) ஏ. பி
கலெக்டர்.

குறிப்பு.—மேலேகண்ட விளம்பரத்தை, விற்ற பூமியிருக்கப் பட்ட ஜில்லா கலெக்டர் ஆபீஸ், தாலூகாகச்சேரி, கிராமத்திலும் பகிரங்கமாய் பிரசுரஞ்செய்யவேண்டியது.

11-ம்நே பாரம்.

48, 49 - வது பிரிவுகள்.—மனப்பூர்வமாகவாவது, கபடமா கவாவது தீர்வைபாக்கியைச் செலுத்தாமைக்காக, ஆளைப்பிடிக்க வாரண்ட் பிறப்பிக்கும் விதம்.

உத்தியோகஸ்தருக்கு

ஷண்முகம்பிள்ளை என்பவன் அவன் நிலத்துக்குச் செலுத்த வேண்டிய ரூ யைக் கொடாமலிருந்ததால் அவனுடைய சொத்தையும் ஷெ யாருக்கு ஜாமின்தாரியான இராமன் செட்டி என்பவனுடைய சொத்தையும் (சேர்த்ததாகவாவது தனியாகவாவது) ஏலம்போட்டு விற்றதினால் வசூலான மொத்தம் மேற்கண்ட செலுத்தவேண்டிய தொகைக்குப் போதாததாலும். ஷெ பாக்கிதாரனும், அவனுடைய ஜாமீன்தாரனும் தீர்வைபாக்கியையும் அதற்கேற்பட்ட சிலவையும் கொடுக்கத்தவறினால் அல்லது செலுத்தாமல் ஓடிப்போகவேண்டுமென்கிற எண்ணங்கொண்டிருப்பதாக இதனடியில் கையொப்பமிட்டவருக்குத் திருப்திகரமாகத் தோற்றினால் அந்த பாக்கிதாரனையாவது அல்லது அவனுடைய ஜாமீன்தாரனையாவது அல்லது இரண்டுபேரையுமாவது பிடித்து ஜில்லா ஜயிலுக் கனுப்பி ஜயிலரிடத்தில் ஒப்புவிக்கவேண்டுமென்று இதினால் உனக்கு உத்திரவு செய்யப்படுகிறது.

இடம் }
தேதி. } (ஒப்பம்) ஏ. பி
கலெக்டர்.

குறிப்பு —இது ரிவினியூ சேவகர்களால் கொடுக்கவேண்டும்.

ஷெடியூல்.

பாக்கிதாரன் அல்லது ஜாமீன்தாரன் அல்லது இருவருடைய பெயரும்.	கொடுக்கவேண்டிய ரிவினியூ பாக்கித் தொகை.	தொகைசெலுத்தவேண்டிய கெடு.

குறிப்பு.—பிடித்த பேர்வழியுடன்வாரண்டை ஜயிலரிடத்தில் ஒப்புவிக்கவேண்டியது. அவர் வாரண்டின் பிரதியொன்றைதான் வைத்துக்கொண்டு அசலை தன்மேலதிகாரிக்கு உடனே அனுப்பவேண்டியது.

56 - வது பிரிவு இரசீது.

சேலம் ஜில்லா நாமக்கல் தாலூகாவைச்சேர்ந்த மேட்டுப்பட்டியிலிருக்கும் சுப்பாரெட்டியென்கிற பட்டாதாரன், அவன்

1246-ம் பசலிக்குச் செலுத்தவேண்டிய கிஸ்திமைச் செலுத்தின ற்காக அவனுக்குக்கொடுத்த ரசீது.

மாதமும் தேதியும்	எந்தப்பசலிக்கு.	பாபத்துகள்.	மொத்தம்.	நோட்டக்கார்ரன், கர்ணங்களுடைய கையெழுத்து.	பட்டாமணியக்காரனுடைய கையெழுத்து	
1	2	3	4	5	6	

3-வது அத்தியாயம்—ஏலம்.

38. சர்க்கார் ரிவினியூபாக்கிக்காக விற்பனையை நடத்துவது.

சர்க்கார் ரிவினியூபாக்கிக்காக எந்த சொத்தை ஏலம்போட்டாலும் எவ்வித ஆட்சேபமும் நேரிடாதபடி ஒரேதடவையாய் ஏலம்போடவேண்டும். சச்சரவுகளுண்டாகாதபடி கலெக்டர் ஏற்பாடுசெய்து ஏலத்தை நடத்தவேண்டும். நோட்டீசில் கண்டபடி ஏலத்தை நிறுத்தாமலும், காலதாமதஞ்செய்யாமலும் குறித்ததினமே ஏலம்போடும்படி செய்யவேண்டும். ஒருபாகத்தை ஒரேதடவையில் ஏலம்போடவேண்டும். அனேக பிரிவுகள் ஒரே ஏலத்தில் வந்தால், அவைகளை ஏலம்போட நாள்பிடித்தாலும் ஏலத்தை நிறுத்தி மறுநாள்போடலாம்.

39. அப்புறப்படுத்திய நிலத்தை ரிவினியூபாக்கிக்கு ஏலம்போடுவது

ஒருபட்டாதாரன் தனது பட்டாவில் ஒருபாக நிலத்தை வேறொருவன் வசம் ஒப்புவித்திருந்தாலும், அதன்பேரில் சர்க்கார் பாக்கி இல்லாதிருந்தாலும், பாக்கிக்காக அப்படி அப்புறப்படுத்தியிருக்கும் நிலத்தை ஏலம்போடக்கூடாது. பட்டாதாரனுடைய சொந்த நிலங்களை முதலில் ஏலம்போட்டு அதின் சர்க்கார் பாக்கி வசூலாகாமற்போனாலும், நிலத்தை வைத்திருக்கிறவனுடைய தப்பிதத்தால் ஷை பாக்கி வசூல் நின்றிருக்கிறதென்று தெரிந்தாலும் அந்த நிலத்தை ஏலம்போடலாம்.

40. பூமியின் சுவான்தாரன் இன்னாரென்று சந்தேகமாயிருக்கிற விஷயத்தில் நடவடிக்கை.

சர்க்கார் பாக்கி வைத்திருக்கிறவனுடைய ஸ்தாவரஜங்கம சொத்துக்களின் பேரில், தன்னுடைய இஷ்டப்பிரகாரம் நடவடிக்கை நடத்துவதற்கு கலெக்டருக்கதிகாரமிருக்கிறது. அப்படிப்பட்டபூமியாருடையதா யிருந்தபோதிலும், அதன்பாக்கிக்காக அதை ஜப்திசெய்து ஏலம்போடலாம். சுயேச்சையாய் வினியோகஞ்செய்துகொள்ளலாமென்று ஏற்பட்ட மாணியங்களின்பேரில் குயிட்ரெண்ட் வசூலாகவேண்டியிருந்து அப்படிப்பட்ட மானியத்தின் சுவான்தாரன் இன்னாரென்று தெரியாதிருந்தால், அப்படிப்பட்ட தீர்வையை மேற்சொன்ன மாதிரியாகவே வசூல்செய்யவேண்டும்.

41. கவரன்மெண்டாருக்காக ஏலத்தில் வாங்குவது.

1. ஒரு ஏலத்தில் நிலத்தை யாரும் கேட்காமலிருந்தால், அதை பேருக்குமாத்திரம் சர்க்காரில் விலைக்கு எடுத்துக்கொண்டு கணக்கில் ஷை பாக்கியை வசூலாகாதகணக்கின்கீழ் எழுதிவிடவேண்டும். ஏலம்போடுகையில் வேணுமென்று கேட்காதிருக்கிறதாகத் தெரியவந்தால், சர்க்கார் தீர்வை மொத்தம் வரையில் ஏலம்போடுகிற உத்தியோகஸ்தனே கேட்கலாம்; கவரன்மெண்டுக்காக நிலத்தை ஏலத்தில் எடுத்தால் அதற்கு சர்டிபிகேட்டு இந்தியா சிகிரிடெரியின் பேரில் செய்யவேண்டும்.

2. கவரன்மெண்டார் பேருக்கு ஏலத்தில் எடுத்த நிலத்தை தர்க்காஸ்து அடமானத்துக்காவது, உத்திரவின்றி சாகுபடி செய்யவாவது விடக்கூடாது. அதைக் கர்ணம் பிரத்தியேகமான கணக்கில் பதிவுசெய்துகொள்ளவேண்டும். இந்தக் கணக்கிலிருக்கிறவரைக்கும் தர்க்காஸ்துக்கு விடக்கூடாதென்பதை கிராம உத்தியோகஸ்தர்களறிந்திருக்கவேண்டியது. கட்டுப்பாடாகவாவது, காலசுபாவத்தினலாவது ரிவினியூ ஏலத்தில் ஒருவரும் கேட்காதிருந்தால், கொஞ்சகாலம் சென்றபிறகு தகுந்த விலைக்குப் போகுமென்று தோன்றினல், அதிக பயிரங்கமாய், ஏலம்போடவேண்டும். கலெக்டருக்கு ஷை நிலம் உபயோகமில்லையென்று தோன்றினல் ஷை பிரத்தியேகக் கணக்கிலிருந்து அதை எடுத்துவிட்டு சாதாரண புரம்போக்கின்கீழ் கொண்டுவரலாம். அப்பொழுது அதை தர்க்காஸ்து

செய்யலாம். ஜமாபந்திகாலத்தில் இந்தக்கணக்கை ஜாக்கிரதையாகப்பார்த்து அதில் தள்ளிவிடும்படியான நிலங்களைத் தள்ளிவிடலாம். ஆனால், கலெக்டர் அப்படி தள்ளிவிடப்பட்ட நிலத்தை மறுபடியும் சேர்க்கலாமென்றால் சேர்த்துவிடலாம். அந்தக்கணக்கிலிருக்குங்காலத்தில் யாராவது அந்த நிலத்தில் பிரவேசித்தால் அவருக்கிஷ்டமான தீர்வைபோடலாம், விலையில்லாத நிலத்தில் பிரவேசித்தால் முதல்வருஷத்தீர்வையை அபராதத் தீர்வையாக விதிக்கலாம், விலையுள்ள நிலமாகவிருந்தால் அதிக அபராதத்தீர்வையை விதிக்கலாம்.

42. பிராசஸ் சேர்ப்பிப்பது.

1. பிராசஸ்களை கிராமாதிகாரிகளே அதில் கண்ட பேருக்குச் சேர்ப்பித்தும், சொத்துக்களை ஜப்திசெய்யவும் வேண்டும்; அதற்காக அவர்களுக்கு யாதொரு கூலியும் (பீசு) கிடையாது.

2. இந்த விஷயத்திற்காக கலெக்டருடைய அனுமதியின் பேரில் படிச்சேவகன்களை நேமிக்கலாம். அப்படி நியமிக்கப்பட்ட சேவகன் சம்பளம் மீ 1-க்கு ரூபா 7-க்கு அதிகப்படக்கூடாது. இந்தச் செலவை ஜப்தியில் வசூலான பணத்திலிருந்து கொடுக்க வேண்டியது. இந்தப் படிச்சேவகன்களை ஒருதாலூகாவிலிருந்து மற்றொரு தாலூகாவிற்கு மாற்றலாம்.

3. கிராமாதிகாரியில்லாமல் படிச்சேவகர்கள் எந்தசொத்தையும் ஜப்திசெய்யக்கூடாது. பிராசஸ் கொடுப்பதற்கு 4 அணாவும், ஜப்திசெய்வதற்கு 8 அணாவும் படி ஏற்பட்டிருக்கிறது. பிராசஸை சேர்ப்பிப்பதற்குள் பணத்தை செலுத்திவிட்டால் அதற்கு ஜப்திப்படி கிடையாது. கலெக்டராபீசில் இந்த விஷயத்தில் வசூலானதையும், படிச்சேவகன்களுக்குக் கொடுத்த தொகையையும் கண்டகணக்கு ஒன்றிருக்கும்; செடில்மெண்ட்ரிப்போர்ட்டில் இந்த விஷயத்தில் வசூலானதொகையை அவசியம் காட்டவேண்டும்.

4. சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் ஏற்படாத எஸ்டேட்களுக்கு, பிராசஸ்கொடுக்கிற உத்தியோகஸ்தனைக்கொண்டு வசூல்செய்யவேண்டும்.

5. தாலூகாவில் எத்தனை பிராசஸ்கள் கொடுக்கப்பட்டதோ அதைக்கண்ட ஒரு ரிஜிஸ்டர் வைத்திருக்கவேண்டும்.

43. சீவில் கோர்ட்டாரால் விற்கப்பட்ட நிலத்தின் பாக்கியை வசூல்செய்வது.

சிவில் கோர்ட்டாருடைய தீர்ப்பின்பேரில் எலம்போட்டுவிற்ற பூமியின் கிரயப்பணத்திலிருந்து ரிவினியூ பாக்கியை வசூல்செய்வதற்கு யாதொரு பிரயத்தனமும் செய்யக்கூடாது. ரெவினியூ சட்டப்பிரகாரம் சொந்தக்காரன் இன்னான் என்பதை கவனியாமல் நிலத்தின் கிஸ்திபாக்கியை வசூல்செய்வதற்காக பிராசஸ் அனுப்பலாம். சிவில் கோர்ட்டாருடைய எலத்தில் நிலத்தை எடுக்கிறவன், அந்த நிலத்தின் கிஸ்திபாக்கியைக் கொடுக்கவேண்டும். அப்படிப்பட்ட பாக்கியை தாலூகா கச்சேரியில் தெரிந்துகொள்ளலாம்.

44. சீவில்கோர்ட்டாரால் ஜப்தி செய்யப்பட்டிருக்கிற நிலத்தின் ரிவினியூபாக்கியை வசூல்செய்வது.

தீர்ப்புச்சொல்வதற்குமுன் கோர்ட்டாரால் யாதொரு நிலத்தை ஜப்திசெய்திருந்தால், அந்தநிலத்தின் ரெவினியூ பாக்கிக்காக அதை ஜப்திசெய்யலாம். சிவில் கோர்ட்டார் பிரவேசிப்பதற்குமுன் என்ன அமுலை ரெவினியூ உத்தியோகஸ்தர் நடத்தலாமோ அந்த அமுலை கோர்ட்டார் பிரவேசித்தபிறகும் நடத்தலாம். கோர்ட்டார் ஒரு நிலத்தின் ஹக்கையட்டும் எலம்போடலாம். கலெக்டர் நிலத்தையும் அதிலுள்ள பாருலையும் எலத்தில் விற்கலாம்.

45. துப்புச்சொல்லுகிறவர்களுக்கு வெகுமதி.

சாகுபடியையாவது, ரிவினியூவிஷயத்தையாவது கணக்கர்கள் ஒளித்துவைத்துக் காட்டாமலிருந்தால் அந்த சங்கதியை ஜமாபந்திக்கு முன்னாவது, நடந்துகொண்டிருக்கும்போதாவது கலெக்டருக்குத் தெரிவித்து ருசுச்செய்தால், அப்படிச்செய்தவர்களுக்கு மோசமாய் ஒளித்துக் காண்பிக்கப்பட்ட நிலத்தின் தீர்வையில் பாதி இனாமாகக் கொடுக்கப்படும்.

4-வது அத்தியாயம்.

46. நிலவிருத்தி சம்பந்தமான கடன்கள். 1883-௵த்து 19 வது ஆக்ட் 10 வது பிரிவுகள்.

1. ஆலோசனை சபையிலுள்ள கவர்னர்ஜனரல் அவர்கள் அவ்வவ்விடத்திய கவர்ன்மெண்டாருக்கு அப்போதைக்கப்போது எவ்வளவெவ்வளவு தொகை கடன்கொடுக்கலாமென்று ஏற்படுத்தியிருக்

கிறார்களோ அந்தத் தொகையிலிருந்தாவது, அப்படிப்பட்ட கடன் கொடுப்பதற்காக வேறே விதமாய் அவ்வவ்விடத்திய கவரன்மெண்டார் வசத்திலிருக்கிற தொகையிலிருந்தாவது கடன்கொடுக்கலாம்.

2. அப்படிப்பட்ட கடன் 200 ரூபாய்க்கு மேற்படாமல் தாசில்தாரும், 500 ரூபாய்க்கு மேற்படாமல் டிவிஷனல் ஆபீசர்களும் 1000 ரூபாய்க்கு மேற்படாமல் கலெக்டர்களும் கொடுக்க அதிகாரமுண்டு. 1000 ரூபாய்க்கு மேற்பட்ட தொகைகொடுக்க ரிவினியூ போர்டாருக்கும், 5000 ரூபாய்க்கு மேற்பட்டகடன் தொகைகளை கொடுக்க பிரதேச கவர்ன்மெண்டாருக்குந்தான் அதிகாரமுண்டு.

3. தாசில்தார் அல்லது அதற்கு உயர்ந்த அந்தஸ்துடையவராகவாவதிருக்கிற யாதொரு ரிவினியூ உத்தியோகஸ்தரிடம் கடனுக்காக மனுச்செய்துகொள்ளவேண்டும். மேலும் அதற்காக ஏற்பட்ட விண்ணப்பகமூனாவில் கண்ட விபரங்களை அந்தமனுவில் கண்டு, மனுதாரன் கையெழுத்துச்செய்து அதைக்கொடுக்க வேண்டும். வாய்மொழியாக மனுச்செய்துகொண்டால், எந்த உத்தியோகஸ்தரிடத்தில் மனுச்செய்துகொள்ளப்படுகிறதோ அவர், அதற்காக ஏற்பட்ட பாரத்தில் பதிந்துகொண்டு மனுதாரன் கையெழுத்தை வாங்கவேண்டும்.

4. மனுதாரன் நேரில்வந்து ஆஜராகவேண்டிய அவசியமில்லை; மனுதாரனுக்காக அவனுடைய அதிகாரம்பெற்ற ஏஜெண்டு ஆஜராகி காரியங்களை நடத்தலாம். ஆஜராகவேணுமென்று உத்தியோகஸ்தர்களால் கொடுத்த உத்திரவுப்படி மனுதாரனாவது அல்லது அவனுடைய ஏஜெண்டாவது ஆஜராகாதபட்சத்தில்மனுவைத் தள்ளிப்போடலாம்.

5. மனுவை வரப்பெற்றுக்கொள்ளுகிற உத்தியோகஸ்தன், எதற்காக அது செய்துகொள்ளப்படுகிறதோ அந்தக்கடனுக்காக அனுமதிகொடுக்க அதிகாரமில்லாவிட்டால், அவர் அந்த மனுவில் காணவேண்டிய சகல விவரங்களும் எழுதியிருக்கிறதாவென்று பார்வையிட்டபிறகு, அந்தக்கடனைக் கொடுக்க அதிகாரமுள்ள எந்த உத்தியோகஸ்தருக்குத் தான் கீழ்ப்பட்டிருக்கிறாரோ அவருக்கதை அனுப்பவேண்டும்.

6. அந்த மனுவை ஏற்றுக்கொள்ளவேண்டியதென்று நம்புவதற்குத் தகுந்த காரணமிருக்கிறதென்று ஜில்லா கலெக்டருக்கா

வது, பிரத்தியேகமாய் கலெக்டர் அதிகாரம் கொடுக்கப்பெற்ற வேறே உத்தியோகஸ்தருக்காவது தோற்றினல், அதை விண்ணப்ப ரிஜிஸ்டரில் பதிந்துகொண்டு அதைப்பற்றி பிரதேச விசாரணை செய்யும்படி உத்திரவு கொடுக்கவேண்டியது.

7. சம்பந்தப்பட்ட கிராமத்தில் போய் விசாரணைசெய்யாமல் எவ்விதக் கடனையும் கொடுக்கக்கூடாது. கடன் 500 ரூபாய்க்கு அதிகப்பட்டால் பிரதேச விசாரணையை தாசில்தார் அல்லது டிப்டி தாசில்தார் இவர்களுடைய அந்தஸ்துக்குக் குறைவுபடாத யாதொரு உத்தியோகஸ்தர் செய்யவேண்டும். அந்தத் தொகைக்கு அதிகப்படாதிருந்தால் யாதொரு ரிவினியூ இனிஸ்பெக்டரையாவது, அவருடைய அந்தஸ்துக்குச் சரியான வேறே உத்தியோகஸ்தரையாவது விசாரணைசெய்யும்படி ஏற்படுத்தலாம். விசாரணைசெய்யும்படி உத்திரவுபெற்ற உத்தியோகஸ்தன், எந்த நிலத்தை சீர்ப்படுத்தவோ அல்லது கிணறு முதலியவை வெட்ட கடன் கேட்கப்பட்டதோ அந்த நிலமிருக்கிற கிராமத்தில் பகிரங்கமானவிடத்தில் எதற்காக மனுச்செய்துகொள்ளப்பட்டதோ அந்தக் கடன் இப்படிப்பட்டதென்பதையும், மனுவில் கண்ட சங்கதிகள் சரிதான இல்லையா என்பதையும் குறித்து அந்தவிடத்தில் இன்ன தேதியில் விசாரணை செய்வதாய் தான் உத்தேசித்திருக்கிறதையுங்கண்டு சுருக்கமாய் ஒரு நோட்டீஸை எழுதி அந்தப்படித் தான் உத்தேசித்திருக்கிறதாய் விசாரணைத்தேதிக்குக் குறைந்தது ஒரு வாரத்துக்கு முன்னதாக ஒட்டவேண்டியது. அந்த நோட்டீஸை ஒட்டும்படி உத்திரவு பெற்ற உத்தியோகஸ்தன், அதைத் தகுந்தபடி கிராமத்தில் பிரசித்தஞ்செய்ததற்கு அத்தாட்சியாக அந்தக் கிராம உத்தியோகஸ்தர்களிடத்தில் நோட்டீஸ் பிரதிகளில் ஒன்றில் கையெழுத்து வாங்கி அதைப் பிறப்பித்த உத்தியோகஸ்தருக்கு அனுப்பிவிடவேண்டும். மற்றொரு பிரதியை கிராமத்தில் பகிரங்கமான விடத்தில் ஒட்டவேண்டும். நிலவிருத்தி சம்பந்தமான கடன்களை குறித்த ஆக்ட்டுப்படி நோட்டீசுகளைச் சேர்ப்பிப்பதற்காக யாதொரு கட்டணமும் வாங்கக்கூடாது.

8. நோட்டீசின்படி நிர்ணயிக்கப்படுகிற தேதியிலாவது, விசாரணைசெய்வதை எந்தத் தேதியில் ஒத்திவைத்துக்கொள்வதாய் பிந்திய நோட்டீசின்படி நிர்ணயிக்கப்படுகிறதோ அந்தத் தேதியிலா

வது, விசாரணைசெய்யும்படி உத்திரவுபெற்ற உத்தியோகஸ்தன் அந்த கிராமத்துக்குப் போய் இது விஷயமாய் சம்பந்தப்பட்ட நபர்களையும் பிரதேச உத்தியோகஸதர்களையும் கிராமத்தில் யோக்கியமான சில குடித்தனக்காரர்களையும் வரவழைத்து வைத்துக்கொண்டு, பொது ஜனங்களுக்காவது அல்லது யாதொரு நபருக்காவது இருக்கிற பாத்தியதைக்குத் கெடுதி நேராதிருக்கும்படியாய் பூர்த்தியாய் விசாரணைசெய்து தெரிந்துகொண்டு, பிரஸ்தாபவேலை நடக்கப்போகிற விடத்தையும் போய் பரிசோதிக்கவேண்டியது. மனுவில் கண்ட அம்சங்களொவ்வொன்றும் சரிதானு அல்லவோவென்று பரிசோதித்து, அதை யார்முடிவாகப் பைசல்செய்வதா யிருக்கிறதோ அந்த உத்தியோகஸ்தர் சரியான தீர்மானஞ்செய்வதற்கு அவசியமான விஷயங்கள் ஒவ்வொன்றையும் நிச்சயமாய் அறிந்துகொண்டு எழுதவேண்டும். உத்தேசிக்கப்பட்ட வேலைக்குள்ள சகல ஆட்சேபங்களைக் குறித்த சகல சாட்சியங்களைக் குறித்தும் அவர் முக்கியமாய் குறிப்பெடுத்துக்கொள்ளவேண்டியது. விசாரணை முடிவானதன்மேல் அவர் (எ) நமூனுவின் பின்பக்கத்தில் கண்ட நமூனுப்படி தன்னுடைய அபிப்பிராயத்தை எழுதி சிபார்சுபண்ணி அந்த தஸ்தாவேஜுகளை, விசாரணை செய்யும்படி தனக்கு யார் உத்திரவு செய்தாரோ அந்த உத்தியோகஸ்தருக்கு அனுப்பவேண்டியது. யாருடைய சாட்சியம் முக்கியமானதாயிருக்கிறதோ அவர் ஆஜராகமாட்டேனென்று நிராகரித்தாலும், ஆஜராக அசட்டை செய்தாலும் சம்மன் பிறப்பிக்கலாம். 1869ளுபத்து 3-வது மதராஸ் ஆக்ட்படி சம்மன் பிறப்பிக்க மேற்படி விசாரணைசெய்கிற உத்தியோகஸ்தருக்கு அதிகாரமில்லாவிட்டால் சாட்சிகளை சம்மனனுப்பி வரவழைக்க அதிகாரங்கொடுக்கப்பெற்ற உத்தியோகஸ்தருக்கு மனுச் செய்துகொள்ளலாம்.

9. மனுதாரன் நிலவிருத்திக்காகத்தான் கடன்கேட்கிறுனுவென்பதையும், கடன்தீர்க்க அவனுக்குச் சக்தியிருக்கிறதாவென்பதையும், கொடுப்பதாகக் காட்டப்படுகிற ஜாமீன் போதுமானதாவென்பதையும் நிச்சயமாய் தெரிந்துகொள்ள சர்வ ஜாக்கிரதையாயிருக்கவேண்டும்.

எவன் தன்னுடைய நிலத்தை ஜாமீனுகக் காட்டுகிறுனே அவன்தானு அந்த நிலத்திற்கு வாஸ்தவத்தில் சொந்தக்காரனென்ப

தை நிச்சயமாய்த் தெரிந்துகொள்ளும்பொருட்டும், அந்த நிலத்துக் குச்சிக்குச் சிலுக்குகளில்லையாவென்றாவது அதன்பேரில் கிஸ்தி பாக்கி இல்லையாவென்றாவது அதற்குமுன்பாகவே வாங்கப்பட்ட கடனுக்கு சர்க்காருக்கு அந்தநிலம் முன்னமேஈடுகாட்டப்படவில்லை யென்றாவது நிச்சயமாய்த் தெரிந்துகொள்ளும் பொருட்டும் விருத்தி செய்யப்போகிற நிலத்திலும் அவரவர்களுக்குள்ள சுதந்தரங்களைப் பற்றியும் ஜாக்கிரதையாய் விசாரணைசெய்யவேண்டியது. எவன் கடனுக்காக மனுச்செய்து கொள்ளுகிறானோ அவன் பேரிலேயே விருத்திசெய்யப்படப்போகிற நிலத்தின் பட்டா இருக்கவேண்டியது. குதுவை வைத்துக்கொள்ளுகிறவர்கள் நிலத்தின் சுவாதீனத்தைப் பெற்றிருந்தாலும் அவர்கள் செய்துகொள்ளும் மனுக்களைச் சாதாரணமாய் ஏற்றுக்கொள்ளக்கூடாது. மேல் ஜாமீனாகக்கொடுப்பதாய்க் காட்டப்படுகிற நிலவிஷயத்திலே ஜாமீன்தாரன்பேரிலேயே பட்டா யிருப்பதோடுகூட அவன்தான் வாஸ்தவத்தில் சொந்தக்காரனா வென்பதையும், அந்த நிலத்தில் அவனுக்குமாத்திரம் தனியே எவ்வளவுபாத்தியமிருக்கிறதோ அதற்கதிகமாகக் கூட்டுச் சொந்தக்காரர்களுடைய சம்மதியை எழுத்து மூலமாய் பெற்றுக்கொள்ளாமல் அந்த சொத்தின்மேல் பொறுப்பேற்படவில்லையாவென்பதையும்நிச்சயமாய்த் தெரிந்துகொள்ளுவதற்கு முயற்சிசெய்யவேண்டியது. மனுதாரன் நிலத்தில் டிரான்சுபர் பண்ணத்தக்க பாத்தியமுடைய பாயக்காரியா யிருக்கிறபட்சத்தில் 14 முதல் 17 வரையிலுள்ளவிதிகளிற் கண்டபடி நடவடிக்கை நடத்தவேண்டியது. அப்படி டிரான்சுபர் செய்யத்தக்க பாத்தியம் அவனுக்கிராமலும், பாயக்காரி நிலத்துக்குரியவனாகிய இவர்களுக்குள் யாருக்கு நிலத்தைவிருத்திசெய்ய சுதந்தரமிருக்கிறதோ அதைக்குறித்துப்பொதுவில் யாதொருஉடன்படிக்கைஏற்படாமலிருந்தால் நிலத்துக்குரியவன் சம்மதித்தாலன்றி மற்றப்படி கடன்கொடுக்கப்படமாட்டாதென்று நிராகரிக்கவேண்டியது.

10. ஜாமீனாகக்கொடுப்பதாய் காட்டப்படுகிறசொத்தின்பெருமானம் எதற்காக மனுச்செய்து கொள்ளப்படுகிறதோ அந்தக் கடன் தொகைக்கு கால்பங்கு அதிகமாயிருந்தாலன்றி கடன்கொடுக்கப்படமாட்டாது.

11. செய்வதாகப்பிரயத்தனப்படுகிறவேலை 5000 ரூபாய்க்கு அதிகமாய்ப் பிடிக்கத்தக்கதாயும், அதையே தொழிலாகக்கொண்டு

அதிகப்பண்பட்டுத் தேர்ச்சியடைந்தவர்களே அதைச்செய்து முடிக்கத்தக்கதாயிருந்தால் அந்தவேலையைக்குறித்து செரியான நக்ஷாவையும் விவரத்தையும் மதிப்புக்கணக்கையும் பிரதேசவிசாரணை செய்கிற உத்தியோகஸ்தருக்கு அனுப்பும்படி மனுதாரனுக்கு உத்திரவுசெய்யலாம். அப்படிப்பட்ட நக்ஷா மதிப்புக் கணக்கு அல்லது விவரத்தைத் தெரிவிக்க மனுதாரனுக்கு முடியாமற்போனால், கலெக்டரானவர் அதற்காகப் பிடிக்கும் சிலவுக்கு எவ்வளவுபோதுமானதென்று அவர் அபிப்பிராயப்படுகிறாரோ அவ்வளவு தொகையை முதலில் அனமத்தாய் கட்டிவைக்கும்படி அவனுக்கு உத்திரவுசெய்தாவது அதைச்செலுத்துவதற்காக அவனிடத்திலிருந்து ஜாமீன்வாங்குவது அவருக்கு யுக்தமாகத் தோற்றினால் அந்தப் பிரகாரம் ஜாமீன் கொடுக்கும்படி அவருக்கு உத்திரவுசெய்தாவது அவனுக்காக அவைகளைத் தயார்செய்யலாம்.

12. பிரதேச விசாரணையைப் புனராலோசனை பண்ணியும் தனக்கவசியமாகத் தோற்றுகிறபின்னும் விசாரணை செய்தபிற்பாடு கடன்கொடுக்கலாமென்று கலெக்டருக்குத் திருப்தியானால், அவர் கேட்கப்பட்ட தொகையாவது அல்லது குறைந்த தொகையாவது கொடுக்கலாமென்று தீர்மானம் ரிகார்டுசெய்த பிற்பாடு கடன்கொடுப்பதாக உடனே உத்திரவு பிறப்பிக்கவேண்டியது.

13. கடன் தொகை 1000 ரூபாய்க்கு அதிகப்பட்டால் அந்த ரிகார்டை ரிவினியூ போர்டாருக்கும், 5000 ரூபாய்க்கு அதிகப்பட்டால் அவர்கள் மூலமாய் லோகல் கவரன்மெண்டாருக்கும் அனுப்பவேண்டியது. ரிவினியூ போர்டாராவது, பிரதேச கவர்ன்மெண்டாராவது அந்த ரிகார்டுகளைப் பார்வையிட்டதன்பேரில் அந்தக் கடன் விஷயமாய் உடனே அனுமதிகொடுக்கலாம் அல்லது கொடுப்பதில்லையென்று நிராகரிக்கலாம் அல்லது தங்களுக்கு யுக்தமாகத் தோற்றினால் பின்னும் விசாரணை செய்யும்படியாய் உத்தரவு பண்ணலாம். கடன் கொடுக்கலாமென்று அனுமதிகொடுத்துப் பிறப்பித்த உத்திரவுகள் வந்தபிறகுதான் கலெக்டர் கடன் கொடுப்பதற்காக உத்திரவு பிறப்பிக்க வேண்டியது.

14. மனுதாரன் பாயக்காரியாயிருந்து விருத்திசெய்யப்படப்போகிற நிலத்தில் டிரான்ஸ்பர் பண்ணத்தக்கதென்று சொல்

லப்படுகிற யாதொரு பாத்தியதையை தான் பெற்றிருந்தால் அதையாவது வேறொரு ஜாமீனையாவது கடனுக்கு ஈடாகக் கொடுப்பதாக உத்தேசிக்கப்படுகிற பட்சத்தில், கலெக்டரானவர் அந்தமனுவைக்குறித்து, நிலத்துக்குறியவனுக்கு நேரில் பிரத்தியேகமான நோட்டீசு சேர்ப்பிக்கவேண்டும். அவனுக்கு நேரில்சேர்ப்பிப்பது சாத்தியமாயிராத பட்சத்தில் அதற்கொரு பிரதியை கலெக்டராபீசிலும் அவன் வாசஞ்செய்கிற வீட்டிலும் எல்லாருக்குந் தெரியும்படியான ஓரிடத்திலே ஒட்டவேண்டியது. எந்த ஜில்லாவில் மனுச்செய்துகொள்ளப்படுகிறதோ அதிலவன் வாசஞ்செய்யாவிட்டாலும், அவனுடைய வாசஸ்தலம் தெரியாவிட்டாலும், மேற்படி நிலத்தின் விஷயமாய் அதற்குறியவனுக்காக எவன் எவ்விடத்தில் ஏஜெண்டாகப் பிரவர்த்திக்கிறானோ, அந்த நபருக்கு அந்த நோட்டீசைச் சேர்ப்பிக்கவேண்டியது.

15. அப்படிப்பட்ட நோட்டீசு சேர்ந்ததென்று பூமிக்குடையவனாவது அவனுடைய ஏஜெண்டாவது ஒப்புக்கொள்ளாவிட்டாலும், அது சரியாய் சேர்ப்பிக்கப்பட்டதென்கிற சங்கதி கலெக்டருக்கு திருப்திகரமான வேறே விதமாய் ஸ்தாபிக்கப்படாவிட்டாலும், அது சேர்ப்பிக்கப்பட்டதாக எண்ணப்படமாட்டாது. ஒருவனல்லாமல் பலபாகஸ்தர்களிருந்து அவர்களுக்காக யாதொரு பாகஸ்தனாவது வேறே யாராவது காரியநிர்வாகியாய் நடவடிக்கைகளை நடத்துகிற விஷயத்திலே அப்படிப்பட்டவனுக்கு நோட்டீசை சேர்ப்பித்தால் அது பாகஸ்தர்களொவ்வொருவருக்கும் சேர்ப்பிக்கப்பட்டதாக எண்ணப்படும்.

16. எவ்வளவு தொகைக்காக மனுச்செய்து கொள்ளப்பட்டதோ அந்தத்தொகை இவ்வளவென்பதையும், செய்யப்படப்போகிற நிலவிருத்தி இன்னமாதிரியானதென்பதையும், கடனுக்கு உத்தேசிக்கப்பட்ட ஜாமீன் இப்படிப்பட்டதென்பதையும், அந்த நோட்டீசில் காணவேண்டும். மேலும் அப்படிக் கடன்கொடுப்பதைப்பற்றி பூமிக்குடையவன் ஆட்சேபணை யேதாவதுசெய்ய விரும்புகிறபட்சத்தில், அவன் நோட்டீசைப் பெற்ற பிறகு ஒருமாசத்திற்குள்ளாக அதை கலெக்டருக்கு எழுத்துமூலமாகத் தெரிவிக்கவேண்டியது என்று அந்த நோட்டீசு மூலமாகவே அவனுக்குத் தெரிவிக்கவேண்டும்.

17. பூமிக்குடையவனுவது அவனுக்காக அவனுடைய ஏஜெண்டாவது காரியநிர்வாகியாவது தன்னுடைய ஆட்சேபணைகளைக் குறித்து யோசனைசெய்தபிறகு, கலெக்டர் மனுதாரனுக்கு அவனுடைய மனுவில்கண்ட நிலத்திலே டிரான்சுபர் பண்ணத்தக்க பாத்தியமிருக்கிறதென்றும் அப்படிப்பட்ட பாத்தியதையின் பெறுமானத்தை தனியே யோசிக்கையிலாவது, அவன் காட்டும் வேறே ஜாமீனுேடு சேர்த்து யோசிக்கையிலாவது, அது கடன் தொகைக்கு ப்போதுமானதென்று அபிப்பிராயப்பட்டாலும், அவர் அந்த கடனுக்காக அனுமதி கொடுக்கலாம். இல்லாவிட்டால் போர்டார் அல்லது பிரதேச அதிகாரிகளுடைய அனுமதிக்காக அந்த விஷயத்லைதக்குறித்த ரிகார்டுகளை யனுப்பலாம்.

18. கடன் கொடுப்பதற்கான உத்திரவு அதற்கேற்பட்ட நமூனப்படி யிருக்கவேண்டும். மேலும் அதில் கண்ட விதிகளின்னதென்று மனுதாரனறிந்துகொண்டு அவைகளுக்கு அவன் சம்மதிக்கிறுனென்பதற்கு அத்தாட்சியாக அவன் அதில் கையெழுத்துச் செய்யவேண்டும். யாரை ஜாமீனுகக்காட்டும்படியாய் மனுதாரனுக்குத்திரவு செய்யப்படுகிறதோ அப்படிப்பட்டவர்கள் யாராவது நபர் ஜாமீன் மாத்திரம் கொடுக்கிறபட்சத்தில், அவர்கள் கையெழுத்துச் செய்யவேண்டிய பத்திரம் அதற்கேற்பட்ட நமூனுப்படி யிருக்கவேண்டியது. அசையாப் பொருளை மேல்ஜாமீனுகக் கொடுக்கவேண்டியதென்று உத்திரவுசெய்கிற பட்சத்தில் ஜாமீன் பத்திரம்-டி-நமூனப்படி யிருக்கவேண்டியது.

19. கடன் கொடுப்பதற்காகச் செய்கிற உத்திரவை கலெக்டராபீசில் வைத்துக்கொள்ள வேண்டியது. அதன்பிரதி யொன்றை மனுதாரனுக்குக் கொடுக்கவேண்டியது. யாதொருதாலூகா கஜானுவிலாவது, ஹுஸூர் கஜானுவிலாவது கடன்தொகைகளை செலுத்தும்படி செய்தால், வேறே ஒரு பிரதியை அப்படிப்பட்ட கஜானுவுக் கனுப்பவேண்டும்.

20. வருஷம் 1-க்கு 100-க்கு ஆரேகால்வீதம் கடன்தொகைகளுக்கு வட்டிவாங்கப்படும். குறைந்த வட்டிக்காவது, வட்டியில்லாமலாவது விசேஷமான சமயங்களில் கடன்கொடுக்கவேண்டியதென்று கடன் கொடுக்க அதிகாரம் பெற்றவர்கள் இஷ்டப்பட்டால், அவர்கள் தாங்கள் சிபாரிசு பண்ணுவதற் குண்டான ஏதுக்களை விபரமாய்க்கண்டு ரிவினியூ போர்டார் மூலமாய் பிர

தேச கவர்ன்மெண்டார் உத்திரவு பெற்றுக்கொள்வதற்காக அப்படிப்பட்ட விஷயங்களைக்குறித்து ரிப்போர்ட்டுசெய்யவேண்டியது. பிரதேசகவர்ன்மெண்டாருக்கு யுக்தமாகத் தோற்றினால், விசேஷ சமயங்களில் குறைந்தவட்டிக்காவது, வட்டியில்லாமலாவதுகடன் கொடுக்க அனுமதிகொடுக்கலாம்.

21. ஆயிரம் ரூபாய்களுக்கு மேற்படாத கடன் தொகை விஷயத்திலே கடன்வாங்கின இரண்டாம்வருஷக் கடைசியிலும், 1000 ரூபாய்க்கு மேற்பட்ட கடன்விஷயத்தில் மூன்றும் வருஷக் கடைசியிலும், சாதாரணமாய் கடனைச் செலுத்திவிடத்தொடங்கவேண்டும். ஆனால், சில விசேஷ சந்தர்ப்பங்களில் எந்தவேலைக்காகக் கடன்கொடுக்கப்படுகிறதோ அந்த வேலையினால், இன்னும் பலன்கிடைக்க நீடித்தகாலம் பிடிக்குமென்று கடனுக்காக அனுமதிக்கொடுக்கிற அதிகாரி அபிப்பிராயம் கொள்ளுவாராகில், கடன்வாங்கினதேதிக்கப்பால் முதல்வாயிதாத்தொகையைச் செலுத்துவதற்காக நிர்ணயிக்கப்பட்ட நாளை இன்னும் ஒற்றி வைக்கலாம். ஆனால், ஐந்துவருஷத்திற்கு ஜாஸ்தியாய் ஒற்றிவைக்கக்கூடாது. 1000 ரூபாய்க்கு மேற்படாத அல்லது மேற்பட்ட கடன் தொகைகளுக்காகவும் இந்தவிதியில் எவ்வளவுகாலம் ஏற்படுத்தியிருக்கிறதோ இந்தகாலத்துக்குள்ளாகவே, எத்த வேலைக்காக கடன் கொடுக்கப்பட்டதோ அந்த வேலையினால் பலன்கிடைக்குமென்று கடன் கொடுக்க அனுமதிதந்த உத்தியோகஸ்தர் அபிப்பிராயபட்டால், அவர் அதற்கேற்றபடியே காலவரையறையைக் குறைக்கலாம். ஆயினும் கடகொடுத்ததேதிமுதல் ஒவ்வொரு வருஷக்கடைசியில் அதற்கு ஏற்பட்டவட்டியை அசலோடு சேர்க்கப்படும். மனுதாரனுடைய அனுகூலத்தையும், சமயத்துக்குத் தக்கபடி அந்தந்த விஷயத்தின் அவசியங்களையும் யோசித்து, கலெக்டரானவர், இன்னகாலத்துக்குள்ளாக கடன் தொகையைச் செலுத்தவேண்டுமென்றும், இன்னின்ன வாயிதாவில் இவ்வளவு செலுத்த வேண்டியதென்றும் நிர்ணயப்படுத்தலாம். ஆனால், அடியில்கண்ட காலத்துக்கு அதிகமாகப்போகக்கூடாது.

100 ரூபாமுதல்	500 ரூபாவரையில் வாங்குகிறகடன்	10 வருஷத்திற்கு மேற்படக்கூடாது.	
500	ஷை 1000 ஷை	15	ஷை
1000	ஷை அதற்குமேற்பட்டு ஷை	20	ஷை

கடனைத்தீர்ப்பதற்கான காலநிர்ணயத்தை விசேஷமான விஷய த்திலாவது அதிகப்படுத்தலாமென்று சிபார்சுசெய்தால் அதற்கு ள்ள காரணங்களை தெளிவாய் விவரித்தெழுதி பூர்த்தியாய் ஒருரிப் போர்ட்டனுப்பி, அதில் கவரன்மெண்டாரிடத்திலிருந்து அதற்கெ ன்று பிரத்தியேகமாய் அனுமதி பெற்றுக்கொள்ளவேண்டும்.

100 ரூபாய்க்குக் குறைந்ததொகைகளாக கடன் கொடுக்கப்ப டமாட்டாது. ஆனால், கிணறுகளை ஏற்படுத்துவதற்காக 100 ரூபாய்க்குக் குறைந்த தொகையாகவும் கடன்கொடுக்கலாம். மே லும் அப்படிப்பட்ட கடனை எதற்குள் செலுத்திவிடவேண்டுமோ அந்தக்கால நிர்ணயத்தை இருபது ரூபாவரையில் வளர்த்திக்கொள் ளலாம். இந்த விதிகளோடு சேர்க்கப்பட்டிருக்கிற அட்டவணைக ளின்படி, வட்டியும் அசலும்சேர்த்து வருஷவாரிவர்த்தனை ரூபமாக மனுதாரனுக்கிஷ்டமிருந்தால் தொகையைச் செலுத்திவிடலாம். யாருக்குக்கடன் கொடுத்திருக்கிறதோ அந்த நபர் கொடுப்பதற் காகச் செய்யப்பட்டிருக்கிற உத்திரவில் நிர்ணயிக்கப்பட்ட தேதி க்கு முன்பாகவே கடன்முழுமையுமாவது, சில பகுதிகளையாவது செலுத்திவிடலாம். பாக்கியாயிருக்கிற வட்டித்தவணைத் தொகை க்கும், அசலும் வட்டியுஞ்சேர்ந்த எல்லாத் தவணைத் தொகைக் கும் 100 க்கு ஆறேகால் வீதம் தொடர் வட்டி போட்டு வாங்கப் படும்.

22. செலுத்தவேண்டிய சகல தொகைகளையும், விருத்திசெ ய்யப்போகிற நிலமிருக்கிற தாலூகாவிலுள்ள கஜானாவில் செலுத்த வேண்டும். ஆனால், கலெக்டருக்கு யுக்தமாகத் தோற்றுகிறபடி ஜில்லாவிலுள்ள வேறே எந்த கஜானாவிலாவது செலுத்தும்படி அனுமதி கொடுக்கலாம். இவ்விஷயத்தில் பிரதேச கவரன்மெண் டார் அப்போதைக்கப்போது ஏற்படுத்துகிற நமூனாப்படி தாசில் தார் கடனாகக் கொடுக்கிற தொகைகளைப்பற்றியும், செலுத்துகிற தொகைகளைப்பற்றியும் ஒரு ரிஜிஸ்டர் வைக்கவேண்டியது. கடன் வாங்கினவன் தான் கொடுக்கவேண்டிய வாயிதாத்தொகைகளை லா ண்டு ரிவினியூவோடு சேர்த்துச் செலுத்துவதாய்க் கேட்டுக்கொள் கிற பக்ஷத்தில், அவைகளை அந்த வருஷத்தில் பாக்கியாயிருக்கிற லாண்டு ரிவினியூவின் கடைசி வாய்தாவோடு சேர்த்து வசூல் செய் யலாம்.

23. மாகூல் சாவியாய்ப்போனதென்றாவது, வேறே விசேஷமான கெடுதல்கள் நேர்ந்ததென்றாவது ருசுவாவதின் பேரில், கடனைச்சேர்ந்த வாயிதாத் தொகைகளையும் அதன்வட்டியையும் வசூல் செய்யாமல் நிறுத்திவைத்துப் பிறகு கலெக்டர் ரிவினியூ போர்ட்டாருக்கு ரிப்போர்ட்டு செய்யவேண்டியது. அவர்கள் இந்த விஷயத்தில் தங்களுக்கு யுக்தமாகத் தோன்றுகிறபடி உத்திரவு செய்யவேண்டியது.

24. எந்த வேலைக்காகக் கடன்கொடுக்கப்பட்டதோ அவைகள் நடந்துகொண்டிருக்கையில் அவைகளைச் சரியாய் மேற்பார்வைசெய்வதற்கும், கடன் எதற்காகக்கொடுக்கப்படுகிறதோ அந்தக் காரியத்திற்காக அது சரியாய் உபயோகப்படுத்தப் படுகிறதாவென்று நிச்சயமாய்த் தெரிந்துகொண்டு, அதற்கேற்ற பந்தோபஸ்து செய்வதற்காகவும் ஜில்லா கலெக்டர் பிரதேச கவரன்மெண்டாருடைய உத்திரவுகளுக்குட்பட்டு ஏற்பாடுபண்ணலாம்.

25. வேலைகளுக்கும் அதற்காகப் பிடிக்கும் சிலவுகளுக்கும் கணக்குவைத்திருக்கவேண்டியது. ஜில்லா கலெக்டராவது, இது விஷயத்தில் அதிகாரம் கொடுக்கப்பெற்ற வேறே உத்தியோகஸ்தராவது அந்தக் கணக்குகளைப் பரிசோதிக்கலாம்.

26. 5000 ரூபாய்க்கு மேற்பட்ட கடன்தொகை விஷயத்தில் கடன்வாங்கினவன் கலெக்டர் ஏற்படுத்துகிற நமூனைப்படி கணக்கு வைத்திருக்கவேண்டும். கடன் வாங்கினவனுக்கு என்ன ஷராக்களின்பேரில் அந்தக் கடன் கொடுக்கப்பட்டதோ, அவைகளில் எதன்படிக்காவது நடந்துகொள்ளத் தவறினனென்று ஜில்லா கலெக்டருக்கு நிச்சயமாய் எப்போதாவது தெரியவந்தால், அவர் தான்செய்த தீர்மானத்திற்கு ஏதுக்களை எழுத்துமூலமாய் ரிகார்டுசெய்தபிறகு மேலான ரிவினியூ அதிகாரிகளின் விசாரணைக்குட்பட்டு பாக்கி யாதொரு வட்டியையும் சிலவுகளையும் லாண்டு ரிவினியூ பாக்கி போல அந்த நபரிடத்திலிருந்தாவது, அவனுடைய ஜாமீன்தாரனிடத்திலிருந்தாவது உடனே வசூல் செய்ய ஆரம்பிக்கலாம்.

27. எதற்காக மொத்தமாய் இவ்வளவென்று கடன்கொடுக்கப்பட்டிருக்கிறதோ அப்படிப்பட்ட சகலவேலைகளையும், அந்தக் கடன்கொடுப்பதற்காகச் செய்யப்பட்ட உத்திரவில் ஷை வேலைகள் என்றைக்கு முடியவேண்டியதென்று கட்டளையிட்டிருக்கிறதோ அந்தத் தேதிக்குட்பிற்பாடு கூடுமான சீக்கிறத்தில் பார்வை

யிட்டு ரிப்போர்ட்டு செய்யவேண்டியது. எதுகளுக்காகவாயிதாக்க ளாகக் கடன் கொடுக்கப்பட்டிருக்கிறதோ அப்படிப்பட்ட சகலவே லைகளையும் முதல் வாய்தாத்தொகை எப்போது கொடுக்கப்படுகிற தோ அதற்குப்பிற்பாடு ஒவ்வொரு வாயிதாவிலும் தொகைகொடுப் பதற்கு முன்பாக பார்வையிட்டு ரிப்போர்ட் பண்ணவேண்டியது.

28. சாகுபடிசெய்வதற்காகவும், விருத்திசெய்வதற்காகவும் குதிரைவாங்க கவரன்மெண்டார் கடன் கொடுக்கலாம். குதிரை களைக்கொண்டு பயிர்செய்தல் அதற்கு மேற்படி விதிப்பிரகாரம் கடன் கொடுக்கலாம். விருத்திசெய்யவேண்டிய நிமித்தம் கடன் கொடுத்தால் அதற்கும் மேற்படி நிபந்தனைகளை பொருத்தமான வரைக்கும் அனுசரிக்கவேண்டும். போர்டாருடைய அனுமதிபெ ற்று மேற்படி கடனைக் கொடுக்கவேண்டும்.

5-வது அத்தியாயம்.

47. 1831ளூ 6-வது ஆக்ட்படி செய்யவேண்டிய அமுல்.

1. இந்தச்சட்டம் சாஸ்வதத்தீர்வை யேற்பட்ட கிராமங்கள் தவிர மற்ற கிராமங்களிலெல்லாவற்றிலுமுள்ள கிராமக்கணக்கன் மணியக்காரன் இவர்களுக்கு இச்சட்டம் பொருந்தியது.

2. இந்த ஆக்ட் வெகுநாளாகவும், பரம்பரையாகவுமுள்ள பாத்தியதையை ஸ்திரப்படுத்துகிறது. ஆனால், புதியஏற்பாட்டுக்கு இடங்கொடுக்கிறதில்லை.

3. யாதொரு கலெக்டரானவர் சரியானகணக்கனையும், மணி யக்காரனையும் பார்த்து கிராமங்களில் ஏற்படுத்தவேண்டும். முத லாவது பரம்பரை பாத்தியம், இரண்டாவது கிராமத்தில் குடியி ருப்பு, மூன்றாவது கிராமத்தில் நிலத்தையுடைத்தாயிருத்தல், நா ன்காவது கிராமத்தாரிடத்தில் சொல்வாக்குடையவனா யிருத்தல், ஆகிய இவைகளையுடையவரைப்பார்த்து ஏற்படுத்தவேண்டும்.

4. உத்தியோகஸ்தர்கள் யாராவது தப்பிதஞ்செய்தால் இந்த ஆக்ட்படி கலெக்டர் அவர்களை வேலையிலிருந்து நீக்கிவிடலாம். ஆனால், அப்படி நீக்குவதற்குத் தகுந்த காரணங்க ளிருக்கவேண் டும்.

5. கிராமவேலைகளைச் செய்வதற்காகக் கொடுக்கும் பணத் தை, அந்த வேலையைச் செய்கிறவர்கள் தவிர மற்ற யாரும் பங்கிட் டுக்கொள்ளக்கூடாது.

6. இந்த ஆக்ட்படி கொண்டுவரப்படும் கேசுகள் சிவில் கேஸ்களாகும். ஆகையால் மேற்படி கேசுகளுக்கு நடத்தவேண்டிய நடவடிக்கை யாவற்றையும் நடத்தவேண்டியது. சம்மன்செய்து சம்மனுக்கு ஆஜராகாதிருந்தால் இந்தியன் பினல்கோட் 172, 174 வது பிரிவுகளின்படி குற்றஞ்சாட்டப்படுவார்கள்.

7. சரியானபடி விசாரணைசெய்து ஏற்பாடாயிருக்கும் கிராமத்தின், கிராம உத்தியோகத்தை யடைய கேஸ்கொண்டுவந்தால் அதை கலெக்டர் பிடிக்கக்கூடாது.

8. ஒருவன் மூன்றுவருடமாக வேலைபார்த்துவந்தபிறகு அவனுக்குச் சரியான ஹக்கு இல்லையென்று அவனைத் தள்ளிவிடக்கூடாது. ஷை வேலைக்கு நியமனம் செய்யும்போது அந்தவேலைக்குடையவன் மைனராயிருந்தாலும், அந்தவேலையை யடைய கேசு கொண்டுவரக்கூடாது. வேலைகாலியானால் கேசு கொண்டுவரலாம்.

9. கிராம ஊழியத்திற்காகக் கொடுக்கும் சம்பளத்தை பங்கிட்டுக்கொள்வது நியாயவிரோதமானது. இவ்விதம் தனக்குப்பணம் சேரவேண்டுமென்று ஒருவன் கேசுகொண்டுவந்தால் அதைப் பிடிக்கக்கூடாது.

10. கிராம உத்தியோகஸ்தர்களை நியமிப்பதில் இதனடியில் கண்ட நிபந்தனைகளை கவனிக்கவேண்டும்.

1. கிராம உத்தியோகத்துக்கு நியமிப்பதில், வேலைக்கு நியமனமாகிறவன் அந்தவேலையைப் பார்க்கச் சக்தியுள்ளவனென்று முதலில் கவனிக்கவேண்டியது. அப்படிப்பார்ப்பதில் சந்ததிவார்சுபாத்தியதையை கவனிக்கவேண்டியதில்லை. இதனால் பெண்வார்சுக்கு பாத்தியதைகிடையாதென்று ஏற்படுகிறது. ஆனால், வார்சாக ஒருவிதவை ஏற்பட்டு அவளுக்குப் பிள்ளையில்லாதிருந்து, கோர்ட்டாரால் ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ள அனுமதிபெற்றால், அப்படி ஸ்வீகாரமெடுத்துக்கொள்ள காலத்தை நிர்ணயித்து, அதன் பிறகு அந்த ஸ்வீகாரப்பிள்ளைக்கு அந்த வேலையைக் கொடுக்கவேண்டும்

(2) கிராம உத்தியோகத்திற்கு வார்சாயுள்ளவன் மைனராயிருந்தால் ஷை வேலையில் அவனை தாக்கல்செய்து, அந்த வேலையைப் பார்க்க ஒரு குமாஸ்தாவை கலெக்டர் நேமிக்கலாம். அப்படி நேமிப்பதில், மைனருக்கு இஷ்டப்பட்டவனையும், ஏற்படுத்தலாமென்று அனுமதிகொடுத்தவனையும் ஏற்படுத்துவது அவசியம். மைனரைச்

சேர்ந்தவர்களில் எழுதப் படிக்கத் தெரியாதவர்களிருந்தால், கலெக்டருக்கு இஷ்டமானவனை நேமிக்கலாம். குமாஸ்தாவாக ஒருவனை நேமித்தபிறகு, அவனைத் தள்ளிவிடவேண்டுமென்று இஸ்முதாரன் கேட்டால், அப்படித் தள்ளக்கூடாது. ஏற்படுத்தப்பட்ட குமாஸ்தா மைனருக்கு கணக்கு விஷயங்களைக் கற்பிக்கவேண்டும்.

(3) வார்சுதாரன் கிராம வேலைகளைக் கற்றுக்கொண்ட பிறகும், அல்லது தன்னுடைய கற்றறிந்த வார்சை நியமிக்கவேண்டுமென்று பாத்தியதாரன் கேட்டால் அப்போது குமாஸ்தாவை நீக்கவேண்டும். ஆனால், கிராம முனிசீபுகளை நேமிப்பதில் வயதுசென்றவர்களை நேமிக்கவேண்டும்

(4) கிராம உத்தியோகஸ்தர்கள் ஒரு குற்றத்திற்காக உத்தியோகத்திலிருந்து விலக்கப்பட்டால், அவனுடைய வார்சு அந்தக் குற்றத்தில் சம்பந்தப்படாதவனாயிருந்தபோதிலும் அவனை இசுமுதாரனாக தாக்கல் செய்துகொண்டு, அவனுக்குப்பதிலாக ஒரு குமாஸ்தாவை நியமிக்கவேண்டியது. இன்ன காலம்வரையில் குமாஸ்தா வேலைபார்க்கவேண்டியதென்று கலெக்டர் ஏற்படுத்தலாம்.

(5) ஒருவனிரண்டு கிராமங்களின் இசுமுதாரனாயிருந்தால், அந்த இரண்டு கிராம வேலைகளுக்கும் அவனை தாக்கல்செய்து, அவனுக்கு இரண்டு கிராம வேலைகளையும் பார்க்கக் கஷ்டமாயிருந்தால் அவனுக்குப்பதிலாக ஒரு கிராம வேலையைப்பார்க்க ஒரு குமாஸ்தாவை ஏற்படுத்தலாம்.

15. கிராம உத்தியோகஸ்தன் சர்க்கார் வேலையையாவது, மற்ற இதர வேலையையாவது பார்த்துவரலாம். அப்படிப் பார்க்கும்போது, சர்க்கார் வேலையைப்பார்க்க ஒரு குமாஸ்தாவை ஏற்படுத்தவேண்டும். கிராம உத்தியோகஸ்தன் தனக்குப்பதிலாக நேமிக்கும் குமாஸ்தாவுக்கு அந்த வேலைக்குக் கிடைக்கும் முழுச் சம்பளத்தையும் அவனுக்குக் கொடுத்துவிடவேண்டும்.

16 இனம் கிராமங்களிலுள்ள இனம்தாரர்கள் தங்கள்கிராம உத்தியோகஸ்தர்களை நியமித்துக்கொள்ள மேஷை சட்டப்பிரகாரம் அதிகாரமில்லை.

6-வது அத்தியாயம்.

48. இனமும் அதைச்சார்ந்த சங்கதிகளும்.

புது இனம் செடில்மெண்டு விதிகள்.

இனங்களை புது செடில்மெண்டு செய்வதில் அடியில் கண்ட விதிகளை கலெக்டர் அனுசரிக்கவேண்டும்.

(1) தானசாசனம் ஏற்பட்டிருந்தாலும், இல்லாமலிருந்தாலும், 50 வருஷமாக இடைவிடாமல் மானியமாய் அனுபவித்துக் கொண்டிருந்ததாக ஏற்பட்ட நிலம் எவ்விதமாயிருந்தாலும் செல்லத்தகுந்த சுவதந்தரமுள்ளதாகவே எண்ணப்படும்.

(2) யாதொரு மானியத்திற்கு செல்லக்கூடிய சாசனமில்லாமற்போனாலும், பிரிட்டிஷ் ராஜாங்கத்தின் ஆரம்பகாலத்தில் ஏற்பட்ட கணக்குகளிலாவது, 1802௵த்து 31-வது ஆக்ட்டுப்படி ஏற்பட்ட கணக்கிலாவது, முதல் சர்வே கணக்கிலாவது, 50 வருஷத்திற்கு முன் ஏற்பட்ட கணக்கிலாவது அந்த மானியம் ஏற்பட்டிருந்தால், அந்த சங்கதியே 50 வருஷகாலமாக அனுபவித்து வந்ததாக எண்ணப்படும்.

(3) 50 வருஷங்களுக்குள் கவரன்மெண்டாருக்குச் சேர்ந்த பழைய ஜமீன்தாரி, பாளயபட்டு, ஜாகீர் இவைகளில் மானியமிருந்து, அப்படிப்பட்ட ஜமீன்தாரி முதலானவைகளுக்கு சாசுவதக் கணக்குகளாவது இல்லாமற்போனால், அந்த மானிய விஷயமாய் எவ்வித விவரமும் அகப்படாத விஷயத்தில் ஷை ஜமீன்தாரி முதலானவைகள் சர்க்காருக்குச் சேர்க்கப்பட்டது முதல் அந்த மானியம் அனுபவத்திலிருந்ததாக ரூபித்தாலும், மானியத்தின் நெடுங்கால அனுபவத்தை ரூபிக்க கால அளவு அதிகமாகவிருந்தாலும், கணக்குகள் தென்படாமற் போனதாலும், அசாத்தியமாகவிருப்பதாக நம்பத்தகுந்த ஏதுக்களைக் காண்பித்தாலும், அப்படிப்பட்ட மானியத்திற்கு சுதந்தரமுண்டாயிருப்பதாக எண்ணப்படும். 50 வருஷம் சாசுவத அனுபவத்தை ரூபிக்கிறப் பிரதிசங்கதியிலும் இந் நிபந்தனையை யனுசரிக்கவேண்டும்.

4. மேற்சொன்ன மானியங்களுக்குண்டான ஸ்வதந்தரம் ஏற்பட்ட பிறகு, இதனடியில் கண்ட எல்லா மானியங்களையும் அவைகளின் ஸ்வபாவப்படிக்கு பரிஷ்காரஞ்செய்யவேண்டும் அவையாவன:—(1) தேவஸ்தானங்கள், சத்திரங்கள், முதலானவைகளுக்கும், அவைகளுக்கு ஊழியஞ்செய்யும் வேலைக்காரர்களுக்கும் கொடுக்கப்பட்ட மானியங்கள். (2) சுயார்த்தமாக அல்லது சம்ரட்சணார்த்தமாகக் கொடுக்கப்பட்ட மானியங்கள், (3) முன் துரைத்தனத்தாரால் ஏற்படுத்தப்பட்டு இப்போது நடத்தப்படாமலும் அனாவசியமாயுமிருக்கப்பட்ட ரெவினியூ, போலீஸ் முதலான உத்தியோகஸ்தர்களுக்கு கொடுக்கப்பட்ட மானியங்கள் (4) கிராம ஊழியமானி

யங்கள். (5) இப்போது நடக்கிற ரெவினியூ போலீஸ் உத்தியோகங்களுக்காக கிராம ஊழியக்காரர் அனுபவிக்கிற மானியங்கள் (6) கிராமத்தாருக்குச் செய்யப்பட்ட ஊழியங்களுக்காக தச்சன், கருமான், நாவிதன் முதலியவர்களுக்குக் கொடுத்த மானியங்கள்.

5. மதசம்பந்தமானதும், தர்மசம்பந்தமானதுமான தேவஸ்தானங்கள், மசூதிகள், வித்தியாசாலைகள், சத்திரங்கள், பொதுக்கட்டிடங்கள் இவைகளுடைய சம்ரக்ஷணைக்காகக் கொடுக்கப்பட்ட மானியங்கள், அப்படிப்பட்ட தேவஸ்தானம் முதலானவற்றின் பெயரால் ரிஜிஸ்தராயிருந்தாலும், அவைகளில் ஊழியஞ்செய்யப்பட்டவர்களின் பேரில் ரிஜிஸ்டராயிருந்தாலும் இப்போது எவர்கள் பெயரால் நடந்துவருகிறதோ அவர்கள் பேரிலும் அவர்கள் வார்சுகளின் பேரிலும் அந்த மானியங்கள் நடப்பிக்கப்படும்.

6. மானியம் ஸ்வார்த்தமாகவாவது, சம்ரட்சணார்த்தமாகவாவது கொடுக்கப்பட்டிருந்தால் அதைச் சேர்ந்த உடன்படிக்கைப்படி அதை ஸ்திரப்படுத்தவேண்டும். தற்காலமானியதாரன் முதல் மானியதாரனுடைய வார்சாலும் ரிஜிஸ்டரில் எழுதப்பட்டவனுடைய சந்ததியாலும் அதற்குத்தகுந்தபடி தானவிக்கிரயங்களால் அந்த மானியம் இப்போதைய அனுபோகஸ்தனுக்குக் கிடைத்திருக்கும் பட்சத்தில் அதற்குத் தகுந்தபடி அந்த மானியங்களை எதேச்சையாய் விநியோகஞ் செய்வதற்கு ஏற்பட்ட நிபந்தனைகள் இதனடியில் எழுதப்பட்டிருக்கின்றன.

தற்கால அனுபவதாரன் முதலில் தானம் வாங்கினவனுடைய சந்ததிதாரனாலும், ஆதியில் ரிஜிஸ்டரானவனுடைய சந்ததிதாரனாலும், அந்த மானியம் அவனுக்கு வம்சபரம்பரையாய் வரும். அப்படிவருவதில் இப்போதைய நிபந்தனைகளுக்குக் கவரன்மெண்டாரால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் அர்த்தத்துக்கு உட்பட்டிருக்க வேண்டும்.

அதாவது :—(1) அவிபக்த சகோதரர்களும், மானியதாரனுடைய சரியான வார்சுகளும் அதற்கு பாத்தியதாரர்களாவார்கள்.

(2) அப்படிப்பட்ட வார்சுதாரர்களில்லாமற் போனால் அந்த மானியம் சர்க்காரைச்சேர்ந்து விடும் (3) மானியங்களை விக்கிரயம் செய்யக்கூடாது (4) அவிபக்த சகோதரன், ஞாதி இவர்களுடைய குடும்பத்தைத் தவிர மற்ற குடும்பங்களிலிருந்து எடுத்துக்கொள்ளப்பட்ட ஸ்வீகாரத்தை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

7. இவ்விதம் மானியங்களுக்குண்டான நிபந்தனைகளை நிவர்த்திசெய்ய அவைகளை விக்கிரயமூலமாயாவது, வேறேவிதமாயாவது உபயோகப்படுத்திக் கொள்ள முழு அதிகாரத்துடன் ஸ்வதந்தர முள்ளவனாகச்செய்துகொள்ள மானியதாரனுக்கு இடம்கொடுக்கப்படும். ஆனால், பிரதிமானிய விஷயத்திலும் சர்க்காருக்குச்சேரும் ஸ்வததந்திரத்தின் மதிப்புக்குத் தகுந்தபடி இதனடியில் நிச்சயிக்கப் பட்டிருக்கிற வகுப்புகளின்ப்டி ஒவ்வொரு வருஷமும் குயிட்ரெண்டு கொடுக்கச் சம்மதியிருக்கிற பட்சத்தில் மானிய தாரனுக்கு அப்படிப்பட்ட ஸ்வதந்திரமுண்டாகும்.

8. தற்காலம் மானியதாரனுக்கு வம்சத்தை விருத்திசெய்யவும் மானியத்துக்குப் பின்னிட்ட ஸ்வத்வாதிகாரி யாவதற்கும், தகுந்த ஸ்தீரீகளாவது புருஷர்களாவது பின்னிட்ட பாத்தியமுள்ளவர்களாயிருந்தாலும், அப்படிப்பட்ட மானியதாரன், பால்யனாயிருந்தால் அவனுக்கு மேற்சொல்லிய வார்சுகளுண்டாவதற்கு இடமிருந்தாலும் இப்படிப்பட்ட விஷயத்தில் சர்க்காருக்குச் சேரும் ஸ்வத்வம் வெகுகாலத்திற்குப் பிறகாவது சித்திக்காதாகையால், அந்த மானியத்துக்கு அப்போதைய தீர்வையிலும், மதிப்பில் ஏற்படும் தீர்வையை யனுசரித்த தீர்வையிலும் அரைக்கால் பங்குக்குச் சமானமான தீர்வையைக் கொடுக்க ஒத்துக்கொள்ளுகிற பட்சத்தில் அதைவிதிக்க வேண்டும். மானியத்துக்குத் தீர்வையேற்படாதிருந்தால் மற்ற கிராமங்களின் தீர்வையை யனுசரித்துத் தீர்வை யேற்படுத்தவேண்டும்.

9. மானியதாரனுக்கு வார்சில்லாமல் கிழவனாயிருந்தாலும், பிள்ளை பிறவாதென்பது நிச்சயமாயிருந்தாலும், சந்ததியில்லாதபெண்சாதி சந்தானமில்லாத விதவையான குமாரத்தி இப்படிப்பட்ட வார்சுகள் மாத்திரமிருந்தால், இந்தவிஷயத்தில் சர்க்காருக்குமேற்சொல்லியதை விட அதிகாரசுதந்தரம் இருப்பதினாலே காற்பங்குத் தீர்வை யேற்படுத்தலாம்.

10. சந்தானமில்லாத விதவையைப் போல மானியதாரன் வார்சுகளில்லாமலிருந்தாலும், வார்சுகளைவிருத்தி செய்ய யோக்கியதையில்லாதிருந்தாலும், மானியதாரனிறந்தபிறகு மானியம்போய்விடுமென்றிருந்தால் அரைத்தீர்வை வாங்கப்படும்.

11. மேலேசொன்னபடி நிச்சயிக்கப்பட்ட மானியத்தீர்வைகளைஉடனே அங்கிகரித்தால் அந்தத்தீர்வைவிதிக்கப்படும். இல்லா

விட்டால் வேணுமென்றபோது ஷே தீர்வை விதிக்கப்படமாட்டாது. தற்காலத்தில் ஒருவிதவை ஒத்துக்கொண்டு தன்னுடையமரணகாலத்தில் கவரன்மெண்டார் அடையும் சுதந்தரத்தைக்கொடுக்க வேண்டுமென்று கேட்டால் கொடுக்கப்படமாட்டாது. எந்த மானியதாரன் விஷயத்திலாவது அவனுடைய சந்ததி விருத்தியாகுமென்கிற காரணத்தை யனுசரித்து குறைந்ததீர்வைவாங்கிக்கொள்வதற்கு ஒத்துக்கொள்ளப்பட்டதோ அந்த மானியதாரனுடைய சந்ததி விருத்தியாகாதென்று தோன்றும்பட்சத்தில் அப்படிப்பட்டகுறைந்த தீர்வையை உடனே அவனிடத்தில் வாங்கிக்கொள்ளக்கூடாது. இப்படிப்பட்ட விஷயங்களில் முன்னதாய் பிரத்தியேகமான விசாரணை செய்வதற்கு தேவையான கால அளவை யனுசரித்து தீர்வை உயர்த்துவதற்கு அவசியமாகும்.

12, தற்காலத்தில் மானியத்தை யனுபவிக்கிறவன் முதல் மானியதாரனுடையவாவது, மானியம் ரிஜிஸ்டர் செய்யப்பட்டவனுடையவர்வது சந்ததியில் சேர்ந்தவனயிருந்தாலும், யாரால் அவனுக்கு பாத்தியமுண்டாயிற்றோ அவர்களுக்காவது ஸ்வீகாரமடைந்த ஏதுக்களை யனுசரித்து அடைந்ததனலாவது, தானவிக்கிரய முதலியவற்றாலாவது அடைந்து அனுபவிக்கிற விஷயத்தில் அவனுடையபாத்தியதை சட்டப்படிபலஹீனமானதால் அதைகவரன்மெண்டார் நிலத்துடன் சேர்த்துக்கொள்வது நியாயமாயிருந்தபோதிலும், 1 முதல் 10 வது பாராவரையில் சொல்லியிருக்கிற நிலத்தீர்வையில் அரைக்கால் முதல் அரைவரைக்கும் மானியதாரனுடைய பின்னிட்ட அதிகாரத்தை யனுசரித்து தீர்வை யேற்படுத்தலாம். இப்படிச்செய்வதினல் அந்தமானியதாரனுக்கும் பாத்தியஸ்தர்களுக்கும் அந்தமானியம் ஸ்வதந்தர சொத்தாக சாஸ்வத அனுபவம் சித்திக்கும். ஆனல், அப்படிவிதிக்கப்பட்ட ஸ்வல்பத் தீர்வையை கவரன்மெண்டாருக்குக் கட்டிவரவேண்டும்.

13. சிலஜில்லாக்களில்மானியங்களுக்கு கிரமமானதீர்வைஏற்பட்டதினல், முன்னே ஜில்லாவில் தரம்ஏற்படுத்தினகாலத்தில்ஏற்பட்ட குயிட்ரெண்டை ஸ்திரமாக ஏற்படுத்தவேண்டும். ஆகையால், இனும் கமீஷனர், கலெக்டர், போர்டார், இவர்களுடன்யோசித்து பிரதி மானியத்தினுடைய வருஷவாரி சாகுபடியை அனுசரித்து ஏற்படுத்தாமல், ஏக்ரா ஒன்றுக்கு புஞ்சைக்கிவ்வளவு நஞ்செய்க்கிவ்வளவென்றும் குயிட்ரெண்ட் ஏற்படுத்த இனும்கமீஷனருக்

கதிகாரமுண்டு. அதன்படி ஏற்படுத்தும் தீர்வையானது ஒரேவித மாயும் நஞ்சை புஞ்சை நிலங்களுக்குத்தக்கபடியாயும் சர்க்கார் நிலங்களுக்கு ஏற்பட்டிருப்பது போல் சராசரி வரும்படியை யனுசரித்து ஏற்படுத்தவேண்டும். அந்த குயிட்ரெண்டுநஞ்சைக்கு 4 அணுவுக்குக் குறையாமலும் புஞ்சைக்கு இரண்டணுவுக்குக் குறையாமலுமிருக்கவேண்டும். மானியத்தின் பூர்த்தியான தீர்வை யை யனுசரித்து குயிட்ரெண்டு ஏற்படுத்துகிறபட்சத்தில் அந்த தீர்வை ரூ. 1 க்கு குறைவாயிருந்தால் இரண்டணுவிற்குக் குறையாமலும், 5 முதல் 10 வரையிலுமிருந்தால் 8 அணுவுக்குக்குறையாமலும், 10 ரூக்கு அதிகமாயிருந்தால் ஒரு ரூபாயாகவும் குயிட்ரெண்டு ஏற்படுத்த வேண்டும்.

14. ஒவ்வொரு மானியத்துக்கும் மேற்சொன்னபடி குயிட்ரெண்டு ஏற்படுத்தப்பட்டு அவ்விதம் மானியம் சுதந்தரமானபிறகு அந்த மானியத்தின் 20 வருஷகுயிட்ரெண்டை உடனேயாவது, முன்பாகவாவது கட்டிவிடும்பட்சத்தில் ஷை குயிட்ரெண்டின் நிர்ப்பந்தத்தை நீக்கிக் கொள்வதற்கு மானியதாரனுக் கிஷ்டமிருந்தால் அவ்விதம் செய்துக்கொள்ளலாம்.

15. இறந்துபோனமானியதாரன் விஷயத்தில்விசாரணையிலிருக்கிற மானியங்களை நடத்தும்கிரமம். (1) இறந்தவனுக்குச்சரியான பின்னிட்ட பாத்தியதாரனாவது, அவிபக்த ஞாதியாவது இருந்தால் அப்பேர்ப்பட்டவர்களுக்கு மானியத்தை ஸ்திரப்படுத்தலாம். மானியதாரன் முதல்மானியதாரனுடைய வம்சஸ்தனாயிருந்தால் 7 முதல் 10 வது பாரா வரையிலுள்ள நிபந்தனைகளை யனுசரித்தும், தான விக்கிரயமூலமாகக் கிடைத்திருந்தால் 12 வது பாராவிலுள்ள நிபந்தனைப்பிரகாரம் மானியத்தை சுதந்தரமுள்ளதாய் ஏற்பாடு செய்யப்படும். இறந்துபோன மானியதாரனுக்கு ஸ்வத்வாதிகாரியாவது, விபக்தஞாதியாவது, வேறே பந்துவாவது இந்துலாப்பிரகாரம் வார்சாக ஏற்பட்டால், இப்போது ஸ்திரப்பட்டிருக்கும் நிபந்தனைப்பிரகாரம் அவர்களுக்குச் சாதாரணமாய் இனங்கொடுக்கப்படாமலிருந்தாலும், அப்படிப்பட்டவர்கள் சம்மதித்தாலும் சம்மதிக்காமற் போனாலும் 12 வது பாராவில் கண்டபடி சொற்ப தீர்வை விதித்து அவனுக்கு மானியங் கொடுக்கப்படும். இறந்துபோனவனுக்குவார்சு ஏற்படாமற்போனால் பூராத்தீர்வை ஏற்படுத்தப்படும்.

16. இறந்துபோனவனுடைய மானியங்களை சர்க்கார் உத்திரவுப்படி தற்கால அனுபவதாரனுக்கு அவனுடைய வாழ்நாள்வரையில் விட்டிருந்தால் 7 முதல் 12 வது பாராவரையில் சொல்லியபடி அரைப்பங்கு தீர்வை கொடுத்து அந்தமானியங்களை ஸ்வதந்தரம் செய்துகொள்ளலாம். காலநிர்ணயமில்லாமல் மானியத்தை விட்டிருந்தால், மானியதாரனிறந்தபிறகு ஒரு நிவேதனப்பத்திரிகை தேவையாயிருந்தாலும் 7 முதல் 10 வது பாராவரையிலும் அல்லது 12 வது பாராவிலுள்ள நிபந்தனைப்பிரகாரம் தீர்மானஞ்செய்யவேண்டும்.

17. மேலேசொன்னபடி ஏற்படும் குயிட் ரெண்டு மானியதாரனுக்கு அதிகஸ்வதந்தரத்தை யுண்டாக்குவதற்குப் பரிவர்த்தனையாக யேற்பட்டதால் முன்னே ஏற்பட்டிருக்கிற பாடிகை அல்லது ஜோடியுடன் இந்ததீர்வையைக் கூடஏற்படுத்தலாம். இந்த புதுதீர்வை மானியதாரனுக்குத்தகுந்ததாயிருக்கிறதே யொழிய பூர்த்தியான தீர்வையையனுசரித்து ஏற்படுத்தப்படாமல் அந்தத்தீர்வையில் வழக்கமான ஜோடி அல்லது பாடிகையைத்தள்ளி மிகுந்ததை மானியதாரன் அடைகிற நிகரமான லாபமாயிருப்பதனாலே அந்த லாபத்தை அனுசரித்து தீர்வை யேற்படுத்தவேண்டும்.

18. குயிட் ரெண்ட் பாடிகை இந்த இரண்டு மொத்தங்களுக்கு 20 மடங்குத்தீர்வையே ஒரேதரமாகக்கட்டினால் அவ்விரண்டும் நிவர்த்தி செய்யப்படும்.

19. 50 வருஷங்களுக் குண்டான மானியங்கள் அடியில் கண்டபடி பிரிக்கப்பட்டிருக்கின்றன. (1) பிரிட்டிஷ் கவரன்மெண்டாரால் கொடுக்கப்பட்ட மானியம். (2) சர்க்கார் உத்திரவில்லாமல் ரெவினியூ அதிகாரிகளால் இஜாராதார் முதலானவர்களுக்குக் கொடுக்கப்பட்ட மானியங்கள். (3) ஜமீன்தாரர், பாளயக்காரர் இவர்களால கொடுக்கப்பட்டு, அப்பேர்ப்பட்ட ஜமீன் அல்லது பாளயம் சர்க்காருக்குச் சேர்ந்தவுடனே சேரவேண்டிய மானியங்கள்.

20. பிரிட்டிஷ் கவரன்மெண்டாரின் விவரமான உத்தரவுகளின்பேரில் கொடுக்கப்பட்ட மானியங்கள் விஷயத்தில் அதற்காகக் கொடுக்கப்பட்ட சாசனங்களல்லது அதனிமித்தம் ஏற்பட்ட விவரங்களிலாவது கண்டிருந்த நிபந்தனைகளின்படி நடத்தப்படும். ஒன்றல்லது அதிக தலைமுறைக்காவது கொடுக்கப்பட்ட மானியங்கள் விஷயத்தில் ஷை நிபந்தனையில் கண்டபடி அந்தந்த மானியதா

ரன் அவனவனுடைய சந்ததிக்குத் தகுந்தபடி குயிட்ரெண்ட் கொடுக்க ஒப்புக்கொண்டு தன்னுடைய மானியத்தை சுவதந்தரம் செய்து கொள்ளும் விஷயத்தில் தவிற, அந்த மானியங்களுடைய கெடுவு முடிந்த வுடனே பூர்த்தியான தீர்வை ஏற்படுத்தப்படும். சாசுவதமாகவும், வம்சபரம்பரையாகவும் கொடுக்கப்பட்ட மானிய விஷயத்தில் அவை தேவாலயங்கள் சத்திரங்கள் முதலானவைகளுக்குக் கொடுக்கப்பட்டதானால் அதற்குத் தகுந்ததாகவும், ஜீவனார்த்தம் கொடுக்கப்பட்டதானால் அதற்குத் தகுந்ததாகவும் தீர்வை ஏற்படுத்தவேண்டும்.

21. கவரன்மெண்டார் அனுமதியின்றி, கீழ்ரிவினியூ அதிகாரிகளால் அநியாயமாகக் கொடுத்த மானியங்கள் மோசத்தினால் அடைந்ததாகத்தெரியவந்தால் அந்த மானியத்துக்குப்பூராத்தீர்வை விதிக்கப்படும். தற்கால மானியதாரன் அந்த மோசத்தில் சம்பந்தமில்லாதவனாயிருந்தால் தயாவிஷயமாக முழுத்தீர்வையில் மூன்றிரண்டு பங்கு தீர்வை யேற்படுத்தி சாஸ்வதமாக இனாம் ஏற்படுத்திக் கொள்ளலாம். மோசமில்லாமல் மானியம் அடையப்பட்டிருந்தால் நெடுங்கால அனுபவத்தை யனுசரித்து அரைப்பங்கு தீர்வைக்கு குயிட்ரெண்ட் ஏற்படுத்தி அது ஸ்வதந்தர பாத்தியதையாய் சாஸ்வதமாகச்செய்யப்படும்.

22. ஜமீன்தார், பாளயக்காரர் முதலானவர்களால் கொடுக்கப்பட்ட மானியங்கள், 1802-ளு 25 வது ஆக்ட் 12வது பிரிவுப்படிக்கு விரோதமாக விருப்பதால் செல்லாது. அவை கவரன்மெண்டு அறிக்கைக்கு வந்தபோதெல்லாம் சாதாரணமாக கவரன்மெண்டு நிலத்தில் சேர்த்துக்கொள்ளப்படும். ஆகையால், கவரன்மெண்டார் உத்திரவில்லாமல் கீழ்ரிவினியூ உத்தியோகஸ்தர்களால் கொடுக்கப்பட்ட மானியங்கள் விஷயத்தில் நடத்துகிற அமுலேநடத்தப்படும்.

23. தற்காலத்தில் செய்யப்படாமலும் அவசியமில்லாமலுமிருக்கிற ரிவினியூ உத்தியோகங்களுக்காக முன்துரைத்தனத்தாரால் கொடுக்கப்பட்டமானியங்கள் இருவகைப்படும் (1) பிரிட்டிஷ்துரைத்தனம் வந்தபிறகு அவ்வுத்தியோகங்கள் அவசியமில்லாததால் அந்த மானியத்துக்காக, ரொக்கமாவது நிலமாகவாவது ஜீவனமுண்டாக்கினவை. (2) எப்பொழுதாவது செய்யப்படுவதாயும் சர்க்காருக்கு உபயோகமில்லாததாயுமிருக்கிற சேவகங்களுக்காக சாஸ்வதமாகக் கொடுத்திருக்கும் மானியங்கள்.

24. தேஸ்முக், தேஸ்பாண்டியம் முதலான உத்தியோகங்களைப் போன்றவைகளுக்குக் கொடுக்கப்பட்ட முதல்வகுப்பு இனாம் விஷயத்தில் ஜீவனார்த்தமாயிருக்கிற சேவகங்களுக்காக இல்லை. ஆகையால் கவரன்மெண்டாருடைய விபரமான உத்திரவுகளிலாவது தேசாசாரத்தினாலாவது பரம்பரை பாத்தியமிருந்தால், 7-வது பாராவில் கண்டபடி தீர்மானஞ்செய்யவேண்டும். ஒரு தலைமுறைக்கு மாத்திரம் நிர்ணயித்திருந்த பட்சத்தில் அதற்கனுகூலமாகத் தீர்மானிக்கவேண்டும்.

25. இரண்டாவது வகுப்பு மானியவிஷயத்தில், அனுபோகதாரனுக்கு ஸ்திரப்படுத்தப்படும் ஜீவனார்த்தமான மானியவிஷயத்தில் நிச்சயித்த உயர்ந்ததீர்வைக்கு அதிகப்படாத ஸ்வல்பத்தீர்வையை அந்த மானியங்களுக்குக்கொடுத்து வரவேண்டும். மேல்கண்ட தீர்வை யேற்படுத்துவது, சேவகங்கள் நின்றுவிட்ட காரணங்களைக் கொண்டும் கவரன்மெண்டாருக்குச் சேரும் பாத்தியதையை அனுசரித்ததாகவு மிருக்கிறது.

அந்த சொல்பதீர்வையின் வகுப்பும், பரிவர்த்தனை செய்யும் விதமும் சேவகத்தின்சுபாவத்தை யனுசரித்து செய்யவேண்டியதாயிருக்கிறது. சொல்பதீர்வை யிதுவரையில் ஏற்பட்டிருக்கும் பட்சத்தில், இப்போது ஏற்படுத்தும் அதிகத்தீர்வை 17 வது பராவில் கண்ட நிபந்தனையை யனுசரித்துச் செய்யவேண்டும்.

26. கிராம ஊழியங்கள்:—முதலாவது, இப்போதைக்கு அவசியமான ரெவினியூ போலீஸ்சேவகங்களுக்காக அனுபவித்து வருகிற மானியங்கள் அந்த அதிகாரஸ்தனுக்கு ஸ்திரப்படுத்தப்படும் செடில்மெண்டுக்குக் கீழ்வந்த கிராம ஊழிய இனாம்களின்பேரில் 10 அணா தீர்வை விதிக்கப்படும். அப்படி தீர்வைவிதிப்பதில் அடியில் குறித்த தீர்வையை போடவேண்டும் (1) ஜோடியுடன் குயிட்ரெண்டைச் சேர்த்ததால் இனாமுக்குச் சாதாரணமாக விதிக்கப்படும் முக்கால் தீர்வைக்கு அதிகப்பட்ட தீர்வையை வஜாசெய்யப்படும் (2) ஜோடிமாத்திரம் முக்கால் தீர்வைக்கே அதிகமாகவும் சமமாகவுமிருக்கிற பட்சத்தில் ஜோடிமாத்திரம் வசூல் செய்யப்படும். (3) ஜோடி முழுந்தீர்வைக்கே அதிகமாக விருக்கிறபட்சத்தில் ரயித்துவாரி நிலங்களைப்போல் பட்டா பெறுவதற்கு இஷ்டமிருந்தால் பெறலாம்.

இரண்டாவது:—கிராமஸ்தர்களுக்கு தச்சன், கருமான் முதலியவர்கள் செய்யும் ஊழியங்களுக்காக அனுபவிக்கிற மானியங்கள் வம்சபரம்பரையாய் அனுபவிக்கத்தக்கதாக எண்ணப்படும். எந்த சேவகங்களுக்காக அந்த மானியங்கள் ஸ்திரப்படுத்தப்பட்டனவோ, அவைகளை எப்போதும் நடத்தத்தக்க உடன்படிக்கையின்பேரில் கொடுக்கப்படும்.

27. ஜமீன்தாரிகளிலும், ப்ரோப்ரைடரி நிலங்களிலும் இருக்கின்றதும், சாஸ்வத பேஷ்கிஸ்தி நிர்ணயித்தகாலத்தில் சேராததும், 1802 ௵த்திய 25 வது ஆக்ட் 4 வது பிரிவுப்படிக்கு கவரன்மெண்டாருக்கு பாத்தியத்தை யுண்டாக்கத்தக்க மானியங்களைக்குறித்து இப்போது விசாரணைசெய்து பரிஷ்கரிக்கலாகும். கவரன்மெண்டு தாலூக்காக்களிலுள்ள மானியங்களைத் தீர்மானிப்பதற்குச் சொல்லிய பிரகாரம் கமீஷனர் பரிஷ்கரிக்கலாம். ஷை ஆக்டின் 12 வது பிரிவுக்கு விரோதமாய் சாஸ்வதமான ஏற்பாட்டிற்குப்பிற்பாடு ப்ரொப்ரைடர்களால் கொடுக்கப்பட்ட மானியங்களைக்குறித்து இப்போது எவ்விதமான ஏற்பாடும் செய்யக்கூடாததே தவிற, அந்தஸ்திதிகள் கவரன்மெண்டாருக்கு இனிமேல் சேருங்காலத்தில் அதைப்பற்றி விசாரிக்கப்படும்.

28. எவ்வளவும் தீர்வையில்லாமலாவது சொற்பத் தீர்வையாவதிருக்கிற சுரோத்திரியங்கள், அக்கிரகாரங்கள், பூர்த்தியான மானியங்களென்று எண்ணப்படும். இவைகளை சொற்ப மானியங்களைக்குறித்துச் சொல்லப்பட்டிருக்கிற நிபந்தனைப் பிரகாரம் தீர்மானிக்கவேண்டும்.

29. மானியம் யாரால் ரிஜிஸ்டரா யிருக்கிறதோ அவனுடனாவது, ரிஜிஸ்டராயிருந்தால் மானியத்தை யனுபவிக்கிற குடும்பத்தலைவ னிட்போதிய வழக்கப்படிக்கு கவரன்மெண்டாருக்கு உத்தரவாதியா யிருப்பதினாலே அவனுடனாவது தீர்மானமடையலாகும். ஆனால், இவ்விதமாகக் குடும்பத்தலைவனுடன் தீர்மானத்தை முடிவு செய்துகொண்டு ஏற்படுகிற சொல்பத் தீர்வையைச்செலுத்திக்கொண்டு வேறே நிர்ப்பந்தக்களில்லாமல் உடன்படிக்கைகளுக்குட்பட்டு நடக்கச் சம்மதியுள்ள குடும்பத்திலெவராவது அந்த மானியங்களை உட்பங்குக்காரராக அனுபவிப்பதை யிந்த நிபந்தனை தடுக்கமாட்டாது.

30. சரியான வார்சுகளில்லாமற் போவதினுல் பூர்த்தியாய் விடப்பட்ட மானிய சங்கதிகளிலேயும், அப்படிப்பட்ட வார்சுகளிருந்தும் அந்த மானியங்களைக்குறித்து பாத்தியஞ்செய்துகொள்ளாத விஷயத்திலும், ரிஜிஸ்டர் அனுபவதாரனுக்கு அரிக்கை செய்தும் அவன் வராமலும் தன்னுடைய பாத்தியதையை ரூபிக்காமலு மிருக்கிற விஷயத்திலும், அப்படிப்பட்ட மானியங்கள் முதலில் அந்தஜில்லா கலெக்டரால் மறியல்செய்துவைக்கப்படும். மறியல்செய்வதற்கு அறிக்கைகொடுத்த முதல் ஒருவருஷகெடுவு முடிந்தவுடன் 1802ஞு 31-வது ஆக்ட்டினுல் கலெக்டருக்குக் கொடுக்கப்பட்ட அதிகாரப்படி அந்த மானியங்களுக்குப் பூர்த்தியான தீர்வை யேற்படுத்தப்படும்.

31. கவரன்மெண்டு கணக்குகளில் கண்டிருக்கிறதைவிட மானியம் அதிமாகவிருந்து, அது அம்பது வருஷகால அனுபோகத்திலிருந்ததாகத் தெரியவந்தால் அது மானியத்தைச்சேர்ந்ததாகவே யெண்ணப்படும். அம்பதுவருஷத்துக்குக் குறைந்த அனுபவமாகவிருந்தால், அந்த விஷயத்துக்குத் தகுந்ததாக பூர்த்தியான தீர்வையில் மூன்றிரண்டுபாகத்துக்கதிகப்படாத தீர்வையை, அந்த அதிகமான பூமிக்கு நிச்சயிக்கப்படும். அந்த அதிகத்துக்கு நிலமையான அனுபவதாரனுடைய மோசம் காரணமாயிருந்தால் அதற்குப் பூர்த்தியான தீர்வையை விதிக்கலாகும்.

32. மேற்சொல்லிய நிபந்தனைகளை யனுசரித்து ஒருதரம் சுவதந்தரபாத்தியதையாகச் செய்யப்பட்ட மானியங்களுக்கு நிச்சயித்த சுவல்பத்தீர்வையைக் கிரமமாய் வரப்பற்றிக்கொள்ள எவ்வளவு பிரவேசிக்கலாமோ அதைவிட அதிகமாய் கவரன்மெண்டார் அந்த மானியத்தில் பிரவேசிக்க நியாயமிராது. இருபதுவருஷ சுவல்பத்தீர்வைக்குச் சமானமான மொத்தத்தை ஒரேதரமாய்ச் செலுத்திப் போடுவதினுல் ஷெ ஸ்வல்பத்தீர்வையை நீக்கிக்கொள்ள மானியதாரன் பாத்தியமுள்ளவனுயிருக்கிருன்.

33. பிரதிவருஷமும் சுவல்பத் தீர்வையை கொடுப்பதினுலாவது, இருபதுவருஷ ஸ்வல்பத்தீர்வையை ஒரேதரமாகக் கொடுத்ததனுலாவது, மேற்சொல்லியபடிக்கு ஸ்வதந்தர பாத்தியதையால் செய்யப்பட்ட மானியங்களுக்குண்டான பாத்தியதைவிஷயத்தைக்குறித்தும், வார்சாகிற விஷயத்தைக்குறித்தும் எவ்விதசச்சரவுகளாவது சம்பவித்தால், அவைகளெல்லாம் மற்றவிதமானசொந்

துக்களைப்போலவே சாதாரணமான நியாயஸ்தானங்களுடைய அதிகாரத்துக்குட்படும். மானியங்களை தன்னுடைய இஷ்டப்படிக்கு கொதுவைவைக்கவாவது, விக்கிரயஞ் செய்யவாவது, மற்ற வேறே விதமாய் பராதீனஞ்செய்யவாவது அனுபவதாரனுக்கு ஸ்வதந்தரமுண்டு. அந்தமானியங்கள் ஸ்வல்பத்தீர்வையை நிவர்த்திசெய்துகொள்ளாத மானியங்களாயிருந்தால், அந்த ஸ்வல்பத்தீர்வையைச் செலுத்தவேண்டும்.

34. மேற்கண்ட விதம் விசாரணைசெய்து எவன்பேருக்கு மானியம் ஸ்திரப்படுகிறதோ அவன்பேருக்கு சாசனங்கொடுக்கப்படும். இந்தசாசனங்களில் அவர்களுக்கு மானியத்தையனுபவித்ததற்காக இப்போதைய நியமப்படிக் குண்டாயிருக்கிற ஸ்வபாவத்தையும், அதை சுதந்தரஞ்செய்துகொள்ள நிச்சயிக்கப்பட்ட பத்ததியையுங் காட்டப்படும்.

6-வது அத்தியாயம்.

49. இனும் கமீஷனரால் சேடில்மேண்டான இனும் விஷயத்தில் கலேக்டர் வேலை.

1. இனும் கமீஷனரால் செடில்மெண்டுசெய்த இனும்களில் கலெக்டர் பிரவேசிக்கக்கூடாது. ரயத்துவாரி நிலங்களுக்குண்டான பாத்தியதைகளெல்லாம் இதற்குமுண்டு.

2. மதசம்பந்தமான ஊழியங்களுக்காகவும், நீர்ப்பாய்ச்சல் வேலைகளுக்காகவும், பொதுஜனப் பிரயோசனத்துக்காகவும், கொடுக்கப்பட்ட இனும்கள், அப்படிப்பட்ட ஊழியம் நின்றுபோனால் கலெக்டர் இனுமை ரத்துசெய்துவிடலாம். ஊழியம் நடக்காமல் நின்றபோதும், எதற்கு மானியம் கொடுக்கப்பட்டதோ அது எடுபட்டபோதும், அப்படிப்பட்ட சங்கதிகளை போர்டாருக்கனுப்பவேண்டும். கொஞ்சகாலமாக அந்தவேலை நிறுத்தப்பட்டிருந்தால், வேலையை நிறுத்தினவனுக்கு நோட்டீசுகொடுத்து, வேலைசெய்கிறானா இல்லையாவென்று பார்க்கவேண்டும். 12 வருஷமாக பாழாய்க்கிடந்தும் கேட்காமலுமிருக்கிற கோயிலுக்காக விடப்பட்ட இனும் நிலங்களின்மேல் போட்சாங்கிஷனுடன் முழுத்தீர்வை விதிக்கலாம். தசபந்தம் இனும்தாரர்கள் அவர்கள் செய்யவேண்டிய வேலையைச் செய்யாதிருந்தாலும், அவ்வேலையைச் சரிவரப் பார்க்காதிருந்தாலும், முழுத்தீர்வை விதிக்கப்படும்.

3. ஜீவனார்த்தமாகக் கொடுக்கப்பட்ட மானியவிஷயத்தில் பத்திரத்தில் கண்ட ஷரத்துக்களை யனுசரித்து கலெக்டர் அமுல் நடத்தவேண்டும். ஒரு இனும் ஒரு தலைமுறைக்காவது கொடுத்திருந்தால், அந்தக் கால அளவு முடிந்தபின்பு பூராத் தீர்வை போடப்படும்.

4. கிராம ஊழிய இனும் விஷயத்தில் 1831ளுடித்து 6 - வது ஆக்ட்படி அமுல் நடத்தப்படும்.

5. சுதந்தரத்துடன் கொடுக்கப்பட்ட இனும்களுக்குள்ள தீர்வையை வசூல்செய்வதில் ரயத்துவாரி நிலங்கள் விஷயமாய் நடத்தவேண்டிய அமுல்களை நடத்தவேண்டும். இனும் விஷயத்தில் அது பொருந்தாது.

6. புதிய செடில்மெண்டுப் பிரகாரம் ஒரு இனும் கமீஷனர் ஒரு இனும்தாரனுக்கு சாசனம் கொடுத்தால், அதை இனும்தாரன் அங்கீகரிக்கமாட்டேனென்றால் சாசனத்தை இனும் கமீஷனருக்கு அனுப்புவதுடன் பூராத்தீர்வை விதிக்கப்படும்.

7. சாசனம் கொடுப்பதற்குமுன் ஒரு இனும்தாரனிறந்துபோய்விட்டால், அந்த சாசனத்தை ரெவினியூ ஆபீசில் வைத்திருக்கவேண்டும். அதன்மேல் கலெக்டர் அந்த பூஸ்திதிக்குத் தகுந்த வார்சுதாரன் இன்னானென்பதை யறிந்து அவனுக்குக் கொடுக்கவேண்டும்.

8 கிராம ஊழிய இனும்களின்பேரில் போடுகிற புதிய குயிட்ரெண்டை கிராம ஊழிய பண்டுக்குச் சேர்க்கப்படும்.

9. சர்க்கார்த் தீர்வைக்காக சர்க்காரால் ஏலத்தில் எடுத்த நிலங்களை ரயித்துவாரி நிலங்களுடன் சேர்த்துவிடப்படும்.

50. வார்சு பரம்பரை.

இரண்டல்லது மூன்று தலைமுறைக்குக் கொடுக்கப்பட்ட இனும்களில், எவனுக்கினும் கொடுக்கப்பட்டதோ அவன் முதல் தலைமுறையாகவும், அவனுக்குப்பின்னால் வருகிறவனை இரண்டாந்தலைமுறையாகவும் எண்ணவேண்டும். இரண்டாந்தலைமுறையில் சந்ததியில்லாமலிறந்துவிட்டால் அவனுடன் இனும் போய்விட்டதாக எண்ணப்படும்.

51. இனும்களை உட்பிரிவுசெய்வது.

ஒரு மானியத்தை உட்பிரிவாகச் செய்யவேணுமென்றால், அந்த மானியத்தின் பாத்தியஸ்தர்களெல்லாம் ஒன்றுசேர்ந்து இன்னவிதமாக உட்பிரிவினை செய்யவேண்டுமென்பதையும், அதற்குச் செலுத்தவேண்டிய தீர்வை இன்னான் செலுத்தவேண்டுமென்பதையும், ஒற்றுமையுடன் ஷை நடவடிக்கைகளை நடத்துகிறார்களென்றும் கண்டு ஒரு ஸ்டாம்பு கடிதத்திலெழுதி ரிஜிஸ்டர்செய்து கலெக்டரிடத்தில் கொடுக்கவேண்டும். அதன்பேரில் அதை உட்பிரிவு பிரிக்கவேண்டிய வேலையைச் செய்யவேண்டும். அப்படிப்பட்ட மனுவை கலெக்டர் அங்கீகரித்துச் செய்த உத்திரவை தாலூகா அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தவேண்டும்.

52. உள் குத்தகை முதலியன.

மானியத்தின் ரிஜிஸ்டர் அடைந்தவன் கவரன்மெண்டாருடைய ஸ்வதந்திரத்துக்கு ஹானிவரவொட்டாமல் விற்கவும், வேறே எவ்விதமான மாறுதல்கள் செய்யவும் அவனுக்கு அதிகாரமுண்டு. அதை கலெக்டர் டிரான்சுபர் ரிஜிஸ்டர் செய்யலாம்.

53. இராஜாங்க வேலைக்காக எடுத்துக்கொண்ட இனும்களுக்கு காம்பேன்சேஷன் கொடுப்பது.

இவைகளிரண்டுவிதம்.—1. மானியதாரனுடைய சக்திக்கு மீறினகாரணங்களினால் உண்டான நஷ்டம். இதில் மானியத்தின் சுபாவமே அதை நடத்த யோசனையுள்ளதாயிருக்கிறது. மானியம் கவரன்மெண்டு ஊழியத்துக்காகக் கொடுக்கப்பட்டிருந்தால், அதாவது, தச்சன், கருமான் முதலியவர்களுடைய மானியங்கள் தவிற மற்றவர்களுடைய மானியங்களையாவது தேவஸ்தான மானியங்களிலிருந்து பிரத்தியேகப்பட்ட ஒரு சத்திர மானியமாவது, இவைகளில் ஷை காரணத்தால் நஷ்டம் சம்பவித்திருக்கிறதென்றும் இனி அம்மானியத்தில் வரும் வருமானம் போதாதென்று நிச்சயப்பட்டால் அதற்கு காம்பென்சேஷன் கொடுக்கலாம். இதற்குப் பதிலாகக் கொடுக்கப்பட்ட மாறுதல் நில சம்பந்தமாகவும் சொல்பத் தீர்வையைக் குறைத்ததாகவுமிருக்கும். முதல் சங்கதியில் நஷ்டத்திற்குப்பதிலாக மதிப்புள்ள பூமியை யேற்படுத்திக்கொள்வதற்காவது, அதிக விலையுயர்ந்த நிலத்தை வித்தியாசமான தீர்வையைக்கட்டி எடுத்துக்கொள்ளவாவது மறு திரவியங்கொடுத்து நில உட்பிரிவுசெய்வதை சாத்தியமானவரையில் நிவர்த்திசெய்யவேண்டியது. காம்புநிலங் கொடுக்க

ப்பட்டால் அவசியமானவிடத்தில் சுவல்ப தீர்வையை நிர்ணயித்து, ஒரு ஏகராவுக்குக் குறையாமல் கொடுக்கவேண்டியது. சர்க்காருக்குச் செய்யப்படுகிற ஊழியத்துக்காக இனும் கொடுக்கப்படாமலிருந்தால், காம்பன்சேஷன் மனு தள்ளிவிடப்படும்.

2. கவரன்மெண்டு காரியங்களால் நஷ்டம் நேர்ந்தால், அந்த நஷ்டத்துக்குச் சரியான பணம் வரக்கூடிய யாதொரு நிலத்தின் தீர்வையையாவது, மானியதாரனுக்கு விட்டுவிடவேண்டும்.

54. இனும் நிலங்களுக்குத் தண்ணீர்த் தீர்வை.

இனும்தாரனுடைய சாசனத்தில் குறிக்கப்பட்ட நஞ்சையில் ஒருபோக சாகுபடிக்கு நீர்ப்பாய்ச்சிக்கொண்டால் அதற்குத் தண்ணீர்த்தீர்வை கிடையாது. அந்த நிலம் இருபோக நஞ்சையாயிருந்தால் இருபோகத்திற்கும் தண்ணீர்த்தீர்வை கிடையாது. ஆனால், அந்த நிலம் ரிஜிஸ்டர் செய்யப்பட்ட புஞ்சையாகவிருந்து, சர்க்கார் ஜலாதாரத்தைக்கொண்டு நஞ்சைநிலமாக்கினால் அதற்குச் சாதாரண தண்ணீர்த்தீர்வை விதிக்கப்படும். யாதொரு விசேஷமான தீர்வையில்லாமல், இனும்தாரனுடைய பிரயோசனத்துக்காக தண்ணீர் பாய்ச்சலாதாரத்தை விர்த்திசெய்ய கவரன்மெண்டார் எடுத்துக் கொள்ளமாட்டார்கள். ஆனால், தண்ணீர்பாய்கிற வேலைகளுக்காகச் செய்யப்பட்ட ரிபேரினால் முன் தண்ணீருடைய வசதியையும் பூர்த்தியாயாவது கொஞ்சமாயாவது மறுபடியுமுண்டுபண்ணினால் அதற்கு வேறே தீர்வை கிடையாது.

55. மானியங்களின் அதிகம் அல்லது குறைந்த நிலங்களின் விஷயத்தில் நடத்தவேண்டிய விதம்.

சில்லரை மானியங்களில் சர்வேயில் விஸ்தீரணம் அதிகமாகக் காணப்பட்டால் அடியில் கண்டபடி செய்யவேண்டியது.

1. மானிய சாசனத்தில் ஏகராக் கணக்குப்படி எழுதப்பட்ட நிலம் சுதேச அளவைக்கொண்டு செய்யப்பட்டது.

2. சர்வேயிக்குப்பிறகு, ஸ்வதேச அளவை ஏகராவாக மாற்றுவதற்கு அமுலிலிருக்கிற நில அளவுப்படிக்குப் போதாததாயிருந்தால், முதன்முதல் அளந்தபோது சம்பவித்த பிசகை திருத்துவதற்காக 100-க்கு 10 வீதம் தீர்வையில்லாமலே சேர்த்து அந்த நில சம்பந்தமான விஸ்தீரணத்தில் ஏற்பட்டிருக்கும் மானிய நில விஸ்திரணத்தை ஏகராக்களாக மாற்றிக் கட்டிக்கொடுக்கவேண்டும்.

3. அதிக நிலத்தின் அளவை சமமாக விஸ்தீர்ணிப்பது கஷ்டமாயிருக்குமானலால் அதற்குப் பட்டா கொடுக்கக்கூடாது. அப்படிப்பட்ட அதிக நிலத்துக்கு வரவேண்டிய தீர்வையை மொத்தத் தீர்வையுடன் சேர்க்கவேண்டும்.

56. இனும்களை விட்டுவிடுவது.

1. மானிய சுவதந்தரப்பத்திரிகை கொடுத்தபிறகு, ஜோடி ராஜிநாமாகொடுத்தால், அதைக் கலெக்டர், பட்டா நிலங்களை விட்டுவிட்டால் அங்கீகரிப்பதுபோல அங்கீகரிக்கவேண்டியது.

2. ஒரு இனும் பத்திரத்தில் கண்ட சப்டிவிஷன் செய்த மானியங்களை தனித்தனியாகவும் அங்கீகரிக்கலாம்.

3. ஜோடி ராஜிநாமாவை கொடுத்த நிலத்துக்குள்ள தீர்வையின் மொத்தம், முழு நிலத்தின் தீர்வையில் சராசரியாயிருக்கவேண்டும்.

4. இனும்தாரன் இன்னுன் என்பது கண்டுபிடிப்பது கஷ்டமாயிருந்தால், அப்படிப்பட்ட நிலங்களை ஜோடிராஜிநாமா கொடுத்தால் அதனை அங்கீகரிக்கக்கூடாது.

57. இனும்களை விற்பது.

யாதொரு இனும்தாரன் கட்டவேண்டிய தீர்வையைக் கட்டாதிருந்தால், அதற்குச் சரியான அளவுள்ள நிலத்தை விற்கவேண்டும். அதை விற்பதில் இனும் நிலமென்றே விற்கவேண்டும். விற்பனையில் யாரும் கேளாதிருந்தால் அதை சர்க்காரில் எடுத்துக்கொண்டு ரயத்துவாரி நிலத்தோடு சேர்க்கவேண்டும்.

58. வழிப்போக்கரான சுதேசிகளுக்கு தர்ம சத்திரங்கள்.

சாதாரண மனிதர்களால் சத்திரங்கள் கட்டுவதற்கு புறம்போக்கு நிலங்களைக் கொடுப்பதில் கீழ்க்கண்ட நிபந்தனைகளை யனுசரிக்கவேண்டும்.

1. யாதொரு சத்திரத்தைக் கட்டுகிறவன், அதைக் கட்டுவதற்குமுன் போர்டாருடைய அனுமதியைப் பெறுமற்போனுல் அதற்குக் காலியான நிலங் கொடுக்கப்படமாட்டாது.

2. அப்படிக் கட்டுகிற சத்திரத்தில் எல்லா மதஸ்தர்களும், தங்கும்படியாய் இடமிருக்கவேண்டும்; பிராமணர்களுக்கும், சூத்தி

ரர்களுக்கும் ஒரு கட்டிடமும், மற்ற மதஸ்தர்களுக்கு ஒரு கட்டிடமுமிருக்கவேண்டும்.

3. அப்படி சத்திரத்துக்குக் கொடுக்கிற நிலம் 50 ரூபாய்க்கு தீர்வையுள்ள கரம்புநிலத்துக்கு மேற்படக்கூடாது.

4. கட்டுகிற சத்திரமாவது அதேரோட்டில் பக்கத்திலிருக்கிற சத்திரத்துக்கு 10 - மையிலுக்குள்ளாக விருக்கக்கூடாது. அப்படி 10 மைலுக்குக் குறையாமலிருந்தால்தான் தரிசு நிலத்தைச் சர்க்காரில் கொடுப்பார்கள். சில விசேஷ காரணங்களை உத்தேசித்து கலெக்டருக்கு யுக்தமாகத் தோற்றினல் 10 மயிலுக்குக் குறைந்த தூரத்தில் சத்திரங்கட்ட இடம் கொடுக்கலாம்.

5. சத்திரம் சரியாயிருக்கிறதாவென்பதையும் பாட்டைசாரிகளுக்கு சகலவித சவுக்கியஞ்செய்வதற்குத் தகுந்த வேலைக்காரர்களை ஏற்படுத்தியிருக்கிறதாவென்பதையும் கலெக்டர் அடிக்கடி விசாரணைசெய்யவேண்டும்.

6. யாதொரு சத்திரம் மேலே கண்ட நிபந்தனைகளுக்குட்படாவிட்டால் அதற்கு விட்ட நிலத்தை ரத்துசெய்யப்படும்.

சத்திரத்தை ஒருவன் தனது சொந்த பிரயோசனத்துக்காக வைத்திருக்கக்கூடாது. சத்திரம் பொதுஜனப்பிரயோசனத்துக்காக கட்டப்பட்டதென்றே எண்ணவேண்டும்.

7-ம் அத்தியாயம்.

59. கோர்ட் ஆவ் வார்ட்ஸில் தீர்வை விதிப்பதும் வசூல்செய்வதும்.

1. யாதொரு மைனருடைய நிலம் சில வருடங்களுக்கு கோர்ட் ஆவ் வார்ட்ஸாருடைய விசாரணைக்குள் வருமென்று தெரிந்தால், ரயத்துவாரி நிலங்களின் தீர்வையை வசூல்செய்வதுபோல அப்படிப்பட்ட நிலங்களின் தீர்வையை வசூல்செய்யவேண்டும். நிலங்களைக் குத்தகைவிடும் வழக்கத்தைக் கூடியமட்டில் எடுத்துவிட ஏற்பாடுசெய்யவேண்டும்.

2. கோர்ட்டாருடைய பார்வையின்கீழ் வந்தபின் உண்டான தீர்வை பாக்கிக்காக நிலங்களை விற்கக்கூடாது. மானேஜ்மெண்டைச் சரியானவனிடம் ஒப்புவைக்கும்போது, இதற்குமுன் உண்டான பாக்கிகளையெல்லாம் தள்ளிவிடவேண்டியதாயிருப்பதால் சர்க்காரு

க்குச் சேரவேண்டிய தீர்வையை வசூல்செய்ய கலெக்டர் தன்னாலி யன்றமட்டும் முயலவேண்டும்.

3. கோர்ட் ஆவ் வார்ட்ஸாரிடம் நிலம் வந்ததுமுதல் நிலமு டையவனுக்கும் குடித்தனக்காரருக்குமுடைய சம்பந்தம், கலெக் டருக்குங் குடிகளுக்கு முண்டாகிவிடுகிறது.

60. கோர்ட் ஆவ் வார்டிசின் தீர்வைவஜா.

கலெக்டர் போர்டாருடைய உத்தரவைப்பெறுமளவும் சாதார ணமாய் சமஸ்தானத்தில் ஆதாரத்தின் கீழ்வரும் வஜாவைத்தவிற வேறு எவ்விதத்தீர்வைவஜாவும் கொடுக்கக்கூடாது. காலத்தில் மழையில்லாமல்போய் பஞ்சமுண்டாகும் பட்சத்தில் கோர்ட்டாரு டைய அநுமதியைக்கொண்டு ரிலீப்வேலைகள் செய்யலாம்.

8-ம் அத்தியாயம்—சில்லரைவிஷயங்கள்.

61 பவுண்டு பண்டு.

1. கிராமப் பவுண்டுகளிலிருந்து வசூலாகும் பணங்களை விவ சாயவேலைக்காகச் செலவிடவேண்டும். அடியில்கண்டபடி பவுண்டி லடைபடும் கால்நடைகளுக்குத் தக்கபடி தட்டிவசூல்செய்யவே ண்டும்.

	ரூ.	அ.	பை.
யானைக்கு	2	0	0
ஒட்டகம், எருமை	0	8	0
குதிரை, கோவேறு கழுதை, பசு, எருது முதலி யவை	0	4	0
கன்று, கழுதை, பன்றி	0	2	0
ஆடு முதலியவை	0	1	0

2. பவுண்டுகீபர் பவுண்டிலடைபடும் மாடு முதலிய கால் நடைகளுக்கு தீனி, தண்ணீர் முதலியவைவைத்து, அதற்கு நேரி ட்ட செலவை சொந்தக்காரனிடம் வசூல்செய்யவேண்டும்.

3. மாட்டின் சொந்தக்காரன் வராவிட்டால், மாஜிஸ்ட்ரேட் டின் உத்திரவின்மேல் அதை ஏலத்தில் விற்றுவிடலாம். அப்படி ஏலம்போட்டு வசூலானபணத்தில் செலவுபோக பாக்கிப்பணத்தை 3 மாதகாலம் டிபாசிடில் வைத்திருந்து, அதற்குள் சொந்தக்காரன் வராவிட்டால் அதை பவுண்டுபண்டில் சேர்த்துவிடப்படும்.

4. பவுண்டில் வசூலாகும் பணத்தில் பேர்பாதி பவுண்டுகீபருக்குக் கொடுக்கப்படும். அப்படிக் கொடுக்கும்பணம் மாதமொன்றுக்கு ரூபா 5 க்கு மேலாகக்கூடாது. ஒருரூபாய்க்குக்குறைந்துவசூலானால் அந்தத்தொகை முழுவதையும் பவுண்டுகீபர் எடுத்துக்கொள்ளலாம். ஒருரூபாய்க்குமேல் இரண்டுரூபாய்க்குள் வசூலானாலும் அதில் ஒருரூபாய்பவுண்டுகீபர் எடுத்துக்கொள்ளலாம். வருஷம் 1-க்கு இருநூறு ரூபாமுதல் நானூறுரூபா வரையில் வசூலாகும் பவுண்டுகீபருக்கு மாசம் ரூபா 6 சம்பளம் கொடுக்கப்படும். 400 ரூபாய்க்குமேல் வசூலாகும் பவுண்டின் கீபருக்கு 7 ரூபாய் சம்பளங் கொடுக்கப்படும்.

62. ஜனன மரண ரிஜிஸ்டர் பதிவு.

1. மானிடஜனனமரணக்கணக்குகளை வைக்கவேண்டுமென்று 1865-ம்ளுத்தில் ஏற்பாடுசெய்து நாளதுவரையில் அனுஷ்டானஞ்செய்து வருவதால், கணக்கர்கள் பூர்த்தியாயும், அபத்தமில்லாமலும், அந்தக்கணக்குகளைத் தயார்செய்து அனுப்பவேண்டும். ஜமாபந்திகாலத்தில் பட்டாவைமாற்றிக் கொள்ளவரும் குடிகளை கணக்கில் கண்டிருப்பவைகள் சரியாயிருக்கிறதாவென்று கலெக்டரும் டிவிஷனல் ஆபீசரும் விசாரித்து அவர்களிடத்தில் வாக்குமூலம் வாங்கலாம். இவ்விதம் கிராமக்குடிகளிடம் நேரே சம்பாஷணைசெய்தால், அதனால் ஷை கணக்கு சரிவர வைக்கப்பட்டுவருமென்பதற்கு யாதொரு சந்தேகமுமில்லை. வேலை அவசரத்தினால் தப்பான கணக்குகளைத் தயார்செய்து மோசநிலைக்குள்ளான விஷயங்களைப் பற்றி அசட்டையாய் விட்டுவிடக்கூடாது. வரவரசரியான கணக்குகளை வைக்கும்படியான விருத்தியைச்செய்து வரவேண்டும்.

2. கலெக்டர் ஜமீன்தாரர்களுக்கு அறிவித்து, அவர்கள் தங்களிலாகா கர்ணன்களை ஜனனமரணக்கணக்குகளை சரிவர வைக்கும்படியான ஏற்பாட்டைச்செய்யவேண்டும்.

3. பிரதிதினமும் வாந்திபேதியாலுண்டாகும் மரணங்களைப் பற்றிவரும் ரிப்போர்ட்டுகளை போலீசாருடைய ரிப்போர்ட்டோடு தனிக்கைசெய்ய உதவுமானதால் அவர்களுடைய சகாயத்தினால் அடிக்கடி அனுகூலமுண்டாகக்கூடும்.

63. தேவாலய உற்சவம்.

யாதொரு ஊரிலுள்ள தேவாலயத்தில் நடக்கப்போகிற உற்சவதினம் 10000 அல்லது அதற்குமேற்பட்ட எண்ணிக்கையுள்ள

ஜனங்கள் கூடுவார்களென்றிருந்தால் அப்படிப்பட்ட நாள் இன்ன தென்றும், அதற்கு [illegible] தினங்களுக்குமுன் சானிடேரி கமீஷனருக்கும், ஜில்லா சானிடேரி ஆபீசருக்கும் கலெக்டர் தெரிவிக்கவேண்டும்.

64. அம்மை குத்துதல்.

1. அம்மைகுத்தும் அதிகாரிகள் ஜனங்களுக்குத் தர்மமாக அம்மைகுத்தும் ஏற்பாட்டைக் கலெக்டர் செய்யவேண்டியது. ஒரு ரெவினியூ இனிஸ்பெக்டர் தான் சர்கூட்போகும்போது தன்னுடன் ஒரு அம்மைவைக்கும் உத்தியோகஸ்தனை கூட்டிப்போய் தான் போகிற ஊர்களிலுள்ள ஜனங்களுக்கு அம்மைகுத்தும்படி செய்யவேண்டும்.

2. அம்மை குத்துகிற உத்தியோகஸ்தன் கிராமங்களுக்குவந்தால் அந்தஊர் கிராமமுனிசிபு அவனுடன்கூடவிருந்து, அவன் செய்த வேலையைப்பற்றி தாசில்தார்மூலியமாய் டிப்டி இனிஸ்பெக்டர் ஆப் வாக்சினேஷனுக்கு ஒரு ஸ்டேட்மெண்ட் அனுப்பவேண்டும்.

65. வெள்ளத்தைப்பற்றி தந்தியடிப்பது.

பெரியநதிகளில் பிரவாகம்வருவதினால் உண்டாகும் நஷ்டத்தை வெள்ளம்வருவதற்குக் கொஞ்சகாலத்திற்குமுன்பு தெரிந்தால் அதைத்தடுக்கலாம். மேல் ஜில்லாக்களிலுள்ள ஆறுகளில் பிரவாகம் வருவதையறிந்த ஜில்லாகலெக்டர் கீழ்ஜில்லாக்களிலுள்ள கலெக்டர்களுக்குத் தந்திமூலமாய்த் தெரிவிக்கவேண்டும்.

66. தோத்துவியாதிகள் நேரிடும்போது நடத்தவேண்டிய நடவடிக்கை.

1. ஒருகிராமத்தில் வாந்திபேதி, அம்மைமுதலிய தொத்துவியாதி நேரிட்டால், அதைக்குறித்து கிராமஉத்தியோகஸ்தன் தாசீல்தாரருக்காவது, டிப்டிதாசீல்தாரருக்காவது உடனே தெரியப்படுத்தவேண்டியது.

2. அந்தவிஷயத்தைத் தாசீல்தார் அல்லது டிப்டி தாசீல்தார் சபார்டிநேட்டு மெடிகல் உத்தியோகஸ்தர்களுக்கும், கலெக்டருக்கும், தாலூகா போர்டு பிரஸிடெண்டுக்கும், ஜில்லா மெடிகல் ஆபீசருக்குந் தெரிவிக்கவேண்டும். அம்மை மும்முரமாயிருந்தால் சர்க்கில் வாக்சினேட்டருக்கும், டிப்டி இன்ஸ்பெக்டர் ஆப் வாக்சினேஷனுக்கும் தெரிவிக்கவேண்டும்.

3. மேலேகண்ட சமாச்சாரம் தாசில்தார் அல்லது டிப்டி தாசில்தாருக்குத் தெரிந்தவுடன் அந்தவிடத்திற்குத் தானாவது போகவேண்டும் அல்லது ரெவினியூஇன்ஸ்பெக்டரையாவது போகும்படி செய்யவேண்டியது.

4. அவ்விதம் அவ்விடத்திற்குப் போகிற உத்தியோகஸ்தர் மெடிகல் ஆபிசர்வருகிறவரையில் அவ்விடமிருந்து பிறகு மற்றவேலைக்குப்போய்விடலாம்.

5. கிராமஉத்தியோகஸ்தர்களுக்கும், ரெவினியூ உத்தியோகஸ்தர்களுக்கும், ஷை சமாச்சாரத்தைத் தெரிவிக்க நேர்ந்த சிலவுகளை தாலூகாபோர்டார் கொடுக்கவேண்டும்.

67. தண்டுகேளுக்கு வழியில் சாமான்களை சேகரித்துக் கொடுத்தல்.

1. பட்டாள உத்தியோகஸ்தர்களும், அதைச்சார்ந்த கமிஸெரெட் டிபார்டுமெண்டு உத்தியோகஸ்தர்களும் அவர்களுக்கு வேண்டிய வண்டிமுதலிய சாமக்கிரியைகளை சம்பாதிக்கக்கூடாத விஷயத்தில் கலெக்டர் அவைகளைச் சம்பாதித்துக் கொடுக்கவேண்டும். தண்டுகள் புறப்படும்விஷயத்தில் அதன் தளகர்த்தன் முன்னதாக சீவில் அதிகாரிகளுக்குத் தெரிவித்தால் அவர்கள் தண்டுக்குவேண்டிய வண்டிமுதலியவைகளைச் சம்பாதித்துக்கொடுப்பார்கள். கலெக்டர் தன்னால் கூடியவரையில் வண்டிகளைகுத்தகைக்கே வைத்துக்கொடுக்கவேண்டும். மிகவும் அவசரமா யிருந்தாலொழிய பலாத்காரமாக யாதொருவண்டியையும் அமர்த்தக்கூடாது. பலாத்காரமாக அமர்த்தும் விஷபத்தில் அடியில்கண்ட விதிகளை யனுசரிக்கவேண்டும்.

2. ஜில்லாவழியாக தண்டுகள்போகும்பட்சத்தில் அந்தஜில்லா கலெக்டருக்கு வண்டிகள் ஏற்படுத்திக்கொடுப்பது முக்கியமான வேலையாயிருப்பதனால், அந்தஜில்லாவில், வாடகைக்காக அகப்படும் வண்டிகளின் கணக்கைத்தயார்செய்து வைத்திருக்கவேண்டும்.

3. ஒருவன் சாதாரணமாய் வாடகைக்கு வைத்துக்கொண்டிருக்கும் வண்டி தண்டுபோகும்போது அவசியமாய் தேவையாயிருக்கும்பட்சத்தில் அதைக்கூலிக்கு அமர்த்திக்கொள்ளலாம். இவ்விதம் பலாத்காரமாக வேலையைச் செய்வதில் ஜனங்களுக்கும் கஷ்டத்தை யுண்டுபண்ணக்கூடாது.

4. ஒருபட்டாளத்தின் தலைவன் இத்தனை வண்டிகள் தேவையென்று தெரிவித்ததன் மேல், குடிகளின் வண்டிகளையமர்த்தி

அவைகளைக் கச்சேரிக்குக்கொண்டுவரச்செய்து இரண்டுநாள்களுக்குமுன்பாகவே அவர்களிடத்திலிருந்து ஒப்புக்கொள்ளவேண்டும்.

5. கச்சேரிக்கு வண்டிகளெல்லாம் வந்துசேர்ந்தவுடன் அதன் விபரத்தை கலெக்டர் இராணுவ உத்தியோகஸ்தனுக்குத் தெரிவிக்கவேண்டும்.

6. அவர்கள் வண்டிகளை ஒப்புக்கொண்டபிறகு சில வண்டிகளை வேண்டியதில்லையென்று சொல்லிவிட்டால் அந்த வண்டிக்காரர்களைப் போகவிடலாம்.

7. வண்டியின் வாடகையை தற்கால தானியம் வைக்கோல் விற்கும் விலையை யனுசரித்து ஏற்படுத்த வேண்டும். சாதாரண ஜனங்கள் கொடுக்கும் வாடகையைப்பார்க்கிலும் சர்க்கார் வாடகை அதிகமாயிருக்கவேண்டும்.

8. 100 மயிலுக்கு உட்பட்ட தூரமாயிருந்தால் வண்டி 1க்கு வாடகை 10 மயிலுக்கு 8 அணுவும், அதற்கு மேற்பட்டதூரத்துக்கு 12 அணு விதமும் கலெக்டா சர்க்கார் கஜானுவிலிருந்து முன்பணம் கொடுக்கலாம். மேலும், வண்டிகளின்மேஸ்திரிகளுக்கு ஒவ்வொரு வண்டிக்காரனிடம் 10 மயிலுக்கு ஒருஅணு விதம்பிடித்து அவனுக்குக்கொடுக்கலாம். கலெக்டருக்கு யுக்தமாகத் தோற்றினால் மேஸ்திரிகளுக்கு சொல்பத்துகை முன்னுடிக்கொடுத்தபிறகு அவர்கள் இராணுவ அதிகாரியிடம் வண்டிக்காரர்கள்செய்த உடன்படிக்கைப்பிரகாரம் குறித்த இடம் வரையில் வண்டிகளை சரிவர ஓட்டிவந்தார்களென்று சர்டிபிகேட்டு கொண்டுவந்தபிறகு மிகுதிப்பணத்தைக் கொடுக்கவேண்டியது.

9. 15 மைல் அல்லது அதற்கு மேற்பட்ட தூரத்திலிருந்து வண்டிகளைக் கொண்டுவந்தால், வண்டி 1 க்கு 15 மைலுக்கு அணு 4 வீதம் படி கொடுக்கவேண்டியது. அதன்றியும் கலெக்டர்கச்சேரியில் நிறுத்திவைத்திருந்தால் அந்த நின்றநாள்களுக்கும்படிகொடுக்கவேண்டும். அனுவசியமாய் வண்டிகளை கலெக்டர் நிறுத்தக்கூடாது. இவ்விதம் நிறுத்தின வண்டிகளுக்கும், தூரத்திலிருந்து கொண்டுவந்த வண்டிகளுக்கும் கொடுக்கிற படியை சர்க்கார் கணக்கில் எழுதவேண்டியது.

10. வண்டிகள் அகப்படுவது கஷ்டமாயிருந்தால் மற்ற டிபார்ட்மெண்டார் வசத்திலிருக்கும் வண்டிகளை கட்டாயப்படுத்தி கலெக்டர் ஏற்படுத்திக்கொள்ளலாம்.

11. பட்டாளத்தின் அதிகாரி ஐரோப்பியனாயிருந்தாலும் இந்து தேசத்தானாயிருந்தாலும் அவர் கீழிருக்கிற எல்லாப்பட்டாளங்களுக்கும் சாமான்களை சம்பாதித்துக் கொடுக்கும்விஷயத்தில சிவில் முதலான அதிகாரிகளுக்கு முன்னதாகவே சமாசாரம் அனுப்பவேண்டும். அப்படிப்பட்ட சமாசாரம் 12 பேருக்கு அதிகமாகாத சுதேசப்பட்டாளம் போகும்போது அனுப்பப்படமாட்டாது.

12. 12 பேர் அல்லது அதற்கு அதிகப்பட்ட பட்டாளம் பாதையில் நான்கு நாளைக்கொருதரம் தங்கலாம். ஆகையால் எந்தவிடத்தில் தங்கவேண்டுமோ அதுசங்கதியை முன்னடி அதிகாரிகளுக்குத் தெரிவிக்கவேண்டும். 12 பேருக்குக் குறைந்த பட்டாளம் தினம் 10 மைல் வீதம் போய் 7 நாளைக்கொருதரம் தங்கவேண்டும்.

13. சென்னை இராஜதானியின் எல்லைக்குள் சைனியம் போகும்போது அதற்கு சாமான்தயார் செய்து கொடுக்கும் விஷயத்தைப்பற்றி கவரன்மெண்டார் ஏற்படுத்தி யிருக்கும் விதிகளையனுசரிக்கவேண்டும். (1) ஒரு ஜில்லாவழியாய் பட்டாளம்செல்லப்போகிறதென்று கோர்ட்டர் மாஸ்டர் ஜனரலிடத்திலிருந்தாவது, தளகர்த்தனிடத்திலிருந்தாவது, சமாசாரம் வந்தவுடன், கலெக்டர்பட்டாளம் போகிறவழியி லிருக்கப்பட்ட தாலூக்காவின் தாசில்தார்களுக்கு வருகிறபட்டாளம் இத்தனையென்றும், அதில் ஐரோப்பிய உத்தியோகஸ்தர் இத்தனைபேரென்றும், பட்டாளத்தோடுவருகிற ஜனங்கள் இத்தனைபேரென்றும், இன்ன தாலூக்காவில் இன்னின்ன இடங்களில் இன்னின்ன தேதியில் வந்து தங்குவார்களென்றும், தெரியப்படுத்தவேண்டியது. (2) தாசில்தார்கள் கலெக்டருடைய உத்திரவுப்படி வேண்டிய சாமான்களை வாங்குவதற்கு உடனே உசூர் கஜானாவிலிருந்து பணம்வரவழைத்துக் கொள்ளவேண்டியது (3) தாசில்தார்கள் டிப்டிதாசில்தாரையாவது அல்லது பிர்காரிவினியூ இனிஸ்பெக்டரையாவது, கெட்டிக்காரத்தனமுள்ள இரண்டு சேவகர்களுடன் பட்டாளமிறங்குகின்ற ஒவ்வொருவிடத்திலும் குறித்த தேதியில் சாமான்களை தயாராய் வாங்கி வைத்திருக்கிறதற்கு உத்திரவுசெய்யவேண்டியது. (4) சாத்தியமான சாமான்களையெல்லாம் சமீபத்தில் வாரமொருமுறை கூடுகிற சந்தையில் வாங்கவேண்டியது. வேண்டிய சாமான்களகப்படாதபட்சத்தில் இதராளிடத்தில் அவர்களுடைய சம்மதியின்பேரில் வாங்கவேண்டியது. எந்தவிதத்திலும் வரிபோட்டு சாமான்களை வாங்கக்கூடாது. (5)

சாமான்களை சந்தையில் வாங்கினாலும் கிராமத்தில் வாங்கினாலும் உடனே அதன் கிரயத்தைக் கொடுத்து ரசீதுவாங்கவேண்டியது. அந்த ரசீதுகளோடு சாமான்கள் வாங்கின விவரமான பட்டியையும் உசூருக்கனுப்பவேண்டும் (6) சாமான்களை வாங்கினவனிடத்தில் அவனுக்குச் சேரவேண்டிய பணத்தை அவனிடத்தில் நேரில் கொடுக்கவேண்டியதே யொழிய அவனிடத்தில் கொடுக்கும்படியாய் கிராமக் கர்ணனிடத்திலாவது கிராமப் பெரிய தனக்காரனிடத்திலாவது கொடுக்கக்கூடாது. (7) யாதொரு தாசில்தார் தங்களிலாகாவழியாய் போகும் பட்டாளத்தோடு தாங்களாவது, மற்ற ரெவினியூ உத்தியோகஸ்தராவது கூடுமான வரையில் போகவேண்டும். சேகரஞ் செய்த சாமான்கள் போதாதபட்சத்தில் உடனே அவர்கள் சம்பாதித்துக் கொடுக்கவேண்டும். (8) கூலியாட்கள், பானைகள், கட்டைகள், கூடார முளைகள் முதலான சாமான்களை விலையில்லாமல் வாங்கக்கூடாது. (9) கூலியாட்கள் வேண்டியபட்சத்தில் தாசில்தார் ஏற்படுத்திக்கொடுக்கவேண்டும்.

14. அகஸ்மாத்தாய் வழியில் கூலிகள் சாவது, சொல்லாமல் ஓடுவது முதலான ஸம்பவங்கள் நேர்ந்தாலொழிய மற்ற எக்காலத்திலும் வழிநடுவிலிருக்கப்பட்ட கிராமங்களில் கூலிகள், வண்டிகள் கால்நடைகள் சம்பாதித்துக்கொடுக்கும்படி கேட்கக்கூடாது. அப்படிப்பட்ட சம்பவம் நேரும்பொழுது சேனாதிபதி கலெக்டருக்கு அந்தச்சங்கதியைத் தெரிவித்து, அவருடைய உத்திரவின்பேரில் கூடவருகிற ரெவினியூ உத்தியோகஸ்தன் மூலமாய் சமீபத்திலிருக்கிற கிராமத்துப் பெரியதனக்காரனை வரவழைத்து அவன்மூலமாக வேண்டிய சாமான்களை அடையவேண்டும்.

68. சர்க்கூட்டில் போகிற டிஸ்டிரிக்ட் ஆபீசர்களுக்கு சாமான்களை சேகரித்துக்கொடுத்தல்.

ஒருகலெக்டர், டிவிஷனல் ஆபீசர்முதலானவர்கள் கிராமங்களில் முகாம் செய்தகாலத்தில் அவர்களுக்கு வேண்டிய சாமான்களை அந்த கிராம மணியக்காரன் சேகரித்து கொடுக்கவேண்டும். அப்படிச் சேகரித்துக் கொடுக்கும் சாமான்களின் கிரயத்தை அந்த உத்தியோகஸ்தன் கொடுத்துவிடவேண்டும். கலெக்டர் ஒருகிராமத்தில் சிலநாள்முகாம்செய்ய வேண்டியதாயிருந்தால், அந்தகிராம மணியக்காரனுக்கு தாசில்தார் மூலமாக இன்னின்னவிடத்தில் இன்னின்னதேதியில் தான்வருவதாகவும், அப்போது அவன் ஆஜராகவி

ருக்கவேண்டுமென்றும் தாக்கீது அனுப்பவேண்டியது. அதேமாதிரியாக அவன் கலெக்டர் வந்தாலும் அவர் வேலைக்காரன் மூலமாகவேண்டிய சாமான்களைத் தயார்செய்து கொடுக்கவேண்டும். அப்படிக்கொடுத்த சாமான்களின் கிரயத்தை வேலைக்காரனிடம் பெறவேண்டும். அவர்கள் கிரயத்தைக்கொடேனென்று சொன்னால் கலெக்டரிடம் தெரிவிக்கவேண்டும். கலெக்டர் தன் கீழ் உத்தியோகஸ்தர்கள் சேவகர்கள் முதலானவர்கள் கிராமகுடிகளிடமிருந்து இனாம்வாங்காமலிருக்கும்படியாயும், அவர்களுக்குவேண்டிய சாமான்களுக்கு கலெக்டர் பேரைச்சொல்லி விலைகொடாமல் வாங்கிக்கொள்ளாமலிருக்கும்படியாயும் பார்த்துக்கொள்ளவேண்டியது. வேலைக்காரர்கள் வாங்கும் சாமான்களுக்கு அவர்கள் கையினால் எழுதிய ஜாப்தா இருக்கவேண்டும். அதைப்பார்த்து மணியக்காரன் பில் தயார்செய்து கொடுத்தால் அதன்பேரில் கலெக்டர் பணம் கொடுக்கவேண்டும்.

6-வது அத்தியாயம்.

69. கிராமக்கணக்கு தாலூக்காகணக்கு.

1. முக்கியமாய் கிராமங்களில் வைத்திருக்கவேண்டிய கணக்குகளிரண்டு வகைப்படும். அக்கணக்குகளில் சிலது ஸ்திரமானதாகவும், சிலது மாசாந்திரம், வருஷாந்திரக் கணக்குகளாக வைத்திருக்கவேண்டும். அந்தஸ்திரமான கணக்குகள் மூன்று; அவையாவன :—

A. ரிஜிஸ்டர். நிலங்களின் விவரத்தையும் அவைகளிலுண்டாகிற மாறுதல்களையும் தெரிவிக்கிற கணக்குப் புஸ்தகம்.

ஷெ உட்பிரிவு. சர்க்கார் இனாம் நிலங்களின் மொத்த விஸ்தீரணத்தையும், இனாம்வாரியையும், தரவாரியையும் காட்டுகிற கோஷ்பாரா.

B. ரிஜிஸ்டர். இனாங்களையும் அவைகளின்மேலேற்படும் வேறுபாடுகளையும் காட்டிய கணக்கு.

C. ரிஜிஸ்டர். சர்க்கார் பாய்ச்சலாதாரத்தினால் பாயக்கூடிய நஞ்செய் நிலத்தின் ஆயக்கட்டு, அல்லது தண்ணீர் பாயக்கூடிய நிலத்தின் விஸ்தீரணத்தைக் காட்டும் கணக்கு.

D. ரிஜிஸ்டர். ஒவ்வொரு நீராதாரத்தின் கீழுள்ள கைப்ப ற்று நிலத்தையும், நீர்த் தீர்வைபோடப்பட்ட விஸ்தீரணத்தையும், வருஷத்தொடர்ச்சியாகக் காட்டும் கணக்கு.

E. ரிஜிஸ்டர். வருஷத்தொடர்ச்சியாக லாண்டு ரெவினியூ செடில்மெண்டு விஷயத்தைத் தெரிவிக்கிற கணக்கு.

மேற்சொன்னவைகளில் எ. பி. இ. ரிஜிஸ்டர்கள் பழையபை மாஷ் கணக்காகிய எ. ரிஜிஸ்டருக்கும், அதன் உட்பிரிவு, பி. ரிஜி ஸ்டருக்கும் பதிலாக வருவது. சி. டி. ரிஜிஸ்டர்கள் பாய்ச்சல், சாகுபடி இந்த விஷயங்களைத் தெரிவிக்குங் கணக்குகள்.

2. எ. ரிஜிஸ்டர் நிலங்களின் விவரத்தையும், அதிலேற்படு கிற வேறுபாடுகளையுந் தெரிவிக்கிற ஸ்திரமான கணக்கு. இதைச ர்வேமுடிந்த எல்லா கிராமங்களுக்கும் அச்சிட்ட செடில்மெண்டு கணக்குப் புஸ்தகங்களிலிருந்து எழுதவேண்டியது. வயல்களை சர் வே நெம்பர் வாரியாய் எழுதவேண்டும். யாதொரு பிரிவு அல் லது பிளாக் சர்வே ஆகாதிருந்தாலதற்கு ஸ்டேட்மெண்டில்கடைசி நெம்பரைக் கொடுக்கவேண்டியது. அந்த பிளாக்கின் எந்தப் பிரி வாவது பின்னால் சர்வே செய்யப்பட்டால் அதற்கொரு உள் நெம்ப ரைக் கொடுக்கவேண்டும். ஷராவில் புறம்போக்கு நிலங்களின் விவரத்தையும், தரிசுநிலங்களிலிருக்கிற மரங்களின் கணக்கையும், கட்டடமுதலியவைகளையுங் குறித்தெழுதவேண்டும். இனும் நில ங்களை சர்க்கார் நிலமாகவும், புன்செயை நன்செய்யாகவும், நன்செ யை புன்செய்யாகவும் இப்படிப்பட்ட ஸ்திரமான மாறுதல்களை சர்வேக்குப்பிறகு செய்தால், அப்படிச்செய்த மாறுதல்களை ஷரா கலத்தில் எழுதவேண்டும். கணக்குகள் தயார்செய்த பிறகு உண் டாகும் வேறுபாடுகளை அப்போதைக்கப்போது எழுதிவிடவேண் டும். இப்படிப்பட்ட மாறுதல்களைப் பதினைந்து வருஷம்வரையில் ஒரே புஸ்தகத்தில் குறிப்பதற்குச் சாதகமாக விருக்கும்படி வரிக ளுக்கிடையில் அதிகமாக இடம்விட்டு ஷராகலத்தை விஸ்தாரமாக் கிக் கணக்கைத் தயார் செய்யவேண்டும். பத்துப்பதினைந்து வரு ஷம் சென்றுவிட்டால் வேறே கணக்குத் தயார்செய்யலாம். ரிவி னியூ வார்த்தைகளைச் சுருக்கியெழுதி கணக்கிலிடத்தை மிகுதிப்ப டுத்தலாம். அதாவது :—நன்செய் என்பதை நஞ்சையென்றும், புன்செய் என்பதை புஞ்சையென்றும், தீர்வை யேற்படாததைதரா மில் என்றும், புறம்போக்கைப் புறவென்றும் ஏகர் என்பதை ஏ

யென்றும், டிசமமென்பதை, டி. யென்று மிவ்விதமாகச் சுருக்கியெழுதிக்கொள்ளலாம். திருநெல்வேலி ஜில்லாவில் செடில்மெண்டு டிபார்டுமெண்டாரால் பிரத்தியேகமாக ஏற்படுத்தி யிருக்கிற நமூனாப்படி கணக்குகளைத் தயார்செய்யவேண்டும். கணக்குப் புஸ்தகங்களின் கடைசியில் அடியில்கண்ட விவரங்களை யெழுதவேண்டும்.

A. சர்வேக்குமுன்னிருந்த விஸ்தீரணமும், அதற்குப்பிறகு சர்வேயில் கண்டுபிடித்த அதிகமும்.

B. குடிமராமத்து விஷயத்தில் கிராமத்தார் செய்யவேண்டியதைப்பற்றி செடில்மெண்டு காலத்தில் தாக்கல்செய்த விவரமும்.

C. கிராம உத்தியோகஸ்தர்களுக்கும், மற்றத் தொழிலாளிகளுக்கும் மேரைகள் கொடுப்பது வழக்கமிருந்தால் இன்னவிதப்படி கொடுக்கவேண்டியதென்றும்.

3. எ. ரிஜிஸ்டரின் உட்பிரிவானது நிலவிஸ்தீரணத்தை இனம்வாரியாகவும், தரவாரியாகவுங் காட்டுகிற கோஷ்பாரா. இது செடில்மெண்டு டிபார்டுமெண்டாரால் தயார்செய்யப் படுகிறபடியால், அனேகமாகக் கர்ணம் அதற்கு நகல்செய்யவேண்டியதாகவே இருக்கும். சர்வேமுடிந்த பிறகு ஏதாவது வேறுபாடுகள் ஏற்பட்டால் அவைகளைச் சேர்த்துக்கொண்டு வேறே கோஷ்பாரா தயார்செய்யவேண்டும். அதற்குப்பிறகும் அதை பிரதிவருஷமும் திருத்திக்கொண்டு வரவேண்டும்.

4. சர்வே செடில்மெண்டு இவைகளாகாத ஜில்லாக்களில், எ. ரிஜிஸ்டரும் அதன் உட்பிரிவு ரிஜிஸ்டரும் (பழயமானுயல் புஸ்தகத்தில் குறிக்கப்பட்டு) இதுவரையிலிருந்த நமூனாப்படி யிருக்கவேண்டியது. அப்படிப்பட்ட ஜில்லாக்களில் சர்வேயும், செடில்மெண்டும் ஆகிறவரையில் அந்த நமூனாவே தகுதியுள்ளதா யிருக்கிறபடியால் மாறுதல்களொன்றுஞ் செய்யக்கூடாது. மேலேசொன்ன கணக்குகளைப் பூர்த்தியாய் தயார்செய்யும்போது பழய கணக்குப் புஸ்தகங்களை தாலூகாகச்சேரிக் கனுப்பவேண்டியது.

5. பி. ரிஜிஸ்டர் இனாம் நிலங்களின் விவரத்தைக் காட்டும் ஸ்திரமான கணக்கு. ஒவ்வொரு இனாம்பட்டாவைச் சேர்ந்த நிலங்களை, தேவஸ்தான மானியம், தருமாதயம், ஊழிய மானியம், சொந்தம் என்கிற விவரங்களைக்கண்டு வரிசைக்கிரமமாக எழுதவேண்டியது. 5-வது கலத்தில் நன்செய் என்றும் 6-வது கலத்தில் புன்

செய் என்றும், ஒருபோகமென்றுங் கண்டிருந்தால் இனாம் கமிஷன் ரிஜிஸ்டருக்கு ஒத்திருக்கவேண்டும். மேற்சொன்ன விவரங்களில் ஏ ரிஜிஸ்டருக்கும் பி ரிஜிஸ்டருக்கும் ஏதாவது வித்தியாசங்களேற்பட்டால், அதை ஏ ரிஜிஸ்டரின் ஷராக்கலத்தில் குறித்து பி ரிஜிஸ்டரில் தாக்கலான விவரத்தையே பின்னிட்ட வெல்லாக்கணக்குகளிலும் காட்டவேண்டியது. 8-வது கலத்தில், செடில்மெண்டு டிபார்ட்மெண்டாரால் ஏற்படுத்தப்பட்ட தரத் தீர்வையைக் குறிக்கவேண்டும். அப்படி யேற்படாதிருந்தால் இனாம் ரிஜிஸ்டரில் ஏற்பாடான தீர்வையைக் குறிக்கவேண்டும். கோதாவரி, கிருஷ்ணா இந்த ஜில்லாக்களில் கால்வாய்ப் பாசனமுள்ள தாலூக்காக்களிலும், கர்னூல் ஜில்லாவில் சிலபாகங்களிலும் நன்செய் நிலங்களுக்கு செடில்மெண்டு டிபார்ட்மெண்டார் புன்செய்த் தீர்வைபோட்டிருந்தால், இந்த ரிஜிஸ்டரில் நஞ்சையாக ஏற்பட்ட நிலங்களின் தீர்வையுடன் தண்ணீர்த் தீர்வையையும் சேர்க்கவேண்டியது. கிருஷ்ணா கர்னூல் ஜில்லாக்களின் சிலபாகங்களில் தீர்வையில் லாண்டுவில்லேஜ் செஸ்ஸும் சேர்ந்திருக்கிறபடியால், அதுபோக பாக்கித்தொகையை மாத்திரம் இந்த ரிஜிஸ்தரின் 8-வது கலத்தில் பதிவுசெய்யவேண்டியது. இனாம் நிலங்களுக்கு குயிட்ரெண்ட் மொத்தமா யேற்பட்டிருந்தால், அதை 8-வது கலத்திலுள்ள தீர்வைவிகிதமாக ஒவ்வொரு நிலத்திற்கும் பங்கிட்டு 9-வது கலத்திலெழுதவேண்டும். இனாம் நிலத்தினாவின் அதிகத்திற்காக விதிக்கப்பட்ட தொகை யதில் சேர்ந்திருந்தால், அதை ஷராக்கலத்தில் காட்டவேண்டும். இனாம் செடில்மெண்டுக்குப் பிற்பாடு, இனாம் நிலங்களில் கண்டுபிடித்த அதிக விஸ்திரணத்துக்காக, போர்டாருடைய 173 நெ. ஸ்டாண்டிங் ஆர்டர்படி யேற்பட்ட தீர்வையை 10-வது கலத்தில் காட்டவேண்டும். கணக்குகளைத் தயார்செய்தபிறகு ஸ்திரமான வேறுபாடுகளேதாவது ஏற்பட்டால் அவைகளை ஏ ரிஜிஸ்தரிலும் ஷராக்கலத்திலும் எழுதவேண்டும். இந்த ரிஜிஸ்டருக்கு இரண்டு பிரதிகள் தயார்செய்து, ஒரு பிரதியை தாலூகாவில் வைக்கவேண்டியது. ரிஜிஸ்டரை மறுபடி யெழுதும்போது பழைய ரிஜிஸ்டரையும், ஏ. ரிஜிஸ்டர் விஷயமாய் உத்திரவு செய்திருப்பதுபோல தாலூகா கச்சேரியில் வைக்கவேண்டியது.

6. சி. ரிஜிஸ்டரானது ஒவ்வொரு ஜலாதாரத்தின் கீழுள்ள சர்க்கார் இனாம் நிலங்களின் ஆயக்கட்டையும் அதன் தீர்வையஸ்

லது குயிட்ரெண்டையும் காட்டுகிற ஸ்திரமான ரிஜிஸ்டர். ஆயக்கட்டில் எதாவது ஸ்திரமான மாறுதல்களுண்டானல் அவைகளை ஷராகலத்தில் காட்டவேண்டியது.

7. டி ரிஜிஸ்டர், ஒவ்வொரு ஜலாதாரத்தின்கீழுள்ள ஜலம் பாய்ச்சப்பட்ட அல்லது பாய்ச்சப்பட்டதென்று தீர்வையேற்பட்ட சர்க்கார் இனும் நிலங்களின் விஸ்தீரணத்தையும், அவைகளின் தீர்வையையும் வருஷவாரியாகத் தொடர்ச்சியாய் காட்டுகிறது. அதை 8-வது நெ. ஸ்டேட்மெண்டைக் கொண்டும் அதன் உட்பாகத்தைக் கொண்டும் தயார்செய்யவேண்டியது. இது கிராமங்களின் நிலங்களுக்கு நீர் பாய்ச்சப்பட்டால், அப்படிப்பட்ட கிராமங்களுக்குப் பாயவேண்டிய ஜலத்தின் சுதந்திர மிவ்வளவென்பதையும் ஷராகலத்தில் காட்டவேண்டும்.

8. இ. ரிஜிஸ்டர், வருஷவாரியாய் லாண்டு ரிவினியூ செடில்மெண்டையும், கிராம வசூலையுங் காட்டுகிறது. இதில் பதிகிறதொகைகளை பெரும்பாலும் 12-வது நெ. ஸ்டேட்மெண்டிலிருந்து எடுத்துக்கொள்ளவேண்டியது. 49 முதல் 57 வரையிலுள்ள கலங்களை 14-வது நெம்பர் ஸ்டேட்மெண்டின் எ. உட்பிரிவைக்கொண்டு தயார் செய்யவேண்டும்.

9. மேற்சொன்ன எ. பி. சி. டி இ. கணக்குகளும் அவைகளின் உட்பிரிவு கணக்குகளும், தகவலுக்குவேண்டிய ஸ்திரமான கணக்குகள். மாசமாசம், வருஷாவருஷம் தயார்செய்யவேண்டிய கணக்குகள் அடியில் சொல்லப்பட்டிருக்கின்றன.

10. 1-வது நெ. ஸ்டேட்மெண்டு.—மாதவாரி கிராமத்தினுடைய சாகுபடி கணக்கிலிருந்து, தாலூகா கச்சேரிக்கு அனுப்பப்படுகிற மாதாந்தரக் கணக்கைத் தயார்செய்யவேண்டும். வருஷ சாகுபடி ரிஜிஸ்டராகிய 2-வது நெ. அடங்கல் கணக்கைத்தயார்செய்கிற கர்ணனுக்கு இது ஆதாரமாயிருக்கும். பிரதிமாசத்தின் பின் பாதியில் கர்ணன் வயல்களைப்போய்ப் பார்வையிட்டு, அந்தமாசத்தில் சாகுபடியான நிலங்களை அந்தந்தக்கலத்தில் தாக்கல்செய்யவேண்டிய விவரங்களுடன் தொடர்ச்சியா யெழுதவேண்டியது. சர்க்கார் நிலங்களைப் பிரத்தியேகமாகவும், இனும் நிலங்களைப் பிரத்தியேகமாகவும், புன்செய் நன்செய்முதலிய விவரங்களுடன் எழுதவேண்டியது ஒரேநம்பர் நிலத்தின் பலபாகங்களில் ஒரேயாதத்தில் பல

விதமான பயிர்களைச் சாகுபடிசெய்தாலும், பல ஜலாதாரங்களிலிரு
ந்து நீர்பாய்ச்சினாலும், அப்படிப்பட்ட ஒவ்வொருபாகத்தையும்
ஒவ்வொருவரியிலெழுதவேண்டும். இரண்டு மூன்று பயிர்களை வெ
வ்வேறு சாலில்போட்டால் ஒவ்வொருபயிரின் விஸ்தீரணத்தை உத்
தேசமா யெழுதவேண்டியது. விதைகளைக் கலந்து தெளித்தும் பயி
ர்செய்தால், அப்படிப்பட்ட பயிர் விஷயத்தில், அந்த கிராமத்தில்
எது முக்கியமான பயிராகவெண்ணப் படுகிறதோ அதைமாத்திரம்
பதிவுசெய்து மற்றதை விட்டுவிடவேண்டியது. முன்மாசத்தில்
சாகுபடியான நிலங்களிலெதற்காவது பின்மாசத்தில் ஜலம்பாய்ச்சி
னால், அதைப் பின்மாசக் கணக்கில்குறிக்கவேண்டியது. அந்தந்த
மாசத்திய மொத்த சாகுபடிக்கணக்கை, புன்செய் நன்செய்த்தீர்வை
யேற்படாதது, புறம்போக்கு என்கிற விவரத்துடனும், எழுதவே
ண்டியது. அதன்கீழ் சென்றமாதம் வரைக்கு மேற்பட்டமொத்தத்
துடன் தற்காலமாதத்தின் மொத்தத்தையும் சேர்த்துக்காட்டவேண்
டியது. எந்தமாசத்தில் சாகுபடி செய்யப்பட்டதோ அந்தமாசத்தி
லேயே பூராய்த்தாக்கலாகும்படி பார்க்கவேண்டியது.

11. ஒவ்வொரு நிலத்தையும் அளக்கவேண்டிய அவசியம் கர்
ணனுக்கிராது. ஒருநம்பரில் எல்லாம் சாகுபடியாயிருந்தால் அதின்
விஸ்தீரணத்தைக் கணக்குப்படிப் பதிவுசெய்யவேண்டியது. யா
தொரு நம்பரில் சிலபாகம் சாகுபடியாயிருந்து, சாகுபடியின் விஸ்
தீரணத்தின்பேரில் தீர்வை வசூல்செய்யவேண்டியிருந்தால், சாகு
படியாயிருக்கிற பாகத்தையாவது, தரிசாக சாகுபடி யில்லாத
பாகத்தையாவது சமயானுகூலமாக அளந்து சாகுபடியா யிருக்கிற
விஸ்தீரணத்தை சரிவரப் பதியவேண்டும். இவ்விதஞ் சாதாரண
மாய் நீர்பாயக்கூடிய நிலங்கள் விஷயத்தில்மட்டும் செய்ய வேண்டி
யதாயிருக்கும். தீர்வை செலுத்தவேண்டிய அவசிய மில்லாமல்
சாகுபடி விவரந் தெரியவேண்டி கணக்குமட்டும் வேண்டியிருந்
தால், சாகுபடியாயிருக்கிற நிலத்தின் விஸ்தீரணத்தை உத்தேசமா
கப் பதிந்துகொள்ளலாம். நீர்பாய்ச்சலில்லாத புன்செய் நிலங்கள்
விஷயத்தில் மட்டும் கடைசியாகச்சொன்னதை யனுசரிக்கவேண்
டும். ஒவ்வொரு பசலியிலும் முதலில் சாகுபடிசெய்கிற மாகூலை
முதல்போகமாகவும், இரண்டல்லது மூன்றுந்தடவை சாகுபடிசெ
ய்வதை இரண்டல்லது மூன்றும் போகமென்றும் பதிந்துகொள்ள
வேண்டியது. சில ஜில்லாக்களில் முதல்போகத்தைப்போல் இர

ண்டாம்போகம் அவ்வளவு முக்கியமானதாயிருக்காது. அதுவிஷய த்தில் சாகுபடிகளை முதல் அல்லது இரண்டாம் போகமென்று பிரித்தெழுதுவதில் எவ்வித வித்தியாசமுமிராது. இரண்டாவது போகம் சாகுபடியாகிற நிலம் தீர்வைக்குட்பட்டதா யிருந்தாலுமி ராவிட்டாலும், அதை இந்த ஸ்டேட்மெண்டில் தாக்கல்செய்யவே ண்டும். அதாவது, புன்செய்நிலத்தில் சாகுபடியாகிற இரண் டாம் போகத்துக்கு தீர்வையில்லையாயினும், அதை யிந்தஸ்டேட் மெண்டிலும் இரண்டாம் நம்பர் ஸ்டேட்மெண்டிலும் குறிக்கவே ண்டியது.

12. பட்டாகிடைக்குமென்கிற எண்ணத்தோடு சாகுபடிசெ ய்கிறவர்களையும் பட்டாதாரரென்றே பதியவேண்டியது. ஆகை யால் எவனாவது சர்க்கார் தரிசுநிலத்தை சாகுபடிசெய்தால் அவன் பெயரைப் "பட்டாதார் அல்லது இனாம்தார்" என்று இந்தஸ்டே ட்மெண்டிலும் மற்றவைகளிலும் அவைகளுக்காக ஏற்பட்டிருக்கிற கலத்தில் பதியவேண்டும். ஒவ்வொரு மாசமும் 25வக்குள் கர் ணன் இதில் தேதியும் கையெழுத்தும்போட்டு தவறாமல் தனது மேல் ரிவினியூ இனிஸ்பெக்டருக்கு அனுப்பவேண்டியது. அவர் தான் தாலூகாவிற்கு அனுப்பவேண்டிய கோஷ்பாராவுக்கு வேண் டியவைகளை பதிவுசெய்துகொண்டு, அதில் கையெழுத்தும் தேதியு ம்போட்டு அதைக் கர்ணனுக்குத் திருப்பியனுப்பிவிடவேண்டியது. இந்தக் கணக்குச் சரியாயிருப்பதைப்பற்றிக் கர்ணனே முழு ஜவாப் தாரியாவான். அதில் கர்ணனுடைய கையெழுத்துமட்டும் போட் டால் போதுமானது. ஆகிலும் மணியக்காரன் குறித்த இன்னநி லம் பதிவுசெய்யப்பட்டிருக்கிறதா இல்லையாவென்று கர்ணனைக்கே ட்கவும், சாகுபடியை கர்ணன் ஏதாவது மறைத்திருந்தால் அதுவி ஷயம் தனக்குத் தெரிந்ததன்மேல் அதைத் தாசீல்தாருக்குத் தெரி விக்கவு மதிகாரமுண்டு. ஒவ்வொருவருஷத்திலு மிந்தக் கணக்கை மார்ச்சுமாதக் கடைசிவரையில் எழுதிக்கொண்டுபோக வேண்டி யது. அதற்குப் பிறகு சாகுபடியாகிச் சாதாரணமாய் அடுத்த பச லியில் அறுவடையாகிற எல்லா நிலங்களையும் அடுத்தவருஷத்திய கணக்கில் பதிவுசெய்யவேண்டியது. ஆனால், சிலபயிர்கள் மார்ச்சு மாதத்திற்குப் பின்பு சாகுபடி செய்து பசலியின் முடிவுக்குள் (ஜூன்மீ 30வக்குள்) அபூர்வமாய் அறுவடையாகிற பட்சத்தில், அப்படிப்பட்ட நிலங்களுக்குப் பிரத்தியேகமான கணக்கொன்று

தயார்செய்து ரிவினியூ இனிஸ்பெக்டருக்கு ஜூன்மீக் கடைசியில் அனுப்பவேண்டியது. தென்னமரங்கள், தோப்புகள் முதலியவை களிருக்கிற நிலங்களை பசலியின் முதல்மாதக் கணக்கிலே சாகுபடியான நிலங்களாகக் காட்டவேண்டியது. கட்டிடங்கள் கட்டியிருக்கிற நிலங்களை சாகுபடியான நிலங்களாகப் பதிவுசெய்யக்கூடாது. இந்த மாதாந்திரக் கணக்கை பசலிமுடிந்த விரண்டுமாதத்தில் தாலூகாவில் பதிவுசெய்யவேண்டும்.

13. 1 - வது நே. ஸ்டேட்மேண்டின் உட்பிரிவு :—இது சாகுபடி ஸ்டேட்மெண்டுக்கு கோஷ்பாரா. இதில் சாகுபடி செய்யப்பட்ட நில விஸ்தீரணத்தையும் பயிர்வகைகளையும், அவைகளின் நிலைமைகளையும், அறுவடையான மாசூலையும் குறிக்கவேண்டியது. இந்தக் கணக்கி லெழுதப்படுகிற நிலவிஸ்தீரணத்திலே சர்க்கார், இனும், நன்செய், புன்செய், முதல் போகம், இரண்டாம் போகம் இந்த நிலங்கள் சேர்ந்திருக்கவேண்டும். அப்படிப்பட்டகணக்குத்தயார்செய்கிறவர் ஒவ்வொரு நிலத்திலுமுள்ள பயிரின்ஸ்திதியையாவது, அதின் விளைச்ச லெவ்வளவென்றுவது மதிப்புப்போடவேண்டியதில்லை. கர்ணனும் மணியக்காரனும் விளைந்துகொண்டிருக்கிற பயிர்களை சரிவரத் தனிக்கைசெய்து, பிரதிப் பயிரின் தற்கால ஸ்திதியை யோசித்து அதின் விளைச்சல் உத்தேச மிவ்வளவு காணுமென்று தோற்றமாய்க் குறிக்கவேண்டியது. காலஸ்திதிப்படி பயிரின் ஸ்திதியும் மாதத்திற்குமாதம் வித்தியாசப் படக்கூடும். அவ்விதமே விளைச்சலின் மதிப்பும் வித்தியாசப்படும். அறுவடையான பயிர் விஷயத்தில் அவ்விதமே கிராம வுத்தியோகஸ்தர்கள் நேரில்போய் பார்வையிட்டு விசாரித்தறிந்து, எந்தமாதத்தியகணக்கோ அந்த மாதக்கணக்கில் ஒவ்வொரு விதப்பயிரும் அறுவடையான மொத்த விஸ்தீரணத்தில் கிடைத்த சராசரி மாசூலக் குறித்துக்கொள்ளவேண்டியது. மாசூல் நமூனுவில் கண்டபடி நான்குபிரிவாகக் காட்டவேண்டும். அதாவது:—24 அணு, 18 அணு, 12 அணு, 6 அணு. பூராபலன், சராசரி, நடுத்தரம், அல்பம், ஆகிய பலங்களுக்குச் சமானமாகும். செம்மையான சராசரி விளைச்சலை 18 அணுவுக்கு மேற்பட்டதை பூராபலன் அல்லது 24 அணுவாகக் காட்டவேண்டியது. சராசரியில் பாதி (அதாவது நடுத்தரம்) விளைச்சலை 12 அணுவாகவுங் காட்டவேண்டியது. சராசரியில் கால்பங்கு விளைச்சலையும், அதற்குக் குறைந்ததையும் 6 அணுவாகப் பதியவேண்டும். மாதாந்

திர சாகுபடிக் கணக்கோடுகூட இந்த ஸ்டேட்மெண்டையும் ரிவினியூ இனிஸ்பெக்டருக்கு அனுப்பவேண்டியது. அவரந்தமாதத்தில்தான் சொந்தமாய்ச்செய்த தணிக்கையின்பேரில் தனக்கு அவசியமாகக் காணுகிற குறிப்புகளை யதிலெழுதி அந்த அசல்ப்பிரதியை தன்னுடைய சாகுபடி கோஷ்பாராவோடுகூட தாலூகாவிற் கனுப்பவேண்டும்.

14. **2-வது நெ. ஸ்டேட்மெண்டு.** இது வருஷவாரியாய் ஒவ்வொரு கைப்பற்று நிலத்தையும், சாகுபடியையும் நிலவாரியாகக்காட்டும் ஸ்டேட்மெண்டு. அஜிமாஷுக்கும் ஜமாபந்திக்கும் அவசியமாய் வேண்டியிருக்கிற சகல விவரங்களுமிதில் அடங்கியிருக்கின்றன. சுமாராகப் பயிர் வளர்ந்துவந்த பிறகு இந்தக்கணக்குத் தயார்செய்யவேண்டும். அப்படிச்செய்வதில் இந்த ஸ்டேட்மெண்டிலுள்ள முதல் 12 கலங்களை முந்திய வருஷத்திய ஸ்டேட்மெண்டைக்கொண்டெழுதவேண்டியது. A. குறிப்பு ரிஜிஸ்டரிலும், 3-வது நெ. ஸ்டேட்மெண்டிலும் தாக்கல் செய்திருக்கிற பிந்தின மாறுதல்களை யனுசரிக்கவேண்டியது. நிலங்களைச்சர்வே-நெ வாரியாகவும், சர்க்கார் அல்லது இனம் நிலமென்றும் வெவ்வேறாக எழுதவேண்டும். பல தினுசுப்பயிர் சாகுபடியானாலும், பல ஜலாதாரத்திலிருந்து ஜலம் பாய்ச்சினாலும் அப்படிப்பட்ட நிலங்களின் பாகங்களை தனித்தனி எழுதுவதற்காக வரிகளின் மத்தியில் போதுமானவிடம் விடவேண்டியது. 13, 14, 15, வது கலங்களை 1-வது நெ. ஸ்டேட்மெண்டிலிருந்து எழுதவேண்டியது. ஜலம்பாய்ச்சப்படுகிற புன்செய் நிலங்கள் அல்லது புன்செய்ப்பயிரின் பேரிலும் இரண்டாவதுபோக சாகுபடியின்பேரிலுமுள்ள தண்ணீர்த் தீர்வையை 12 வது கலத்தில் கொண்டுவரக்கூடாது. அதை 6-வது நெ. ஸ்டேட்மெண்டில் குறிக்கவேண்டும். முதல் போகத்திற்குப் பாய்ந்த ஜலாதாரத்திலிருந்தல்லாமல் வேறே ஜலாதாரத்திலிருந்து இரண்டாம் போகத்துக்கு நீர்பாய்ச்சினாலும், வேறே பயிர் சாகுபடி செய்தாலும் அந்தச் சங்கதிகளை நமூனாவில் கண்டிருக்கிறபடி 10, 13 இந்தக்கலங்களில் வெவ்வேறு வழியில் எழுதவேண்டும். அஜிமாஷ் செய்கிறவனுக்கு, சாவி, மாசூல், கம்மிமுதலான அவசியமாய் தெரியவேண்டிய விவரங்களைக் கர்ணன் 16-வது கலத்தில் எழுதவேண்டும். இன்னதேதியில் கணக்கைப் பூர்த்திபண்ண வேண்டியதென்று தாசில்தார உத்திரவுகொடுத்தால், உடனே கர்ணன் அந்

தக் கணக்கை யந்ததேதிவரையில் முடித்து ஒவ்வொரு பக்கத்துக்கும் மொத்தம்போட்டு, புன்செய் நன்செய்யாக மாற்றப்பட்ட புன்செய் என்கிற பிரிவினையின் கீழ், கைப்பற்று சாகுபடி, தரிசு இவைகளின் விவரங்களைக் காட்டுகிற ஒரு கோஷ்பாரா போட வேண்டியது. பிறகு அவன் அந்தக்கணக்கில் தேதியும் கையெழுத்தும் போட்டு அதேதேதியில் ரிவினியூ இனிஸ்பெக்டருக் கனுப்பவேண்டியது. ரிவினியூ இனிஸ்பெக்டரிடம் இந்த ஸ்டேட்மெண்டு வந்தவுடன் அவர் அஜிமாஷுக்குப் போகவேண்டியது. இந்தக் கணக்கைக் கையில் வைத்துக்கொண்டு நிலங்களைப்பார்த்துக் கணக்குச் சரியாயிருக்கிறதா வில்லையாவென்று அவர் பார்க்கவேண்டியது. தப்பிதங்களிருந்தால் அதைத் திருத்தியேதாவது ஜாஸ்தி சாகுபடியிருந்தால் அதை நிலவிவரங்களுடன் தாக்கல் செய்யவேண்டும். தானெழுதவேண்டியவைகளை அதன் 17 - வது கலத்தில் எழுதவேண்டும். மேலும் அவர் பிரதிநிலத்திற்கும் நேராக அவருடைய இனிஷியலையும் (கையெழுத்துக் குறிப்பு) தேதியையும் கணக்கில் போடவேண்டியது. ஜமாபந்திக்கு முன்னுகிற சாகுபடி எவ்விதமெழுதித் தனிக்கைசெய்யப்படுகிறதோ, அவ்விதமாகவே அதற்குப் பின்னிட்டுச் செய்கிற சாகுபடியையும் எழுதித் தனிக்கைக்குக் கொண்டுவர வேண்டியது. இந்தக் கணக்கை அடுத்துவருகிற பசலியில் நடக்கும் ஜமாபந்திகாலத்தில் தாலூகா கச்சேரியில் பதிவுசெய்யவேண்டும்.

15. 2 - வது நே. ஸ்டேட்மேண்டின் A. குறிப்பு —தர்காஸ்தில்லாமல் கைப்பற்றிக்கொண்ட நிலங்களின் விவரங்களை இதில் காட்டவேண்டியது. சாகுபடிக்காகவாவது, மற்ற விஷயத்திற்காகவாவது கைப்பற்றிக்கொள்ளப்பட்டிருக்கிற புறம்போக்கு தீர்வையேற்பட்ட அல்லது ஏற்படாத ஒவ்வொரு பாபத்துத் தரிசுநிலமுமிதில் சேரவேண்டியது. 15 - வது கலந்தவிற மற்றக் கலங்களையெல்லாம் 2 - வது நெ. ஸ்டேட்மெண்டைக் கொண்டும் A. குறிப்பு ரிஜிஸ்டரைக் கொண்டும் ஜமாபந்திக்கு முன்னிட்டே கர்ணன் எழுதவேண்டியது. தகுந்த காலத்தில் மூக்கியமாய்ச் செய்யவேண்டிய விசாரணைகளைச் செய்வதற்காகவும், எந்த விஷயத்தை எந்தவிதமாய் முடிவுசெய்யவேணுமென்பதைக்குறித்து ஜமாபந்திக்குமுன்பாகவே உத்திரவுகள் பிறப்பிப்பதற்கும் அனுகூலமா யிருக்கும் பொருட்டு (2 - வது நெ) அடங்கல் கணக்கு முடிந்தவுடனே, இக்

தக்கணக்கை ரிவினியூ இனிஸ்பெக்டருக் கனுப்பவேண்டியது. மேற்சொன்னபடி உத்திரவுகள் பிறப்பிக்கப்பட்டால் 15 - வது கலத்தை ஜமாபந்திக்கு முன்னே எழுதவேண்டியது. இல்லாவிடில் ஜமாபந்தி செய்கிறவருடைய உத்திரவுப்படி ஜமாபந்திகாலத்தில் அந்தக்கலத்தை யெழுதவேண்டும். ஜமாபந்தியாபீசர் சங்கதிகளை சோதித்து சாகுபடியை மிஸலேனியஸ் அல்லது ரயித்துவாரி ஆகிய எதன்கீழ் கொண்டு வரவேண்டியதோ அதைத்தீர்மானிப்பார். அஃதெப்படியென்றால், புறம்போக்கு நிலத்தில் சாகுபடிசெய்வது ஆட்சேபணைக் குட்பட்டதாயிருந்து அதில் சாகுபடியை நிறுத்தவேண்டியதா யிருந்தால், அதற்குப் பட்டா கொடுக்கப்பட மாட்டாது. அதை 7 நெ. ஸ்டேட்மெண்டின் மிஸலேனியஸ் கலத்தில் பதிவு செய்யவேண்டும். ஆட்சேபணைக்கிடமில்லாத நிலத்தில் சாகுபடி செய்தால் அதற்குப் பட்டாகொடுத்து ரயத்துவாரி நிலத்தோடு சேர்த்துவிடப்படும். ஜமாபந்தி ஆபீசருக்கு ஜமாபந்திகாலத்தில் உதவியாயிருக்கும் பொருட்டுமாத்திர மிந்தக்கணக்கைத் தயார்செய்வதால், அதை கிராமத்திற்குத் திருப்பிக்கொண்டு வராமல் தாலூகா கச்சேரியில் அதை வைத்துவைக்கவேண்டியது.

16. 2 நெ, ஸ்டேட்மேண்டின் B. குறிப்பு.—மாகுல்வாரி சாகுபடி விஸ்தீரணத்தைத் தெரிவிக்கிற கணக்கு; சாகுபடி காலத்திற்குப் பிற்பாடு இதை 2 நெ. ஸ்டேட்மெண்டிலிருந்து தயார்செய்து ஏப்பிரல்மீ 15வக்கு முன் தாலூகாவுக் கனுப்பவேண்டும்.

17. 2 நே. க்கு C. குறிப்பு.—சர்க்கார் பூமியிலுள்ளதோட்டம் தோப்புகளையும் காட்டுங் கணக்கு. அதில் சென்றவருஷத்தில் பதிந்த தோட்டம் தோப்புகளையும், நடக்கிற வருஷத்தில் ஏற்பட்டவைகளையுஞ் சேர்த்து தாக்கல் செய்யவேண்டியது. அந்த ஸ்டேட்மெண்டு மூன்று பிரிவு, (1) சர்க்கார்த் தோட்டங்களையும், (2) குடிகளுடைய சொந்தத் தோட்டங்களையும் (3) சர்க்காரால் வரியேற்படுத்தியாவது, குத்தகைக்கு விட்டாவதிருக்கிற அங்கங்குள்ள சிதறின தனி மரங்களையும் குறிக்கும். தோட்டம் தோப்புகளைக் கொடுப்பதற்கான ஷராக்களையும், சர்க்காருக்கு அல்லது சொந்தக் காரனுக்கு தோப்பிலுள்ள சுதந்திரங்களைப் பற்றியும் மற்ற விஷயங்களையும் ஷராகலத்தி லெழுதவேண்டும்.

18. 2 நே. க்கு D. குறிப்பு.—இந்தக்கணக்கு சர்க்கார் ஜலாதாரத்திலும், குடிகளின் சொந்த ஜலாதாரத்திலும் சாகுபடி-

செய்த விஸ்தீரணத்தையும், நமுனுவில் ஏற்பட்ட அந்தந்த மாகுல்களின் சாகுபடி விஸ்தீரணத்தையும் தெரிவிக்கிறது. இந்த விவரமும், B. குறிப்பில் தாக்கல்செய்யப்படுகிற விவரமும் (ஸ்டாடிஸ்டிகல்) கணக்குகள் நிமித்தம் தேவையாயிருக்கின்றன.

19. 2 நே. க்கு E. குறிப்பு அடையாளம்.—இது பிரதி கிராமத்திலும் கவரன்மெண்டு, இனும் ஆயக்கட்டு விவரங்களைக் காட்டுகிற கணக்கு. இதை சென்றவருஷத்திய கணக்கைக்கொண்டும், நாளது பசலிவரையில் திருத்தப்பட்டிருக்கிற A. B. குறிப்புகளைக் கொண்டும் தயார்செய்யவேண்டும்.

20. B. நே. ஸ்டேட்மெண்டு. இது நிலங்களின் மாறுதல்களைத் தெரிவிக்கிற வருஷவாரிக் கணக்கு. இந்தமாறுதல்களை யனுசரித்து கவரன்மெண்டுக்குச் செலுத்தவேண்டிய ரிவினியூவை மாற்றுவது அவசியமாதலால், அதைத் தெரிவிக்கிறதற்குக் கர்ணனுக்குச் சாதகமாயிருக்கும்படியாய் இந்தக்கணக்கு ஏற்பட்டது. மாறுதல்கள் எந்த வரிசைக்கிரமமாய் ஏற்படுகிறதோ அல்லது கர்ணனுக்குத் தெரிவிக்கப்படுகிறதோ அந்த வரிசைக்கிரமமாய் இந்தக்கணக்கில் எழுதவேண்டியது. மேலும், அவைகளின் விஷயமாய் தாசில்தார் கொடுத்துச் செய்கிற உத்திரவை யதில் குறிக்கவேண்டியது.

இவைகளில் எதற்காவது நிலையான மாறுதல்கள் ஏற்பட்டால், அவைகளை யந்த நிலத்திற்குநேராய் A. B. குறிப்புக்கணக்குகளின் ஷராகலத்தில் பதியவும் வேண்டும். சகலவிதமான மாறுதல்களையும் ஜமாபந்தியில் விட்டுப்போகாமல் கிரமமாய் யோசிக்கப் பட்டதென்பதற்கும், ஸ்திரமான மாறுதல்களெல்லாம் A. B. குறிப்பு கணக்குகளில் விட்டுப்போகாமல் பதிவுசெய்யப்பட்டதென்பதற்கும் அத்தாட்சியாக அந்தந்தக் கணக்குகளில் அந்த மாறுதல் குறிக்கப்பட்டதென்கிற சங்கதியை ஷராகலத்தில் எழுதவேண்டும்.

21. 3 நே. க்கு எ குறிப்பு.—3-வது நம்பரில் விவரமாய்க் கண்டிருக்கிற மாறுதல்களுக்கு இந்தக் கணக்கு கோஷ்பாரா. அந்தக் கணக்கிலுள்ள தொகைகளை வேறே கடுதாசியில் எடுத்து எழுதி இதைத் தயார்செய்யவேண்டும்.

22. 4 நே. ஸ்டேட்மெண்டு. ரிவினியூ பாக்கிக்காக ஏலத்தில் கவரன்மெண்டாரே எடுத்த நிலங்களைப்பற்றி போர்டாருடைய 111-

வது ஸ்டாண்டிங் ஆர்டரிலுள்ள 2-வது பாராவின்படி கர்ணன் வைக்கவேண்டிய கணக்கு. ஜமாபந்திகாலத்தில் அதை டிவிஷனலாபீசர்கள் கவனமாய்ப் பரீட்சித்துப் பார்த்து, எந்த நிலங்களை மறுபடியும் விற்றுவிடவேண்டியதோ வென்பதையும், எந்த நிலங்கள் உபயோகமற்றதென்று கணக்கிலிருந்து எடுத்துவிட்டுத் தரிசு நிலத்தோடு சேர்த்துவிடவேண்டியதோ வென்பதையும் குறித்து உத்திரவுகள் பிறப்பிக்கவேண்டியது.

23. 5 நே. ஸ்டேட்மெண்டு. இது கிஸ்தி வஜாக்களைப்பற்றிய வருஷவாரிக்கணக்கு. இதில் கால ஸ்திதிக்குத் தக்கபடி கொடுக்கப்பட்ட வஜாக்களும், மாமூல் வஜாக்களும் சேரவேண்டியது. கால ஸ்திதி வஜாவென்பது, மாமூல் சாவியல்லது கம்மிமுதலானது. மாமூல் வஜாவானது, தீர்வை கம்மி, பேரிஜில் சேர்ந்த ரோட்பண்டு, கிராம உத்தியோகஸ்தர்களுடைய மேரைவகையரா. காலஸ்திதி வஜாக்கள் விஷயத்திலே, பிரதி நீராதாரத்தின் கீழும் பிரதிநம்பரால் எந்தெந்த நிலத்தின்பேரில் பூர்த்தியாகவாவது, கொஞ்சமாகவாவது எந்தெந்த வஜாக்கள் கேட்கப்படுகிறதோ அந்த விவரங்களை 1-முதல் 9 வரையிலுள்ள கலங்களில் தாக்கல் செய்யவேண்டியது. இன்ன விஷயங்களினிமித்தம் வஜா கேட்கப்படுகிறதென்கிற சங்கதியை கர்ணன் 14 - வது கலத்தில் சுருக்கமாய் குறிக்கவேண்டும். 7 - வது கலத்தில் பதிவுசெய்யப்படுகிற பூரா நம்பரின்பேரில் தீர்வை வஜா கோராமல் போனால், எந்த பாகத்திற்காக வஜா கேட்கப்படுகிறதோ அந்த பாகத்தையும் ஷை 14 - வது கலத்தில் காட்டவேண்டும். ஸ்திரமான வஜாக்கள் மாமூலான வஜாக்கள் இவைகளுக்கு நிலவாரி விவரங்கள் எழுதவேண்டியதில்லை. இந்த வஜாக்களின் மொத்தங்களை வேண்டிய விவரங்களுடன் கணக்கின் கடைசியில் பதிவு செய்யலாம். அதெப்படியெனில், பேரீஜிலே ரோட்பண்டு சேர்க்கப்படுகிற விஷயத்தில், அது அப்படிச் சேர்க்கப்பட்டிருக்கிற பேரீஜ்மொத்தத்தையும், அது கணக்கு செய்யப்படுகிற வீதத்தையும், 14 வது கலத்தில் காட்டவேண்டியது. அப்படி பேரீஜிலிருந்து வஜா செய்யப்பட்ட தொகையை 13 - வது கலத்தில் "மூஜராசெய்யப்பட்ட தொகை" என்பதின்கீழ் காட்டவேண்டியது. காலஸ்திதி வஜாக்கள் விஷயத்தில் 1 - முதல் 9 வரையிலுள்ள கலங்களை ஜமாபந்திக்கு முன்னிட்டும், மற்றக்கலங்களை, வஜா தகரார்கள் ஜமாபந்திகாலத்தில் பைசல்செய்த பின்பு கர்ணன் தாக்கல்செய்ய வேண்டி

யது. ஜமாபந்தி யாபீசருடைய தீர்மானத்தை 16-வது கலத்தில் தாக்கல்செய்யவேண்டும். பிரதிபாபத்து வஜா துகையை சர்க்கார், இனும், புஞ்சை, நஞ்சைமுதலிய விவரங்களுடன் கணக்கினடியில் கோஷ்பாரா போடவேண்டியது.

24. 5 நெ. க்கு எ. குறிப்பு.—இது, வஜாகொடுக்கும் விஷயத்தில் ஜமாபந்தி யாபீசருக்கு உதவியாயிருக்கும் பொருட்டு, ஏரிக்கு வந்த ஜலத்தையும், சர்க்கார் இனும் பூமிகளுடைய சாகுபடி, பஞ்சம், இது விவரத்தையும் காட்டுகிற கணக்கு. வஜா கொடுக்கும் போது ஜமாபந்தி ஆபீசருக்கு இது ஆதாரமாயிருக்கிறது. முதல் மூன்று கலங்களை சி குறிப்புக் கணக்கிலிருந்தும், 5-வது கலத்தை 20-வது நம்பர் கணக்கின் 2-வது பிரிவிலிருந்தும், மற்றக் கலங்களை 2-வது நெம்பர் ஸ்டேட்மெண்டிலிருந்தும் எழுதவேண்டியது.

25. 6 நெ. ஸ்டேட்மேண்ட்.—பிரத்தியேகமாய் தண்ணீர் வரி ஏற்பட்ட பாய்ச்சல் நிலங்களைக் காட்டுகிறதற்கு ஏற்பட்டது. கோதாவரி, கிருஷ்ணாநதிகளின் டெல்டா கிராமங்களுக்கு இது முக்கியமானது. தற்கால அனுஷ்டானப் பிரகாரம் ஜலம் பாயாத நிலங்களுக்குக்கூட சில சந்தர்ப்பங்களில் இந்த வரிபோடப்படுகிறது. உதாரணம்:—எவனாவது தண்ணீர் வேண்டுமென்று மனுச்செய்து தண்ணீரிருந்தபோதிலும் உபயோகப்படுத்திக்கொள்ளா திருந்தபட்சத்தில், தண்ணீர்த்தீர்வை விதிக்கப்படும். மேலும் ஜலம் பாய்ச்சப்பட்ட விஸ்தீர்ணம் போர்டாருடைய 5-வது நம்பர் ஸ்டாண்டிங் ஆர்டரில் நிர்ணயிக்கப்பட்ட விஸ்தீரணத்துக்குக் குறைவாயிருந்தாலும், தண்ணீர் வரி விதிக்கப்படுகிறது. இந்த விஷயத்தைப்பற்றிய நிபந்தனைகளின்படி காரியம் நடந்தது இல்லையென்று தெரியும்பொருட்டு வாஸ்தவத்தில் நீர் பாய்ச்சப்பட்ட விஸ்தீரணத்தையும், தண்ணீர்த் தீர்வைபோடப்பட்ட விஸ்தீரணத்தையும், தெரிவிப்பதற்காக, இந்தக்கணக்கில் கலங்களேற்பட்டிருக்கின்றன. இந்தக் கணக்கு சர்க்கார், இனும் என்கிற விரண்டுபாகமாகப் பண்ணப்பட்டிருக்கிறது. 1-முதல் 11 வரையிலுள்ள கலங்களை இரண்டாவது நெம்பர் ஸ்டேட்மேண்டி லிருந்தும், ஜலத்துக்காகச் செய்யபட்ட தர்காஸ்தைக் கொண்டும் எழுதவேண்டியது. 12-முதல் 18 வரையிலுள்ள கலங்களைத் தண்ணீர் தீர்வையைக் குறித்து தற்காலத்திலுள்ள வுத்திரவுகளை யனுசரித்து எழுதவேண்டும். வஜாகலங்களை, அதன் விஷயமான சகல தகரார்களும் ஜமாபந்தி காலத்தில் முடிவுசெய்தபிறகு

எழுதவேண்டியது. தண்ணீர்த் தீர்வை போடப்பட்ட நிலங்கள் ஜமாபந்திக்குப் பிறகு சாகுபடியானால் அவைகளுக்கு இவ்விதமே கணக்குத் தயார்செய்து, பசலியின் கடைசியில் தாலூகாவிற் கனுப்பவேண்டும்.

26. 7 நே. ஸ்டேட்மேண்ட் — நிலகிஸ்தியில். சில்லரை பாபத்து கிஸ்தியைக் காட்டுகிற கணக்கு. இதை யிரண்டு பிரிவாகக் குறிக்கவேண்டும். ஒன்று ஜமாபந்திக்கு முன்னிட்டு ஏற்படுகிற பாபத்தைக் குறித்தும், மற்றொன்று ஜமாபந்திக்குப் பின்னிட்டு ஏற்படுவதற்கு மெழுதவேண்டியது. பிரதி நம்பருக்கு செலுத்தவேண்டியதாகிற பாபத்துகளை நிலவாரி விவரங்களுட னெழுதவேண்டியது. ஆனாலிந்த பாபத்துகளிலெதற்காவது இம்மாதிரியான விவரங்கள் வேறு கணக்கிலெழுதப்பட்டிருந்தால், அவைகளை மறுபடியுமிதில் விவரித்துக் காட்டவேண்டியதில்லை. அதெப்படியெனில், குயிட்ரெண்டுக்கு நிலவாரி விவரங்கள் பி. குறிப்புக் கணக்கில் கண்டிருக்கிறபடியால், இந்த ரிஜிஸ்டரில் பிரதி நம்பருக்கு மெழுதாமல் குயிட்ரெண்ட் மொத்தத்தை மட்டும் காட்டவேண்டியது. 6-வது கலத்தில் தாக்கலாகவேண்டிய இனங்களின் விவரத்தை பி. குறிப்பு இனும் கணக்கிலிருந்து எடுத்துக்கொள்ளவேண்டியது. இந்தக் கணக்கை 8-வது கலம் வரையில் கர்ணனெழுதவேண்டியது. மற்றக்கலங்களை, வஜா, தகரார்கள் முதலானவைகள் ஜமாபந்தியில் பைசலானபிறகாவது.அதைப்பற்றிப் பிரத்தியேகமானஉத்திரவான பிறகாவது எழுதவேண்டியது. பாபத்துகளை வரிசைக் கிரமமாயெழுதி ஒவ்வொன்றுக்கும் மொத்தம்போட்டு, கணக்கின் கடைசியில் ஒரு கோஷ்பாரா போடவேண்டியது.

27. 8-ம் நே. ஸ்டேட்மேண்டு. ரிவினியூ செடில்மெண்டார் இரிகேஷன் ரிவினியூ கணக்குகளைத் தயார்செய்வதற்காக அவர்கள் ஆபீசுக்கு கர்ணன்கள் இப்போதனுப்புகிற எ. பி. குறிப்புக் கணக்குகள். 8-நெ. கணக்கில் பிரதி ஜலாதாரத்திலிருந்தும் நீர் பாய்ச்சப்பட்ட எல்லா நிலங்களின் விவரங்களையும் தள்ளுபடிசெய்த வஜாக்களையுங் காட்டவேண்டியது. அதை 2,5, 6, 7 இந்த நெம்பர் கணக்குகளைக் கொண்டுத் தயார் செய்யவேண்டியது. இந்த ஸ்டேட்மெண்டுகளைத் தயார்செய்வதற்காக ரிவினியூ செடில்மெண்டார் நிபந்தனைகளை முன்னமேயே பிறப்பித்திருக்கிறார். அவைகள் அதன் கடைசியில் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

28. 9-நெ. ஸ்டேட்மேண்டு.—10 நெம்பர் கணக்கில் எழுதப் படுகிற ரயத்துவாரி நிலங்களின்பேரில் வசூல் செய்யப்படுகிற செஸ்கள் தவிற மற்ற லோகல்பண்டு, ஸ்பெஷல் பண்டு இவைகளைக் காட்டுகிறதற்கு, பி. குறிப்பு கணக்கைக்கொண்டும் தயார்செய்யவேண்டியது. கிராம உத்தியோகஸ்தர்களுக்குச் சம்பந்தப்பட்ட பிரதி ஸ்பெஷல் பண்டையும், இந்த ஸ்டேட்மெண்டில் காட்டவேண்டும். ஷராகலத்தில எதின்பேரில் என்ன மாதிரியாய் பண்டு வசூல் செய்யப்படுகிறதோ அந்த சங்கதியை யெழுதவேண்டும். அதற்கு உதாரணம்:—மீன் குத்தகை விஷயத்திலே எந்த நதி அல்லது ஏரிக்காக அது வசூல் செய்யப்படுகிறதோ அவைகளின் பேயரையும், அந்த வரி இஜாரா அல்லது மாமூல் பிரகாரம் கட்டினதையு மிதில் எழுதவேண்டும். இந்த ரிஜிஸ்டரையும், 3,5,6,7, இந்தநெம்பர் கணக்குகளையும், அவைகளின் உட்பிரிவுகளையும் அடுத்த பசலியில் நடக்கும் ஜமாபந்திசமயத்தில் தாலூகாவில் சேர்த்துவைக்கவேண்டும்.

29. 10 நெ. ஸ்டேட்மேண்ட். இது ஜமாபந்தி நபர்கதிசிட்டா. அதுவிரண்டு பிரிவு. (1) கைப்பற்று நிலங்களுக்கு நிலவாரி விவரங்களையும் (2) பைசலாந்தத்தின் விவர மொத்தத்தையும் காட்டுகிறது. முதலாவது பிரிவைத் தயார்செய்யும்போது, முன் வருஷத்திய கணக்கை யனுசரித்து, அதில் பிரதி நபருடைய சுவாதீனத்திலிருக்கும் நிலங்களை நப்பர் வாரியாய் தரம், விஸ்தீரணம், தீர்வை இந்த விவரங்களுடன், நன்செய், புன்செய், இந்த பாபத்து வாரியாயும் எழுதவேண்டும். இதிலெந்த நம்பரையாவது குறைக்கவேண்டியிருந்தால், அதற்கு நேரில் ஷராகலத்தில் அந்தக்குறைவின் விவரத்தைக் காட்டவேண்டியது. நிலங்கள் புதிதாய் சுவாதீனத்துக்குவந்தால், அவைகளை ரெஜிஸ்டரில் சேர்க்கவேண்டும். இரண்டாவது பிரிவிலே பைசலான விவரங்களை அடியில் காட்டியபடி தாக்கல்செய்யவேடும். வருஷமுதலில் ரயத்தாதீனத்திலிருக்கிற நிலங்களை நன்செய் புன்செய் பாபத்தின் கீழ் மொத்தமாயெழுத வேண்டியது. இராஜிநாமாவின் பேரிலாவது அல்லது வேறேயெந்த விதமாயாவது விடுதலையான நிலங்களை யதில் கழித்து, பாக்கியோடு தர்க்காஸ்து செய்தாவது, வேறே எந்த விதமாயாவது சுவாதீனஞ்செய்துகொண்ட நிலங்களைச் சேர்த்துக் கொள்ளவேண்டியது. இந்த மொத்தத்தோடு 6 - ம் நெ. ஸ்டேட்மெண்டின் பிரகாரம் பின்னுமதிசத்தீர்வைக ளேதாவது கட்டவேண்டியிருந்தால் சேர்த்து, பிறகு

5-வது நெ. கணக்கின்படி வஜாக்கள் போகமீதியிருக்கிற மிஸலேனியஸ் ரிவினியூவையும், லாண்டுசெஸ், வில்லேஜ்செஸ், லோகல்பண்டு, ஸ்பெஷல்பண்டு இவைகளையும் சேர்க்கவேண்டியது. இதினால் ஒவ்வொரு பேர்வழியும் செலுத்தவேண்டியதாகிற முழுமொத்தமும் ஏற்படுகிறது. இந்தக்கணக்கை ஒவ்வொருவருஷமும்வேறே எழுதவேண்டியதில்லை. இதை ஒரு புஸ்தகமாகச் சேர்த்து சுமார் ஐந்துவருஷத்திற்கு ஒவ்வொரு ரயத்துக்களின் சுவாதீனத்திலிருந்து ஏற்படுகிற மாறுதல்களை யெழுதுவதற்குப் பொதுமான காகிதம் விட்டு, ஒவ்வொரு நம்பருக்கும் இந்தப் பிரிவுகளை வரிசையாய் எழுதவேண்டும். ஆயினும் அப்படி யேற்படுத்துகிற மாறுதல்களினாலே இந்தப்புஸ்தகம் 5 வருஷத்துக்கு முன்னேயாவது, பின்னிட்டாவது, எழுதவேண்டுவதவசியமென்று தாசில்தார் அல்லது ஜமாபந்தியாபீசருக்குத் தோன்றினால் அப்போது வேறே யெழுதலாம். எழுதப்படிக்கத் தெரிந்த குடிகள் இந்தக் கணக்கைப் பார்வையிட விரும்பினால், தடையில்லாமல் அவர்களுக்குக் காட்டவேண்டியதுமல்லாமல், அவர்களதில் கையெழுத்துப்போடவேண்டு மென்றால் அப்படியே போடவிடவும் வேண்டியது. இந்த ஸ்டேட்மெண்டை வேறே எழுதும்போது அசல்பிரதியை தாலூகாகச்சேரியில் வைத்துவைக்கவேண்டியது.

30. 10-வது நெ. க்கு உட்பிரிவு. இந்தக்கணக்கில், பிரதி பட்டாதாரர்களின் பெயரையும், யார்பேரில் பட்டாக்களை ஜாரி செய்யவேண்டியதோ அந்த வார்சுகளின் பெயரையும் தெரிவிக்கிறது. ஜமாபந்திக்குமுன், 1, 2, 3, இந்தக்கலங்களைக் கர்ணன் பூர்த்தியாயெழுதவேண்டியது. யார்பேரில் பட்டா பிறப்பிக்கவேண்டுமோ அந்தப் பேர்வழியைக் குறித்து முன்னதாக உத்திரவு செய்யப்பட்டிருந்தால் அந்தவிஷயந் தீர்மானமானபின்பு, ஜமாபந்தி காலத்தில 4-வது கலத்தையெழுதிப் பூர்த்திசெய்யவேண்டும். ஜமாபந்தியானபிறகு இந்தக்கணக்கைதாலூகா ரிகார்டுகளில் தாக்கல் செய்யவேண்டியது.

31. 11. நெ. ஸ்டேட்மெண்ட். இது ஒவ்வொரு பட்டாதாரனுக்கும் கொடுக்கிற பட்டா நமூனா. இது முக்கியாம்சத்தில் 10 நெ ஸ்டேட்மெண்டுக்கு நகல். இதில் அதிகமாக எழுதும் விஷயம், குடிகள் செலுத்தவேண்டிய பாகாந்திர கிஸ்தியின் விவரமொன்றுதான்.

32. 11 நே. கணக்கின் உட்பிரிவு. மிஸலேனியஸ் கிஸ்திக்காகக் கொடுக்கப்படுகிற பட்டா நமூனு. செலுத்தவேண்டிய தொகையைத் தெரிவிக்கும்படியான லாண்டு ரிவினியூபட்டாவாவது, இனும்பட்டாவாவது, மற்ற வேறே தஸ்தாவேஜாவது இல்லாதிருக்கும் பட்சத்தில் மட்டும் மிஸலேனியஸ்பட்டாகொடுக்கவேண்டியது.

33. 12-வது நே. ஸ்டேட்மேண்ட். ஒவ்வொரு பேர்வழியும், இன்னின்ன பாபத்துக்காகச் செலுத்தவேண்டியதென்று காட்டுகிற கிராமத்தின் பைசல் கோஷ்பாரா. ஒவ்வொருபேர்வழியும் செலுத்துவதற்குள்ளாயிருக்கிற மொத்தத்துகையை அட்டவணையாகத் தெரிவிக்கிறது. இதை 5, 6, 7, 9 10 இந்த நெ. ஸ்டேட்மெண்டுகளிலிருந்து தயார் செய்யவேண்டியது. அதை ஜமாபந்தியில் முடிவுசெய்து, ஜமாபந்தியாபீசர் அதில் முத்திரையிட்டுக் கையெழுத்துப் போடவேண்டியது. ஜமாபந்திக்குப் பிற்பாடு வேறே பாபத்துகளேற்பட்டால், அவைகளைக் கீழே சேர்த்துக் கணக்கைப் பசலிக்கடைசியில் முடிவுசெய்து, நபர்வாரி விவரங்களில்லாமல் கிராமமொத்தத்திற்கு ஒருகோஷ்பாராதயார்செய்து தாலூகாவிற்கனுப்பவேண்டியது. அசல் பிரதியை மறுவருஷத்தில் ஜமாபந்தியின்போது தாலூகாவில் தாக்கல் செய்யவேண்டியது.

34. 13 நே. ஸ்டேட்மேண்ட். இது ரோஜ்வாரி கிராமத்தண்டல் கணக்கு. இந்தக் கணக்கில் 6 முதலிய கலங்களில் கண்டிருக்கிற (B) மற்றபாபத்தை கஜானு கணக்குக்காக, அடியில் பாபத்துவாரி வசூலை விவரித்துக்காட்டும்படி அக்கவுண்டாண்டு ஜனரல் உத்திரவாயிருக்கிறது. அதாவது :—(1) டிமாண்டுக்காக வசூலானபடி, (2) கல்வெட்டுகிற குழியின் வரும்படி (3) ரிவினியூ கோர்ட்டார் போட்ட அபராதமும் பறிமுதலும், (4) ரெயில்வேயாருக்குவிடப்பட்ட C. வகுப்பு நிலங்களில் வந்தவரும்படி, (5) சென்ற வருஷங்களில் சர்க்காரில் அதிகமாகச் செலவுசெய்து, அந்தச்செலவை மறுபடி வாப்சுபெற்றது. (6) சர்வே டிபார்டுமெண்டாரிடமிருந்து வரவு, (7) தீர்வை வசூலை நிறுத்தினதற்காக கொடுக்கப்படும் வட்டி (8) இந்தியாவிலிருந்து செய்துகொண்ட அப்பீலுக்காக இங்கிலாண்டில் வசூலான தொகை. கிராமங்களில் இந்த விஷயங்கள் அதிகமாக நேரிடுகிறதில்லை ; ஆகையால் ஒவ்வொரு பாபத்திற்கும் கிராமக்கணக்கில் கலம் விடாமலிருக்கிற பாபத்துக்கு மட்டும் இரண்டொரு கலம்விட்டால் போதும். பாக்கிவசூலை கிராமச்சாவடி

யிலாவது, ஜனங்கள் கூடுகிற பகிரங்கமான விடங்களில் தவிற மற்றவிடங்களிற் செய்யக்கூடாது. கிஸ்திசெலுத்தும்போது கர்ணன் மணியக்காரன் இருவரும் இரசீதில் கையெழுத்துச்செய்ய வேண்டியது. வசூலான தொகைகளை உடனுக்குடனே அந்தந்த பாபத்தின் கீழ்பதிந்து நபர்வாரி, தினவாரி மொத்தமும்போட்டு, ஒவ்வொருபாபத்து மோத்தமும், கிராமமொத்தமும் போடவேண்டியது. இருசால் அனுப்பும்போது கணக்கை முடிவு செய்து, கிராம உத்தியோகஸ்தர்களுடைய சம்பளத்தையும், தேவதாயம் முதலியவற்றிற்காக பேரீஜிலிருந்து கொடுக்கப்படுகிற முஜராக்களையும் கழித்து பாக்கி ஏற்படுத்தவேண்டியது; வேறே கிராமங்களுக்காகச் செலுத்தப்படுகிற பணத்தையும் இந்த தண்டல்கணக்கிலெழுதிக்கொண்டு, ஷராகலத்தில் அதன் விவரத்தைப்பதியவேண்டும். இவ்விதம் கணக்கைப்பூர்த்திசெய்ததாகக் கர்ணனும் மணியக்காரனுங் கையெழுத்துச் செய்து, இதைக்கொண்டு 14 நெ. ஸ்டேட்மெண்டை எழுதி, அசல் தண்டலை இருசால்நாமாவோடு தாலூகாவிற்கனுப்பவேண்டியது. வசூலாகிற பணத்தை யெப்போதும் மணியக்காரனே வைத்திருக்கவேண்டியது ஆனால், இரசீதில்மட்டும் மணியக்காரன் கர்ணன் இருவர்களும் கையெழுத்துச் செய்யவேண்டும். ஏனென்றால், பணத்தைப் பேற்றுக்கொண்டதற்காக மணியக்காரனும், அதைக் கணக்கில் பதிவுசெய்துகொண்டதற்காக கர்ணனும், அவ்விதம் கையெழுத்துச் செய்யவேண்டியது. கர்ணன் கிஸ்திப்பணத்தை ஒருபோதும் வாங்கக்கூடாது.

35. 14 நெம்பர் ஸ்டேட்மேண்ட். இது மேற்சொல்லிய 13 நெம்பர் ஸ்டேட்மெண்டுக்கு கோஷ்பாரா. இது நபர் வாரியாய் பணத்தை வசூல்செய்ததைக் காட்டுகிற கணக்கு; இதை 13 நெம்பர் கணக்கைக்கொண்டு ஒவ்வொருநாள் முடிவில் வசூலுக்குப் பிறகு தயார்செய்யவேண்டியது. இரண்டாவது கலம்முதல் 5 வது கலம்வரையில் காணவேண்டிய விவரங்களை 13 நெம்பர் ஸ்டேட்மெண்டு 8 வது கலத்திலிருந்து எடுத்து எழுதவேண்டும். வருஷத்திலுள்ள எல்லா மாதங்களிலும் வசூலைக்காட்டுவதற்காக ஒவ்வொரு நபருக்கும் காகிதத்தில் ஒருபக்கம் விட்டால் போதுமானது. லாண்டு ரிவினியூ அண்டு செஸ்களின் கீழிருக்கிற பாக்கித்தொகையை முந்திய வருஷத்திய ஸ்டேட்மெண்டைக்கொண்டு அந்தந்தப் பசலிக்கு நேராய் எழுதவேண்டியது. ஆனால், நடப்புப் பசலித்தொகை

யை ஜமாபந்தி முடிவாகி பேரீஜ் நிர்ணயமாகிற வரையில் எழுதக் கூடாது. வட்டி நிமித்த மேற்படுகிற டிமாண்டுத் தொகையை 17 வது நெம்பர் ஸ்டேட்மெண்டிலிருந்தெடுத்து மொத்தமா யெழுத வேண்டியது. தொகை வசூலானவுடனே தேதி வாரியாயும் மாத வாரியாயும் அந்தந்தக் கலங்களில் எழுதி, வசூலாகமாட்டாதென்று கணக்கிலிருந்து அடித்துவிடும்படியாய் உத்திரவு செய்யப்பட்ட தொகையைக்கழித்து நிகரபாக்கி யேற்படுத்தியதை மறு வருஷத்திய ஸ்டேட்மெண்டுக்குக் கொண்டுபோகவேண்டியது. 7, 8, 9 இந்தக் கலங்களில் பழமுதல் புதுமுதல் பாக்கிவரவும் பத்தும் எழுதவேண்டும். அடுத்த வருஷத்திய ஜமாபந்தியின் போது இந்தக் கணக்கை தாலூகாவிலே தாக்கல் செய்யவேண்டும்.

36. 14ம் நெம்பர் கணக்கின் உட்பிரிவு எ. குறிப்பு. இது அனேகமாய் 14ம். நெம்பர். ஸ்டேட்மெண்டை யனுசரித்துச் செய்யவேண்டிய கோஷ்பாரா. இதில் கிராமம் முழுவதுக்கும் வருஷக் கடைசியில் ஏற்படுகிற டிமாண்டு வசூல் பாக்கியைக் காட்டவேண்டியது.

37. 14 நெ. க்கு உட்பிரிவு பி. குறிப்பு. இந்தக் கணக்கில் வசூல் செய்யக்கூடாத பாக்கிகளைக் காட்டுகிற விவரங்களைத் தெரிவிக்கிறது. ஜமாபந்தி யாபீசருடைய உத்திரவுக்காக இதை 14ம் நெம்பர் கணக்கிலிருந்து தயார்செய்யவேண்டும். அவர் தான்செய்கிற உத்திரவை கடைசிகலத்தில் தன் கைப்பட எழுதவேண்டியது. வசூலாகமாட்டாதென்று சிபாரிசு செய்யப்பட்ட பாக்கியை அந்த நபருக்கு நிலத்தீர்வை செஸ்களின்கீழ் ஏற்பட்டிருக்கும் பாபத்தின்படி பேரீஜ் மொத்தத்தை யனுசரித்து தாமாஷாபிரசாரம் இனம் வாரியாய்ப் பிரிக்கவேண்டியது.

38. 14ம் நெம்பருக்கு சி. குறிப்பு. இது அதிக வசூலைத்தெரிவிக்கிற கணக்கு. இதை 14 நெம்பர் கணக்கைக்கொண்டு தயார் செய்யவேண்டும்.

39. 15. நெம்பர் ஸ்டேட்மேண்ட். இதில் இருசால் நாமா, 13 நெம்பர் கணக்கில் நமூதாயிருக்கிற அந்தந்த பாபத்துகளின் கீழான வசூல் விவரங்களையும், கிராமத்தில் செலவான் மொத்தத்தின் விவரங்களையும், தாலூகாவிற்கனுப்பப்பட்ட மொத்த நாணயங்களின் விவரத்தையும், நமூனாவின் அந்தந்தக் கலங்களில் கண்டிரு

க்கிற மற்ற விவரங்களையும் தெரிவிக்கவேண்டியது. தாலூகாவுக்கு இருசால் வந்தவுடன் தாசில்தாராவது, சிரஸ்ததாராவது அந்த இருசால் நாமாவில் கையெழுத்துச் செய்யவேண்டியது. இருசால் தொகையை யெண்ணிப்பார்த்து, அது சரியாயிருந்த பட்சத்தில் அந்தச் சங்கதியை இருசால் நாமாவுக்கடியிலே எழுதி சராப்பும், நகதி குமஸ்தாவும், தாலூகா சிரஸ்ததாரும், கஸ்பாவில் தாசில்தாரரிருந்தால் அவரும் அதில் கையெழுத்துச்செய்து, அந்த இருசால் நாமாவை இருசால் கொண்டுவந்தவனிடம் கொடுத்துவிடவேண்டும். ரோஜ்வாரி தண்டல் சிட்டாமொத்தத்தைச் சரியாய்த் தணிக்கைசெய்து அதற்கும் இருசால் நாமாவுக்கும் ஒத்துப் பார்க்கவேண்டும். கிராமத்தில் வசூல்செய்த பணத்தை இருசால் பண்ணுமல் அதிக நாள் நிறுத்திவைத்துக் கொண்டதாய்த் தெரிந்தால், அதைப்பற்றிக் காரணங்கேட்கவேண்டியது. இப்போது கிராமத்திலிருந்து அனுப்பப்படுகிற இருசால் நாமாவின் இரண்டாம் பிரதிக்குப் பதிலாய் இந்தத் தண்டல் கணக்கைக் கச்சேரியில் வைத்துக்கொள்ளவேண்டியது.

40. 16ம் நெம்பர் ஸ்டேட்மேண்ட். இது, பிரதி நபரும் செலுத்தவேண்டிய பாக்கியை பசலிவாரியாய் மாசக்கடைசியில் காட்டுகிற ஜாப்தா. கிஸ்திமொத்த மேற்படுத்துவதில், பட்டா கொடுப்பதற்கு சென்றவருஷத்து பேரீஜையும், பிறகு மாறுதல்களே தாவதிருந்தால் அவைகளை யனுசரித்தும், பட்டாகொடுத்த பின்பு அதில்கண்ட வாயிதாக்களின் படிக்கும் கிஸ்தி யேற்படுத்தப்படும். 14 நெம்பர் கணக்கிலிருந்து வசூல் மொத்தத்தை தாக்கல்செய்து, ஒவ்வொரு மாசத்திற்கும் பாக்கி யேற்படுத்தவேண்டியது. கணக்கினடியிலே கிராம முழுமைக்கும் பாபத்து வாரியாயும், பசலி வாரியாயும் டிமாண்டு வசூல் பாக்கியைத் தெரிவிக்கிற ஒரு கோஷ்பாரா போடவேண்டியது. தாசில்தார் ஆலசியமில்லாமல் டிமாண்டு ஜாரி பண்ணும் பொருட்டு, இந்தக் கணக்கை யிருசாலோடு கணக்கன் தாலூகாவுக்கனுப்பவேண்டியது. இதை தாசில்தார் உடனே கர்ணனுக்கு வாப்சுசெய்யவேண்டியது. அவசியமில்லாதபட்சத்தில் கணக்குவந்த 5 நாள்களுக்குள்ளாக தப்பாமலதை யனுப்பிவிடவேண்டும். கர்ணன் கணக்கைத் தயார்செய்து இருசாலோடு அனுப்புவதற்கும், தாசில்தாரந்தக் கணக்கைச் சீக்கிறந் திருப்பியனுப்புவதற்கும் சாதகமாயிருக்கும் பொருட்டு, இருசால் தினத்துக்கு இரண்டு

நாள் முன்னதாகவே கணக்குகளை முடிக்கவேண்டும். மேலும் கிரா மத்திலிருந்து இருசால் அனுப்புவதில், எல்லா கிராமத்திய இருசா லும் 16. நெம்பர் கணக்கும் ஏககாலத்தில் வராமல் ஒவ்வொருநா ளில் சிலகிராமங்களிலிருந்து மட்டும் அனுப்பும்படியாய் ஏற்பாடு செய்யவேண்டியது. கணக்குகளை பசலியுடன் முடிவுசெய்து மறு வருஷத்திய ஜமாபந்தியின்போது தாலூகாவில் தாக்கல் செய்யவே ண்டும்.

41. 17 நெ. ஸ்டேட்மேண்ட். இந்தக்கணக்கில் ஒவ்வொரு நபரும் செலுத்தவேண்டிய டிமாண்டு வசூல்பாக்கி, வட்டி இவை களின் விவரத்தைத் தெரிவிக்கிறது, புது உத்திரவுகளின்படி கிஸ் திபாக்கிக்காகப் பசலிமுடிவுவரையில் வட்டிபோடக்கூடாது. உதா ரணம் :—ஒருபட்டாதாரன் 600 ரூபா கிஸ்திபாக்கியில் பசலிக்குள் 300 ரூபா செலுத்திவிட்டால், அப்படிச் செலுத்தினதொகையை வாயிதாவுக்குப் பின்னிட்டுச் செலுத்தியிருந்தாலும், கிஸ்திபந்திப் படி செலுத்தத் தவறினனென்று வட்டிவாங்கக்கூடாது. ஆனால், பசலியின் கடைசியில் பாக்கியிருக்கிற ரூபா 300 க்கு மாத்திரம் வட்டிபோடப்படும். மேலும் ஒருமாசத்தின் சில்லரை நாள்களுக்கு வட்டிபோடக்கூடாது. எப்படியெனில் :—மேற்கண்ட பாக்கியில் ரூபா 100 அடுத்த ஜூலை ௴ 29உ யில் செலுத்தப்பட்டால், அப்ப டிச்செலுத்தின துகைக்கு வட்டி வாங்காமல், பாக்கியாயிருக்கிற துகைக்குமட்டும் அந்தமாசத்திற்கு வட்டிபோடப்படும். இந்தக்க ணக்கை 16 நெ. ஸ்டேட்மெண்டோடு தாலூகாவிற்கனுப்பவேண் டும்.

42. 18. நெம்பர் ஸ்டேட்மேண்ட். இது ரசீது நமூனா. குடி கள் செலுத்தவேண்டிய மொத்தத்திற்காக அந்த வருஷத்தில் செ லுத்திய பணத்தை வாங்கிக்கொண்டதற்கு அத்தாட்சியாக அவர்க ளுக்குக் கொடுக்கவேண்டியது. குடிகளுக்குக் கொடுப்பதற்காக தா சீல்தார் நம்பரும் முத்திரையும் போடப்பட்ட காலி ரசீது புஸ்தக ங்களை மணியக்காரனுக்கு அப்போதைக் கப்போது அனுப்பவேண் டும். பழமுதல் பாக்கிக்காவது, புதுமுதல் பாக்கிக்காவது பணஞ் செலுத்தினவுடனே அதை வேண்டிய விவரங்களுடன் அந்த ரசீது புஸ்தகத்தில் எழுதி மணியக்காரனும், கர்ணனும் அதில் கையெழு த்துச் செய்யவேண்டும். ரசீதில் எண்ணிக்கைகளையும், பாபத்துக ளையும் தமிழில் எழுதவேண்டியது. செலுத்தப்பட்ட மொத்தத்

தொகையை எழுத்தாலு மெழுதவேண்டியது. யார் தங்களுக்கு நிலத்தில் பாத்தியதை யுண்டாயிருப்பதினுமில்ல, பட்டா தாரனுக்காகப் பணஞ் செலுத்துகிறார்களோ அவர்களுக்கு சப்ரசீது கொடிக்கப்படும். பட்டாதாரன் கேட்டபோது சப்ரசீதிலுள்ள மொத்தத் தொகையை அவர்களுடைய ரசீதில் எழுதப்படும். சப்ரசீதானது அசல் ரசீதின் ஈமூனப்படியே இருக்கும். அதில் "சப்ரசீது" என்கிற வார்த்தை குறுக்காய் எழுதப்பட்டிருக்கும்.

43. 19. நெம்பர் ஸ்டேட்மெண்ட். குடிகளின் ஜனன மரணங்களையும், கால் நடைகளின் வியாதியையும், மரணத்தையுங் குறித்த கணக்கு. இதை யிரட்டைப் பிரதியாக எழுதுவதற்கு நமூனக்கள் கர்ணனிடத்தில் கொடுக்கப்படும். ஒரு பிரதியை அடுத்தமாதம் 5 தேதிக்குள் தாலூகாவிற் கனுப்பவேண்டும். மற்றதைப் பசலிமுடிந்தபின் இரண்டுமாசத்திற்குள் தாலூகா கச்சேரிக்கு அனுப்பவேண்டும். III - வது பிரிவிலுள்ள அந்தந்தக் கலங்கள் விவரமாயிருக்கிறது. ஜாட்டியம் சம்பவித்தபோது 13 வது கலத்தில் எழுதவேண்டும். அந்தப் பிராணி சாகிறவரையிலாவது, குணப்படுகிற வரையிலாவது, 14. 15 இந்தக் கலங்களை எழுதாமல் வைத்திருக்கவேண்டும். எந்த மாதத்திற்காவது புதிதாய் கணக்குத் தயார்செய்யும்போது முந்திய மாசத்திய கணக்கில் ஜாட்டியம் சொஸ்தமடைந்ததாகவாவது, மரணமடைந்த தாகவாவது எழுதாமலிருக்கிற கால்நடைகளை முன்னே யெழுதி புதிதாய் வியாதி சம்பவித்த கால்நடைகளை யெழுதவேண்டியது.

44. 20. நெம்பர் ஸ்டேட்மெண்ட். இது இருவகைப்படும். (1) கிராமத்தில் பெய்தமழையைப் பற்றிய கணக்கு, (2) கிராமத்திலுள்ள ஜலாசயங்களுக்கு வந்த ஜலத்தையும், செலவழிந்த ஜலத்தையும் காட்டுகிற கணக்கு; கணக்கில் மழையை இத்தனை செவி மழை பெய்ததென்று எழுதவேண்டும். புழுதியுள்ள நிலத்தை உழுவதற்குப் போதுமான மழைபெய்தால், அதை யுழவு மழை அல்லது ஒரு செவி மழையென்று சொல்லப்படும். ஷராவில் காலஸ்திதியைப் பற்றியும் ஜனங்களுடைய சவுக்கியத்தைப் பற்றியும், கால் நடைகளின் ஸ்திதியையும், அம்மை குத்தப்பட்டவர்களித்தனை பெயரென்றும் இன்னும் வேறே முக்கியமான விஷயங்களையும் கர்ணன் எழுதவேண்டியது. இரண்டாவது கணக்கில் கர்ணன் பணியக்காரன்

இருவர்களும் கையெழுத்துச்செய்து முதலாவது கணக்குடன் ரெவினியூ இனிஸ்பெக்டருக்கனுப்பவேண்டியது. அவர் தன்னுடைய கணக்கில் எழுதவேண்டிய விஷயங்களை யெழுதிக்கொண்டு தன்னுடைய கையெழுத்துக் குறிப்போடு திருப்பி யனுப்பவேண்டியது.

45. 21 ம்-நெம்பர் ஸ்டேட்மெண்ட். இது இருவகைப்படும். (1) பட்டாதார், இனாம்தார் முதலியவர்களுடைய விவரங்களையும், (2) மேலெழுதித்தவர்களுக்கிருக்கிற விவசாய சம்பந்தமானகால்நடை முதலிய விவரங்களையும் காட்டவேண்டியது. அதற்காக ஏற்பட்ட கலங்கள் விவரமாயிருக்கின்றன. முதலாவது பிரிவு, 1 வது பாபத்தின்கீழ் ரயத்துவாரி பூமி பட்டாதாரர்களை தனிப்பட்டாதார் அல்லது கூட்டுப்பட்டாதார் என்கிற விவரத்தைப்பிரித்து எழுதவேண்டும். 2-வது பாபத்தின் கீழ், ஆயிட்ரெண்ட் கொடுக்கிற அல்லது கொடாத எல்லா இனாம்தாரர்களையும் தாக்கல் செய்யவேண்டியது. 3-வது பாபத்தின் கீழ் ஒரே நடவையாக சிலதொகையைக் கொடுத்து, ரயத்துவாரி நிலத்தின் தீர்வையாகிலும், இனாம் நிலத்தின் பேரிலுள்ள குயிட்ரேண்டையாகிலும், சாசுவதமாய் தன்னுடைய பேரிலுள்ள கொண்ட நிலங்களின் விவரங்களையுங் காட்டவேண்டியது. 4-வது பாபத்தின்கீழ் எழுதவேண்டிய விஷயம் அபூர்வமாயிருக்கும். தரிசுநிலங்களைப் பற்றிய விதிகள் அமுலிலிருக்கிற ஜில்லாக்களில் மாத்திரம் அந்த பாபத்தின்படி விவரமெழுதப்படும். இந்தப் பிரிவைச் சேர்ந்த 4-வது கலத்தில் கணக்கில் ரிஜிஸ்தரான பாகஸ்தர்களை மட்டும் சேர்க்க வேண்டியதேயல்லாமல், கணக்குகளிலே தங்கள்பெயர் நமூதில்லாமல் யாதொரு அனுபோகமாத்திரமிருக்கிறவர்களைச் சேர்க்கக்கூடாது. 2-வது பிரிவிலே, நான்கு வருஷத்திற்கு மேற்பட்ட வயதையுடைய மாடுகளை 2, 3, 4, 5, இந்தக்கலங்களில் எழுதவேண்டும். 4 வயதுக்குட்பட்ட மாடுகளை 6, 7, இந்தக்கலங்களில் எழுதவேண்டும். இந்தக் கணக்கை ஒவ்வொரு வருஷமும் தயார்செய்து, பிரதிவருஷத்திலும் ஏப்பிரல்மீ 15உக்குள் தாலுகாவிற் கனுப்பவேண்டும்.

46. 22 நெ. ஸ்டேட்மெண்ட். இதில், நல்லஸ்திதியிலும், தாரஸ்திதியிலுமிருக்கிற சொந்தமான சர்க்கார் தசபந்தம் ஜலாதாரவேலைகள் இத்தனையென்று காட்டுகிறது. மாதிரி நமூனாவில் கண்டிருக்கிறபடி ஜலாதாரங்களை அவைகளின் ஆயக்கட்டைப் பிரித்து தர்ஜேவாரியாய் பிரிக்கவேண்டியது. ஜலதாரங்களின் வாஸ்தவ ஸ்திதியை

யனுசரித்து, இந்தக்கணக்கைத் தயார்செய்து பசலிமுடிந்தபின் ஒருமாதத்திற்குள் தாலூகாவிற் கனுப்பவேண்டும்.

47. 23 நே. ஸ்டேட்மேண்ட். இது கிராமதர்ஜேவாரிக்கணக்கு. இதுவரையில் இந்தக்கணக்கு ஐந்துவருடத்திற் கொருதடவை தயார்செய்யப்பட்டது. இனிமேல் பிரதிவருஷமும் 12 நெ ஸ்டேட்மெண்டிலிருந்து தயார்செய்யவேண்டும். மேலாகள்போக பாக்கி பேரீஜ், அதாவது முஜராவும் தண்ணீர்த்தீர்வையும் சேர்ந்த ரயத்துவாரி பேரீஜை யனுசரித்து பட்டாதாரர்களை தர்ஜேவாரியா யெழுதவேண்டும்.

10-ம் அத்தியாயம்.

ரேவினியூ சேடில்மேண்டார், இரிகேஷன் ரேவினியூ கணக்குகளைத் தயார்செய்வதற்காக ஏற்படுத்தின விதிகள்,

இந்தக்கணக்கின் பிரயோசனமாவது:—

(1) ஒவ்வொரு நிலத்துக்கும் பாய்ச்சப்பட்ட ஜலத்தின் தீர்வை பூமிக்குள்ள தீர்வையில் இவ்வளவென்பதைக் காட்டுகிறது.

(2) பாய்ச்சலாதாரங்களைப் புதிதாயுண்டாக்குவதினாலாவது, பூர்வீக ஜலாதாரங்களை சீர்படுத்துவது அல்லது விருத்திபண்ணுவதினாலாவது உண்டாகிய பாய்ச்சல் விருத்தியையும், அதிக சாகுபடியையும் தெரிவிக்கிறது.

(3) அப்படிப்பட்ட பாய்ச்சலாதாரங்களினால் ஏற்பட்ட இலாப நஷ்டத்தைக் காட்டுகிறது. மேற்கண்டவைகளின் முதலாவது பாகத்தைப் பற்றி மாத்திரமே இதில் விதிகள் ஏற்படுத்தியிருக்கின்றன.

சென்னைபிராஜதானியில் ஜலம்பாய்ச்சப்பட்ட நிலங்களுக்கு இரண்டுவிதமாய் தீர்வை யேற்பட்டிருக்கின்றன.

(1) கிருஷ்ணா, கோதாவரி டெல்டாக்களில் பூமிதீர்வை வேறாகவும், ஜலத்தீர்வை ஒரேவிதமாய் ஏற்பட்டிருக்கின்றன.

(2) இந்த ராஜதானியில் மற்ற ஜில்லாக்களில், தண்ணீர் பாய்ச்சப்பட்ட பூமிகளுக்குப் பிரத்தியேகமாக பூமிக்கும், ஜலத்துக்கும் தீர்வை ஏற்படாமல் ஒரேமொத்தமாய் நன்செய்த்தீர்வை விதிக்கப்பட்டிருக்கிறது. இந்தக்கணக்கைத் தயார்செய்வதில் பூமித்தீர்வை, தண்ணீர்த்தீர்வை இவைகளைப் பிரிக்கவேண்டியதவசிய

யாதலால், இதனடியில் கண்டவிதப்படி அவைகளைப் பிரிக்கவேண்டும்.

மொத்தத்தீர்வை யேற்பட்டு ஜலம்பாய்கிற வெல்லா நிலங்களையும் நன்செய் நிலமென்றாவது, இருபோக நஞ்செய் நிலமென்றாவது கண்டு தீர்வை விதிக்கப்பட்டிருக்கிறது. அவைகளின் தீர்வையை பூமிக்கும், ஜலத்துக்கும் அடியில்கண்டபடி பிரிக்கவேண்டியது.

I. ஒருபோக நன்செய்.

(A) புதுசெடில்மெண்டாகாத விடங்களில் பாய்ச்சலாதாரம் எப்போது உண்டாயிற்றோ அல்லது விருத்திசெய்யப்பட்டதோ, அல்லது எதுமுதல் கணக்குகள் வைக்கப்பட்டிருக்கிறதோ, அவ்வருஷத்துக்குமுன் 5 வருஷத்திய புஞ்சைத்தீர்வையை சராசரிசெய்து கிடைத்த தீர்வைரேட்டை ஜலம்பாய்ந்த மொத்த விஸ்தீரணத்துடன் பெருக்கி, வந்த தொகையை நிலத்துக்குள்ள பாகமாகவும், பாக்கித்தொகையை நீருக்குள்ள பாகமாகவும் வைத்துக்கொள்ளவேண்டும். கிராமம் சராசரி நிர்ணயிக்கக்கூடாமையா யிருந்தால் தாலூகா சராசரியையாவது அதுவுமில்லாவிட்டால் ஜில்லா சராசரியையாவது எடுத்துக்கொள்ளவேண்டும்.

எப்படியெனில் :—மேற்சொன்ன பிரகாரம் தீர்மானிக்கப்பட்ட சராசரி புன்செய் ரேட்டு ஏகர் 1-க்கு 3 ரூபா என்றும், மொத்தம் 1000 ஏகர் நன்செய்க்கு ரூபா 10000 தீர்வையென்றுவைத்துக்கொள்வோம். இந்த 10000 ரூபாயில் நிலத்தின் தீர்வை ரூபா 3000 போக பாக்கி ரூபா 7000 நீருக்குள்ள தீர்வையென்று யேற்படுகிறது.

(B) புதுசெடில்மெண்டான விடங்களில் நன்செய்வகுப்புக்கும் இனத்துக்கும் அந்த கிராமப் புன்செய்குறிப்பை யனுசரித்து என்ன புன்செய்த்தீர்வை விழுமோ அதை நிலத்துக்கும், மொத்தத்தீர்வையின் மற்ற பாக்கியை நீருக்கும் வைக்கவேண்டியது.

எப்படியெனில் :—ஒருகிராமத்தில் 10000 ரூபா மொத்தத்தீர்வையுள்ள நஞ்சை ஆயிரம்ஏகரா யிருப்பதாகவும், புஞ்சைக்கு ஏகர் 1 - க்கு ரூ. 2. தீர்வையேற்பட்டிருக்கிறதாக வைத்துக்கொள்வோம். மேற்படி மொத்தத் தீர்வையில் (2000) ரூ. நிலத்துக்கும், பாக்கி (8000) ரூபா நீருக்கு மேற்படுகிறது.

II. இருபோக நன்சேய்.

இரண்டுதரம் நன்செய்ப் பயிரை இருபோக நிலங்களில் பிரதிவருஷமும் சாகுபடி செய்யப்படுகிறதென்கிற உத்தேசத்தினால் இரண்டுபோகத்துக்கும் சேர்ந்து மொத்தத் தீர்வை யேற்பட்டிருக்கிறது.

(1) சென்னை ராஜதானியில் சர்க்கார் ஜலமில்லாமல் முதல் போக நன்செய் நிலத்தில் எவ்விதமான இரண்டாம் போகம் சாகுபடி பண்ணினாலும் அதற்காகத் தீர்வை வசூல்செய்கிறதில்லை யென்பதால், இரண்டாம்போகத் தீர்வை முழுவதும் தண்ணீர்த் தீர்வை யென்றே எண்ணவேண்டும். சாசுவத இருபோக நிலத்தீர்வையைப் பிரிப்பதற்கு, நாம் முதலில் இரண்டாம் போகத்துக்கு உள்ள பாகத்தை நிச்சயஞ்செய்துகொள்ளவேண்டியதாயிருக்கிறது. அது விஷயத்தில் யாதொரு சிரமமுமில்லை.

(2) திருநெல்வேலிதவிற மற்ற எல்லா ஜில்லாக்களிலும் சாசுவத இருபோக நிலத்தின் தீர்வையானது, அதே வகுப்பும் இனமுமுள்ள ஒருபோக நிலத்தின் தீர்வைக்கு ஒன்றரைமடங்காயிருக்கிறது. ஆகையால் இருபோக நிலத்தின் தீர்வையில் மூன்றில் ஒருபங்கு சாதாரணமாய் இரண்டாம்போகத் தீர்வையாக இந்த ராஜதானி முழுமைக்கும் மாமூலாயிருக்கிறது.

திருநெல்வேலி ஜில்லாவில் இருபோக நிலத்தின் தீர்வையானது, ஒருபோக நிலத்தீர்வையைக் காட்டிலும் மூன்றில் இரண்டு பங்கு அதிகமாயிருக்கிறது. ஆகையால் இருபோக நிலத்தின் மொத்தத்தீர்வையில் 5-பங்கு மாமூல் இரண்டாம்போகத் தீர்வையாகிறது.

(3) புது செடில்மெண்டானவிடங்களில் இருபோக நிலங்களுக்கு இரண்டாம்போகத் தீர்வை சாசுவதமாய் எற்பட்டிருக்கிறது. இரண்டாம் போகத்துக்கு வேண்டிய தண்ணீர் எந்தெந்த விடங்களில் நிச்சயமாய்க் கிடைக்கமாட்டாதோ, அந்தவிடங்களில் ஜலக்குறைவுக்குத் தக்கபடி மாமூலான தண்ணீர்த் தீர்வைக்குக் குறைந்த தீர்வையை சாசுவதமாய் ஒப்புக்கொள்ளும்படி அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்படி சாசுவதத் தீர்வைக்கு ஒப்புக்கொண்டவைகளில் உயர்ந்த ரேட்டு திருநெல்வேலியில் முதல்போகத் தீர்வையில் பாதியாகவும், மற்ற ஜில்லாக்களில் 3-ல் ஒருபங்கும், அதற்குக் கம்மியாகவுமிருக்கிறது.

(4) முதல்போகத் தீர்வையில் பாதியாக இருக்கும்போது, இரண்டாம்போகத் தீர்வை, மொத்தத்தீர்வையில் 4-ல் ஒரு பங்கா கிறது.

(5) முதல்போகத் தீர்வையில் 3-ல் ஒரு பங்காயிருக்கும் போது, இரண்டாம்போகத் தீர்வை மொத்தத் தீர்வையில் 4-ல் ஒருபங்காகிறது.

(6) கிருஷ்ணு கோதாவரி டெல்டா நிலங்களில்கூட சாசுவத இருபோகத் தீர்வைக்கு ஒப்புக்கொண்டிருக்கிறூர்கள். அப்படி அவ்விடங்களில் குறைந்த தீர்வைக்கு ஒப்புக்கொள்ளும்படி செய்தது ஜலக்குறைவினுலல்ல; ஆனுல் இரண்டாம்போகம் நெற்பயிர் சாகுபடிசெய்ய முயற்சிசெய்வதற்காகவும், அல்லது வருஷ முழுமையும் ஜலம்வேண்டியிருக்கிற கரும்பு, வாழை, வெற்றிலே, முதலான முக்கியமான சில விசேஷப் பயிர்களை சாகுபடிசெய்ய தூண்டும்பொருட்டே குறைந்த தீர்வைக்கு ஏற்பாடுசெய்திருக்கிறது.

(7) மேலும் கிருஷ்ணு கோதாவரி டெல்டாக்களிலும், மற்றவிடங்களிலும் குறைந்த தீர்வை யேற்படுத்தியிருப்பதில் வேறொரு வித்தியாசமிருக்கிறது. அதாவது:—கிருஷ்ணு கோதாவரி டெல்டாக்களில் 5-வருஷத்துக்குக் குறையாமல் குறிப்பிட்டகாலம்வரைக்கும் அவ்விதங் கொடுக்கப்படுகிறது. மற்றவிடங்களில் புது செடில்மெண்டிருக்கிற காலம்வரையிலுமிருக்கிறது.

(8) முதல் போகத்தின் தீர்வையை மொத்தத் தீர்வையில் மேற்சொன்ன மாதிரியாய்ப் பிரிக்கவேண்டியது. அதாவது:— மாமூல் இருபோக ரேட்டுப்பிரகாரம், இருபோக சாகுபடியுள்ள ஒரு ஏகர் நன்செய்யின் மொத்தத் தீர்வை 18 ரூபாயாகவிருந்தால், மூன்றிலொருபங்கு 6 ரூபாய் இரண்டாம்போகத் தீர்வையாகிறது. அதே வகுப்பும் இனமுமுள்ள ஒரு ஏகர் புஞ்சைநிலத்தின் ரேட்டு 4 ரூபாயாகவிருந்தால், இவ்விதம் மொத்தத் தீர்வையை பாகிக்கும்போது அடியில்கண்டமாதிரியாய் ஏற்படுகிறது.

முதல்போகத் தீர்வை.			இரண்டாம்போகத் தீர்வை.	
நிலத்தின் தீர்வை.	தண்ணீர்த் தீர்வை.	மொத்தம்.	தண்ணீர்த்தீர்வை.	முழுமொத்தம்.
ரூபாய் 4.	ரூபாய் 8.	ரூ 12.	ரூபாய் 6.	18.

(9) இனும் நஞ்சை அதாவது தீர்வையினும் செய்யப்பட்டு ஜலம் பாய்ச்சப்பட்ட நிலங்களின் குயிட்ரெண்ட் மேலே சொன்ன மாதிரியாக பங்கிடவேண்டியது. இனும் ஒருபோக நிலங்களின் குயிட்ரெண்டை 3-ல் 1-பங்கு நிலத்துக்கும், மற்ற மூன்றிலிரண்டு பங்கு ஜலத்துக்குமாக பாகிக்கவேண்டியது. இருபோக இனும் நிலங்களின் மொத்த குயிட்ரெண்டின் மூன்றிலொருபங்கை இரண்டு போகத்துக்கும், பாக்கி மூன்றிலிரண்டுபங்கை ஒருபோக நிலமாதிரியாய் பங்கிடவேண்டியது.

(10) ஜமீன் கிராமங்களில் தீர்வையில்லாமல், பாய்ச்சலுள்ள மாமூல் நன்செய் நிலங்களின் பேஷ்கிஸ்திதியை நீருக்கும் பாகிக்க ஆதாரமில்லாததால், அதைக்குறித்து முயற்சிசெய்வதில் பிரயோசனமில்லை. அப்படிப்பட்ட நிலங்களின் விஸ்தீரணத்தை மாத்திரம் தாக்கல்செய்யவேண்டும்.

(11) பிரத்தியேகமாய் போட்டிருக்கிற தண்ணீர்த் தீர்வையும், மேற்சொன்னவிதமாக மொத்தத் தீர்வையிலிருந்து பங்கிட்டு எடுக்கப்படுகிற தண்ணீர்த் தீர்வையும் சேர்ந்து நஞ்சை நிலங்களுக்கு நீருக்குள்ள பாகமாகிறது.

(12) இந்த ரெவினியூ கணக்குத் தயார்செய்வதற்கு எ. நமூனுபாரம் ஒன்றே எல்லா பாய்ச்சலாதாரங்களுக்கும் போதுமானதாயிருக்கிறது.

III. சர்க்கார், ஜமீன்தாரி, இனும் இவைகளின் பாய்ச்சல் விவரம்.

(A) சர்க்கார்.

(1) மாமூல் நஞ்சை, அதாவது, புதுப்பாய்ச்சலாதாரம் ஏற்பட்டதினுல் எடுபட்டுப்போன மற்றப் பாய்ச்சலாதாரத்தினுல் ஜலம் பாய்ச்சப்பட்டு கைப்பற்றினுமிருந்து, இப்போது பாய்ச்சலாதாரமுண்டானபிறகு இதனுல் பாய்ச்சப்பட்டு விடாமல்கைப்பற்றிலிருந்துகொண்டிருக்கிற நிலம்.

(2) புன்செய்யில் நன்செய்யும், புன்செய்ப்பயிருக்கு ஜலம்பாய்ச்சுவதும், அதாவதுமுதல் தடவை ஜலம்பாய்வதற்குமுன் கைப்பற்றிலிருந்த நிலம்.

(3) தரிசுசாகுபடி, அதாவது, பாய்ச்சலுக்கு வரும்போது தருசாயிருந்த நிலம்.

(4) சில்லரை விஷயங்கள், அதாவது மேற்சொன்ன பாபத்துகளாயிராத (பட்டாவில் சேராத).எல்லா பாபத்துகளும்.

(B) (1) ஜமீன்தாரி இனும் இரண்டு வகைப்படும் (1) ஜலம் பாய்ச்ச தீர்வை போடப்பட்டது.

(2) தீர்வையன்னியில் ஜலம் பாய்ச்சப்பட்டது. தீர்வையன்னியில் ஜலம் பாய்ச்சப்பட்ட நிலமானது சர்க்கார் மாமூல் நஞ்சைக்குச் சமானம். பாய்ச்சலேற்படுவதற்கு முன்னிருந்த ஜமீன்பாய்ச்சல் இதனால் எடுபட்டுப் போய்விட்டபடியால், அதற்குப் பிரதியாய் அப்படிப்பட்ட பாய்ச்சலுள்ள நிலங்களுக்குத் தீர்வை தள்ளுபடியாயிருக்கிறது. சர்க்காரர்ப் பாய்ச்சலுண்டானது முதல் ஜலம் பாய்ந்துவருகிற நிலம்மட்டும், தண்ணீர் பாய்ந்து தீர்வை யேற்பட்ட அம்சத்தின்கீழ் வருகிறது.

(5) நன்செய்களுக்கு தண்ணீர் பாய்ந்ததற்குள்ள பாகத்திலிருந்து சிலவஜாக்கள் வருஷவாரி செய்யப்படுகின்றன. அவைகள் மூன்றுவிதம். அவைகளாவன :—காயம், ஆங்காமி, காலஸ்திதியை யனுசரித்து கிரமமாய்ச் செய்கிற வஜா.

காயம் வஜா என்பது (1) கிருஷ்ணு கோதாவரி டெல்டாக்களிலுள்ள ஜமீன்தாரிகளின் சொத்துக்களில் தீர்வை யேற்பட்டிருக்கிற நிலங்களுக்கு, தண்ணீர்த் தீர்வை வசூல் செய்வதற்காக ஜமீன்தாரர்களுக்கு 100-க்கு 10 வீதம் தள்ளிக்கொடுக்கிற காயம் வஜா. (2) கிருஷ்ணு ஜில்லா குடிவாடா தாலூகா கோலேர் பாகத்தில், பாது இனும் தாரர்களுக்குத் தள்ளிக்கொடுக்கிற தொகையில் ஜலத்துக்குள்ள பாகம் காயம் வஜா, சால்வ் அல்லது முதல் போகத் தீர்வையில் 100 - க்கு $6\frac{1}{4}$ வீதமும், தாள்வா அல்லது இரண்டாம் போகத் தீர்வையில் 100 - க்கு $12\frac{1}{2}$ வீதமும் தள்ளிக்கொடுக்கப்படுகிறது. (3) நன்செய் நிலங்களின் மொத்தத் தீர்வையிலிருந்து கழிக்கப்பட்டுக் கொடுக்கிற மேரை அல்லது கிராமவுத்தியோகஸ்தர்களின் சம்பளத்தில் பாய்ச்சலுக்குள்ள பாகம் காயம் வஜா. (4) மொத்தம் நன்செய்த் தீர்வையுடன் சேர்க்கப்பட்டும், அதிலிருந்து கழிக்கப்பட்டுமிருக்கிற ரோட்செஸ்ஸில் பாய்ச்சலுக்குள்ள பாகம் காயம் வஜா.

குறிப்பு :—கோதாவரி ஜில்லாவில் நிலத்தீர்வையுடன் சேர்ந்திருக்கிற ரோட் செஸ்ஸையும், கிருஷ்ணு ஜில்லா மசிலிபட்டணம் பாகத்தில் நிலத்தீர்வையுடன் சேர்ந்திருக்கிற ரோட்செஸ்ஸையும், வில்லேஜ் செஸ்ஸையும் காயம் வஜாவின்கீழ் கொண்டுவரவேண்டியதில்லை. அவைகளை நிலத்தீர்வையிலிருந்து கழித்து, பாக்கித்தொகையை கணக்கில் தாக்கல்செய்யவேண்டியது.

(6) விடுபட்ட ஜில்லாக்களில் தசபந்தம் தாரர்களுக்குக் கொடுக்கப்படும் வஜா காயமானது.

(7) அங்காமிவஜா:—நடநீர் பாயாத மேடான விடங்களில் குடிகள் சொந்தச்சிலவு செய்து தண்ணீரிறைத்துக் கொள்ளுகிறார்கள். அதற்காகத் தள்ளிக்கொடுக்கப்பட்டது அங்காமிவஜா. மேற்படி விஷயத்துக்காகத் தள்ளிக்கொடுப்பது சாதாரணமாய் ஏகர் 1-க்கு ரூபா ஒன்று. சிலசெடில் மெண்டுகளில் மொத்தத் தீர்வையில் கால்பங்காகவு மிருக்கிறது.

குறிப்பு—செடில்மெண்டு ஜாஸ்தியை சிலகெடுவுக்குள் செலுத்தும்படியாய் ஏற்பட்டிருக்கிற த்றகதியல்லது முனைசப் கம்மியை இந்த வஜாவின்கீழ் கொண்டுவரக்கூடாது. மொத்த நன்செய்த் தீர்வையிலிருந்து அந்தந்த வருஷத்து கம்மியைக் கழித்துவிட்டு பாக்கியை யிந்தக் கணக்கில் கொண்டுவரவேண்டியது.

(8) காலஸ்திதிவஜா:—அதிக ஜலத்தினால் வெள்ளப் பாழானபோதாவது, ஜலமில்லாமல் காய்ந்து சாவியாய்ப் போனபோதாவது க்ஷாமம் உண்டாகி காலஸ்திதி கெடுதலாயிருந்தபோதாவது கொடுக்கப்பட்ட கிரமமான வஜாவுக்கும், வாபீசு கொடுக்கப்பட்டதுகைக்கும் காலஸ்திதி வஜாவென்று பெயர்.

(9) வெள்ளப் பாழுக்காகக் கொடுக்கப்பட்ட வஜாக்களில், நிலத்துக்குள்ள பாகத்தையும் நீருக்குள்ள பாகத்தையும் சேர்த்து, இரிகேஷன் ரிவினியூ அதாவது ஜலத்துக்குள்ள பாகத்திலிருந்து கழிக்கவேண்டியது. இந்த இராஜதானியில் வழக்கமாய் நிலத்தீர்வைக்குமாத்திரமேயல்லது தண்ணீர்த் தீர்வையையும் சேர்த்து வஜாகொடுக்கப்படுகிறது. வெள்ளப்பாழினாலாவது, ஜலத்தட்டினாலாவது நேர்ந்த நஷ்டம் பாய்ச்சலாதாரத்தைச்சேர்ந்த நஷ்டமாயிருப்பதால், வஜாசெய்யப்பட்ட முழுமொத்தத்தையும் இரிகேஷன் ரெவினியூவிலிருந்து கழிக்கவேண்டும். பாய்ச்சல்குறைவு அல்லது இதர காரணங்களுக்குக் கொடுக்கப்படுகிற வஜாவில் நீருக்குள்ள பாகத்தைமாத்திரமே கழிக்கவேண்டியது.

வாபீசு கொடுக்கப்பட்டது என்கிற விஷயத்தை விவரித்துக் காட்டவேண்டியதில்லை.

(9) கைப்பற்று விவரத்தில் வருஷப்பயிரென்கிற பாபத்தில், வருஷ முழுமைக்கும் ஜலம்வேண்டிய கரும்பு, வெற்றிலை, வாழை

முதலான விசேஷப் பயிர்கள் விளையப்பட்ட நிலங்களின் மொத்த விஸ்தீரணத்தை தாக்கல்செய்யவேண்டியது.

(10) சாதாரணமாய் மொத்தத் தீர்வை முதலில் நிலத்துக்கும், தண்ணீருக்கும் பாகிக்கப்படுகிறது. ஆனால், சில நீராதாரத்தின் கீழ் பூமிக்கும் தண்ணீருக்குமுள்ள பாகத்தை பின்னும் பாகிக்கவேண்டியதாயிருக்கிறது.

(11) கிருஷ்ணாஜில்லா, ரேபல்லி, பாபட்லா இந்தத் தாலூக்காக்களின் சில கிராமங்களிலுள்ள புஞ்சை நிலங்களுக்கும், தரிசுநிலங்களுக்கும், அணைக்கட்டு ஜலம் பாய்ந்தால், அந்த நிலங்களின் தீர்வை 1872ளுத்து பேமீ 14௳ 798 நெ. கவரன்மெண்டு உத்திரவுப்பிரகாரம் இரண்டாவது வகுப்பு ரேட்டிலிருந்து முதல்வகுப்பு ரேட்டுக்கு உயர்த்தப்படுகிறது. இது விஷயத்தில்தான் நிலத்தீர்வை பின்னும் கீழே குறித்தமாதிரியாய் பிரிப்பது முக்கியமாயிருக்கிறது.

நிலத்தீர்வை { மாமூல். / தண்ணீர் பாய்ந்ததற்காக அதிகம்.

ஷை ஜாஸ்தியை நிலகிஸ்தியுடன் சேர்த்திருக்கிறபடியால், இது பரோட்சமாய் ஜாஸ்தியாய்வந்த பூமித்தீர்வையென்று பாய்ச்சலாதாரத்தின் கணக்கில் தாக்கல்செய்யவேண்டும்.

(12) ஷை ஜில்லா பந்தர், குடிவாடா இந்த தாலூகாக்களிலுள்ள சில பாகங்களில் சில நஞ்சைகள் புது செடில்மெண்டான காலத்தில் அணைக்கட்டு ஜலம் நாளதுவரையில் பாயாமலேயிருக்கிறபடியால், அப்படிப்பட்ட நிலங்களை பாய்ச்சல் குறைவுள்ள பூமியென்றேற்படுத்தி, அவைகளுக்கு அணைக்கட்டு ஜலவரியில் 3 - ல் 2-பங்கு தீர்வை ஏற்பட்டிருக்கிறது. இந்த பூமிகளுக்கு அணைக்கட்டு ஜலம் பாயும்போது, பூரா தண்ணீர்த்தீர்வை யேற்படுகிறது. இந்த ஜலவரி முழுரேட்டுக்கும் குறைந்த ரேட்டுக்கும் உள்ள வித்தியாசமானது பாய்ச்சலாதாரக் கணக்கில் பிரத்தியட்சமாய் வந்தவரவென்று கொண்டுவரப்படுகிறது. இதற்குத் தண்ணீர்த்தீர்வை கீழேகுறித்த மாதிரியாய் பிரிக்கவேண்டியது.

தண்ணீர்த் தீர்வை { மாமூல். / பூர்த்தியாய் ஜலம் பாய்ந்ததற்காக அதிகம்.

மேலே காட்டியபடி பாய்ச்சலாதாரங்களினால் ஜலம் பாய்ச்சப்படும் நிலங்களின் தீர்வை மொத்தமாயேற்பட்டும், பாய்ச்சலுண்டானபிறகு அவைகளை மாற்றி அதிகப்படுத்தியுமிருக்கிறது. அப்படி அதிகஞ்செய்ததில், பாய்ச்சல்விருத்தியை யனுசரித்துத் தீர்வை விருத்தியம்சமும் சேர்ந்திருக்கிறது. பாய்ச்சல் விருத்தியாகாமலிருந்தால் அது எந்த வகுப்பில் சேர்க்கப்படுமென்றும், விருத்திசெய்தால் எந்த வகுப்பில் சேர்ந்திருக்கிறதென்றும் அறிந்துகொண்டு, மேற்கண்ட அம்சத்தை நிர்த்தாரணஞ் செய்யவேண்டியது. இது விஷயத்தில் ஜலத்துக்குள்ள பங்கானது மறுபடியும் அடியில்கண்ட மாதிரியாய் இந்த ஆபீசு கணக்கில் பிரிக்கவேண்டியது.

நீருக்குள்ள பாகம் { மாமூல்.
செடில்மெண்ட் அதிகம்.

இந்தப் பாய்ச்சலாதாரங்களுக்கு ஜில்லாக்களிலிருந்து அனுப்பும் கணக்குகளில் குறிப்புவாரியாய் அந்தந்த வகுப்புக்கும் இனத்துக்குமொத்த விஸ்தீரணத்தை தாக்கல்செய்வது போதுமானது.

(13) எ. ஸ்டேட்மெண்ட் தயார்செய்வதற்குமுன், நிலவாரி விவரமுள்ள பி. ஸ்டேட்மெண்டு தயார்செய்வது முக்கியமாயிருக்கிறது. எந்தவருஷம் முதல் கணக்கு வைக்கப்படுகிறதோ அந்த வருஷம் முதல் மாத்திரம் நிலவாரி விவரம் தயார்செய்வது போதுமானது. பின்னிட்ட வருஷங்களுக்கு கீழே காட்டியவிதமாய் கம்மி ஜாஸ்தியைக் காட்டலாம்.

பிராக்படி—கம்மி ராஜிநாமா முதலானது.
(இதற்கு நம்பர்வாரி)
பாக்கி— ஜாஸ்தி.
(இதற்கு நம்பர்வாரி.)
நாளது வருஷத்துக்கு மொத்தம்.

ஒவ்வொரு வருஷத்திய அடங்கல் கணக்கு முடிந்தபிறகு அதிலிருந்து பி. ஸ்டேட்மெண்ட் தயார்செய்து அதை எ. ஸ்டேட்மெண்டுடன் ஒவ்வொரு வருஷமும் ஜூன்மீ 30உக்குள் தாசில்தாருக்குக் கர்ணன்களனுப்பவேண்டியது.

(14) 1882ளு நவம்பர்மீ 11உயுள்ள 9181-நெ. மராமத்திலாகா உத்திரவுமூலமாய் தெரிவித்திருக்கிற ஸ்டேட் செகிரிடெரி உத்திரவின்படி, தண்ணீர் பாயப்பட்ட நிலங்களில் வருஷத்திலுண்

டான பயிரின் மாதிரியும், மொத்த மாசூலும், காலக்கிரயமுந் தெரியவேண்டியிருக்கிறது. இந்த விவரங்களை தாக்கல்செய்வதற்கு ஏ. ஸ்டேட்மெண்டின் பின்புறத்தில் பாரமச்சிட்டிருக்கிறது.

(15) ஒரு கிராமத்தின் பாய்ச்சல் விவர முழுமையும் பி. ஸ்டேட்மெண்டில் தாக்கல்செய்யலாம். ஆனால், பத்து ஏகருக்கு மேல் ஆயக்கட்டுள்ள ஒவ்வொரு பாய்ச்சலாதாரத்துக்கும் எ. ஸ்டேட்மெண்டு பிரத்தியேகமாய் அனுப்பவேண்டியது. பத்து ஏகர் அல்லது அதற்குக் குறைந்த ஆயக்கட்டுள்ள பாய்ச்சலாதாரங்களுக்கு மொத்தமாய் கணக்கு தயார்செய்யலாம். ஆனாலவைகளின் பெயரைமாத்திரம் ஷரா கலத்தில் காட்டவேண்டியது.

(16) 1880ளு ஜனவரிமீ 29உயுள்ள 154-நெ. போர்டாருடைய புரோசிடிங்ஸில் ஏற்படுத்தியிருக்கிறபடி பாய்ச்சலாதாரத்தின் வரவை எ. ஸ்டேட்மெண்டின் தலைப்பில் காட்டவேண்டியது.

(1) நதி, ஆறு இவைகளிலிருந்து வரப்பட்ட பாய்ச்சலாதாரங்கள்.

(2) மழைஜலம் நிரம்பப்பட்ட ஏரி, குளம் முதலியவைகள்.

(3) ஷை தனி ஏரிகள்.

(4) மற்ற சில்லரை பாய்ச்சலாதாரங்கள்.

(17) முக்கியமான ஒரு பாய்ச்சலாதாரம் அல்லது கால்வாய் ஜலம் ஒரு கிராமத்துக்கு மேற்பட்டு பல கிராமங்களுக்குப் பாய்ந்தால், அப்படிப்பட்ட பாய்ச்சலாதாரம் அல்லது கால்வாயின் பெயரையே அது பாயப்பட்ட ஒவ்வொரு கிராமத்தின் எ. ஸ்டேட்மெண்டின் தலைப்பில் காட்டவேண்டியது.

(18) தனித்தனியாக சர்க்காருக்கு கணக்கு அனுப்பவேண்டிய பாய்ச்சலாதாரங்களைச் சுலபமாய்த் தெரிவிக்கும்படியாய் அவைகளில் ஜாபிதா சேர்க்கப்பட்டிருக்கிறது.

(19) பாய்ச்சல் விஸ்தீரணத்தில் வருஷவாரி கம்மி ஜாஸ்திக்குக் காரணங் காட்டவேண்டியது. மேலும் கிராமக் கணக்குகளை இவ்விடமனுப்புவதற்குமுன் அதில் தாக்கலாயிருக்கிற தொகைகள் ஜமாபந்தி கணக்குகளுக்கு ஒத்துமையாயிருக்கிறதாவென்று தாசில்தார் பார்க்கவேண்டியது.

(20) பிரதி கிராமத்திய எ. பி. ஸ்டேட்மெண்டுகளும், பிரதி வருஷத்தின் ஜூலைமீ 7உக்குள் தாலூகா கச்சேரியிலிருந்து கவர்ன்மெண்டுக் கனுப்பவேண்டும்.

PART II.

MADRAS.

ACT No. II OF 1864

சென்னபட்டணம்.

1864ஆம் வருஷத்து 2 - வது ஆக்டு.

சென்னபட்டணத்தைச் சேர்ந்த ராச்சியத்தில் சர்க்கார் தீர்வை பாக்கியை வசூல் செய்வதற்காக உண்டாயிருக்கிற சட்டங்களை ஒன்றாய்ச் சேர்ப்பதற்கான ஆக்டு.

சர்க்கார் தீர்வையை வசூல் செய்வதைக்குறித்த சட்டங்களைச் சீர்ப்படுத்தி ஒன்றாய்ச்சேர்ப்பது தகுதியாயிருக்கிறபடியால் இதனால் விதிக்கப்படுகிற தென்னவென்றால் :—

1. இந்த ஆக்ட்டில் பிரயோகமாயிருக்கிற பூமிக்குடையவனென்னும் வார்த்தையானது எப்படிப்பட்டவனென்று அர்த்தஞ் செய்துகொள்ளப்படுமென்றால்,—

மில்கதிஸ்தி மீராசன்னதின்படி அனுபவிக்கிற சகலமானவர்களும் மற்றெல்லா ஜமீன்தார்களும், சுரோத்திரியம்தார்களும், ஜாகீர்தார்களும், இனாம்தார்களும், சர்க்காரிடத்தில் பூமிபேரீசு குத்தகை செய்துகொள்ளுகிற சகலமானவர்களுமென்றும், ரயித்துவாரி திட்டப்படிக்காவது சர்க்காருக்கு நேராய்த் தீர்வை செலுத்தும்படியான வேறே எவ்விதமாகவாவது பூமியை அனுபவிக்கிற எல்லோருமென்றும் அர்த்தமாகும். நிலத்தின்பேரில் பாக்கியாயிருக்கிற சர்க்கார் தீர்வை என்பது இந்த ஆக்ட் டில் சொல்லியிருக்கிற காரியங்களின் பொருட்டு, பாய்ச்சலுக்காக சேகரிக்கப்பட்ட தண்ணீரைக்குறித்து செலுத்தப்படத்தக்கவரி இறை முதலானதுகளென்றும் அர்த்தமாகும்.

2. நிலமும், அதின்பேரிலிருக்கிற கட்டிடங்களும், அதிலுண்டாகிற மாசூலும் சர்க்கார் தீர்வைக்கு ஈடாக எண்ணப்படும்.

3. பூமிக்குடையவனாகிய பிரதிமனிதனும் தன்னிலத்துக்கு பாக்கியாயிருக்கிற தீர்வையை கிஸ்திபந்திப் பிரகாரமாவது வேறே யாதொரு உடன்படிக்கைப் பிரகாரமாவது வாயிதா ஆய்விடுகிறதே

தியிலாகிலும் அதற்கு முன்னிட்டாகிலும் கலெக்டரிடத்திலாவது அதை வாங்கிக்கொள்ளும்படி அவரால் நேமிக்கப்பட்ட வேறே உத்தியோகஸ்தரிடத்திலாவது செலுத்தவேண்டியது; அப்படி தேதி நிஷ்கரிஷை செய்யப்படாதிருந்தால், ஊர்வழக்கப்படிக்கு அந்தத்தீர்வையைச் செலுத்தவேண்டியவாயிதா ஆய்ப்போவதற்குள் செலுத்தவேண்டியது. ஆனால், மில்கதிஸ்திமீரார் சன்னதின்படிக்காவது அப்படிப்பட்ட வேறே யாதொரு சாசனத்தின்படிக்காவது பூமிய னுபவிக்கப்படுகிற விஷயத்தில் தவிர மற்ற விஷயங்களிலே அந்தந்த கிஸ்தி அல்லது வாயிதாத்தொகையையும், அந்தந்த தொகை செலுத்தப்படவேண்டிய தேதிகளையும் டிஸ்திரிக்ட்டு கெஜட்டில் பிரசித்தஞ்செய்வித்து அப்போதைக்கப்போது நிச்சயிக்கவும் மாற்றவும் ரிவினியூபோர்டாருக்கு அதிகாரமுண்டு.

4. யாதொரு கிஸ்திமுழுமையுமாவது அதில் எவ்வளவாவது மேற்சொல்லியபடி செலுத்தப்படாதிருந்தால் அப்படி செலுத்தப்படாதிருக்கிற தொகையானது தீர்வைபாக்கி என்று எண்ணப்படும்.

5. சர்க்கார்தீர்வை பாக்கியிருந்தால், அந்தபாக்கிதாரனுடைய ஸ்தாவரஜங்கம சொத்துக்களை ஏலத்தில்விற்றுவது, இதில் பின்னால் சொல்லியிருக்கிறபடி பாக்கிதாரனைக் காவலில் வைத்தாவது, அந்த பாக்கியையும் அதற்கு வட்டியையும் நடவடிக்கை நடத்துவதற்குண்டான செலவுகளையும் வசூல் செய்யத்தொடங்குவதற்கு கலெக்ட்டருக்காகிலும், வசூல் செய்யும்படி கலெக்ட்டரால் அதிகாரங் கொடுக்கப்பெற்ற வேறே யாதொரு அதிகாரிக்காகிலும் அதிகாரமுண்டு.

6. பாக்கிதாரன் மில்கதிஸ்திமீரார் சன்னதின் படிக்காவது அப்படிப்பட்ட வேறே யாதொரு சாசனத்தின்படிக்காவது அனுபவித்துக்கொண்டிருந்தால், அந்த சன்னதிலுள்ள ஷரத்துகளின்படி பாக்கியை வசூல் செய்யலாகும். மற்ற பாக்கிதாரர்களின் விஷயத்தில் கலெக்ட்டராவது-பாக்கியை வசூல் செய்யும்படி கலெக்ட்டரால் அதிகாரம் கொடுக்கப்பெற்ற வேறே யாதொரு அதிகாரியாவது-தனக்கு யுக்தமாகத்தொற்றுகிறபடி அந்த பாக்கிதாரனுடைய அசையும் பொருளையாகிலும் அசையாப் பொருளையாகிலும் அவ்விரண்டையுமாகிலும் ஏலத்தில் விற்று அந்த பாக்கியை வசூல் செய்யத்தொடங்கலாம்.

7. சர்க்கார் தீர்வை பாக்கிக்கு-வருஷ மொன்றுக்கு நூற்று க்கு ஆறுவிழுக்காடு வட்டிபோடப்படும்.

8. சர்க்கார் தீர்வைக்காக அசையும்பொருளை ஜப்திசெய்து ஏலத்தில் விற்கிறபட்சத்தில் அடியில் கண்டிருக்கிற நிபந்தனைகளின் படி நடப்பிக்கவேண்டும்.

முதலாவது. கலெக்ட்டராவது, தண்டல் பத்திரிகை கொடுக் கும்படி கலெக்ட்டரால் நேமிக்கப்படுகிற வேறேயாதொரு அதிகாரி யாவது தண்டல் பத்திரிகையெழுதி, அதில் பாக்கிதாரனுடைய பே ரையும், எதற்காக ஜப்திக்கு உத்தரவு பிறப்பிக்கப்படுமோ அந்த பாக்கித்தொகையையும், அந்த பாக்கிக்கு வாயிதா ஆய்விட்ட தேதி யையுங்கண்டு, தன்னுடைய பேரால் கையெழுத்துப்போட்டு, ஜப்தி செய்யப்போகிற மனிதனுக்குக் கொடுக்கவேண்டியது. ஜப்திசெய் யப்போகிறவன் அந்த தண்டல்பத்திரிகையைக்காட்டி 52-வது பிரி வின்படி அந்த பாக்கியும் தனக்குச்சேரவேண்டிய படிச்செலவும் உடனே செலுத்தப்படாவிட்டால், அந்தப் பத்திரிகையை ஜப்தி செய்வதற்கு தனக்கு அதிகாரபத்திரமாக வைத்துக்கொண்டு சொ த்தை ஜப்திசெய்கிற தேதியில் அந்தப் பத்திரிகைக்கு நகலெழுதி, அந்த நகலின்மேல் ஜப்திசெய்யப்படுகிற சொத்தின் விவரத்தையும், அந்த சொத்து வைத்துவைக்கப்படுகிற இடத்தையும் கண்டெழுதி அந்த பாக்கிதாரனுக்குக் கொடுக்கவேண்டியது.

இரண்டாவது. அந்த பாக்கித்தொகையும் அதற்கு வட்டியும் படிச்செலவும் ஜப்திச்செலவும் ஏலத்திற்கு முன்னமே செலுத்தப்ப டாவிட்டால், ஜப்திசெய்யப்பட்ட சொத்து உடனே ஏலத்தில் விற் கப்படுமென்றும் அந்தப் பத்திரிகையில் எழுதவேண்டியது.

மூன்றாவது. பாக்கிதாரன் ஆஜரில்லாவிட்டால் அந்தப் பத்தி ரிகையின் நகலை அதின்மேலெழுதப்பட்ட ஜப்திசொத்தின ஜாபிதா வகையரா சகிதமாய் ஜப்திசெய்ததேதிமுதல் மூன்றுநாளைக்குள் ளாக அந்தப் பாக்கிதாரன் வழக்கமாய் வாசஞ்செய்கிற இடத்திலா வது சொத்து ஜப்திசெய்யப்படுகிற இடத்திலாவது ஒட்டவேண் டியது, அல்லது கொடுத்துவிட்டு வரவேண்டியது.

9. தண்டல்பத்திரிகையின் ஷரத்துகளின்படி பாக்கித்தொ கை செலுத்தப்படாவிட்டாலும், கலெக்ட்டருக்காவது அவரால் நேமிக்கப்பட்ட வேறேயாதொரு அதிகாரிக்காவது திருப்திகரமாய்

அந்தத்தொகை சேரும்படியானவகை செய்யப்படாவிட்டாலும், சேரவேண்டியபாக்கித்தொகை அதற்குவட்டி படிச்செலவு, ஜப்திச்செலவு இதுகளுக்காக ஜப்திசொத்தை ஏலத்தில் விற்கும்பொருட்டு, அந்த சொத்தின் ஜாபிதாவை 1839ஞூத்து 7 - வது ஆக்ட்டின்படி ஜப்தி சொத்தை விற்பதற்கு அதிகாரம்பெற்று சமீபத்திலிருக்கிற சர்க்கார் உத்தியோகஸ்தனுக்கு ஜப்திதாரன் அனுப்பவேண்டியது.

10. பாக்கிதாரனானவன் தன்னுடையசொத்து ஜப்திசெய்யப்பட்டபின்பு ஏலத்திற்கு நிச்சயிக்கப்பட்ட தினத்திற்கு முன்னதாக, பாக்கிப்பணத்தையும் வட்டியையும் படிச்செலவையும் ஜப்திக்குப்பிடித்த அவசியமானசெலவுகளையும் கட்டுகிறதாகப் பணங்கொண்டுவந்தால், உடனே அந்தப்பணத்தை ஜப்திதாரன் வாங்கிக்கொண்டு தட்சணம் ஜப்தி விடுதலைசெய்யவேண்டியது.

11. ஜப்திதாரனானவன் பாக்கிதாரனுடைய நிலத்திலுண்டாகிய பயிர்களையாவது, பறிக்காமலிருக்கிற பலன்களையாவது ஜப்திசெய்தால், அறுக்கத்தகுந்த அல்லது பறிக்கத்தகுந்த காலத்தில் அதுகளை அவன் விற்பனைசெய்விக்கலாம்; அல்லது தனக்கு யுக்தமாகத் தோற்றினால், தகுந்தகாலத்தில் அதுகளை அறுத்து அல்லது பறித்து விற்பனையாகிறவரையில் தகுந்தஇடத்தில் சேர்ப்பிக்கலாம். இவ்விதமாக அறுத்துப்பறித்துச் சேர்த்துவைத்தால், அதற்காகப் பிடிக்கிறசெலவை சொந்தக்காரன் அந்தச்சொத்தை மீட்டுக்கொள்ளுகிறபட்சத்தில், அவன் கொடுக்கவேண்டியது; அந்தசொத்து விற்பனைசெய்யப்படுகிற பட்சத்தில் விற்றபணத்திலே அந்தசெலவு எடுத்துக்கொள்ளப்படும். யாதொரு ரயித்தினுடைய பயிராவது பலனாவது விற்பனைசெய்யப்பட்டால், அவன் அந்தப்பயிர் அல்லது பலனுக்குண்டாகிய கிரயத்தை அது உற்பத்தியான நிலத்திற்காக அப்போதாகிலும் பின்பாகிலும் தான் கொடுக்கவேண்டிய குத்தகைத் தொகையிலேகழித்துக்கொள்ளலாம். மேலும் சர்க்கார்தீர்வை பாக்கிக்காக யாதொரு ரயித்தினுடைய மாசூல் ஜப்திசெய்யப்பட்டால், அவன் அந்தபாக்கியைச் செலுத்திவிட்டு, அந்தப்பணத்தை அப்போதாகிலும் பின்பாகிலும் தான்கொடுக்கவேண்டிய குத்தகைத் தொகையிலே மேற்சொல்லியவிதமாய்க் கழித்துக்கொள்ளலாம்.

12. ஜப்திதாரனானவன் ஜப்திசெய்யப்பட்ட எருதுமுதலிய பிராணிகளிடத்தில் வேலைவாங்கவுங் கூடாது, ஜப்திசெய்யப்பட்ட

சரக்கு அல்லது சாமான்களைக் கையாளவுங்கூடாது; ஜப்திதாரன் ஆடுமாடுமுதலிய பிராணிகளுக்கு வேண்டிய தீனிபோடவேண்டியது. அதற்காகப் பிடிக்கிற செலவை சொந்தக்காரன் அந்தச்சொத்தை மீட்டுக்கொள்ளுகிற பட்சத்தில், அவன் கொடுக்கவேண்டியது; அந்த சொத்து விற்பனைசெய்யப்படுகிறபட்சத்தில் விற்ற பணத்திலே அந்தச் செலவு எடுத்துக்கொள்ளப்படும்.

13. ஜப்திசெய்யப்பட்ட சொத்தானது வேண்டிய முன்ஜாக்கிரதையோடு தகுந்த பத்திரஞ் செய்யப்படாமையினாலாவது, அதினிடத்தில் அக்கிரமமாய் வேலைவாங்கினதினாலாவது, அதை உபயோகப்படுத்தினதினாலாவது களவுபோனாலும், போக்கடித்தாலும், சேதமானாலும், யாருடைய அஜாக்கிரதை அல்லது செய்கையினாலே அப்படி நேரிட்டதோ அந்த உத்தியோகஸ்தனிடத்திலே கலெக்ட்டரானவர் சுருக்கமான நடவடிக்கையினாலே அந்தநஷ்டம் அல்லது சேதத்தொகையை வசூல்செய்யலாகும். அப்படி வசூலாகிறதொகையை நஷ்டமடைந்தவனுக்குக் கொடுக்கவேண்டும்.

14. ஜப்திசெய்யப்படுகிற சொத்தானது பாக்கித் தொகைக்கு அதிகப்படாமல், கூடியவரையிலே சுமாராக பாக்கித்தொகை எவ்வளவோ அவ்வளவிருக்கவேண்டியது.

15. சூரிய உதயத்திற்குப்பின்பு சூரிய அஸ்தமானத்திற்குள் ஜப்திசெய்யவேணுமேயல்லாமல், வேறேஎந்தகாலத்திலாவது ஜப்திசெய்யக்கூடாது,

16. பாக்கிக்காகச் செய்யப்படுகிற ஜப்திக்குள்ளாகாதபடிக்கு பாக்கிதாரன் மோசடியாய் சொத்தைக் கொண்டுபோய்விட்டால், அது ருஜுவானதின்மேல், தகுந்த அதிகாரமுடைய யாதொருசீவில் கோர்ட்டார் சுருக்கவகையாய் அந்தசொத்தை ஜப்திக்காரனிடத்தில் ஒப்பிக்கும்படிச் செய்யவேண்டியது. மேலும் பாக்கிதாரன் இந்தியன் பினல்கோடின் 424 - வது பிரிவில் சொல்லியிருக்கிற தெண்டனைகளுக் குள்ளாவான்.

17. பாக்கிதாரனாகவாவது அவனுக்கு உத்தரவாதியாகவாவதிராத வேறே எவனாகிலும் ஜப்திசெய்யப்பட்ட சொத்துக்கு தாவாசெய்தும், ஜப்திதாரன் அந்த சொத்தை விற்பனைசெய்வித்தால் எதற்காக அந்தசொத்து விற்பனைசெய்யப்படுகிறதோ அந்த சர்க்கார்

பாக்கிக்காக அந்தசொத்து பொறுப்பானதென்று ஜப்திதாரன் ருஜூவுசெய்யமாட்டாமல், தகுந்த அதிகாரமுடைய யாதொரு சிவில் கோர்ட்டில் மேற்படி தாவா ருஜூவாவதின்பேரில், அந்தந்த சங்கதிக்குத்தக்கபடி தாவாதாரன் அந்தசொத்தின் பூராவிலையை வட்டி-செலவு-நஷ்டம் இதுகளுடனே ஜப்திதாரனிடத்தில் வசூல் செய்துகொள்ளலாம். ஆனால், பாக்கிதாரனுடைய ஸ்வாதீனத்திலுள்ள நிலத்திலிருக்கிற பயிராவது பறிக்கப்பட்ட பலன்களாவது ஜப்திசெய்யப்பட்டால், அதுகள் விற்பனையாவது கொதுவையாவது பின்னை ஏதுவாவது முன்னமேதானே செய்யப்பட்டிருக்கிறதென்கிற ஆதாரத்தின்பேரில் அதுகளைக்குறித்து வேறே தாவாசெய்யப்பட்டபோதிலும், அந்த தாவா, அந்தப்பயிர் அல்லது பலன் எந்த நிலத்தில் உற்பத்தியாச்சுதோ அந்த நிலத்திற்காக பாக்கியாயிருக்கிற சர்க்கார் தீர்வை முன்னதாய்ச் சேரவேணுமென்பதற்குத் தடங்கலாகமாட்டாது.

18. ஜப்திசெய்யப்பட்டிருக்கிற சொத்தை பலவந்தமாயாவது மறைவாகவாவது எவனாகிலும் எடுத்துக்கொண்டு போய்விட்டதாக தகுந்த அதிகாரமுடைய யாதொரு சிவில்கோர்ட்டாருக்குத் திருப்திகரமாய் ருஜூவானால், அந்தக்கோட்டார் சுருக்கவகையாய் அந்த சொத்தை ஜப்திதாரனிடத்தில் ஒப்பிக்கும்படி செய்யலாம். மேலும் அப்படிக் குற்றஞ்செய்தவன் இந்தியன் பினல்கோடில் விதித்திருக்கிற தெண்டனைகளுக் குள்ளாவான்.

19. யாதொருலாயம், மாட்டுக்கொட்டாய், களஞ்சியம், கிடங்கு, வெளிப்புறத்து வீடுமுதலான கட்டடங்களிலே வைத்திருக்கிற பாக்கிதாரனுடைய சொத்தை ஜப்திசெய்யும்பொருட்டு பலாத்காரமாய்த் திறந்துகொண்டுபோகவும், வெளிக்கதவு திறந்திருக்கிற யாதொரு குடியிருப்பு வீட்டில்நுழையவும் ஜப்திதாரனுக்கு அதிகாரமுண்டு. மேலும் மேற்சொல்லியபடி ஜப்திசெய்வதற்காக அந்தக்குடியிருப்பு வீட்டிலுள்ள யாதொரு அறையின்கதவையும் திறந்துகொண்டு நுழையலாம்; ஆனால், இதில் பின்னால் சொல்லியிருக்கிறபடிதவிர அந்தக் குடியிருப்புவீட்டில் ஸ்திரீகள் வாசஞ்செய்வதற்கு உரித்தான அந்தப்புரத்தை அந்த ஜப்திதாரன் உடைத்துத் திறப்பதாவது நுழைவதாவது தகாது.

20. வெளிக்கதவு மூடியிருக்கும்படியான யாதொருகுடியிருப்பு வீட்டிற்குள்ளாவது, ஸ்திரீகள் வாசஞ்செய்வதற்கு உரித்தாக

விடப்பட்டு தேசவழக்கப்படி அந்தப்புரமாக எண்ணப்பட்ட யாதொரு அறைக்குள்ளாவது பாக்கிதாரனுடைய சொத்துவைக்கப்பட்டிருப்பதாய் ஐப்திதாரனுக்கு நினைக்க முகாந்தர மிருந்தால் அந்த ஐப்திதாரன் சமீபத்திலிருக்கிற போலீஸ்ஸ்டேஷன் தலைவனுக்கு அந்த சங்கதியைத் தெரியப்படுத்தவேண்டியது. அதற்குமேல், அந்தஸ்டேஷன்தலைவன் ஒரு போலீசுசேவகனை அவ்விடத்திற்கு அனுப்பவேண்டியது; ஐப்திதாரன் அவனைக் கூடவைத்துக்கொண்டு, அந்தவீட்டினுள் அந்தப்புரம்தவிர வேறேயாதொரு அறையின் கதவைத்திறப்பதுபோலவே அந்தவீட்டின் வெளிக்கதவை பலாத்காரமாய்த்திறக்கலாம். மேலும் ஐப்திதாரன் அந்தபோலீசுசேவகனைக் கூடவைத்துக்கொண்டு, அந்தப்புரத்திலிருக்கிற ஸ்திரீகளை அப்புறம்போகும்படி கிரமமாய் அறிக்கைசெய்து, (தேசவழக்கப்படி பயிரங்கத்தில்வரக்கூடாத மேலான ஸ்திரீகளாயிருந்தால்) அவர்கள் தகுந்தபடி அப்புறம்போவதற்கு என்னவகைசெய்யவேணுமோ அதைச் செய்தபின்பு அந்த அந்தப்புரத்திலிருக்கிற பாக்கிதாரனுடையசொத்தை ஐப்திசெய்யும்பொருட்டு அந்த அறைகளுக்குள் நுழையலாம். ஆனால், அவ்விடத்திலே பாக்கிதாரனுடையசொத்து அகப்பட்டால், அதை உடனே வெளியில் எடுத்துக்கொண்டு வந்துவிட்டு, அந்த அறைகளை அந்த அந்தப்புரத்துஸ்திரீகளுக்கு பரிஷ்காரமாய் விட்டுவிடவேண்டியது.

21. மனிதர்கள் இந்தஆக்ட்டிலுள்ள நிபந்தனைகளுக்கு விரோதமாய் ஸ்திரீகளுடைய அறைக்குள் நுழைந்தாலும், குடியிருப்பு வீடுகளின் வெளிக்கதவை பலாத்காரமாய்த் திறந்தாலும் அப்படிப்பட்டவர்கள் மாஜிஸ்திரேட்டுக்கு முன் குற்றவாளிகளென்று தீர்மானிக்கப்படுவதின்பேரில் 500-ரூபாய் வரையில் போடப்பட்ட அபராதத்திற்குள்ளாவார்கள், அல்லது ஆறுமாசத்திற்கதிகப்படாமல் இருவகைக்காவலிலெதிலாகிலும் வைக்கப்படுவார்கள்.

22. ஐப்திசெய்யப்பட்ட சொத்தைஏலம்போடுவதற்கு 1839-ளூ 7-வது ஆக்ட்டின்படி அதிகாரம்பெற்ற சர்க்கார் உத்தியோகஸ்தரானவர் - விற்கப்படும் சொத்துக்கு ஒருஜாபிதா எழுதி அதையும், ஐப்திசெய்யப்பட்ட சொத்து இன்ன இடத்தில் இன்ன தேதியில் இத்தனைமணிக்கு ஏலம்போடப்படுமென்று ஒரு இஸ்தியார்நாமாவையும், பாக்கிதாரனுடைய வீட்டுவெளிக்கதவில் ஒட்டு

விக்கவேண்டியதுமல்லாமல், எந்த நிலத்திற்காக பாக்கியேற்பட்டதோ அந்த நிலமிருக்கிற கிராமத்திலும், மற்ற எந்தெந்த இடத்தில் அந்த ஏலத்தைக்குறித்துத் தகுந்தபடி பிரசித்தஞ் செய்யவேணுமென்று கலெக்ட்டராவது அதற்காக அவரால் அதிகாரங்கொடுக்கப்பெற்ற வேறே உத்தியோகஸ்தராவது நினைக்கிறாரோ அவ்விடங்களிலும் தண்டோரா போடுவிக்கவும்வேண்டியது. மேற்சொல்லியபடி இஸ்தியார்நாமா ஒட்டப்பட்ட தேதி முதல் பதினைந்துநாள் சென்றபின்பேயல்லாமல் அதற்குள்ளாக ஏலம்போடப்படாது.

23. நேமிக்கப்பட்டகாலத்திலே மேற்படி உத்தியோகஸ்தருக்கு யுக்தமாகத்தோற்றுகிறபடி சொத்தானது ஒரேகூறாகவாவது பல கூறுகளாகப்பிரிக்கப்பட்டாவது, ஏலத்தில் கடைசியாய் உயர்ந்த விலைக்குக் கேட்கிறவனுக்கு விற்றுப்போடப்படும். அந்த சொத்து பாக்கிபணத்துக்கு ஜாஸ்தியாய் விற்பனையானால், அந்த ஜாஸ்தி பணத்திலே ஜப்தி-ஏலம்-முதலானதுகளுக்குப் பிடித்த செலவுகளையும் வட்டியையும் தள்ளிக்கொண்டு மிகுதியை அந்த பாக்கிதாரனுக்குக் கொடுத்துவிடவேண்டியது.

24. சொத்து விற்பனைசெய்யப்பட்ட காலத்திலாவது, விற்பனைசெய்விக்கிற உத்தியோகஸ்தர் நியமிக்கிற காலத்திற்குள்ளாவது அந்த சொத்தைவாங்கினவன் ரொக்கப்பணஞ் செலுத்தவேண்டியது; அப்படி அவன் பணமுழுதும் செலுத்துகிறவரையிலே அந்த சொத்தில் எவ்வளவையாவது அவனை எடுத்துகொண்டு போகவொட்டக்கூடாது. விலைக்குவாங்கினவன் கிரயப்பணத்தைச் செலுத்தாவிட்டால், அந்தசொத்து மறுபடி ஏலம்போடப்படும்; அப்படிச் செய்வதினாலே ஏதாவது நஷ்டமுண்டானால் அதுவும், மறுபடி ஏலம்போடுவதற்குப் பிடிக்கிறசெலவும், முன்னே ஏலத்திலெடுத்துப் பணங்கட்டாமற் போனவனிடத்தில் வசூல்செய்யப்படும். அந்தசொத்து முதல் ஏலத்தைவிட இரண்டாவது ஏலத்தில் அதிக விலைக்குவிற்றால், அந்த அதிகப் பணமானது எவன்பொருட்டு மேற்படி முதல் ஏலம்போடப்பட்டதோ அவனுக்குச் சேரவேண்டியது.

25. கலெக்டராவது. ஜப்திபண்ணும்படி அவரால் அதிகாரங்கொடுக்கப்பெற்ற வேறே உத்தியோகஸ்தராவது பாக்கிதாரனுடைய நிலத்தையாகிலும் அதின்பேரிலிருக்கிற கட்டடத்தையாகி

லும் ஜப்திசெய்யத்தொடங்குவதற்கு முன்னமே, அவர் தண்டல் பத்திரிகை தயார்செய்து, அதில் பாக்கித்தொகையையும். எதற்காக பாக்கி சேரவேண்டியிருக்கிறதோ அந்த பூஸ்திதி அல்லது நிலத்தை யும் பாக்கிதாரனுடைய பேரையும், தண்டல்பத்திரிகையைக் கொண்டுபோய்க் கொடுக்கிறவனுக்குச் சேரவேண்டிய படிச்செலவை யும், எதின்பேரில் பாக்கியிருக்கிறதோ அந்த நிலத்துக்கும் பணம் செலுத்தப்படவேண்டிய இடத்திற்குமிருக்கிற தூரத்தையோசித்து அதற்குத்தக்கபடி பணஞ்செலுத்துவதற்காக நிச்சயிக்கப்படுகிறகா லத்தையும் கண்டெழுதி, அதை பாக்கிதாரனுக்குச் சேர்ப்பிக்கவே ண்டியது. அந்த தண்டல்பத்திரிகையைச் சேர்ப்பிக்கிறவித மெப் படிக்கென்றால், அந்த பாக்கிதாரனிடத்திலாவது, அவன் வழக்க மாய் வாசஞ்செய்கிற இடத்தில் அவனுடைய குடும்பத்தைச்சேர் ந்த யாதொருவயதுவந்த ஆண்பிள்ளையினிடத்திலாவது, அவனு டைய அதிகாரம்பெற்ற ஏஜெண்டினிடத்திலாவது ஒருபிரதியை ஒப்பிக்கவேண்டியது, அல்லது அவன் கடைசியில் வாசஞ்செய்த தாகத் தெரியவருகிற இடத்திலாவது, ஜப்திசெய்யப்போகிற நிலமி ருக்கிற இடத்திலாவது எல்லாருக்குந்தெரியும்படி ஒரு நகலை ஒட் டவேண்டியது.

26. தண்டல் பத்திரிகையின் ஷரத்துகளின்படி பாக்கித்தொ கை செலுத்தப் படாவிட்டாலும், கலெக்டருக்காவது அவரால் நேமிக்கப்பட்ட வேறேயாதொரு அதிகாரிக்காவது திருப்திகரமாய் அந்தத்தொகை சேரும்படியானவகை செய்யப்படா விட்டாலும், அவர் பாக்கிதாரனுடைய நிலத்தை அடியில் கண்டிருக்கிற விதமாய் ஜப்திசெய்து ஏலத்தில் விற்று அந்தபாக்கியை வசூல்செய்யத் தொ டங்கவேண்டியது.

27. நிலமிருக்கிற இடத்திலே எல்லாருக்குந் தெரியும்படி இஸ்தியார்ஒட்டி ஜப்திசெய்யவேண்டியது. பாக்கியும் அதற்கு வட் டியும் செலவுகளும் இன்னதேதிக்குள் செலுத்தப்படாவிட்டால் அந்த நிலமானது சட்டப்படி ஏலத்தில் விற்றுப்போடப்படுமென்று அந்த இஸ்தியாரில் கண்டெழுதவேண்டியது. ஜப்தியை நிலத்தினி டத்தில் பிரசித்தஞ்செய்யவேண்டியது மல்லாமல் ஜில்லாகெஜட்டி லும் பிரசித்தஞ் செய்யவேண்டியது.

28. பாக்கிதாரனுடைய நிலத்தை ஜப்திசெய்கையிலாகிலும், அது ஜப்தியிலிருக்கையி லெப்போதாகிலும், அந்த நிலத்தைச்சேர்

ந்த காரியங்களை நடத்திவர கலெக்டருக்கு அதிகாரமுண்டு. அப்படிசெய்கிறபட்சத்தில், அவர் அப்படி நடத்திவருவதற்காக தகுந்த சிப்பந்திகள் சகிதமாய் ஒரு ஏஜெண்டை நேமித்து, இன்னபடி நடந்துகொள்ள வேண்டியதென்று கண்டெழுதி தன்னுடைய முத்திரையுங் கையெழுத்தும்போட்டு அந்த ஏஜெண்டுக்கு ஒரு நேமனபத்திரிகை கொடுக்கவேண்டியது; அப்படிகாரியம் நடத்திவருவதற்காகப் பிடிக்கிற செலவுகள் அந்தசொத்தின் வரும்படியிலிருந்துசெலவழிக்கப்படும்; ஆனால், சொத்தானது மிகவும் சொற்பமாயிருந்து, அதின்வரும்படியிலிருந்து ஏஜெண்டுக்கு சம்பளம் கொடுக்கக்கூடாமையாயிருந்தால், கலெக்டர் நேமிக்கிற ரிவினியூ உத்தியோகஸ்தன் ஏஜெண்டுகளைக்குறித்து இதில் சொல்லியிருக்கிற எல்லா நிபந்தனைகளுக்கும் உட்பட்டிருக்கவேண்டியது.

29. அப்படி அந்த சொத்தைச்சேர்ந்த காரியங்களை நடத்திவரப்போகிறதைக்குறித்து பாக்கிதாரனுக்கு 25-வது பிரிவில் சொல்லியிருக்கிறவிதமாய் உடனே நோட்டீசு கொடுக்கவேண்டியது மல்லாமல் அதை அந்த நிலத்தினிடத்தில் பிரசித்தஞ்செய்து ஜில்லா கெஜட்டிலும் பிரசித்தஞ்செய்யவேண்டியது.

30. 28 வது பிரிவின்படி ஏஜெண்டானவர் காரியங்களை நடத்திவருகையில், அந்த பாக்கிதாரனுக்கும் அவனிடத்தில் குத்தகை செய்துகொண்டிருக்கிறவர்களுக்கும் ஏற்பட்டிருக்கிற உடன்படிக்கைகளின் பிரகாரமாவது, அப்படி உடன்படிக்கைகளேற்பட்டிராவிட்டால் நடந்துவருகிற வழக்கப்படிக்காவது அந்த சொத்தைக்குறித்து அதுவரையில் பாக்கியாயும் இனி வரவேண்டியதாயுமிருக்கிற குத்தகைத்தொகைகளையும் வரும்படிகளையும் அந்த ஏஜெண்டு வசூல்செய்து, வரவுசெலவுகளுக்குக்கணக்கெழுதி, அந்தக்கணக்கையும் மீதிப்பணத்தையும் கலெக்டரிடத்திற்காவது கலெக்டரால் நேமிக்கப்பட்ட வேறே உத்தியோகஸ்தரிடத்திற்காவது மாதாந்தரமாகிலும் கேட்கப்படும்போதாகிலும் அனுப்பிவிடவேண்டியது. மேற்படி பாக்கிதாரன் தகுந்தகாலங்களிலே அந்த கணக்குகளைப்பார்வையிடலாம். கட்டணம் ஒன்றுங்கொடாமலே தன்னுடைய சொந்தச்செலவில் அதுகளுக்கு நகல்கள் எழுதிக்கொள்ளலாம்.

31. மேற்படி பாக்கிதாரனுக்காவது அவனுடைய சொத்துக்காவது கெடுதியுண்டாகும்படி ஏஜெண்டினால் சட்டத்துக்குவிரோத

யாய் யாதொரு அநியாயஞ்செய்யப்பட்டால் அதைக்குறித்து அந்த ஏஜெண்டின்பேரில் அந்த பாக்கிதாரன் வியாச்சியமாவது தொடரலாம், பிரியாதாவது செய்யலாம்; உட்கடை பாத்தியத்தினலே அநுபவிக்கிற ரயித்துகள் முதலானவர்களெல்லோரும் பாக்கிதாரனால் யாதொரு அநியாயஞ்செய்யப்பட்டால் அதைக்குறித்து நியாயந் தேடிக்கொள்ளுவதுபோலவே ஏஜெண்டினல் செய்யப்படுகிற அநியாயத்திற்கும் நியாயந்தேடிக்கொள்ளலாம்.

32. பூமிக்குடையவனுக்கும் அவனுடைய ரயித்துகளுக்கும் பிறந்திருக்கிற உடன்படிக்கைகளிலே இதில் பின்னல் கண்டிருப்பவைகள் தவிர மற்றெல்லா உடன்படிக்கைகளின்படிக்கும் கலெக்ட்டரானவர் ஜப்திகாலத்தில் நடத்திவரவேண்டியது; ஆனல் ஜப்தியை பிரயோசனப்படவொட்டாமல் கெடுக்கவேணுமென்றாவது ஆலசியப்படுத்தவேணுமென்றாவது கெட்ட எண்ணத்தோடு சேர்ந்து செய்யப்பட்ட அவ்விதமான சகல உடன்படிக்கைகளும் தொழிற்சாலைகள் அல்லது கட்டடங்கள் கட்டும்பொருட்டாவது கரம்பு நிலத்தை சாகுபடி பண்ணும்பொருட்டாவது விடப்படாமல், வழக்கமான தீர்வையைப்பார்க்கிலும் குறைந்த வீதத்திற்கு விடப்பட்டிருக்கிற நிலத்தின் குத்தகைச்சீட்டுகளும், ஜப்திக்குப்பின்பு செய்யப்பட்ட சகல உடன்படிக்கைகளும் ரத்தாகுமென்று கலெக்ட்டர் பிரசித்தஞ்செய்வாராகில், அப்படிப்பட்டதுகள் அவர்பேரில் தொடருவதற்குச் சம்பந்தமற்று ரத்தாய்விடும்; ஆயினும் அப்படிப்பட்ட உடன்படிக்கையில் சம்பந்தமுள்ளவர்கள் தங்களுடைய சுதந்தரத்தை ஸ்தாபித்துக்கொள்ளுவதற்கு சாதாரணமான நியாயஸ்தலங்களிலே கலெக்டர்பேரில் வியாச்சியங்கொண்டுவர பாத்தியமுடையவர்களாவார்கள்; அப்படிப்பட்ட நிலத்தின்பேரில் கொதுவை முதலிய எவ்விதமான செலவுகளிருந்தபோதிலும் அதுகளையெல்லாம் நிறுத்திப்போட்டு முன்னமே சர்க்கார் தீர்வை செலுத்தப்படும்.

33. செலுத்தவேண்டிய கெடுவாய்ப்போயிருக்கிற குத்தகைத் தொகையைக்குறித்தாவது வரும்படியைக்குறித்தாவது பூமிக்குடையவனிடத்திலாவது அவனுக்காகவாவது அவனுடைய குத்தகைதாரன் சொத்தைச்சேர்ந்த காரியங்கள் நடத்திவரப்படுமென்று மேற்சொல்லியபடி பிரசித்தஞ்செய்யப்படுவதற்கு முன்னமே பணஞ்செலுத்தியிருந்தால், அதை கலெக்டர் ஒப்புக்கொள்ளவேண்டியது;

அப்படி பிரசித்தஞ் செய்யப்பட்ட பின்பாவது செலுத்தவேண்டிய கெடுவாவதற்கு முன்னமே யாவது செலுத்தப்பட்ட பணமானது கலெக்டரால் ஒப்புக்கொள்ளப் படத்தக்க தல்லாமையினாலே, முன்னமே அதை யார் செலுத்தினார்களோ அவர்களுக்கு இஷ்டமிருந்தால், சாதாரணமான கோர்ட்டுகளில் பாக்கிதாரன் பேரில் வியாச்சியந் தொடரலாமென்று உத்தரவு செய்துவிட்டு, அவர்களிடத்திலிருந்து தொகை முழுமையும் குத்தகை தொகை பாக்கியைப் போலவே வசூல் செய்ய கலெக்டருக்கு அதிகாரமுண்டு.

34. ஜப்தி சொத்திலிருந்து வந்த பணத்திலே ஜப்திசெலவும் சொத்து விசாரணை செலவும் செலுத்தப்பட்டபின்பு மற்றதை தீர்வை பாக்கிக்கும், வருஷமொன்றுக்கு நூற்றுக்கு ஆறுவிழுக்காடு அதின்பேரில் கூடுகிற வட்டிக்கும் செல்லாக பாக்கிதாரன் பேரால் வரவுவைத்துக்கொண்டே வந்து, இவ்விதமாய் தீர்வை பாக்கி முழுமையும் வட்டியும் ஜப்தி செலவும் சொத்து விசாரணை செலவும் தீர்ந்துபோன உடனே ஜப்தி விடுதலை செய்யப்பட்டு, ஜப்தியி லிருந்த வரையி லுண்டான சகல வரவு செலவுகளுக்கும் பூர்த்தியாய்க் கணக்குக் கொடுக்கப்படும்.

35. ஜப்தி செய்யப்பட்டாவது ஜப்தி செய்யப்படப்போகிறதாகவாவதிருக்கிற நிலத்தில் பாத்தியமுடையவ னெவனாகிலும் தீர்வை பாக்கியையும் வட்டியையும் மற்று முண்டான செலவுகளையும் செலுத்தி அந்த நிலத்தை ஜப்தியிலிருந்து நிவர்த்திசெய்து கொள்ளலாம் ; அப்படி நிவர்த்தி செய்துகொள்ளுவதற்காக யாதொரு ரயித்து பணஞ்செலுத்தினால் அந்தப்பணத்தை அவன் பாக்கிதாரனுக்கு அப்போதாகிலும் பின்பாகிலுங் கொடுக்கவேண்டியதாயிருக்கிற குத்தகைத்தொகையிலே கழித்துக்கொள்ளலாம் ; அந்த சொத்தின் பேரில் கொதுவையாகவாவது வேறே எவ்விதமாகவாவது பணங் கொடுத்திருக்கிறவன் மேற்படி தொகையைச்செலுத்தினால் அது அவனுககு மேற்படி பாக்கிதாரன் அந்த நிலத்தின்பேரில் கொடுக்க வேண்டிய கடனாகும் ; அப்படியானபோதிலும், மற்ற கடன்களைப் போலவே பணஞ்செலுத்தப்பட்ட தேதிவரிசைப்படி அவனுக்குச் செலுத்தப்படும்.

36. இந்த ஆக்டின்படி அசையாப்பொருளை விற்கையில் அனுசரிக்கவேண்டிய விதிக ளென்ன வென்றால் :—

முதலாவது. பயிரங்கமான ஏலத்தில் உயர்ந்த விலைக்குக் கேட்கிறவனுக்கு விற்கப்படும். அந்த சொத்து இருக்கிற ஜில்லாவின் கலெக்டராவது அவரால் நேமிக்கப்பட்ட வேறேயதிகாரியாவது ஏலத்திற்கு காலத்தையும் இடத்தையும் நிச்சயிக்கவேண்டியது. அந்தக்காலமாவது பசலிவருஷம் முடிவதற்கு முன்னிட்டாவது பின்னிட்டாவதிருக்கலாம்.

இரண்டாவது. ஏலம்போடுவதற்கு முன்னமே கலெக்டராவது அதற்காக அவரால் நேமிக்கப்பட்ட வேறே உத்தியோகஸ்தராவது-பாககிதாரனுடையபேரையும், நிலத்தின் இருப்பிடத்தையும் அளவையும் அதின்பேரில் கட்டியிருக்கிற அவனுடைய கட்டடங்களின் நிலைமையையும் விஸ்தீர்ணத்தையும், அந்த நில மொத்தத்திற்காவது துண்டுதுண்டாகவாவது போடப்பட்டிருக்கிற தீர்வைத்தொகையையும், நடக்கிற பசலியின் மீதிகாலத்திற்கு சர்க்கார் தீர்வை பாக்கி இவ்வளவென்பதையும், இன்னகாலத்தில் இன்ன இடத்திலே இன்ன ஷரத்துகளின்படி ஏலம்போடப்படுமென்பதையும் கண்டெழுதி இங்கிலீஷிலும் அந்த ஜில்லாவில் வழங்குகிற பாஷையிலும் இஸ்தியார்பிறப்பித்து, அதை-ஏலம்போடுவதற்கு அதவா ஒருமாசத்திற்கு முன்னமே கலெக்டர் கச்சேரியிலும் தாலூகா கச்சேரியிலும் சமீபத்திலிருக்கிற டாணாவிலும் அந்தநிலத்தில் எல்லாருக்குந் தெரியும்படியான இடத்திலும் ஒட்டவேண்டியது.

மூன்றாவது. நிலங்களை ஏலத்திலெடுக்கிறவன் அந்தக் கிரயத்தொகையில் நூற்றுக்கு பதினைந்து விழுக்காடு கலெக்டரிடத்திலாகிலும் அவரால் நேமிக்கப்படுகிற வேறே உத்தியோகஸ்தரிடத்திலாகிலும் ஏலத்திலெடுக்குங்காலத்தில் டேவணிகட்ட வேண்டியது. கிரயத்தொகையில் மற்றப்பணத்தை முப்பதுநாளைக்குள் அவன் செலுத்தாவிட்டால், அந்த டேவணிப்பணத்தை இழந்துவிடுவான்.

நாலாவது. ஏலத்திலெடுக்கிறவன் மேற்சொல்லியபடி டேவணி கட்டாவிட்டாலும் கட்டமாட்டேனென்றாலும், டேவணி கட்டினபோதிலும் மற்றக்கிரயப்பணத்தைச் செலுத்தா விட்டாலும், அந்தசொத்தையும் சர்க்கார்தீர்வைபாக்கியை வசூல்செய்கிறவிதமாகவே முன்னே ஏலத்தில் எடுத்தவனிடத்தில் வசூல்செய்யலாகும். அந்த நிலம் முதல் ஏலத்தைவிட இரண்டாவது ஏலத்தில் அதிக விலைக்குவிற்றால் அந்த அதிகப்பணமானது எவன்பொருட்டு மேற்படி முதல் ஏலம் போடப்பட்டதோ அவனுக்குச் சேரவேண்டியது

ஐந்தாவது. ஏலத்தில் விலைகேட்கிறவர்களெல்லோரையும் தங்கள் சொந்தத்திற்கு விலைகேட்கிறார்களா அல்லது ஏஜெண்டுகளாக விலை கேட்கிறார்களா அதைச் சொல்லும்படிகேட்டு, ஏஜெண்டுகளாயிருந்தால் முதலாளிகளுடைய கையெழுத்துப்பட அதிகர பத்திரத்தைக் கொண்டுவந்து கொடுக்கச்சொல்லலாம். கேட்கப்பட்டபடி அவர்கள் செய்யாவிட்டால், அவர்கள் ஏலத்தில் விலைகேட்டதை தள்ளுகடை செய்யலாம்.

37. பாக்கிதாரனாவது, அவனுக்காக காரியங்களை நடத்துகிற எவனாவது நிலத்தில் பாத்தியமுடையவனெவனாவது, தீர்வைபாக்கி முழுமையையும் அதற்கு வட்டியையும் பாக்கியைத் தண்டல் செய்வதற்கும் ஏலம் போடுவதற்குவேண்டிய பிரயத்தனங்களைச் செய்வதற்கும் பிடிக்கிற சகலசெலவுகளையும் கொண்டுவந்து கட்டினால் ஏலம்போடுவது நிறுத்திவிடப்படும். ஆனால், அப்படி பணங்கட்டுகிறவர்கள் ஏலத்திற்கு நிச்சயித்திருக்கிற தினத்திற்கு முன்னால் சூரிய அஸ்தமானத்திற்குள் கட்டவேணும்; அப்படி யாதொரு ரயித்தாவது அந்த சொத்தின்பேரில் கொதுவையாகிலும் வேறே எவ்விதமாகவாகிலும் பணங்கொடுத்திருக்கிறவனாவது கட்டினால் அந்தத்தொகையை 35-வது பிரிவில் சொல்லியிருக்கிறவிதமாய் வசூல் செய்துகொள்ளலாம்.

38. எவன்பெயரால் நிலங்கள் ஏலத்தில் எடுக்கப்படுகிறதோ அவன் பெயருக்கு அதுகளை ரிஜிஸ்தர்செய்து, கலெக்டருடைய கையெழுத்தும் முத்திரையும் போட்டு அவனுக்கு ஏல விக்கிரயச் சீட்டு கொடுக்கப்படும். அந்த சீட்டானது அந்தவிக்கிரயத்தை எந்தக்கோர்ட்டில் ஸ்தாபிக்கவேணுமோ அந்தக் கோர்ட்டுகளிலும் நீதிஸ்தலங்களிலும் அப்படி ஏலத்தில்கொண்டது உண்மை யென்பதற்கு உறுதியானசாட்சியமாகும். அந்த ஏலவிக்கிரயச்சீட்டு யாரிடத்தில் கொண்டுவந்து காட்டப்படுகிறதோ அந்த அதிகாரியானவர் அதிலுள்ள கலெக்டர்கையெழுத்தாவது முத்திரையாவது உண்மையானதோ அல்லவோவென்று அனுமானித்தாலொழிய, அதைக் குறித்து ருஜூகொடுக்கப்படவேணுமென்பதில்லை.

39. நிலங்கள் ஏலத்தில் கொள்ளப்பட்டால், கலெக்டராவது கலெக்டரால் நேமிக்கப்பட்ட வேறே உத்தியோகஸ்தராவது கிரயத்துக்குக் கொண்டவனுடைய பெயரையும், கொண்டதேதியை

யும், மேற்படி நிலங்களில் முன்னுடையவனுக்கு உண்டாயிருந்த சகலசுதந்தரங்களும் பாத்தியதையும் சட்டப்படி ஏலக் கிரயக்காரனுக் குண்டென்பதையும், ஏலம் போடப்பட்ட நிலங்களிலிருக்கிற கிராமங்களிலும், தாலூக்கா கச்சேரியிலும், அந்தஜில்லா உசூர் கச்சேரியிலும், ஜில்லாகெஜட்டிலும் பிரசித்தஞ் செய்யவேண்டியது.

40. அப்படி பிரசித்தஞ் செய்யப்பட்டிருந்தும், நிலத்தை நியாயமாய் ஏலத்தில் கொண்டவன் அதை ஸ்வாதீனப்படுத்திக் கொள்ள வொட்டாமல் தடுக்கப்படுவானாகில் தகுந்த அதிகாரமுடைய யாதொரு கோர்ட்டாரிடத்தில் மனுவுசெய்துகொண்டு 38-வது பிரிவில் சொல்லியிருக்கிற ஏலவிக்கிரயச்சீட்டைக் காட்டுவதின்பேரில், அந்தக் கோர்ட்டார் அந்த நிலம் கிரயக்காரனுக்கு சித்திக்கும்படி கோர்ட்டுதீர்ப்பாயிருந்தா லெப்படியோ அவ்விதமாகவே அவனுக்கு அதை ஸ்வாதீனப்படுத்தும்பொருட்டு தகுந்தகட்டளை பிறப்பிக்கவேண்டியது.

41. பாக்கிதாரன் தன்னுடைய ரயித்துகளிடத்தில் செய்துகொண்டிருக்கிற சகல உடன்படிக்கைகளையும், அவர்கள் அவனுக்குச் செலுத்தியிருக்கிற சகலதொகைகளையும், அப்படிப்பட்டதை என்னதிட்டங்களின்படி எவ்வளவுமட்டில் ஒப்புக்கொள்ளவேணுமென்று இந்த ஆக்ட்டு 32-வது 33-வது பிரிவுகளில் சொல்லியிருக்கிறதோ அந்தப்படியே ஏலக்கிரயக்காரன் ஒப்புக்கொள்ள வேண்டியது.

42. சர்க்கார் தீர்வைபாக்கிக்காக ஏலம்போடும்படியான நிலங்களின்பேரில் கொதுவை முதலியசிக்குகள் என்ன இருந்தபோதிலும் நிமித்தமில்லாமல் அதுகள் ஏலத்தில்விற்கப்படும். விற்றபணத்திலே - தீர்வைபாக்கியும் வட்டியும் ஜப்தி செலவும் ஏலச்செலவும் அந்த பாக்கியைக் குறித்துண்டான மற்ற செலவுகளும் செலுத்தப்பட்டபின்பு மிகுதி ஏதாவதிருந்தால அதை - பாக்கிதாரனுக்குக் கொடுக்கக்கூடாதென்று தகுந்த அதிகாரமுடைய யாதொரு கோர்ட்டு கட்டளையினால் தடுக்கப்பட்டாலொழிய அவனுக்குக் கொடுத்துவிடலாகும்.

43. ஏலம் போடப்படுமாகில், அன்றையவரையில் பாக்கிதாரனுக்கு அவனுடைய ரயித்துகள் கொடுக்கவேண்டியதாயிருக்கிற

குத்தகைத்தொகை பாக்கியை அவன் மேற்படி ஏலத்திற்கு முன்னமே வசூல் பண்ணுவதற்குச் செய்யும்படியான ஜப்திதவிரவேறே யாதொரு நடவடிக்கையை அந்த ஏலத்திற்குப்பின்பு நடத்தி வசூல் செய்துகொள்ளலாம்.

44. சர்க்கார் தீர்வைபாக்கிக்காக பாக்கிதாரனுடைய நிலமுழுமையையுமாகிலும் அதில் எவ்வளவையாகிலும் விற்பதற்கு கலெக்ட்டருக்காவது அதற்காக அவரால் நேமிக்கப்பட்ட வேறே உத்தியோகஸ்தருக்காவது அதிகாரமுண்டு. ஆனால், அந்தநிலத்திலே - தீர்வைபாக்கியையுய் அதற்குவட்டியையும் ஜப்திசெலவையும் விசாரணைசெய்வதற்கும் ஏலம் போடுவதற்குமுண்டான செலவுகளையும் செலுத்துவதற்கு எவ்வளவுபோதுமோ அதைவிட அதிகமாக சாத்தியமானமட்டில் விற்கக்கூடாது.

45. மில்கதிஸ்திமிரார் சன்னதின்படிககாவது மொத்தமாகத் தீர்வை செலுத்திக்கொண்டாவது அனுபவிக்கப்படுகிற யாதொரு பூஸ்திதியின் ஓர் பாகமாத்திரம் ஏலத்தில் விற்கப்பட்டால், அந்த பாகத்திற்குத் தீர்வை இவ்வளவென்று கலெக்ட்டரானவர் ஏலத்திற்கு முன்னமே நிச்சயிக்கவேண்டியது. எப்படிக்கென்றால்:—

பூஸ்திதி முழுமைக்குமுண்டான சர்க்கார் தீர்வை மொத்தத்தை அந்த ஸ்திதிமுழுமையும் என்ன விலையாயிருக்கிறதோ அதற்குத்தீர்வை வீதமாக வைத்துக்கொண்டு, அந்த வீதப்படிக்கு அந்த பூஸ்திதி பிரிக்கப்படுகிற அந்தந்தபாகத்திற்கு ஏற்படுகிற கிரயத்தின்பேரில் அந்தந்தபாகத்திற்கு சர்க்கார்தீர்வை இவ்வளவென்று நிச்சயிக்கவேண்டியது.

மேற்சொல்லியபடி நிச்சயிக்கும்பொருட்டு கலெக்டரானவர் - பாகிக்கவேண்டிய அந்த நிலங்களில் உற்பத்தியான உடைவாரம் கண்டுமுதலையும் அந்த நிலங்களைச்சேர்ந்த காரியங்களை நடத்துவதற்குண்டான செலவுகளையுங் குறித்து கணக்குகளைக் கொடுக்கும்படி பூமிக்குடையவர்களுக்கும் கிராம கணக்குப் பிள்ளைகளுக்கும் உத்தரவுசெய்ய அதிகாரமுடையவராவார். அப்படி கேட்கும்போது அந்த பூமிக்குடையவர்களும் கணக்குப்பிள்ளைகளும் அப்போது நடக்கிறவ்ருஷத்திற்கு முன்னிட்ட மூன்றுவருஷங்களின் கணக்குகளுக்குக் குறையாமல் அந்தக்கணக்குகளைக் கொடுக்கவேண்டியது. பாகிக்கப்பட்ட நிலங்களுக்குத் தீர்வை நிச்சயிக்க வொட்டாமல் தடு

க்கும்பொருட்டு பூமிக்குடையவன் கணக்கு கொடுக்கமாட்டேனென்றாலும், அக்கிரமமாய் ஆலசியஞ்செய்தாலும், கலெக்ட்டரானவர் அந்தபூஸ்திதி முழுமையையும் ஏலம் போட்டுவிடலாம்.

46. மில்கதிஸ்திமீரார் சன்னதின்படிக்காவது வேறே எதின்படிக்காவது அனுபவிக்கப்பட்டு, மொத்தமாகத் தீர்வைசெலுத்தப்படுகிற பூஸ்திதியைப்பிரித்த பாகங்களின்பேரில் கலெக்ட்டரால் போடப்படுகிற சாஸ்வதமான தீர்வைத்தொகையானது ரிவினியூ போர்டாரால் எழுத்துமூலமாய்ப் பிறப்பிக்கப்படுகிற உத்தரவினாலே ஊர்ஜிதஞ்செய்யப்படுகிறவரையில் ஸ்திரமாகமாட்டாது.

47. பாக்கிதாரன் ஜாமீன்கொடுக்கிறதாயிருந்தால் கலெக்ட்டராவது அவரால் நேமிக்கப்பட்ட வேறே உத்தியோகஸ்தராவது அதை வாங்கிக்கொண்டு, தான் நிச்சயிக்கிறகாலம்வரையிலே தான் ஏற்படுத்துகிற திட்டங்களின்படி பாக்கிதாரனுடைய சொத்தை ஏலம்போடாமல் நிறுத்திவைக்கலாம். அந்ததிட்டங்களின்படி நடக்கத் தவறிப்போனால், அந்த கலெக்ட்டராவது உத்தியோகஸ்தராவது சொத்தை ஏலம்போட்டு, அந்த பாக்கிதாரன் பேரிலாவது அவனுடைய ஜாமீன்தாரன் பேரிலாவது இருவர்பேரிலுமாவது தொடரலாம்.

48. மேற்சொல்லியபடி வட்டியுள்பட சர்க்கார்தீர்வைபாக்கிக்கும் பற்றுசெலவுகளுக்கும் பாக்கிதாரன் அல்லது அவனுடைய ஜாமீன்தாரன் சொத்தை விற்றபணம் போதாமலிருந்து, பாக்கிதாரனாகிலும் அவனுடைய ஜாமீன்தாரனாகிலும் வேணுமென்று பாக்கியைக்கட்டாமலிருக்கிற தாகவாவது, பணங்கட்டாமல் மோசஞ்செய்யும்பொருட்டு யாதொரு சூதானகாரியஞ் செய்ததாகவாவது நம்புவதற்கு கலெக்ட்டருக்குத் தகுந்த முகாந்தரமிருந்தால் அவர் இதில் பின்னால் சொல்லியிருக்கிறபடி ஸ்திரிஜாதிதவிர புருஷனாயிருக்கிற பாக்கிதாரனையாகிலும் அவனுடைய ஜாமீன்தாரனையாகிலும் பிடித்து சிறைச்சாலையில் வைப்பிக்கலாம். ஆனால் சர்க்கார் தீர்வை பாக்கிக்காக இரண்டு வருஷத்திற்கதிகமாய் ஒருவரையும் சிறைச்சாலையில் வைக்கக்கூடாது. அந்தபாக்கி 500 - ரூபாய்க்கு மேற்படாவிட்டால் ஆறுமாசத்திற்கதிகமாயும், 50 - ரூபாய்க்கு மேற்படாவிட்டால், மூன்றுமாசத்திற் கதிகமாயும் சிறைச்சாலையில் வைக்கக்கூடாது. மேலும் மேற்சொல்லிய கிரமப்படி காவலில்வைத்தபோதி

லும் அந்தபாக்கிதாரனாவது அவனுடைய ஜாமீன்தாரனாவது சர்க்காருக்குக் கொடுக்கவேண்டியபாக்கி செத்துப்போகமாட்டாது.

49. ஸ்திரிகள்தவிர, புருஷனாகிய பாக்கிதாரனையாவது அவனுடைய ஜாமீன்தாரனையாவது அவ்விருவரையுமாவது மறியல்செய்வதற்கு கலெக்ட்டர் வாரண்டுபிறப்பித்து, அதில் அப்படி பிடிக்கப்பட வேண்டியவர்களுடைய பேர்களையும், சர்க்கார்தீர்வை பாக்கித்தொகையையும், செலுத்தவேண்டிய கெடுவானதேதியையும் கண்டெழுதி, தன்கையெழுத்தும் முத்திரையும் போடவேண்டியது. பின்பு அந்தவாரண்டை நிறைவேற்றும்படி அது யாரிடத்தில் ஒப்பிக்கப்படுகிறதோ அந்த உத்தியோகஸ்தன் பாக்கிதாரனையாவது அவனுடைய ஜாமீன்தாரனையாவது அவ்விருவரையுமாவது மறியல் செய்து, டிஸ்திரிக்ட்டுஜெயிலுக்கு இட்டுக்கொண்டுபோய், அந்தவாரண்டை ஜெயிலரிடத்தில் ஒப்பிக்கவேண்டியது. அப்படிப்பட்ட கைதிகளை ஜெயிலில்வைத்துக்கொள்ள அந்த ஜெயிலருக்கு அதிகாரமுண்டாவதற்கு அந்தவாரண்டேபோதும். அந்த ஜெயிலர் அந்த வாரண்டுக்கு நகலை தன்னிடத்தில் வைத்துக்கொண்டு அசலை அந்த ஜெயிலில் விசாரணை அதிகாரியினிடத்திற்கு உடனே அனுப்பிவிடவேண்டும்.

50. சர்க்கார்தீர்வை பாக்கிதாரர்கள் விஷயமாய் இந்த ஆக்ட்டில் சொல்லியிருக்கிற சகல நடவடிக்கைகளையும் அவர்களுடைய ஜாமீன்தாரர்கள் பேரில் நடத்தலாம்; அப்படிப்பட்ட நடவடிக்கைகளை முதலாளியின்பேரில் நடத்துகிற காலத்தில்தானே யாவது அதற்கு முன்னிட்டாவது பின்னிட்டாவது ஜாமீன்தாரன்பேரில் நடத்துவதற்கு கலெக்டருக்காகிலும் அவரால் நேமிக்கப்பட்ட வேறே உத்தியோகஸ்தருக்காகிலும் அதிகாரமுண்டு. ஆயினும் பாக்கித்தொகை வட்டி முதலான செலவுகளும் சேர்ந்த மொத்தத்தை விட அதிகமாக இருவரிடத்திலும் வசூல்செய்யக்கூடாது.

51. தானியமாக சர்க்காருக்கு நிலத்தீர்வை செலுத்தப்படத்தக்கதாயிருந்தால், கலெக்டருக்கு யுக்தமாகத் தோற்றுகிறபடி பூமிக்குடையவன் தகுந்த ஜாமீன் கெடாதபட்சத்தில், தானியத்தைப் பங்கிட்டு சர்க்காருக்குச்சேரவேண்டிய பாகத்தைப் பிரத்தியேகமாய் வைக்கிறவரையில் நிலத்திலிருந்த மாசூலையெடுத்துக்கொண்டு போகவொட்டாமல் தடுப்பதற்கு கலெக்டருக்காகிலும் அவரால்

அதிகாரங் கொடுக்கப்பெற்ற வேறே உத்தியோகஸ்தருக்காகிலும் அதிகாரமுண்டு.

52. சர்க்காருக்குச் சேரவேண்டிய நிலத்தீர்வைதவிர மற்ற சகலதீர்வை பாக்கிகளையும் சாருபடி அல்லது தீர்வைசம்பந்தமான காரியங்களுக்காக சர்க்காரால் கொடுக்கப்பட்ட சகலதக்காவிகளையும், ரிவினியூ அல்லது போலீசு அலுவல்களிலிருக்கிற கிராமஊழியக்காரர்களுக்கு அல்லது அவர்களுக்காக எவனாவது கொடுக்கவேண்டிய மேரை முதலானதுகளையும், சட்டப்படி நிலத்துக்குப்போட்டிருக்கிற சகல வரி இறைகளையும் வேறேவிதமாய் வசூல்செய்யும்படி இதுவரையிலாவது இனிமேலாவது பிரத்தியேகமாய்நிபந்தனை ஏற்பட்டிராத பட்சத்தில், இந்த ஆக்ட்டிலுள்ள நிபந்தனைகளின்படி நிலத்தீர்வை பாக்கியைப்போலவே வசூல்செய்யலாம்.

53. இந்த ஆக்ட்டின்படி நோட்டீசு வாரண்டு முதலானதுகளைக் கொண்டுபோய்க் கொடுப்பதற்காக ஏற்படுத்தப்பட்டவர்களுக்கு கவர்ன்மெண்டாருடைய அனுமதியின்பேரில் ரிவினியூ போர்டாரால அப்போதைக்கப்போது நிச்சயிக்கப்பட்டு டிஸ்டிரிக்டு கெஜட்டில் பிரசித்தஞ்செய்யப்படுகிற வீதப்பிரகாரம்படி கொடுக்கப்படும்.

54. மேற்படி பிரிவில் கண்டிருக்கிறபடிச்செலவும் இந்த ஆக்ட்டின்படி ஏற்படுகிற வட்டிமுதலிய சகலசெலவுகளும் தீர்வை பாக்கியைப்போலவே பாக்கிதாரனிடத்திலும் அவனுடைய ஜாமீன்தாரர்களிடத்திலும் வசூல்செய்யத்தக்கதாகும்.

55. ஜப்திசெய்தாவது கைப்பற்றியாவதிருக்கிற சொத்தை ஏலம்போடும்படி முன்னே உத்தரவுசெய்யப்பட்டிருந்து, அந்த ஏலத்தை நிறுத்தும்படி பின்பு உத்தரவுசெய்யப்பட்டபோதிலும், சொத்தை ஜப்திசெய்தது அல்லது கைப்பற்றினதைக்குறித்து நேரிட்ட செலவுகளை அந்த ஏலம் நிறைவேறியிருந்தாற் போலவே அந்தசொத்துக்குடையவன் செலுத்தவேண்டும். அவனதை செலுத்தாவிட்டால், எவ்விதமான நடவடிக்கைகள் நடத்தி தீர்வைபாக்கி வசூல் செய்யப்படுமோ அவ்விதமாகவே அது வசூல் செய்யப்படத்தக்கதாகும்.

56. *சர்க்கார் தீர்வைசெலுத்துகிற பிரதிமனிதனும், அதற்காக கலெக்டரினாலாவது அவரால் நேமிக்கப்பட்ட வேறே உத்தியோகஸ்தனாலாவது கையெழுத்து செய்துகொடுக்கப்படுகிற ரசீ

தை பெற்றுக்கொள்ளத் தக்கவனுவான். அந்த ரசீதிலே அப்படிச்செலுத்துகிறவனுடைய பேரையும் அது இன்னத்துக்காகச் செலுத்தப்பட்டதென்பதையும் கண்டெழுதவேண்டும். நிலத்தீர்வை விஷயத்தில் எந்தநிலத்திற்குத் தீர்வை செலுத்தப்படுகிறதோ அந்நிலத்தின் விவரத்தையும் அந்நிலத்தைக்குறித்து ஜமாபந்திகணக்கில் தாக்கலாயிருக்கிறவர்களுடைய பேர்களையும் கண்டெழுதவேண்டியது.

57. பாக்கிதாரனாவது அவனுடைய ஜாமீன்தாரனாவது எந்த டிஸ்திரிக்டுக்குள் அவன் தீர்வைசெலுத்தவேண்டியதோ அந்தடிஸ்திரிக்டில் செலுத்தாமல் பாக்கிவைத்துக்கொண்டு அதற்குவெளியில் வாசஞ்செய்தாலும் அவ்விடத்திலே அவனுக்கு சொத்து இருந்தாலும் அப்படி எந்த டிஸ்டிரிக்டில் பாக்கியாயிருக்கிறதோ அவ்விடத்திய கலெக்டர் மனுவு எழுதிக்கொள்ளுவதின்பேரில், மேற்படியான் எவ்விடத்தில் வாசஞ்செய்கிறானோ அல்லது அவனுக்கு சொத்து இருக்கிறதோ அந்த டிஸ்டிரிக்டின் கலெக்டரானவர் தன்னுடைய டிஸ்திரிக்டில் அப்படி பாக்கிவைத்துக்கொள்ளப்பட்டாற்போலவே சகலவிஷயங்களிலும் அந்த பாக்கிதாரன்பேரிலும் அவனுடைய ஜாமீன்தாரன்பேரிலும் அவர்களுடைய சொத்தின்பேரிலும் நடவடிக்கை நடத்தலாம். கலெக்டரானவர் அப்படி தான் எழுதுகிற பிரதிமனுவிலும் கையெழுத்துசெய்து முத்திரை போடவேண்டும். அந்த மனுவை அனுசரித்து நடத்துகிற கலெக்டர்பேரிலாவது, அவருடைய அதிகாரத்துக்குள்ளாக நடத்துகிற யாவரொருவர்பேரிலாவது நடத்தப்படுகிற சகல விவகாரங்களிலும் அந்த பாக்கித் தொகையைக்குறித்தும் பாக்கிதாரன் இன்னானென்பதைக் குறித்தும் அந்த மனுவே போதுமான ருஜுவாகக் கொள்ளப்படும். அந்த மனுவெழுதிக்கொள்ளுகிற கலெக்டருடைய முத்திரையாவது கையெழுத்தாவது உத்தியோகப் பெயராவது எதார்த்தமானதாக இருக்கமாட்டாதென்று அனுமானிப்பதற்கு கோர்ட்டாருக்கு முகாந்தரமிருந்தாலொழிய அதுகள் எதார்த்தமானதென்பதைக்குறித்து ருஜுவேண்டுவதில்லை. ஆனால், யாவனொருவன் அந்த மனுவெழுதிக்கொண்ட கலெக்டர்பேரில் தன்னுடைய சுயஜில்லாவிலே வியாச்சியந் தொடருவதற்கு இதிலுள்ள எந்த நிபந்தனையினாலும் தடங்கலொன்றுமில்லை.

58. சர்க்காருக்குச் செலுத்தப்படத்தக்க பூமிதீர்வை விதத்தைக்குறித்தாவது பிரிக்கப்பட்ட பூஸ்திதியின் பாகங்களின்பேரில்

இதுவரையில் நிஷ்கரிஷை செய்யப்பட்டிருக்கிற அல்லது இனி நிஷ்கரிஷை செய்யப்படும் தீர்வைத்தொகையைக்குறித்தாவது உண்டாகிற யாதொரு ஆட்சேபத்தை யோசனைசெய்ய வாகிலும் தீர்மானிக்க வாகிலும் எந்த சிவில் கோர்ட்டார்க்கும் அதிகாரமில்லை.

59. இந்த ஆக்டின்படி நடத்தப்பட்ட யாதொரு நடவடிக்கையினாலே அநியாயமடைந்தவர்கள் இதில் முன்னமே சொல்லியிருக்கிறபடிக்குத்தவிர சிவில்கோர்ட்டுகளில் நியாயந்தேடிக்கொள்ளுவதற்கு இந்த ஆக்ட்டிலுள்ள எந்த நிபந்தனையினாலும் தடங்கலுண்டாகமாட்டாது. ஆனால் அவர்கள் அந்த வியாச்சியமூலம் பிறந்த கால முதற்கொண்டு ஆறுமாசத்திற்குள் அதைக்குறித்து வியாச்சியந் தொடரவேணுமேயல்லாமல், அந்தகெடுவிற்கு மேற்பட்டுத் தொடர்ந்தால் அப்படிப்பட்ட வியாச்சியத்தை சிவில்கோர்ட்டார் பிடிக்கக்கூடாது.

60. இந்த ஆக்டின்படி செய்யப்பட்ட அல்லது செய்ததாகச் சொல்லப்பட்ட யாதொரு காரியத்தினாலே அநியாயமடைந்தவன் யாதொரு கலெக்டர்பேரில் கொண்டுவருகிற வியாச்சியமானது அந்த கலெக்டர் டிஸ்திரிகட்டைவிட்டுப் போய்விட்டதினாலே அற்றுப்போகமாட்டாது. ஆனால் அவரிருக்கும்போது அவர்பேரிலே அந்த வியாச்சியந் தொடரப்பட்டாற்போலவே அந்தப் பின்வருகிறவர்பேரிலே அந்தவியாக்சியம் நடத்தப்படும். முன்னிருந்த கலெக்டரினாலே இந்த ஆக்டின்படி செய்யப்பட்ட அல்லது அவர்செய்ததாகச் சொல்லப்பட்டயாதொரு காரியத்தைக்குறித்து உத்தியோக முறைமையிலே அவருக்குப்பின்வருகிற கலெக்டர்பேரில் இதற்கு முந்தியபிரிவில் கண்டிருக்கிற வாயிதாவிற்குள் வியாச்சியங்கொண்டு வரலாம்; ஆனால், அவர் தனக்கு முன்னிருந்தவரால் உத்தியோகமுறைமையில் செய்யப்பட்ட யாதொரு காரியத்திற்கு அவரே உத்தரவாதஞ் செய்யவேண்டுமென்பதில்லை.

61. இந்த ஆக்டின்படி சொத்தை எலத்தில் விற்பதற்கு - 1882ளுடித்து 5-வது சட்டம் சம்பந்தப்படமாட்டாது.

62. இந்த ஆக்டின்படி வசூல்செய்யப்படத்தக்க சர்க்கார்தீர்வை பாக்கியைக்குறித்து - 1802ளுடித்து - 28-வது சட்டமும், 1803ளுடித்து 1-வது 2-வது சட்டங்களும் செல்லமாட்டாது.

63. மைனர்கள் முதலான அசமர்த்தாளாகிய பூமிக்குடைய வர்களின் நிலங்களை ஏலத்தில் விற்பதைக்குறித்து - 1804ஞு த்து 5-வது சட்டத்திலும், 1831ஞுத்து - 10 - வது சட்டத்திலுமுள்ள நிபந்தனைகள் சென்றுவருவதற்கு இந்த ஆக்டிலுள்ள எந்த நிபந்தனையினாலும் தடங்கலொன்றுமில்லை.

64. சென்னபட்டணத்து சட்ட புஸ்தகத்திலுள்ள-1802ஞு த்து 2வது சட்டம் 12-வது பிரிவில் சொல்லியிருக்கிறபடி சென்ன பட்டணத்து ராஜதானியின் சரகத்துக்குள் நிலத்திற்கு சர்க்கார்தீர் வையை வசூல்செய்வதற்கு இந்த ஆக்ட்டிலுள்ள எந்த நிபந்தனையும் சம்பந்தப்படமாட்டாது.

65. அடியில் கண்டிருக்கிற சட்டங்கள் - வேறே ஆக்ட்டுகளையும் சட்டங்களையுமாவது வேறே ஆக்டுகளின் பாகங்களையும் சட்டங்களின் பாகங்களையுமாவது ரத்துசெய்கிறமட்டிலும் இந்த ஆக்ட்டு வழங்கத் தொடங்குவதற்குமுன்னமே நடந்திருக்கிற நடவடிக்கைகள் அல்லது சங்கதிகளுக்குக் சம்பந்தப்படுகிறமட்டிலுந் தவிர இதனால் ரத்துசெய்யப்படுகின்றது:—

1802ஞுத்து - 26 - வது சட்டம்—பீடிகையும் - 2 - வது - 3 - வது பிரிவுகளும் தவிர முழுவதும்.

1802ஞுத்து - 27 - வது - சட்டம்,

1830ஞுத்து - 3 - வது - சட்டம்.

1832ஞுத்து - 6 - வது - சட்டம்.

1858ஞுத்து - 59 - வது - ஆக்ட்டு.

66. இந்த ஆக்ட்டானது இவ்விடத்திய கவரன்மெண்டார் நிச்சயித்து சர்க்கார் கெஜட்டில் பிரசித்தஞ்செய்விக்கிற தேதிமுதற்கொண்டு வழங்கிவரவேண்டியது.

சென்னப்பட்டணம் 1865ஞுத்து 8-வது ஆக்ட்.

குத்தகைத்தோகையை வசூல்செய்வதைக்குறித்து நடத்தவேண்டிய நடவடிக்கைகளை விவரித்துச்சொல்லுகிற சட்டங்களைச் சீர்ப்படுத்தி ஒன்றாய்ச்சேர்ப்பதற்கான ஆக்ட்.

பூமிக்குடையவர்களைக்குறித்தும் அவர்களுடைய ரயித்துகளைக்குறித்தும் செய்யப்பட்டிருக்கிற பல சட்டங்களைத் தெளிவாக்கி ஒன்றாய்ச்சேர்ப்பதும், குத்தகைத்தொகையை வசூல்செய்வதைக்

குறித்து எங்கும் ஒரேவிதமான நடவடிக்கைநடத்தும்படி நிபந்தனை மேற்படுத்துவதும் ஆவசியகமாயிருக்கிறபடியால், இதனால் விதிக்கப்படுகிற தென்னவென்றால்:—

1. பூமிக்குடையவர்களென்னும் வார்த்தையானது இந்த ஆக்ட்டில் பிரயோகமாயிருக்கிற இடங்களிலே யாராரென்று அர்த்தஞ் செய்துகொள்ளப்படுமென்றால் :—

மில்கதிஸ்திமீரார்சன்னதின்படி அனுபவிக்கிற சகலமானவர்களும், மற்றெல்லா ஜமீன்தார்களும்; சுரோத்திரியதார்களும், ஜாகீர்தார்களும், இனம்தார்களும், இவர்களிடத்திலே பூமிகுத்தகைசெய்துகொள்ளுகிற சகலமானவர்களும் சர்க்காரிடத்தில் பூமிபேரிஜ் குத்தகை செய்துகொள்ளுகிறவர்களுமென்றும் ;

ரயித்துவார் திட்டப்படிக்காவது சர்க்காருக்கு நேராய் பூமி தீர்வை செலுத்தும்படியான வேறே எவ்விதமாகவாவது பூமியை அனுபவிக்கிறவர்களெல்லோரும் ரிஜிஸ்தர்செய்யப்பட்டிருக்கிற மற்ற காணியாட்சிகாரர்களெல்லோருமென்றும் அர்த்தமாகும்.

ரயித்தென்னும் வார்த்தையானது இந்த ஆக்ட்டில் சொல்லியிருக்கிற காரியங்களின்பொருட்டு, பூமிக்குடையவனுக்கு குத்தகைத்தொகை செலுத்த உடன்பட்டிருக்கிற சகலமானவர்களென்றுல் அர்த்தமாகும்.

கலெக்டரென்னும் வார்த்தையானது-கலெக்டருக்குண்டாகிய அதிகாரங்களைச் செலுத்தும்படி அப்போதைக்கப்போது நேமிக்கப்படுகிற பிரதி அதிகாரி என்று அர்த்தமாவதாக எண்ணப்படும். முன்பின் தொடர்ச்சியினலே விரோதமொன்று மில்லாவிட்டால் ஆண்பால் சொற்களைப் பெண்பாலிலும் கொள்ளவேண்டியது. ஒருமைச்சொற்களைப் பன்மையிலும் கொள்ளவேண்டியது.

2. குத்தகை பாக்கியைக்குறித்து இதில் பின்னல் சொல்லியிருக்கிறவிதமாய், கண்டிருக்கிற திட்டப்படி ரயித்துகள்பேரில்தொடருவதற்கு பூமிக்குடையவர்கள் அதிகாரமுடையவர்களாவார்கள்: ஆனல், இந்த ஆக்ட்டின்படி யாதொரு ரயித்தின்பேரில் நடவடிக்கை நடத்தவேணுமாகில், குத்தகைத்தொகை செலுத்தவேண்டிய கெடுவான காலமுதற்கொண்டு ஒரு வருஷத்திற்குள் நடத்தவேண்டும்.

3. ஜமீன்தார்களும், ஜாகீர்தாரர்களும், சுரோத்திரியதார்களும், இனம்தார்களும் இவர்களிடத்திலே பூமி குத்தகை செய்துகொள்

ளுகிறவர்களும்,சர்க்காரிடத்தில் பூமிபேரீஜு குத்தகை செய்துகொள்ளுகிறவர்களும் தங்கள் ரயித்துகளோடு எழுத்துமூலமாய் உடன்படிக்கைகள் செய்துகொள்ளவேணும் பூமிக்குடையவர்கள் கொடுக்கிற உடன்படிக்கையானது பட்டாவென்றும், ரயித்து கொடுக்கிற உடன்படிக்கையானது முச்சலிக்காவென்றும் சொல்லப்படும்.

4. குத்தகை உடன்படிக்கைசெய்துகொள்ளுகிறஉபயத்திராளுடைய பெயர்களையும், நிலமிருக்கிற இடத்தின் விவரத்தையும், அந்த நிலத்தின் அளவையும், பணமாகவோ தானியமாகவோ அல்லது நடந்தேறிவருகிற வழக்கப்படிக்காவது சட்டப்படிககாவது கொடுக்கவேண்டிய மேரைமுதலான செலவுகள் உள்பட கண்டு முதலில் வாரமாகவோ செலுத்தும்படியான குத்தகைத்தொகை இவ்வளவென்பதையும், அது இப்படிப்பட்டதென்பதையும், இன்னின்னகாலத்தில இவ்வளவிவ்வளவு செலுத்தப்படுமென்பதையும், குத்தகைத்தேதியையும், உபயத்திராள் உடன்படுகிற மற்றெல்லா விசேஷமான ஷரத்துகளையும் பட்டாவில் கண்டெழுதவேண்டியது. பூமிக்குடையவர்கள் தங்களிஷ்டப்படி பட்டாவுக்கு எதிரிடையாகவாவது, பட்டாவிலுள்ள ஷரத்துகளின்படி அனுபவித்துக்கொள்ளுகிறதாக மாத்திரம் கண்டெழுதியாவது முச்சிலிக்கா வாங்கிக்கொள்ளலாம்.

5. 3 - வது பிரிவில் கண்டிருக்கிற பூமிக்குடையவர்கள் உத்தரவுசெய்யப்பட்டிருப்பதுதவிர வேறே யாதொரு வரியிறையை எந்த பெயர் வைத்தாவது எந்த சாக்கிட்டுக் கொண்டாவது தங்கள் ரயித்துகளுக்குப் போடக்கூடாது. யாதொரு ரயித்தினிடத்திலே அவனுடைய பட்டாவில்கண்டிருக்கிற குத்தகைத்தொகை அல்லது உத்தரவான வேறே யாதொரு செலவுதவிர அதிகமா யெவ்வளவு பணமாவது வாங்கப்பட்டால், அவன் அதற்கு இரட்டிப்புத்தொகையை செலவுடனேகூட கலெக்டரிடத்திலே சம்மேரி வியாச்சியந் தொடர்ந்து வரப்பற்றிக்கொள்ள பாத்தியஸ்தனுவான். இந்தப் பிரிவின்பிரகாரம் பதிலுக்கு வாங்கிக்கொள்ளும்படி தீர்மானஞ்செய்யப்பட்டபோதிலும், கிரமமான குத்தகைத்தொகையையும் வாங்கலாமென்று உத்தரவாயிருக்கிற செலவுகளையும்விட அதிகமாக அப்படி பணம்வாங்குகிறவன் சட்டப்பிரகாரம் அலட்டி வாங்குவதைக்குறித்து யாதொரு அபராதம் அல்லது தெண்டனைக்குள் ளாவானென்பதற்கு இதினாலே தடங்கலொன்றுமில்லை.

6. குத்தகை செய்துகொள்ளப்படுகிற நிலங்கள் எந்த கிராமத்திலிருக்கிறதோ அந்த கிராமக்கணக்கப்பிள்ளை பட்டாக்களிலும் முச்சிலிக்காக்களிலும் கிரமமாய்க் கையெழுத்துப்பண்ணி, அதுகளைப் பதிவுசெய்துகொள்ளவேண்டியது.

7. மேற்சொல்லியபடி பட்டாக்களும் முச்சிலிக்காக்களும் ஒருவருக்கொருவர் கொடுத்திராவிட்டாலும், உடன்படிக்கைப்பிரகாரம் நடப்பித்துக்கொள்ள எத்தனப்படுகிறவன் பட்டாவையாவது முச்சலிக்காவையாவது வாங்கிக்கொள்ளவேண்டியவனயிருக்க மற்றொருவனுக்கு அதைக்காட்டி வாங்கிக்கொள்ளச் சொல்லியிருந்தானென்று ருஜுவுசெய்யப்படாவிட்டாலும், பட்டாவும் முச்சிலிக்காவும் வேண்டியதில்லையென்று உபயத்திராளும் சம்மதித்துத் தள்ளுபடிசெய்திராவிட்டாலும், குத்தகைஷரத்துகளை நிறைவேற்றுவிக்கும்படி கொண்டுவரப்பட்ட வியாச்சியமாவது நடத்தப்பட்ட விவகார நடவடிக்கைகளாவது அங்கீகரிக்கப்படாது. அப்படிகாட்டி வாங்கிக்கொள்ளச் சொல்லியிருந்ததை நோட்டீசு கொடுப்பதைக்குறித்து 39-வது பிரிவில் சொல்லியிருக்கிறபடி நோட்டீசு கொடுத்திருந்து அதைக்கொண்டு பூர்த்தியாய் ருஜுவுசெய்யவேணும். ஆனால் அப்படிப்பட்ட நோட்டீசுகளின் பிரதிகளைக் கலெக்டருக்கு அனுப்பவேணுமென்பதில்லை.

8. மூன்றாம்பிரிவில் கண்டிருக்கிற பூமிக்குடையவர்களில் யாராவது தன்னுடைய ரயித்துக்குக் கொடுக்கவேண்டிய பட்டாவை, அந்த ரயித்து கேட்டபின்பு மூன்றுமாதம்வரையில் கொடாதிருப்பாராகில், அந்த ரயித்து கலெக்டரிடத்திலே சம்மேரி வியாச்சியம் தாக்கல் செய்யலாம்; அந்த அதிகாரி அந்த சங்கதியை விசாரணைசெய்து, கிரமமான பட்டா கொடுக்கும்படி உத்தரவு பண்ணி நேரிட்டதாக ருஜுவுசெய்யப்படுகிற செலவையும் நஷ்டத்தையும் அந்த ரயத்துக்குக் கொடுக்கும்படி தீர்ப்புச்செய்யவேண்டியது.

9. மூன்றாம்பிரிவில் கண்டிருக்கிற பூமிக்குடையவர்கள் கொடுக்கத்தக்க பட்டாவை வாங்கிக்கொள்ளச்சொல்லி கேட்டபின்பு ஒருமாதவரையிலே அதை வாங்கிக்கொள்ளுகிறதுமில்லை, பதிலுக்கு முச்சிலிக்கா கொடுக்கிறதுமில்லையென்று யாதொரு ரயித்து மறுத்தால், பட்டா வாங்கிக்கொள்ளும்படி செய்யச்சொல்லி கலெக்டரி

டத்திலே சம்பேரி வியாச்சியந்தொடர அந்த பூமிக்குடையவர்களுக்கு பாத்தியதையுண்டு.

10. முந்தியபிரிவில் கண்டிருக்கிற வியாச்சியங்களிலே கலெக்டரானவர்-எவன்பேரில் வியாச்சியந்தொடரப்பட்டதோ அவன் பட்டா வாங்கிக்கொண்டு முச்சிலிக்கா கொடுக்கவேண்டியதாவென்று முன்னே விசாரணைசெய்து, அது ருஜுவாகாவிட்டால், செல்வுடனேகூட வியாச்சியத்தைத் தள்ளிப்போடவேண்டியது. அந்த விஷயத்தை வாதி ருஜுப்படுத்தினால், கொடுக்கக்காட்டிய பட்டா கிரமமானதுதானாவென்று கலெக்டர் விசாரணைசெய்து, கிரமமானதாகத் தோற்றினால், பிரதிவாதி அந்தபட்டாவை வாங்கிக்கொண்டு அதை அனுசரித்து முச்சிலிக்கா எழுதிக்கொடுக்கும்படிக்கும் முன்னமே மறுத்ததினாலே நஷ்டம் நேரிட்டிருந்தால் அதைக்கட்டிக் கொடுக்கும்படிக்கும் தீர்ப்புசெய்யவேண்டியது. அந்தப் பட்டா கிரமமானதல்லவென்று தோற்றினால் கலெக்டரானவர் அடுத்த பிரிவில் சொல்லியிருக்கிற விதமாய் இன்னவிதமான பட்டா கொடுக்கவேணுமென்று தீர்மானித்து, பின்பு பிரதிவாதி அந்த பட்டாவை வாங்கிக்கொண்டு அதற்கு ஒத்திருக்கும்படியாய் முச்சிலிக்கா எழுதிக்கொடுக்கும்படி தீர்ப்பு செய்யவேண்டியது. கலெக்டருடைய தீர்ப்புதேதிமுதல் பத்துநாளைக்குள் பிரதிவாதியானவன் மேற்சொல்லியபடி கலெக்டரால் அங்கிகரிக்கப்பட்ட அல்லது திருத்தப்பட்ட பட்டாவை வாங்கிக்கொள்ளாமலும் அந்தபட்டாவின் ஷரத்துப்படி முச்சிலிக்கா எழுதிக்கொடாமலுமிருந்தால், வாதி மனுவு செய்துகொண்டு அப்படி பிரதிவாதி தவறிப்போனதைக் குறித்து ருஜுவுசெய்வதின்பேரில், கலெக்டரானவர் பிரதிவாதியினுடைய ஸ்வாதீனத்திலிருந்து நிலத்தை விடுவிக்கும்படி உத்தரவு செய்ய வேண்டியது.

11. குத்தகைத் தொகை விகிதத்தைக்குறித்துண்டாகிய வியா தங்களைப்பற்றி கலெக்டரிடத்திற்குக் கொண்டுவரப்படுகிற வியாச்சியங்களை 8, 9, 10 - வது பிரிவுகளின்படி தீர்மானஞ் செய்வதில் அனுசரிக்கவேண்டிய விதிகள் என்னவென்றால்:—

1 - வது:—குத்தகைத் தொகையைக் குறித்து வெளிப்படையாகவாவது குறிப்பாகவாவது உண்டாயிருக்கிற சகல உடன்படிக்கைகளையும் நிறைவேற்றவேண்டியது.

2 - வது:—1859-ம் ஞு ஜனவரி மீ 1 உக்கு முன்னிட்டு பிரிட்டிஷ் கவரன்மெண்டாரால் ஜரீப்செய்யப்பட்டு புலங்களுக்கு ரொக்கத்தீர்வை ஏற்படுத்தப்பட்டிருக்கிற ஜில்லாக்களிலாவது கிராமங்களிலாவது, குத்தகைத் தொகையைக்குறித்து வெளிப்படையாகவாவது குறிப்பாகவாவது உடன்படிக்கை ஏற்பட்டிராவிட்டால், அந்த ரொக்கத்தீர்வையையே சரியான குத்தகைத் தொகையாக வைத்துக் கொள்ளவேண்டியது.

3 - வது.—வெளிப்படையாகவாவது குறிப்பாகவாவது பூமிக்குடையவனுக்கும் ரயித்துக்கும் உடன்படிக்கை உண்டாகாதிருந்து, புலங்களுக்கு மேற்சொல்லியபடி ரொக்கத்தீர்வையும் ஏற்பட்டிராவிட்டால், அவ்விடத்திய வழக்கப்படிக்கு குத்தகைத் தொகை வீதத்தை நிச்சயிக்கவேண்டியது. அவ்விடத்திய வழக்கமின்னதென்று பரிஷ்காரமாய் நிச்சயிக்கக்கூடாவிட்டால், அப்போது சுற்றுப்பக்கத்திலிருக்கிற அவ்விதமான அந்ததரத்து நிலங்களுக்கு ஏற்பட்டிருக்கிற அல்லது செலுத்தப்பட்ட வீதப்படிக்கு நிச்சயிக்க வேண்டியது. ஆனல் அப்படி நிச்சயிக்கப்பட்ட வீதமானது உபயத்திராளில் யாருக்காகிலும் சம்மதமில்லாவிட்டால், அப்படிப்பட்டவர் சர்க்கார் அல்லது பூமிக்குடையவனும் பயிரிடுகிறவனும் மாசூலைப் பங்கிட்டுக் கொள்ளுவதைக்குறித்து கிராமத்தில் ஏற்பட்டிக்கிற வீதமாகிய வாரப்படிக்கு அந்த குத்தகைத்தொகையை தானியமாகக் கொடுக்கச்சொல்லி கேட்கலாம். வாரமின்னதென்று நிச்சயிக்கக் கூடாவிட்டால், கலெக்டரானவர் பயிரிட்டவனுடைய கிருஷியினலாவது செலவினலாவது உண்டாகாமல்வேறேவிதமாய் மாசூல்கண்டு முதலாவது நிலவளத்தினலாவது எவ்வளவாகிலும் விருத்தியுண்டாயிருக்கிறதாவென்று நிச்சயித்துக் கொண்டபின்பு தனக்கு யுக்தமாகத் தோற்றுகிறபடி அந்த வீதத்தைக் குறித்துத் தீர்மானஞ் செய்யவேண்டியது.

4-வது.—அநாதிகரம்பு நிலவிஷயத்திலும், உடன்படிக்கை தவகதிப்போவதினலாவது இஷ்டமில்லாமையினலாவது சாகுபடி செய்யாமல் விட்டுவிடப்பட்ட நிலங்கள் விஷயத்திலும் பூமிக்குடையவர்கள் குத்தகைத் தொகையைக்குறித்து தங்களிஷ்டப்படி ஷரத்துகளேற்படுத்தலாம். ஆனல் சட்டப்படிக்காவது சட்ட ஆசாரத்தைப்போல் நடந்தேறிவருகிற வழக்கத்தைப்பற்றியாவது அப்படிப்

பட்ட கரம்பு அல்லது சாகுபடி செய்யப்படாத நிலங்களில் எவ னுக்காகிலும் எந்த வகுப்பாருக்காகிலும் உண்டாயிருக்கிற உரித் தான சுதந் தரங்களுக்கு இந்தபந்தனையினலே பாதகமொன்றுமுண் டாகமாட்டாது.

மேலும், மேற்கண்ட பூமிகுடையவனேவனுவது தன்னுடைய சொந்த செலவிலாகிலும் சர்க்கார் செலவிலாகிலும் ஜல ஆதாரமுத லிய விருத்திகளுண்டுபண்ணி, அதிலைலே நிலங்களைப் பின்னும் சிரேஷ்டப் படுத்தியிருந்து, அதற்காக சர்க்கார் தீர்வையும் முன்னி ருந்ததைவிட அவனுக்கு அதிகமாகப் போடப்பட்டிருப்பதைப்பற் றி அந்த பூமிக்குடையவன் கலெக்டருடைய அனுமதிபெற்றுக்கொ ண்டு, அந்த நிலங்களுக்கு குத்தெகைத்தொகையை அதிகப்படுத்து வதற்கு இதிலுள்ள எந்த நிபந்தனையினலும் தடங்கலுண்டாகமாட் டாது. மேலும், அப்படிப்பட்ட யாதொரு பூமிக்குடையவன்-அந் த நிலங்களுக்காவது சுற்றுப்பக்கத்திலிருக்கிற அவ்விதமான அந்த தரத்து நிலங்களுக்காவது செலுத்தப்படத்தக்க குத்தகைத் தொ கையைவிட குறைவான குத்தகைத் தொகைக்கு பட்டா கொடுத்தி ருந்தபோதிலும், குடியிருப்பு வீடுகள்-தொழிற்சாலைகள் முதலிய நிலையான கட்டடங்கள் கட்டிக்கொள்ளும் பொருட்டாவது, கரம்பு நிலத்தைத்திருத்தி சாகுபடிசெய்யும்பொருட்டாவது, அதில் யா தொரு நிலையான சீர்திருத்தம் செய்யும் பொருட்டாவது அந்தப்பட் டா கொடுக்கப்பட்டிருந்து, எந்த ஷரத்துகளின்பேரில் அப்படி கு றைந்த குத்தகைத்தொகைக்கு விடப்பட்டதோ அந்த ஷரத்துகளி ன்படி உறுதியாய் ரயித்தும் நிறைவேற்றி யிருந்தாலொழிய. அந்த பூமிக்குடையவனுக்குப் பின்வருகிற பாத்தியஸ்தன் அந்த பட்டாவி ன் பிரகாரம் உடன்படவேணு மென்பதில்லை.

12. மூன்றும் பிரிவில் கண்டிருக்கிற பூமிக்குடையவர்கள் யா தொரு சிவில்கோர்ட்டு டிக்கிரியின்பேரிலாவது இந்த ஆக்ட்டு 10 - அல்லது 41 - வது பிரிவிலுள்ள நிபந்தனைகளின்படிக்காவது ரயித் துகளிடத்திலிருந்து நிலங்களை மறுபடி பிடுங்கிக்கொள்ளலாமேத விர வேறேவிதமாய் பிடிங்கிக்கொள்ள அதிகாரமுடையவர்களல்ல. அப்படி தகுந்த அதிகாரமில்லாமல் பிடுங்கிக்கொள்ளப்பட்டால், அந்த ரயித்துகள் அந்த நிலங்களை மறுபடி தங்கள் ஸ்வாதீனஞ்செ ய்வித்து நஷ்டத்தையும் வாங்கிக்கொடுக்கும்படி கலெக்டரிடத்திலே

சம்மேரி விசாரணையாகக் கொண்டுவரலாம். ஆனால், ரயித்துகள் நிலத்தை விட்டு விடுகிறதாக அறிக்கைப்பத்திரிகையெழுதி சாட்சிகள் முன்னிலையில் அதில் கையெழுத்துப் போட்டுக்கொடுத்து பசலி கடைசியிலாவது, விட்டுவிடப்படுகிற நிலங்களை ஒப்பித்துக்கொள்ள பூமிக்குடையவனுக்கு இஷ்டமிருந்தால் வேறே எந்தகாலத்திலாவது நிலங்களை விட்டுவிட சுதந்தரமுடையவர்களாவார்கள்.

13. ரயித்துவார் திட்டப்படிக்காவது சர்க்காருக்கு நேராய் பூமி கிஸ்திசெலுத்தும்படியான வேறே எவ்விதமாகவாவது பூமியை அனுபவிக்கிறவர்களெல்லோரும், ரிஜிஸ்தர் செய்யப்பட்டிருக்கிற மற்ற காணியாட்சிக்காரர்களெல்லோரும், தங்களுக்கு செலுத்தப் படத்தக்க குத்தகைத்தொகையைக் கண்டெழுதித் தங்கள் ரயித்துகளிடத்திலே குத்தகைச்சிட்டாவது உடன்படிக்கையாவது வாங்கியிருந்தால் மாத்திரம் இந்த ஆக்டின்படி குத்தகைத்தொகையை வசூல்செய்யத் தொடங்கலாமேயல்லாமல், இல்லாவிட்டால் வசூல் செய்யக்கூடாது.

14. எழுத்துமூலமாய்ப் பிறந்திருக்கிறயாதொரு உடன்படிக்கைப்பிரகாரமாவது தேசவழக்கப்படிக்காவது எப்போது செலுத்தப்படவேண்டியதோ அந்தக்காலத்தில் குத்தகைத்தொகை செலுத்தப்படாதிருந்தால், அப்படி செலுத்தப்படாதிருக்கிற தொகையானது குத்தகை நிலுவைபாக்கியென்று எண்ணப்படும். பூமிக்குடையவர்கள் தங்களுடைய ரயித்துகள் கொடுக்கவேண்டிய குத்தகை பாக்கித்தொகையை வசூல்செய்வதற்காக அவர்களுடைய மாகாணலையும் அசையும்பொருளையும் தங்களுடைய உத்தரவாதத்தின்பேரில் ஜப்தி செய்ய அதிகாரமுடையவர்களாவார்கள்.

15. குத்தகை பாக்கிக்காக அசையும் பொருளை ஜப்திசெய்து விற்கையில் அனுசரிக்கவேண்டிய நிபந்தனைகளென்னவென்றால்,—

1 - வது.—பூமிக்குடையவனாவது அவனுடைய அதிகாரம் பெற்ற ஏஜெண்டாவது ரயித்தினுடைய பெயரையும், எதற்காக ஜப்திசெய்யப்படுமோ அந்த பாக்கித்தொகையையும், பாக்கி செலுத்தவேண்டிய கெடுவான தேதியையும் கண்டெழுதி, தன்பேரால் கையெழுத்துப்போட்டு ஒரு தண்டல் பத்திரிகையை ரயித்தினுடைய சொத்தை ஜப்திசெய்ய நேமிக்கப்பட்டவனுக்குக் கொடுக்கவேண்டியது. ஜப்திசெய்யப்போகிறவன் அந்த தண்டல் பத்திரிகை

யைக்காட்டி, அந்தபாக்கி உடனே செலுத்தப்படாவிட்டாலும், தன க்கு சம்மதமாகும்படி அந்த பாக்கியைச் சரிப்படுத்துவதற்கு யா தொரு ஏற்பாடு செய்யப்படாவிட்டாலும், அநதப் பத்திரிகையை ஜப்திசெய்வதற்கு தனக்கு அதிகாரபத்திரமாக வைத்துக்கொண்டு, சொத்தை ஜப்திசெய்கிறதினத்தில் அந்தப் பத்திரிகைக்கு நகலெ ழுதி, ஜப்திசெய்யப்பட்ட சொத்தின் விவரத்தையும், அது இன்ன இடத்தில் வைத்திருக்கப்படுமென்பதையும், அந்த பாக்கித்தொ கையும் அதற்கு வட்டியும் ஜப்திசெலவும் சீக்கிரத்தில் செலுத்தப்ப டாவிட்டால் அந்தசொத்து கிரமப்படி ஏலத்தில் விற்கப்படுமென்று அறிக்கையும், அதின்பேரில் கண்டெழுதி அந்த ரயித்துக்குக் கொ டுக்கவேண்டியது.

2-வது.—ரயித்து ஆஜரில்லாவிட்டால், அவன் வழக்கமாய் வாசஞ்செய்கிற இடத்திலாவது சொத்து ஜப்திசெய்யப்படுகிற இடத்திலாவது, அந்த ஜப்திதினத்தில் மேற்சொல்லியபடி சொத்து விவர முதலானதை மேலே எழுதி அந்தபத்திரிகைக்கு நகலை ஒட் டவேண்டியது, அல்லது ஒப்பிக்கவேண்டியது.

16. ஜப்திசெய்கிறவன்-ஜப்திசெய்யப்பட்ட சொத்தின் விவ ரத்தையும், பாக்கிதாரனுடைய பெயரையும், பாக்கித் தொகையை யும், ஜப்தி, தேதியையும், நோட்டீசில் கண்டெழுதி, அதை பத்து நாளைக்குள் கலெக்டரிடத்திற்காவது, அதை வாங்கிக்கொள்ளும் படி கலெக்டரால் நேமிக்கப்பட்ட உத்தியோகஸ்தரிடத்திற்காவது அனுப்பவேண்டியது. அந்த நோட்டீசு வரப்பற்றிக் கொள்ளப்பட்ட தேதியை அதின்பேரிலெழுதி, கலெக்டராவது மேற்படி உத்தியோ கஸ்தராவது. அவசியமானால் அந்த பாக்கியையும் அதற்கு வட்டி யையும் ஜப்திசெலவையும் செலுத்துவதற்காக அந்த சொத்தை விலைமதித்து அறுதியாய் விற்றுப்போடும்படி, 1839-ம்ளுத்து 7- வது ஆக்ட்டுப்பிரகாரம் ஜப்திசெய்யப்பட்ட சொத்தை ஏலத்தில் விற்பதற்கு அதிகாரம் பெற்றவராய் சமீபத்திலிருக்கிற சர்க்கார் உத்தியோகஸதனுக்கு அதற்கு நகலை அனுப்பவேண்டியது. விலை மதிக்கும்படி மேற்படி சர்க்கார் உத்தியோகஸ்தனால் நேமிக்கப்படு கிறவர்கள் அந்த விலைமதிப்பு விவரங்களையெழுதி கையெழுத்துப் பண்ணவேண்டியதுமல்லாமல் மேற்படி உத்தியோகஸ்தனும் கை யெழுத்துப் பண்ணவேண்டியது.

17. இந்த ஆக்ட்டை சாக்கிட்டுக்கொண்டு ஜப்திதார்களால் யாதொரு முக்கியமான அக்கிரமம் செய்யப்பட்டால், அதை-ஜப்திசொத்தை எலத்தில் விற்பதற்கு அதிகாரம் பெற்றவர்கள் கலெக்ட்டர்களுக்குத் தெரியப்படுத்த வேண்டியதுமல்லாமல், அப்படிப்பட்டவிஷயத்தில் கலெக்ட்டருடைய உத்தரவு வருகிற வரையிலே அந்த எலத்தை நிறுத்திவைக்க அதிகாரமுடையவர்களாவார்கள். ஜப்திதாரன் 15-வது பிரிவில் சொல்லியிருக்கிறபடி தண்டல்பத்திரிகையையும் ஜப்திசொத்து ஜாபிதாவையும் ரயித்துக்குக் கொடுக்கவில்லையென்றாவது, அந்த ஜப்தியைக்குறித்து கலெக்ட்டருக்காகிலும் அதற்காக கலெக்ட்டரால் நேமிக்கப்பட்ட உத்தியோகஸ்தருக்காகிலும் விதிப்படி தெரியப்படுத்தவில்லையென்றாவது, மேற்படி உத்தியோகஸ்தன் மூலமாயாகிலும் வேறே எவ்விதமாயாகிலும்கலெக்டருக்குத் தெரியவந்தால், அந்த ஜப்திசொத்தை சொந்தக்காரனுக்கு மறுபடியும் கொடுத்துவிடும்படி கலெக்ட்டர் உத்தரவுசெய்யலாகும். குத்தகைத்தொகை பாக்கியை வசூல்செய்வதற்கு இந்த ஆக்ட்டின்படி ஜப்திதாரனை வேறே யாதொரு நடவடிக்கை நடத்தவொட்டக்கூடாது; ரயித்தானவன் தனக்குநேரிடுகிற யாதொருநஷ்டம் அல்லது சேதத்தைக்குறித்து கலெக்ட்டரிடத்திலே சம்மேரிவியாச்சியங் கொண்டுவரலாம்.

18. ஜப்திசெய்யப்பட்ட தேதிமுதல் முப்பதுநாளைக்குள் அதைக்குறித்து கலெக்ட்டரிடத்திலே ரயித்து சம்மேரி வியாச்சியந் தாக்கல் செய்யாவிட்டாலும், வியாச்சியந் தாக்கல்செய்யப்பட்டிருந்து அவனுக்கு விரோதமாய்த் தீர்ப்புசெய்யப்பட்டாலும், ஜப்திசொத்தை எலத்தில விற்கும்படி, 1839 ம்-ளுபத்து 7-வது ஆக்ட்டினால் அதிகாரம்பெற்ற சர்க்கார் உத்தியோகஸ்தருக்கு உத்தரவுபிறப்பிக்கவேணுமென்று பதினைந்துநாளைக்குள் ஜப்திதாரன் கலெக்டருக்கு மனுவுசெய்துகொள்ளவேண்டியது; அந்த உத்தியோகஸ்தர் அந்த உத்தரவை வரப்பற்றிக்கொண்டபின்பு, எலம்போடப்படும்சொத்தையும் இன்னகாலத்தில் இன்ன இடத்திலே எலம் போடுவதற்கு நிச்சயித்திருக்கிறதென்பதையும் கண்டெழுதி அந்த கிராமத்தில் எல்லாருக்கும் தெரியும்படியான இடத்திலே இஸ்தியார் ஒட்டவேண்டியது. மேலும் எலம்போட எத்தனித்திருப்பதை அவர் எதின்பேரில் பாக்கிசேர்ந்திருக்கிறதோ அந்த நிலங்களிலிருக்கிற கிராமத்தில் தண்டோராபோட்டு பிரசித்தஞ் செய்விக்கவேண்டும்.

ஏலத்திற்கு நாள் நிச்சயிக்கையில், இஸ்தியார் தேதிமுதல் ஏழுநாளைக்குக்குறையாமலும், ஐப்தி தேதிமுதல் முப்பதுநாளைக்குக்குறையாமலும் நாள்களைத்தள்ளி நிச்சயிக்கவேண்டியது.

19. குத்தகைத்தொகை பாக்கிக்காக ஐப்திசெய்ய அதிகாரம் பெற்றவர்கள் - அமைதிகெடாதிருக்கும்படி செய்வதற்கு வேண்டிய சகாயம்பண்ணும்படி சமீபத்திலிருக்கிற டாணுவிலுள்ள அதிகாரியைக் கேட்டுக்கொள்ளலாம்: அந்த அதிகாரி அந்த ஐப்திகாலத்தில் ஆஜரிருக்கும்படி ஒருவன் அல்லது பலபோலீசுசேவகர்களை அனுப்பவேண்டியது; அந்தசேவகர்கள் யாரையாவது எதிர்க்கவொட்டாமலும் அமைதியைகெடுக்கவொட்டாமலும் காத்துக்கொண்டிருந்து அவர்களை சாட்சியாகக்கோரினால் அப்போது சாட்சிசொல்லக்கூடுமானதாயிருக்கும்படி ஐப்திதாரனால் நடத்தப்படுகிற காரியங்களையெல்லாம் மிகவும் ஜாக்கிரதையாய்ப் பார்த்துக்கொண்டிருக்கவேண்டியது.

20. ஐப்திசெய்யப்பட்ட சொத்து ஐப்திதாரனுடைய வசத்திலிருக்கையில், அதை பத்திரமாய்க் காப்பாற்றுவதற்கு அவன் வேண்டிய பந்தோபஸ்து செய்யாமையினாலே அந்தசொத்து திருட்டுப்போனாலும், காணுமற்போனாலும், சேதப்பட்டாலும், அழிந்துபோனாலும், அதற்காக சொந்தக்காரனுக்கு அவன் உத்தரவாதம்பண்ணவேண்டும்; கலெக்டரிடத்திலே சம்மேரி வியாச்சியங்கொண்டுவந்து அந்த நஷ்டம் அல்லது சேதம் ருஜுவுசெய்யப்பட்டால் அந்தப்படியே உத்தரவாதம்பண்ணும்படி தீர்ப்புசெய்ய கலெக்டருக்கு அதிகாரமுண்டு.

21. பாக்கிதாரனுடைய நிலத்தில் அறுவடையாகாமலிருக்கிற மாசூலையாவது உற்பத்தியையாவது ஐப்திசெய்கிறவன் அறுப்புக்குத் தகுதியான காலத்தில் அதுகளை விற்பிக்கலாம், அல்லது தனக்கிஷ்டமிருந்தால், தகுந்தகாலத்தில் அறுவடைசெய்வித்து விற்பனையாகிறவரையில் தகுந்த இடத்திலே சேர்த்துவைக்கலாம். அப்படி அறுத்துச் சேர்த்துவைக்கிறதாயிருந்தால், அப்படி செய்வதற்காகப் பிடிக்கிறசெலவை சொந்தக்காரனவன் தன்னுடைய சொத்தை மீட்டுக்கொள்ளுகையில் செலுத்தவேண்டியது; இல்லாவிட்டால் விற்பனைசெய்யப்படுகையில் விற்ற பணத்திலே அந்தசெலவு எடுத்துக்கொள்ளப்படும்.

22. பாக்கிதாரனானவன் தன்னுடைய சொத்து ஜப்திசெய்யப்பட்டபின்பு, எலத்திற்கு நிச்சயிக்கப்பட்ட தினத்திற்கு முன்னதாக பாக்கிபணத்தையும் வட்டியையும் படிச்செலவையும் ஜப்திக்குப் பிடித்த அவசியமான செலவுகளையும் கட்டுகிறதாகப் பணங்கொண்டு வந்தால் உடனே அந்தப் பணத்தை ஜப்திதாரன் வாங்கிக்கொண்டு, தட்சணம் ஜப்தி விடுதலை செய்யவேண்டியது.

23. ஜப்திதாரனானவன் - ஜப்திசெய்யப்பட்ட எருதுமுதலிய பிராணிகளிடத்தில் வேலைவாங்கவுங்கூடாது; ஜப்திசெய்யப்பட்ட சரக்கு அல்லது சாமான்களைக் கையாளவுங்கூடாது; ஜப்திதாரன் ஆடுமாடு முதலிய பிராணிகளுக்கு வேண்டிய தீனிபோடவேண்டியது; அதற்காகப் பிடிக்கிறசெலவை சொந்தக்காரன் அந்த சொத்தை மீட்டுக்கொள்ளுகிறபட்சத்தில் அவன் கொடுக்கவேண்டியது ; அந்தசொத்து விற்பனை செய்யப்படுகிறபட்சத்தில் விற்ற பணத்திலே அந்த செலவு எடுத்துக்கொள்ளப்படும்.

24. ஜப்திசெய்யப்படுகிற சொத்தானது பாக்கித்தொகைக்கு அதிகப்படாமல், கூடியவரையிலே சுமாராக பாக்கித்தொகை யெவ்வளவோ அவ்வளவிருக்கவேண்டியது.

25. சூரிய உதயத்திற்குப்பின்பு சூரிய அஸ்தமானத்திற்குள் ஜப்திசெய்யவேணுமேயல்லாமல், வேறே எந்தகாலத்திலாவது ஜப்திசெய்யக்கூடாது.

26. பாக்கிக்காச் செய்யப்படுகிற ஜப்திக்குள்ளாகாதபடிக்கு பாக்கிதாரன் மோசடியாய் சொத்தைக் கொண்டுபோய்விட்டால், அது ருஜுவானதின்மேல், தகுந்த அதிகாரமுடைய யாதொரு சீவில்கோர்ட்டார் சுருக்கவகையாய் அந்தசொத்தை ஜப்திதாரனிடத்தில் ஒப்பிக்கும்படி செய்யவேண்டியது. மேலும் பாக்கிதாரன் இந்தியன் பினல்கோட்டின் 424 வது பிரிவில் சொல்லியிருக்கிற தெண்டனைகளுக்குள்ளாவான்.

27. ஜப்திசெய்யப்பட்டிருக்கிற சொத்தை பலவந்தமாயாவது மறைவாகவாவது எவனாகிலும் எடுத்துக்கொண்டுபோய்விட்டதாக தகுந்த அதிகாரமுடைய யாதொரு சீவில்கோர்ட்டாருக்குத் திருப்திகரமாய் ருஜுவானால், அந்தகோர்ட்டார் சுருக்கவகையாய் அந்த சொத்தை ஜப்திதாரனிடத்தில் ஒப்பிவிக்ககும்படி செய்யலாம்.

மேலும் அப்படி குற்றஞ்செய்தவன் இந்தியன் பினல்கோடில் விதித்திருக்கிற தெண்டனைகளுக்குள்ளாவான்.

28. யாதொரு லாயம், மாடடிக்கொட்டாய், களஞ்சியம், கிடங்கு வெளிப்புறத்துவீடு முதலான கட்டடங்களிலே வைத்திருக்கிற பாக்கிதாரனுடைய சொத்தை ஜப்திசெய்யும்பொருட்டு பலாத்காரமாய்த் திறந்துகொண்டுபோகவும், வெளிக்கதவு திறந்திருக்கிற யாதொரு குடியிருப்பு வீட்டில் நுழையவும், ஜப்திதாரனுக்கு அதிகாரமுண்டு; மேலும் மேற்சொல்லியபடி ஜப்திசெய்வதற்காக அந்தக் குடியிருப்புவீட்டிலுள்ள யாதொரு அறையின் கதவையும் திறந்துகொண்டு நுழையலாம்; ஆனால் இதில் பின்னால் சொல்லியிருக்கிறபடி தவிர, அந்தக் குடியிருப்புவீட்டில் ஸ்திரீகள் வாசஞ்செய்வதற்கு உரித்தான அந்தப்புரத்தை அந்த ஜப்திதாரன் உடைத்துத் திறப்பதாவது நுழைவதாவது தகாது.

29. வெளிக்கதவு மூடியிருக்கும்படியான யாதொரு குடியிருப்பு வீட்டிற்குள்ளாவது, ஸ்திரீகள் வாசஞ்செய்வதற்கு உரித்தாக விடப்பட்டு தேசவழக்கப்படி அந்தப்புரமாக எண்ணப்பட்ட யாதொரு அறைக்குள்ளாவது பாக்கிதாரனுடைய சொத்துவைக்கப்பட்டிருப்பதாய் ஜப்திதாரனுக்கு நினைக்க முகாந்தரமிருந்தால், அந்த ஜப்திதாரன் சமீபத்திலிருக்கிற போலீசு டாணாவின் தலைவனுக்கு அந்த சங்கதியைத் தெரியப்படுத்தவேண்டியது. அதற்குமேல் அந்தட்டாணா தலைவன் ஒருபோலீசு சேவகனை அவ்விடத்திற்கு அனுப்பவேண்டியது; ஜப்திதாரன் அவனைக் கூடவைத்துக்கொண்டு, அந்த வீட்டினுள் அந்தப்புரந்தவிர வேறே யாதொரு அறையின்கதவைத் திறப்பதுபோலவே அந்த வீட்டின் வெளிக்கதவை பலாத்காரமாய்த் திறக்கலாம், மேலும் ஜப்திதாரன் அந்த போலீசுசேவகனைக் கூடவைத்துக்கொண்டு, அந்தப்புறத்திலிருக்கிற ஸ்திரீகளை அப்புறம் போகும்படி கிரமமாய் அறிக்கைசெய்து, (தேசவழக்கப்படி பயிரங்கத்தில் வரக்கூடாத மேலான ஸ்திரீகளாயிருந்தால்), அவர்கள் தகுந்தபடி அப்புறம்போவதற்கு என்னவகை செய்யவேணுமோ அதைச்செய்தபின்பு, அந்த அந்தப்புரத்திலிருக்கிற பாக்கிதாரனுடைய சொத்தை ஜப்திசெய்யும்பொருட்டு அந்த அறைகளுக்குள் நுழையலாம்; ஆனால் அவ்விடத்திலே பாக்கிதாரனுடையசொத்து அகப்பட்டால், அதை உடனே வெளியில் எடுத்

துக்கொண்டுவந்துவிட்டு, அந்த அறைகளை அந்த அந்தப்புரத்து ஸ்திரீகளுக்குப் பரிஷ்காரமாய் விட்டுவிடவேண்டியது.

30. மனிதர்கள் இந்த ஆக்ட்டிலுள்ள நிபந்தனைகளுக்கு விரோதமாய் ஸ்திரீகளுடைய அறைகளுக்குள் நுழைந்தாலும் குடியிருப்புவீடுகளின் வெளிக்கதவை பலாத்காரமாய் திறந்தாலும், அப்படிப்பட்டவர்கள் மாஜிஸ்திரேட்டுக்குமுன் குற்றவாளிகளென்று தீர்மானிக்கப்படுவதின் பேரில் 500 ரூபாய் வரையில் போடப்பட்ட அபராதத்திற் குள்ளாவார்கள், அல்லது ஆறுமாசத்திற்கதிகப்படாமல் இருவகுப்புக் காவலிலெதாகிலும் தைக்கப்படுவரர்கள்,

31. ஜப்திசெய்தாவது கைப்பற்றியாவதிருக்கிற சொத்தை ஏலம்போடும்படி முன்னே உத்தரவுசெய்யப்பட்டிருந்து, அந்த ஏலத்தை நிறுத்தும்படி பின்பு உத்தரவுசெய்யப்பட்டபோதிலும், சொத்தை ஜப்திசெய்தது அல்லது கைப்பற்றினதைக்குறித்து நேரிட்ட செலவுகளை அந்த ஏலம் நிறைவேறியிருந்தாற்போலவே அந்த சொத்துக்குடையவன் செலுத்தவேண்டும்; அவனதை செலுத்தாவிட்டால், எவ்விதமான நடவடிக்கைகள் நடத்தி அசல் பாக்கிவசூல்செய்யப்படுமோ அவ்விதமாகவே அது வசூல் செய்யப்படத் தக்கதாகும்.

32. பாக்கிதாரனுடைய ஸ்வாதீனத்திலிருக்கும்போது நிலத்திலுள்ள பயிராவது அறுவடையான மாசூலாவது ஜப்திசெய்யப்பட்டால், அந்தப் பயிர் அல்லது மாசூல் தனக்கு முந்தி விற்பனை செய்யப்பட்டிருக்கிறது அல்லது தன்னிடத்தில் கொதுவை வைக்கப்பட்டிருக்கிறதென்கிற ஏதுவைப்பற்றியாவது வேறே எந்த ஏதுவைப்பற்றியாவது வேறொருவன் அதற்குதாவாசெய்தபோதிலும், அந்தப் பயிர் அல்லது மாசூல் உற்பத்தியான நிலத்துக்கு பாக்கியாயிருக்கிற குத்தகைத்தொகை முன்னதாய்ச் சேரவேணுமென்பதற்குத் தடங்கலொன்றுமில்லை; ஆனால் ஏலம்போடுவதற்கு நிச்சயிக்கப்பட்ட தினத்திற்குள்ளாக கலெக்டரிடத்திலாகிலும் அவரால் நேமிக்கப்பட்ட வேறே உத்தியோகஸ்தரிடத்திலாகிலும் வேறொருவன் ஆஜராகி, ஜப்தியிலிருக்கிற மற்ற அசையும்பொருள்களில் எதிலாவது தனக்கு சுதந்தரம் அல்லது பாத்தியமிருக்கிறதாகத் தெரிவித்துக்கொண்டால், கலெக்டரானவர் உடனே விசாரணைசெய்வித்து தகுந்த முகாந்தரமிருந்தால் சொத்தை ஏலத்தில்போடாமல்

கிறுத்திவைக்கலாம். கலெக்ட்டரானவர் அந்த தாவாவைக்குறித்துத் தீர்மானஞ்செய்து, யுக்தமாகத் தோற்றுகிறபடி அந்த தாவாதாரனுக்கும் ஜப்திதாரனுக்கும் உத்தரவு பிறப்பிக்கவேண்டும். தாவாதாரன் தன்னுடைய சுதந்தரத்தை ஸ்தாபிக்காவிட்டால் சொத்தை ஏலம்போடும்படி உத்தரவுசெய்யப்படும். இந்தப் பிரிவின்படி கலெக்டரால் செய்யப்படுகிற உத்திரவின்பேரில் அப்பீல்கிடையாது. ஆனால் யாருக்குவிரோதமாய் அந்த உத்தரவு கொடுக்கப்படுகிறதோ அவன் தன்னுடைய சுதந்தரத்தை ஸ்தாபித்துக்கொள்ள சிவில்கோர்ட்டில் வியாச்சியங் கொண்டுவரலாம்; ஆயினும் சொத்தை ஏலம் போட்டுவிடும்படி கலெக்டர் உத்தரவுசெய்திருந்தால், அந்தசொத்தை வரப்பற்றுவதறகு வியாச்சியங்கொண்டுவராமல் அந்தசொத்து எவனால் ஏலம்போடும்படி செய்யப்பட்டதோ அவன் பேரில் நஷ்டத்திற்கு வியாச்சியங்கொண்டுவரவேண்டும்.

33. ஜப்திசெய்யப்பட்ட சொத்தை ஏலம்போடுவதற்கு அதிகாரமுடைய சர்க்கார் உத்தியோகஸ்தன் தனக்கு யுக்தமாகத்தோற்றுகிறபடி அந்த சொத்தை ஒரேமொத்தமாகவாவது பல கூறுகளாகவாவது ஏலத்திற்கு நேமிக்கப்பட்டகாலதத்தில் ஏலம்கூறி, உயர்ந்த விலைக்குக் கேட்கிறவனுக்கு விற்றுப்போடலாகும். அந்தசொத்தில் எவ்வளவையாகிலும் விற்றபணமானது பாக்கிக்கும் வட்டிக்கும் ஜப்தி ஏலச்செலவுகளுக்கும் போதுமானதாயிருந்தால், மீதிசொத்துக்கு உடனே ஜப்திவிடுதலை செய்யப்படும். ஏலத்திற்போட்ட சொத்து பாக்கியைவிட அதிக தொகைக்குவிற்றால், அந்த அதிக பணத்திலே ஜப்தி ஏலம் முதலான செலவுகளையும், வட்டியையும், ஏலம்போட்டதற்காக நூற்றுக்கு ஆறேகால்விழுக்காடு கமீஷனையும் தள்ளிக்கொண்டு மிகுதியை பாக்கிதாரனுக்குக் கொடுத்துவிட வேண்டியது.

34. சொத்தைஜப்திசெய்து ஏலம்போடுவித்ததற்குப் பிடித்த செலவுகளைக்குறித்து ஜப்திதாரன் கொடுக்கிற கணக்கை பிரதிவிஷயத்திலும் மேற்படிசர்க்கார் உத்தியோகஸ்தன் பரிசோதித்து, எவ்வளவாவது அக்கிரமமானதாகத் தனக்குத்தோற்றினால் அந்தபட்டில் தள்ளிப்போடலாகும். ஜப்திதாரனுக்காவது ஜப்திசெய்யப்பட்டசொத்துக்குடையவனுக்காவது மேற்படி உத்தியோகஸ்தனுடைய தீர்மானம் சம்மதப்படாவிட்டால், அவர்களில் யாராவது கலெக்டருக்கு மனுவுசெய்துகொள்வதின்பேரில், அவர் சொத்து ஜப்திக்

கும் ஏலத்திற்குமுண்டான செலவுக ளிவ்வளவென்று தீர்மானிப்பதற்கு இதனால் அதிகாரமுடையவராவார். அப்படி கலெக்டர் செய்கிற உத்தரவே முடிவானதாகும்.

35. சொத்து விற்பனைசெய்யப்பட்ட காலத்திலாவது, விற்பனைசெய்விக்கிற உத்தியோகஸ்தர் நேமிக்கிற காலத்திற்குள்ளாவது, அந்த சொத்தை வாங்கினவன் ரொக்கப்பணம் செலுத்தவேண்டியது. அப்படி அவன் பணமுழுதும் செலுத்துகிறவரையிலே அந்தசொத்தில் எவ்வளவையாவது அவனை எடுத்துக்கொண்டு போகவொட்டக்கூடாது. விலைக்குவாங்கினவன் கிரயபணத்தைச் செலுத்தாவிட்டால், ஏலம்போடப்படும். அப்படிச்செய்வதினாலே ஏதாவது நஷ்டமுண்டானால் அதுவும், மறுபடி ஏலம்போடுவதற்குப் பிடிக்கிற செலவும் முன்னே ஏலத்தில் எடுத்து பணங் கட்டாமற்போனவரின்பேரில் கலெக்டரிடத்திலே சம்மேரி வியாச்சியந் தொடர்ந்து அவனிடத்தில் வசூல்செய்யப்படும்; அந்தசொத்து முதல் ஏலத்தைவிட இரண்டாவது ஏலத்தில் அதிகவிலைக்குவிற்றால், அந்த அதிகப்பணமானது எவன்பொருட்டு மேற்படி முதல் ஏலம்போடப்பட்டதோ அவனுக்குச் சேரவேண்டியது. ஏலத்தில் வாங்கினவன் கிரயப்பணமுழுதையும் செலுத்திவிட்டால் அவனால் இன்னதேதியில் ஏலத்தில்வாங்கப்பட்ட இன்னசொத்துக்கு இவ்வளவுபணஞ் செலுத்தப்பட்டதென்று கண்டெழுதி அவனுக்கு ஏலம்போட்ட உத்தியோகஸ்தன் சர்ட்டிபிகேட்டு கொடுக்கவேண்டியது.

36. இந்த ஆக்டின்படி அசையும்பொருளை ஏலத்தில் விற்பதைக்குறித்து இஸ்தியார் போடுவதிலாவது ஏலம்போடுவதிலாவது யாதொரு அக்கிரமம் நடந்தபோதிலும் அதினாலே அந்தஏலம் ரத்தாகமாட்டாது. ஆனால் அந்த அக்கிரமத்தினாலே நஷ்டமடைகிறவனெவனாவது அந்தநஷ்டத்திற்குப்பணம் வசூல்செய்வதற்காக கலெக்டரிடத்திலே சம்மேரிவியாச்சியங் கொண்டுவரலாம்.

37. இந்த ஆக்டின்படிக்குண்டான பாக்கிக்கு மாசம் ஒன்றுக்கு நூற்றுக்கு ஒன்றுவிழுக்காடு வட்டிசேர்க்கப்படும்.

38. 3-வது பிரிவில் கண்டிருக்கிற பூமிக்குடையவர்களில் யாருக்காகிலும் சேரவேண்டிய பாக்கியானது அந்தந்த பசலிக்குள் செலுத்தப்படாவிட்டால், எதின்பேரில் பாக்கிநிற்கிறதோ அந்த

கிலத்தில் பாக்கிதாரனுக்கு வெளிப்படையான உடன்படிக்கைப்பிரகாரமானது ஏர்வழக்கப் படிக்காவது விற்கும்படியான சுதந்தரமிருக்கிறபட்சத்தில், அந்தபாக்கியையும், நிர்ணயமாயிருக்கிற விதப்படி அதற்கு வட்டியையும், ஜப்திசெய்யப்பட்டிருந்தால் அதற்குண்டான செலவையும் வரப்பற்றுவதற்காக அப்படிப்பட்ட சுதந்தரத்தைவிற்றுப்போட மேற்படி பூமிக்குடையவருக்கு அதிகாரமுண்டு.

39. யாருக்கு பாக்கிசேரவேண்டியதோ அவன் இதற்கு முந்திய பிரிவினுண்டாகிய அதிகாரத்தின்படி நடத்த எத்தனிப்பானாகில், அவன்அப்படி விற்றுப்போட எத்தனிப்பதைக்குறித்தும்நோட்டீசு எழுதி அதிலே பாக்கித்தொகையையும் வட்டியையும், செலவு ஏதாகிலிருந்தால் அதையும், நோட்டீசு கொடுக்கப்படுகிற தேதிமுதற்கொண்டு ஒரு மாசத்திற்குள் பாக்கிதாரன் அந்த தொகையைச் செலுத்தாவிட்டால் அந்த நிலத்தில் அவனுக்குண்டாகிய சுதந்தரம் விற்றுப்போடப்படுமென்பதையும் கண்டு பாக்கிதாரனுக்குக் கொடுக்கவேண்டியது. அப்படி கொடுக்கப்படுகிற நோட்டீசுக்கு ஒருபிரதியை பாக்கிதாரனிடத்திலாவது அவன் வழக்கமாய் வாசஞ்செய்கிற இடத்திலே அவனுடைய குடும்பத்தைச்சேர்ந்த வயதுவந்த யாதொரு ஆண்பிள்ளையினிடத்திலாவது அவனுடைய அதிகாரம் பெற்ற ஏஜெண்டினிடத்திலாவது சேர்ப்பிக்க வேண்டியது. அப்படி சேர்ப்பிக்கக் கூடாவிட்டால் அவன் கடைசியாய் வாசஞ்செய்ததாகத் தெரியவருகிற ஸ்தலத்திலாகிலும், அந்த நோட்டீசு சம்பந்தமான நிலத்திலாகிலும் எல்லாருக்குந் தெரியும்படியான இடத்திலே ஒட்டவேண்டியது. மேலும் வேறொரு பிரதியை இன்னதேதியில் இன்னவிதமாய் நோட்டீசு சேர்ப்பிக்கப் பட்டதென்று மேலே எழுதி கலெக்டருக்கு அனுப்பவேண்டியது.

40. பாக்கிதாரனுக்காவது மேற்சொல்லியபடிக்காவது நோட்டீசு சேர்ப்பிக்கப்பட்ட தேதிமுதல் ஒருமாசத்திற்குள் அதைக்குறித்து கலெக்டரிடத்திற்கு சம்மேரிவியாச்சியம் கொண்டுவரப்படாவிட்டாலும், அப்படி வியாச்சியம் கொண்டுவரப்பட்டிருந்தும், அந்தபாக்கிதாரன்பேரில் தீர்ப்புச்செய்யப்பட்டாலும், அந்தபாக்கியாருக்குச்சேரவேண்டியதோ அவன் அப்படி ஏலம்போடப் பிரயத்தனஞ் செய்வதற்கு அதிகாரமுடையவனாவான். அந்த ஏலமானது குத்தகைத்தொகை பாக்கிக்காக ஜப்திசெய்யப்பட்ட அசையு

ப்பொருளை ஏலம்போடுவதைக்குறித்துச் சொல்லியிருக்கிற விதிகளின்படி நடத்தப்படும்.

41. அந்தந்த பசலி கடைசியில் யாதொருரயித்து பாக்கிவைத்துக்கொண்டால், அதற்காக அந்தநிலத்தில் போதுமானசொத்து ஜப்தியிலகப்படாமலும், விற்கும்படியான சுதந்தரம் ரயித்துக்கு நிலத்திலில்லாமலு மிருக்கிறபட்சத்தில், அந்த நிலத்தில் பிரவேசித்து அதை ஸ்வாதீனப்படுத்திக்கொள்ளுவதற்கு வாரண்டுகொடுக்கும்படி பூமிக்குடையவனாவது அவனுடைய அதிகாரம்பெற்ற ஏஜெண்டாவது கலெக்டருக்கு மனுவுசெய்துக் கொள்ளலாம். வாரண்டுகொடுக்கும்படி மனுவுசெய்துகொள்ளுகிறவன் பாக்கிதாரனுடைய பேரையும், நிலத்தின் விவரத்தையும் அளவையும், பாக்கித்தொகையையும் வட்டியையும் ஜப்திசெலவு ஏதாவதிருந்தால் அதையும், செலுத்தவேண்டிய கெடுவான தேதியையும், நிலத்திலே போதுமான சொத்து ஜப்தியிலகப்படவுமில்லை விற்கும்படியான சுதந்தரமும் அதிலே ரயித்துக்கில்லை என்கிற உறுதிமொழியையுங் கண்டெழுதி விவரப்பத்திரிகையை வாரண்டுபிறப்பிக்கிற கச்சேரியில் தாக்கல் செய்துகொள்ளலாகும்.

42. பாக்கிதாரனுடைய பேரையும், பாக்கித்தொகை முழுமையையும், நிலத்தின் விவரத்தையும் அளவையும் அந்தவாரண்டில் கண்டெழுதவேண்டியது மல்லாமல், பதினைந்துநாளைக்குள் பணஞ்செலுத்தாவிட்டால் பாக்கிதாரன் அதின் ஸ்வாதீனத்திலிருந்து நீக்கிவிடப்படுவானென்றும் எழுதவேண்டியது.

43. அந்தவாரண்டை போலீசு உத்தியோகஸ்தனொருவனிடத்தில் ஒப்பிக்கவேண்டியது; அதை அவன் இந்த ஆக்ட்டு 39-வது பிரிவில் சொல்லியிருக்கிறவிதமாய் சேர்ப்பிக்கவேண்டும். அப்படி சேர்ப்பிக்கப் பட்டபின்பு பதினைந்து நாளைக்குள் கலெக்டரிடத்திலே அப்பீல்செய்யப்படாவிட்டாலும், அப்பீல்செய்யப்பட்டிருந்தும் பாக்கிதாரன்பேரில் தீர்ப்புசெய்யப்பட்டாலும், வாரண்டில் கண்டிருக்கிறதொகை செலுத்தப்படாதிருக்கிறபட்சத்தில், அந்தபோலீசு உத்தியோகஸ்தன் வாரண்டுகேட்டு வாங்கினவனுக்கு ஸ்வாதீனப்படுத்தவேண்டியது.

44. அப்படி ஸ்வாதீனமானபின்பு அதை ரத்துபண்ணும்படி ஒருமாசத்திற்குள் தகுந்த சிவில்கோர்ட்டிலே வியாச்சியந்தொடரப்

பட்டு, அனுகூலமான தீர்ப்பு பெற்றுக்கொள்ளப்படாவிட்டால், பூமிக்குடையவனுக்கும் அந்த பாக்கிதாரனுக்கும் உண்டாயிருக்கிற குத்தகை சம்பந்தம் பரிஷ்காரமாய் அற்றுப்போகும்.

45. பாக்கிதாரனுடைய அசையும்பொருளை ஜப்திசெய்து விற்றுவது, நிலத்திலவனுக்குண்டாகிய சுதந்தரத்தை விற்றுவது பாக்கியைச்சரிப்படுத்திக் கொள்ளக்கூடாமையானால், பாக்கிதாரனைப்பிடித்துக் காவலில் வைப்பதற்கு வாரண்டு கொடுக்கும்படி பூமிக்குடையவனாகிலும் அவனுடைய அதிகாரம்பெற்ற எஜெண்டாகிலும் கலெக்ட்டருக்கு மனுவுசெய்துகொள்ளலாம். இந்த ஆக்ட்டு 41 - வது பிரிவில் சொல்லியிருக்கிறபடி விவரப்பத்திரிகை கொடுக்கப்படுவதின்பேரில், பாக்கிதாரனாவது அவனுடைய ஜாமீன்தாரனாவது வேணுமென்று பாக்கி செலுத்தாமலிருக்கிறனென்றாகிலும் பணங்கொடாமல் தப்பித்துக்கொள்ளும்பொருட்டு மோசடியான காரியஞ்செய்திருக்கிறனென்றாகிலும் நம்புவதற்குக் கலெக்ட்டருக்கு முகாந்தரமிருக்கிறபட்சத்தில் அப்படியே வாரண்டு கொடுக்கப்படும்.

46. பாக்கிதாரனுடைய பேரையும், எதின்பேரில் பாக்கிசேர்ந்திருக்கிறதோ அந்த நிலத்தின் விவரத்தையும் அளவையும், பாக்கித்தொகையையும் வட்டியையும், ஜப்திசெலவு ஏதாவதிருந்தால் அதையும், பாக்கிசெலுத்தவேண்டிய கெடுவானதேதியையும் அந்த வாரண்டில் கண்டெழுதவேண்டியதுமல்லாமல், 24-மணி நேரத்திற்குள் அந்தத்தொகையைச் செலுத்தாவிட்டால் பாக்கிதாரன் ஜெயிலில் வைக்கப்படுவானென்றும் எழுதவேண்டியது.

47. வாரண்டு பிறப்பித்த அதிகாரியினிடத்திற்குத் தன்னை இட்டுக்கொண்டு போகும்படி பாக்கிதாரன் கேட்டுக்கொண்டால், அவனை அப்படியே இட்டுக்கொண்டு போகவேண்டியது; அந்த அதிகாரியினிடத்திலே அவன்தான் சுத்தமாய் பாக்கியில்லையென்றுவது பாக்கித்தொகை அவ்வளவில்லை யென்றுவது, அந்த பாக்கியைத் தான் கொடுக்கவேண்டிய தில்லையென்றுவது சொல்லுவானாகில், அந்த அதிகாரி உடனே அந்த சங்கதியை விசாரிக்கத்தொடங்கி, அழைக்கும்போது ஆஜராகிறதாகவும் மேற்சொல்லியபடி இல்லையென்று மறுத்ததினாலுண்டாகிய செலவைக்குறித்தும் ஜாமீன் கொடுக்கப்படுவதின்பேரில், தீர்ப்பாகிறவரையில் அந்தவார

ண்டை நிறைவேற்ருமல் நிறுத்திவைக்கவேண்டியது; ஆனல் வாரண்டுபெற்றுக்கொள்ளுவதற்காகக் கொடுக்கப்பட்ட விவரப்பத்திரிகை எதார்த்தமானதல்லவென்று நினைப்பதற்கு எதுவிருந்தால், ஜாமீன் கேட்காமலே வாரண்டை நிறுத்திவைக்கலாம்.

48. பாக்கித்தொகை எவ்வளவிருந்தபோதிலும் பாக்கிதாரனெவனையும் இரண்டு வருஷத்திற் கதிகமாய் சிறைச்சாலையில் வைக்கக்கூடாது; அந்த பாக்கி ஐந்நூறு ரூபாய்க்கு மேற்படாவிட்டால், ஆறுமாசத்திற் கதிகமாயும், ஐம்பது ரூபாய்க்கு மேற்படாவிட்டால் மூன்று மாசத்திற் கதிகமாயும், சிறைச்சாலையில் வைக்கக்கூடாது; ஆனல் மேற்சொல்லிய கிரமப்படி காவலில் வைத்தபோதிலும் பாக்கிதாரன் கொடுக்கவேண்டிய தொகை செத்துப்போகமாட்டாது. பாக்கிதாரன் சிறைச்சாலையிலிருக்கையில் அவனுக்கு வாரண்டுவாங்கினவன் ஏற்பாடாயிருக்கிற வீதப்பிரகாரம் படிச்செலவு கொடுக்கவேண்டும்; கொடாவிட்டால் கைதி விடுதலை செய்யப்படுவான்.

49. இந்த ஆக்டை சாக்கிட்டுக்கொண்டு நடத்தப்பட்ட யாதொரு நடவடிக்கையினுலே அநியாயமடைந்ததாக நினைக்கிறவன் கலெக்டரிடத்திலே நஷ்டத்தைக்குறித்துசம் மேரிவியாச்சியந்தாக்கல் செய்து நியாயம் பெற்றுக்கொள்ளலாம்.

50. இந்த ஆக்டின்படி கலெக்டரிடத்திலே வியாச்சியந் தொடரவேணுமானல் பிரியாதர்ஜீ கொடுத்துத் தொடரவேண்டியது. அந்த அர்ஜியிலே வாதியினுடைய பேர் முதலான விவரங்களையும் வாசஸ்தலத்தையும், நிச்சயமாய்த் தெரிந்துகொள்ளக்கூடியமட்டில் பிரதிவாதியினுடைய பேர் முதலான விவரங்களையும் வாசஸ்தலத்தையும் தாவா இப்படிப்பட்டதென்பதையும் தாவாதொகையையும், கிடைக்கவேணுமென்கிற நியாயத்தையும், வியாச்சியமூலம் பிறந்த தேதியையும் கண்டெழுதவேண்டியது. வாதியானவன் தன்னுடைய தாவாவிற்கு ஆதரவாக தாக்கல் செய்யவேணுமென்கிற தஸ்தாவேஜிகளை பிரியாதர்ஜியோடுகூடக் கொடுக்கவேண்டியது, பின்பு கொடுக்கப்பட்டால் எற்றுக்கொள்ளப்படாது; ஆனல் அப்படிப்பட்டதை தகுந்த முகாந்தரமிருந்தால் கலெக்டர் ஏற்றுக்கொள்ளலாம்; ஆயினும் அக்கிரமமான அல்லது அபூர்த்தியான பிரியாதர்ஜிகளை கக்ஷிதாரனிடத்தில் மறுபடிகொடுத்துவிடலாம்; அல்லது கலெக்டருக்கு யுக்தமாகத்தோற்றினல் அதுகளைத் திருத்திக்கொண்டு வரும்படி அவர் உத்தரவு செய்யலாம்.

51. இந்த ஆக்ட்டின்படி சம்மேரி வியாச்சியங்களை வியாச்சிய மூலம் பிறந்த தேதி முதற்கொண்டு முப்பதுநாளைக்குள் கொண்டு வரவேண்டியது.

52. இந்த ஆக்டின்படி கலெக்டரிடத்தில் கொண்டு வரப் பட்ட வியாச்சியங்களிலே வாதிப் பிரதிவாதிகள் பட்சத்தில் விவகா ரம் நடத்துவதற்கு பந்துவையாவது வேலைக்காரனையாவது அதிகா ரம்பெற்ற வேறே ஏஜெண்டையாவது நேமித்துக்கொள்ளும்படி வாதிகளுக்கும் பிரதிவாதிகளுக்கும் செலவு கொடுக்கப்படும்.

53. வாயிதாவிற்குள் வியாச்சியங் கொண்டு வரப்பட்ட தென் றும், அது கலெக்டரால் விசாரிக்கப்படத்தக்கதுதா னென்றும் பிரியாதர்ஜியினால் தெரியவந்தால், அதை விசாரணை செய்வதற்காக ஒருநாள் நிச்சயிக்கப்பட்டு, வாதியினுடைய பேரையும், சுருக்கமாக தாவா இப்படிப்பட்ட தென்பதையும் தாவாதொகையையும் எதைக் குறித்து வியாச்சியங்கொண்டுவரப்படுகிறதோ அந்த நிலம் அல்லது இடத்தின் நிலைமையையும், நஷ்டமேதாவது நேரிட்டிருந்து அதை வாங்கிக்கொடுக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறதாயிருந்தால் அந்தநஷ் டத்தொகையையும் கண்டெழுதி, பிரதிவாதிபேருக்கு சம்மன் அனு ப்பப்படும். சம்மன் பிறப்பிப்பதற்கும் அதைச்சேர்ப்பிப்பதற்கு முண்டான செலவை அந்த சம்மன்பேரில் எழுதவேண்டும்; செலவி ல்லாமல் சம்மன் பிறப்பிக்கும்படி கலெக்டர் உத்தாரு செய்யாவிட் டால் அந்தச்செலவு தொகையை வாதிகட்டவேண்டியது. வாதிபார் க்க வேணுமென்கிற தஸ்தாவேஜிகளில் நியாயமாய்க் கொண்டுவரக் கூடாமையான தஸ்தாவேஜிகள் தவிர மற்றவைகளையும், பிரதிவாதி தனக் கனுகூலமாகக் காட்டவேணுமென்கிற சகல தஸ்தாவேஜிகளை யும், எடுத்துக்கொண்டு, பிரதிவாதியினுடைய சாட்சிகள் சம்மன் கொடுக்கப்படாமலே ஆஜராக இஷ்டமுள்ளவர்களாயிருந்தால் அவர் களையும் இட்டுக்கொண்டு, நிச்சயிக்கப்பட்ட தினத்திலே கலெக் டர் கச்சேரியில் பிரதிவாதி ஆஜராகவேண்டியதென்று சம்மனில் உத்தரவு செய்யவேண்டியது. வியாச்சியத்தின் பிரதம விசாரணைகா லத்தில் யாதொரு தஸ்தாவேஜை பிரதிவாதி கொண்டுவந்து காட்ட லாமேயல்லாமல், பின்பு கொண்டுவந்து காட்டுகிறதாயிருந்தால் அதை ஏற்றுக்கொள்வதற்குத் தகுந்த முகாந்தரம் கலெக்டருக்குத் தெரிவிக்கப்பட்டாலொழிய அப்படியே பின்புகொண்டுவந்து காட் டும்படி பிரதிவாதிக்கு செலவு கொடுக்கப்படாது.

54. பிரதிவாதி நேரில் ஆஜராகவேண்டியது அவசியமாயிருக்கிறதென்று கலெக்டருக்குத் திருப்தியாகும்படி தெரிவித்து வாதி கேட்டுக்கொண்டாலும், பிரதிவாதி நேரில் ஆஜராகும்படி கலெக்டரே உத்தரவுசெய்தாலும், அப்படிப்பட்ட பிரதிவாதிகளில் பயிரங்கத்தில் வரத்தகாத ஜாதியைச்சேர்ந்த அல்லது அந்தஸ்துள்ள ஸ்திரீகள் தவிர மற்றவர்களுக்கு அப்பிரகாரமே நேரில் ஆஜராகும்படி சம்மன் பிறப்பிக்கப்படும். அப்படிக்கில்லாவிட்டால் நேராய் பிரதிவாதியாவது அவனுக்கு பதிலாய் அவனுடைய அதிகாரம்பெற்ற ஏஜெண்டாவது ஆஜராகவேணுமென்று சம்மனில் உத்தரவு செய்யப்படும்.

55. சாத்தியமானால் பிரதிவாதிக்கு நேராய் சம்மன் பிரதியைக்கொடுக்கவேண்டும்; நேரில் கொடுக்கக்கூடாவிட்டால், அவனுடைய குடும்பத்தைச்சேர்ந்த யாதொரு வயதுவந்த ஆண்பிள்ளையினிடத்திலாவது, அவனுடைய அதிகாரம்பெற்ற ஏஜெண்டினிடத்திலாவது சேர்ப்பிக்கவேண்டும். அதுவும் கூடாமையானால் அவன் வழக்கமாய் வாசஞ்செய்கிற இடத்தில் எல்லாருக்குந் தெரியும்படியான இடத்திலே ஒரு பிரதியையும் கலெக்டர் கச்சேரியில் ஒரு பிரதியையும் ஒட்டவேண்டியது.

56. வியாச்சியம் நடந்துகொண்டிருக்கையிலெப்போதாகிலும் விசாரணைக்கு நேரில் ஆஜராகும்படி வாதியை வரவழைக்க முகாந்தரமிருந்தால் அப்படியே வரவழைக்கவும், உத்தரவின்படி வாதி ஆஜராகாவிட்டால், செலவுடனேகூட வியாச்சியத்தைத் தள்ளிப்போடவும் கலெக்டருக்கு அதிகாரமுண்டு.

57. வியாச்சியம் விசாரணைக்கு நிச்சயிக்கப்பட்ட தினத்திலாவது விசாரணையை நிறுத்தி அதற்காக நிச்சயிக்கப்பட்ட வேறொரு தினத்திலாவது உபய கட்சிக்காரர்களும் நேரில் ஆஜராகாவிட்டாலும், அவர்களுக்குப்பதிலாய் அதிகாரம்பெற்ற ஏஜெண்டு ஆஜராகாவிட்டாலும், வியாச்சியந் தள்ளிவிடப்படும்; பிரதிவாதிமாத்திரம் ஆஜரானால், அவன் வியாச்சிய மூலத்தை ஒப்புக்கொள்ளாத பட்சத்தில், வாதி ஆஜராகாமையினாலே அவன்பேரில் கலெக்டர் தீர்ப்புச்செய்யவேண்டியது; வியாச்சிய மூலத்தைப்பிரதிவாதி ஒப்புக்கொண்டால் அப்பிரகாரமே கலெக்டரானவர் கோர்ட்டுச் செலவைத் தள்ளித் தீர்ப்புச்செய்யவேண்டும்; ஆனால் ஒருவனல்லாமல் பிரதி

வாதிகள் பலராயிருந்து அவர்களில் எவனாவது அப்படி ஒப்புக்கொண்டால் அவன்பேரில் மாத்திரம் மேற்சொல்லிய பிரகாரம் தீர்ப்புச் செய்யப்படும். வாதிமாத்திரம் ஆஜரானால், கிரமமாய் சம்மன் சேர்ப்பிக்கப்பட்டதென்று ருஜுவாவதின்பேரில், கலெக்டரானவர் வாதியையும் அவனுடைய சாட்சியத்தையும் பரிசீலனைசெய்து. பிரதிவாதி பட்சத்திலாவது அவனுக்கு விரோதமாகவாவது ஒருதலையாய்த் தீர்ப்புசெய்யலாம்.

58. ஆஜராகாத பிரதிவாதிக்கு விரோதமாய் ஒருதலையாகச் செய்யப்படுகிற தீர்ப்பின்பேரிலாவது, வாதி ஆஜராகாமையினாலே அவனுக்குவிரோதமாய்ச் செய்யப்படுகிற தீர்ப்பின்பேரிலாவது அப்பீல் பிடிக்கப்படாது. ஆனால் அப்படிப்பட்ட விஷயங்களிலே, எவன்பேரில் தீர்ப்புசெய்யப்பட்டிருக்கிறதோ அவன் வாதியாயிருந்தால் கலெக்டருடைய உத்தரவின் தேதிமுதற்கொண்டு பதினைந்து நாளைக்குள்ளும், அவன் பிரதிவாதியாயிருந்தால் திர்ப்பின்படி நடப்பிப்பதற்கான வாரண்டு முதலிய கட்டளை நிறைவேற்றபட்ட பின்பு பதினைந்து நாளைக்குள் அல்லது அதற்குமுன்னிட்டும், நேரில் அவனாவது அவனுக்குப் பதிலாய் ஏஜெண்டாவது ஆஜராகி, அவன்முன்னமே ஆஜராகாமற்போனதற்குத் தகுந்த முகாந்தரத்தைத்தெரிவித்து, நீதி தவறிப்போயிருக்கிறதென்று கலெக்டருக்குத் திருப்திகரமாய் ருஜுப்படுத்துகிறபட்சத்தில், அந்த கலெக்டரானவர் செலவுகளைக்குறித்தாகிலும் வேறே எதைக்குறித்தாகிலும் தமக்கு யுக்தமாகத்தோற்றுகிற திட்டங்களைச் செய்து, வியாச்சியத்தைப் புனர்விசாரணைபண்ணி அந்த வியாச்சியத்திலுள்ள நியாயப்படிக்கு, அந்தத்திர்ப்பைமாற்றலாம், அல்லது ரத்துசெய்யலாம். ஆனால் எதிர்கட்சிக்காரன் ஆஜராகி அந்தத் தீர்ப்புக்கு அனுகூலமான சங்கதிகளைச் சொல்லிக்கொள்ளும்படி அவனுக்கு முன்னதாய் சம்மன் அனுப்பாமல் அந்தத்தீர்ப்பை மாற்றவுங்கூடாது திருத்தவுங் கூடாது.

59. விசாரணைக்கு நிச்சயிக்கப்பட்ட தினத்திற்கு முன்னமே எப்போதாவது தாவாவைப் பிரதிவாதி ஒப்புக்கொண்டு, தாவாதொகையையும் சம்மன் செலவையும் கலெக்டர் கச்சேரியிலாவது வாதியினிடத்திலாவது அவனுடைய அதிகாரம்பெற்ற ஏஜெண்டினிடத்திலாவது செலுத்தலாம். அப்படி செலுத்தினால், பின்பு யாதொரு

நடவடிக்கையும் நடத்தாமல் வாதிபட்சத்தில் தீர்ப்புசெய்யப்படும். மேலும் பிரதிவாதியானவன் வாதியினுடைய தாவாவில் தனக்கு எவ்வளவு யுக்தமாகத்தோற்றுகிறதோ அவ்வளவை ஒப்புக்கொள்ளலாம், அல்லது தாவாதொகையில் தான் எவ்வளவு கொடுக்கவேண்டியதாக ஒப்புக்கொள்ளுகிறானோ அவ்வளவை மேற்சொலலியபடி செலுத்தலாம்; வாதி அதற்குச் சம்மதியாமல் வியாச்சியத்தை நடத்தி, பிரதிவாதியினல் மேற்சொல்லியபடி செலுத்தப்பட்ட அல்லது ஒப்புக்கொள்ளப்பட்ட தொகையைவிட அதிகமாக வரப்பெற்றுவதற்கு தீர்ப்பு அடையாமற்போனல் பின்னிட்ட செலவுகளையெல்லாம், அவன் கொடுக்கவேண்டியது.

60. இந்த ஆக்டின்படி நீதிவிசாரணை நடத்துகிற கலெக்ட்டர்கள் தஸ்தாவேஜிகளைக் கொண்டுவந்து காட்டும்படி செய்வதைக் குறித்தும் சாட்சிகளை ஆஜராகும்படி செய்வதைக்குறித்தும் ஆஜராகாதவர்களையும் சாட்சிசொல்லாதவர்களையும் தெண்டிப்பதைக்குறித்தும் சீவில் ஜட்ஜிகளுக்குண்டாகிய அதிகாரங்களை உடையவர்களாவார்கள்.

61. கட்சிக்காரர்கள் தங்களுடைய சாட்சிகளை விசாரணைகாலத்தில் இட்டுக்கொண்டு வரவேண்டியது; சாட்சி சொல்லும்படிக்காவது தஸ்தாவேஜு கொண்டுவந்து காட்டும்படிக்காவது யாதொரு சாட்சியை ஆஜர்படுத்துவதற்கு உபயகட்சிக்காரர்களில் எவனுக்காகிலும் சகாயம் வேண்டியிருந்தால், அவன்விசாரணைக்கு நிச்சயிக்கப்பட்டதினத்தில் அந்தசாட்சி ஆஜராவதற்கு சாவகாசமுண்டாகும்படி அந்த தினத்திற்குமுன்னமே தகுந்தகாலத்தில் கலெக்ட்டருக்கு மனுவுசெய்துகொள்ளவேண்டும்; அதற்குமேல் அந்தசாட்சி ஆஜராகும்படி அவனுக்கு கலக்ட்டர் சம்மன் பிறப்பிப்பார்.

62. சம்மேரிவியாச்சிய விசாரணை நடக்கையில் கலெக்ட்டர் பிறப்பிக்கிற சம்மன் முதலானதுகளிலே அவருடைய கையெழுத்தும் முத்திரையும் போட்டு, அவரால் நேமிக்கப்படுகிறவனலே அதுகளைக்கொண்டுபோய் சேர்ப்பிக்கப்படும், அல்லது நிறைவேற்றப்படும், அப்படி செய்வதற்குண்டான செலவை அதுகளைப்பிறப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறவன் ஏற்றுக்கொள்ளவேண்டும்; அந்த செலவுதொகையையும் சாட்சியினுடைய வழிச்செலவுக்கு வேண்டியபணத்தையும் அந்த சம்மன்முதலானது பிறப்பிக்கப்படுவதற்கு

முன்னமே கலெக்ட்டர் கச்சேரியில் கட்டவேண்டியது. ஆனால் யா தொருவிஷயத்தில் கலெக்ட்டருக்கு தகுந்த காரணந்தோன்றினல், செலவில்லாமலே அந்த சம்மன் முதலானதைச் சேர்ப்பிக்கும்படி அவர் உத்தரவு செய்யலாம்.

63. வியாச்சிய விசாரணையில், கட்சிக்காரர்கள் அல்லது அவர்களுடைய அதிகாரம் பெற்ற ஏஜெண்டுகளையும், வாதி பிரதிவாதிகளுடைய சாட்சிகளையும், சாட்சி விசாரணையைக்குறித்து அப்போதைக்கப்போது வழங்கிவருகிற சட்டப்படி பிரமாணத்தின்பேரிலாவது உறுதிமொழியின்பேரிலாவது வேறே எவ்விதமாயாவது விசாரணை செய்யலாகும். சாட்சிகளின் வாக்குமூலத்தை அந்த டிஸ்திரிக்ட்டின் சுயபாஷையிலாவது இங்கிலீஷிலாவது சங்கதி கோர்வையாக எழுதிக்கொண்டு அதை சாட்சிக்குப் படித்துக்காட்டி அவசியமானல் அதை விவரமாய்ச் சொன்னபின்பு அதில் கலெக்ட்டர் கையெழுத்துப் பண்ணவேண்டியது. வேறே யாதொரு சாட்சியத்தையாவது தஸ்தாவேஜுகளையாவது கொண்டுவரும்படி உத்தரவு செய்யவும் அந்த வியாச்சியத்தை விளங்கச்செய்வதற்கு வேண்டிய வேறே சாட்சிகளை சம்மனனுப்பி வரவழைக்கவும் கலெக்ட்டருக்கு அதிகாரமுண்டு.

64. வியாச்சியக்கட்டிலே பிரியாதர்ஜியும், பிறப்பிக்கப்பட்ட சம்மன்கள் அல்லது அதுகளின் நகல்களும், வாதி அல்லது அவனுடைய அதிகாரம்பெற்ற ஏஜெண்டைச்செய்த பரிசீலனையும், பிரதிவாதி அல்லது அவனுடைய அதிகாரம்பெற்ற ஏஜெண்டு கொடுத்த வாக்குமூலமும், யாதொரு விவரப்பத்திரிகையைப் பிரதிவாதி தாக்கல்செய்திருந்தால் அதுவும் சாட்சிகளின் வாக்குமூலமும் தாக்கல் செய்யப்பட்ட தஸ்தாவேஜுகளின் ஜாபிதாவும் சேர்ந்திருக்கவேணும். அந்த தஸ்தாவேஜுகளை கலெக்ட்டர் வைத்துக்கொண்டால், அதுகளை அந்தக்கட்டில் சேர்க்கவேண்டியது.

65. இந்த ஆக்ட்டின்படி கலெக்ட்டர்கள் நடத்துகிற நடவடிக்கைகள் சுருக்கமாயிருக்கவேண்டும்; பிரியாதர்ஜி தாக்கல்செய்யப்பட்டபின்பு பிரதிவாதி ஆஜராயிருந்தால் அந்த வியாச்சிய விசாரணையை உடனே நடத்துவதற்கு கலெக்ட்டருக் கதிகாரமுண்டு.

66. யாதொரு வியாச்சியத்திலே விவகரிப்பதற்கு வாதிக்காவது பிரதிவாதிக்காவது எந்தவிஷயத்திலாகிலும் கலெக்ட்டர் வாயி

தாகொடுக்கலாம், மேலும் யாதொரு தகுந்த முகாந்தரமிருந்தால் அதை யெழுதிவைத்து தனக்கு யுக்தமாகத் தோற்றுகிறபடி அந்த விசாரணையை நிறுத்திவைக்கலாம்.

67. யாதொரு வியாச்சியம் நடந்துகொண்டிருக்கையி லெப்போதாவது கலெக்டரானவர் விவாதமுண்டான இடத்திலே விவாத சங்கதியைக்குறித்து விசாரணைசெய்து அறிக்கைபண்ணும்படி தனக்குக் கீழ்ப்பட்ட உத்தியோகஸ்தனுக்கு உத்தரவுசெய்யலாம். அந்த அறிக்கையும் அதற்கு ஆதாரமான சாட்சியமும் தஸ்தாவேஜுகளும் அந்த வியாச்சியக்கட்டைச் சேர்ந்ததாகும். தீர்ப்பு செய்கையில் கலெக்ட்டரானவர் அதுகளைப் பார்வையிட்டு யோசித்துப் பண்ணவேண்டியது.

68. வியாச்சிய விசாரணை முடிந்தபின்பு கலெக்டரானவர் தீர்ப்புச்சொல்ல வேண்டியது. அந்தத்தீர்பை அதற்குண்டான ஏதுக்கள் சகிதமாய் இங்கிலீஷிலே கலெக்ட்டர் எழுதி, அந்த தீர்ப்பு சொல்லுங்காலத்தில் அவர் தேதிபோட்டுக் கையெழுத்துபண்ணவேண்டியது. உபயகட்சிக்காரர்களில் அவனவன் மனுவுசெய்துகொண்டால், கலெக்ட்டருடைய தீர்ப்புக்கு நகலை தர்ஜுமாசகிதமாய் செலவில்லாமல் அவர்களுக்குக் கொடுக்கவேண்டியது.

69. கலெக்ட்டர் இந்த ஆக்ட்டின்படிசெய்கிற சகல தீர்ப்புகளின்பேரிலும் ஜில்லா ஜட்ஜியினிடத்தில் கிரம அப்பீல்செய்யலாகும். அப்படி அப்பீல்செய்துகொள்ளுகிறதானல் கலெக்டருடைய தீர்ப்பின் தேதிமுதற்கொண்டு முப்பதுநாளைக்குள் ஜில்லா கோர்ட்டில் செய்யவேணும், ஆனல் கலெக்டர் இந்த ஆக்ட்டின்படி செய்கிறதீர்ப்புகளை சாரம்சங்களைப்பற்றிமாத்திரம் ரத்துசெய்யலாமே தவிர, ஒழுங்கு குறைவாயிருப்பதைப்பற்றியாவது நடவடிக்கைகள் கிரமப்பிசகாயிருப்பதைப்பற்றியாவது ரத்துசெய்யக்கூடாது.

70. கலெக்டர் தன்னுடைய தீர்ப்பை நிறைவேற்றும்படி உடனே வாரண்டு பிரப்பிக்கலாம்; ஆனல் தீர்ப்புசெய்யப்பட்ட நஷ்டத்தையாவது தெண்டத்தையாவது செலவையாவது அப்பீல்வாயிதா முப்பதுநாள் கழிகிறவரையில் வசூல்செய்யவுங்கூடாது. இந்த ஆக்ட்டிலுள்ள நிபந்தனைகளின்படி யாதொரு ரயித்தை நிலஸ்வாதீனத்திலிருந்து அப்புறப்படுத்தவுங்கூடாது. மேலும் எவன்பேரில் தீர்ப்பு செய்யப்பட்டதோ அந்த கடன்காரனுகிய ஆளின்பேரிலும் அவனு

டைய சொத்தின்பேரிலும் ஒருமிக்க வாரண்டுபிறப்பிக்கக்கூடாது. கலெக்டருடைய தீர்ப்புக்குட்பட்ட சகல தொகைகளும் சர்க்கார் தீர்வை பாக்கியைப்போல வசூல் செய்யப்படத்தக்கதாகும்.

71. பட்டாகொடுக்கும்படி தீர்ப்புசெய்யாவிட்டால், அந்தப்படி பட்டாகொடுக்கவேண்டியவன் கொடுக்கமாட்டேனென்றாலும், ஆலசியஞ்செய்தாலும், தீர்ப்பிலுள்ள திட்டங்களை அனுசரித்து கலெக்டரானவர் தன்னுடைய கையெழுத்து முத்திரைசகிதமாய் பட்டாகொடுக்கலாம். அந்தபட்டா மேற்படியானால் கொடுக்கப்பட்டாற்போலவே செலாவணியாகும்.

72. முச்சிலிக்கா கொடுக்கும்படி தீர்ப்பு செய்யப்பட்டால், அந்தப்படி முச்சிலிக்கா எழுதிக்கொடுக்கவேண்டியவன் அதையெழுதிக்கொடுக்கமாட்டேனென்கிற பட்சத்தில் மேற்படி தீர்ப்பானது அவனிடத்திலிருந்து வரவேண்டிய குத்தகைத்தொகைக்கு சாட்சியமாவது மல்லாமல் இந்தத்தீர்ப்புக்கு கலெக்டருடைய கையெத்து முத்திரை சகிதமாய்க் கொடுக்கப்படுகிற நகலானது மேற்படியானால் எழுதிக் கொடுக்கப்படுகிற முச்சிலிக்காவைப்போலவே செலாவணியாகும்.

73. யாதொரு ரயித்தினுடைய அனுபோகத்திலிருந்து நிலத்தை எடுத்துக்கொள்ளும்படியாவது, எடுத்துக்கொள்ளப்பட்ட நிலத்தை மறுபடியும் அவனுடைய அனுபோகத்தில் விடும்படியாவது தீர்ப்பு செய்யப்பட்டால், அந்தத்தீர்ப்பின்படி எடுத்துக்கொண்டு எவனுடைய ஸ்வாதீனஞ் செய்யவேண்டியதோ அல்லது எவனுடைய அனுபோகத்தில் விடவேண்டியதோ அந்தப்படி அந்த நிலத்தை ஒப்பித்து தீர்ப்பை நிறைவேற்றவேண்டியது; அப்பிரகாரம் ஒப்பிக்கும்படி செய்யப்படுகிற உத்தரவை நிறைவேற்றுகையில் எதிரியாவது மற்றவர்களாவது எதிர்ப்பார்களாகில், மனுவு செய்யப்படுவதின்பேரில், மாஜிஸ்திரேட்டானவர் அந்த உத்தரவின்படி நிலத்தை ஒப்பிக்கவேண்டியது.

74. சிவில் புரோசீடர்கோடில் பஞ்சாயத்தைக்குறித்து 6-ம் அத்தியாயத்தில் சொல்லியிருக்கிற நிபந்தனைகள் இந்த ஆக்டின்படி கலெக்ட்டர்களிடத்தில் செய்யப்படுகிற சம்மேரி வியாச்சியங்களுக்குச் சம்பந்தப்படும். இந்தப்பிரிவின்படி யாதொரு வியாச்சியத்தை பஞ்சாயத்திற்கு கலெக்ட்டரனுப்பினால், அந்த பஞ்சாயத்தில்

ஒருவராகவாவதுபலராகவாவது விசாரணைசெய்கிறவர்களால் செய்யப்பட்ட தீர்மானத்தைக்கலெக்ட்டரானவர் தானே செய்தாற்போல நிறைவேற்ற அதிகாரமுடையவராவார்.

75. இந்த ஆக்ட்டின்படி கலெக்ட்டரிடத்தில் செய்யப்படுகிற சம்மேரிவியாச்சியங்களுக்கு முத்திரைக்கடுதாசித்தீர்வை வேண்டுவதில்லை.

76. இந்த ஆக்ட்டின்படி நடத்தப்பட்ட நடவடிக்கைகளில், கலெக்ட்டரால் செய்யப்படுகிற தீர்ப்பின்பேரிலும், தீர்ப்புக்குப்பின்பும் அதை நிறைவேற்றுவதைக்குறித்தும் அவரால் செய்யப்படுகிற உத்தரவின்பேரிலும், ஜில்லாகோர்ட்டில் செய்யப்படுகிற அப்பீலிலாவது 58-வது பிரிவில் சொல்லியிருக்கிறபடிக்காவது புனர் விசாரணை செய்யப்படுமே தவிர, மற்றப்படி புனர் விசாரணை செய்யப்படாது.

77. பிரதி கலெக்ட்டரும் தான் விசாரித்துத் தீர்மானிக்கிற சம்மேரி வியாச்சியங்களுக்கு அடியில் கண்டிருக்கிற நமூனாப்படி ரிஜிஸ்தர் வைக்கவேண்டியது:—

வியாச்சிய நம்பர்.	பிரியாதர்ஜியின் தேதி.	பிரியாதர்ஜியின் சுருக்கம்.	பிரதிவாதி சொல்லிக்கொள்ளுகிற நியாயங்களின் சுருக்கம்.	தீர்ப்பின் தேதியும் சுருக்கமும்.

78. கொடுத்திருக்கிறபணத்தை வரப்பற்றுவதற்காவது, இந்த ஆக்ட்டிலுள்ள அதிகாரத்தைக்கொண்டு பரிஷ்காரமாய்ச் செய்யப்பட்ட யாதொரு காரியத்தைக்குறித்து நஷ்டத்தை வரப்பற்றுவதற்காவது சாதாரணமான நியாயஸ்தலங்களிலே எவனுகிலும் விவகாரம் நடத்துவதற்கு இந்த ஆக்ட்டிலுள்ள யாதொரு நிபந்தனையினலே தடங்கலுண்டாயிருப்பதாக ஒருவரும் எண்ணக்கூடாது. ஆனால் அப்படிப்பட்ட வியாச்சியமூலம்பிறந்த காலமுதற்கொண்டு ஆறுமாசத்திற்குள் அந்த கட்சிக்காரர்கள் அதைக்குறித்து வியாச்சியங்

தொடராமல் பின்பு தொடர்ந்தால் சிவில்கோர்ட்டார் அதை விசாரணைசெய்யக்கூடாது. மேலும் முன்னதாய் அவசியமான விவரப் பத்திரிகை கொடுக்கப்பட்டிருக்கிற விஷயத்தில், அந்த பத்திரிகை பொய்யானதென்று ருஜுவானபோதிலும், 41-வது, 45-வது பிரிவுகளில் சொல்லியிருக்கிறபடி வாரண்டுகள் பிறப்பித்ததைக்குறித்து யாதொரு ரிவினியூ அதிகாரியின்பேரில் செய்யப்படுகிற வியாச்சியமும், யாதொருபோலீசு உத்தியோகஸ்தன் யாருக்கு உட்பட்டிருக்க வேண்டியதோ அந்த அதிகாரியினால் உத்தரவுசெய்யப்படுகையில் யாதொரு வாரண்டை நிறைவேற்றினதைக்குறித்தாவது இந்த ஆக்ட்டின்படிக்குண்டாகிய சம்மன் முதலானதுகளைச் சேர்ப்பிப்பதற்கு உதவிசெய்வதைக்குறித்தாவது அந்த போலீசு உத்தியோகஸ்தன் பேரில் செய்யப்படுகிற வியாச்சியமும் பிடிக்கப்படாது.

79. பூமிக்குடையவர்கள் இந்த ஆக்ட்டின்படி தங்களுக்குண்டாகிய அதிகாரங்களை யெல்லாம் தங்களுடைய ஏஜெண்டுகளுக்காவது காரியக்காரர்களுக்காவது கொடுக்கத்தக்கவர்களாவார்கள். அந்த ஏஜெண்டுகளாலாகிலும் காரியக்காரர்களாலாகிலும் அநியாயமடைந்தவர்கள் அவ்விருதிறத்தாரில் யார்பேரிலாவது அவர்களுடைய முதலாளியின்பேரிலாவது இரண்டுபேரிலுமாவது வியாச்சியங்கொண்டுவரலாம். ஆனால், பிரியாதுக்குட்பட்ட காரியம் முதலாளியினுடைய அனுமதியில்லாமல் இவனுடைய ஏஜெண்டினாலாவது காரியக்காரனாலாவது செய்யப்பட்டபட்சத்தில் அந்த முதலாளியை எந்தவிஷயத்திலும் காவலில்வைக்கவுங்கூடாது. அவனிடத்தில் வாதிக்கு வாஸ்தவமாய் உண்டான நஷ்டத்தைவிட அதிக நஷ்டத் தொகையை வாங்கவுங்கூடாது.

80. குத்தகைத்தொகை பாக்கியைக்குறித்து சம்மேரி விவகாரந்தொடருவதற்கு இந்த ஆக்ட்டினாலே அதிகாரம்பெற்றவர்களுடைய வாரிசுதாரர்களாவது நியாயமான பிரதிநிதிகளாவது, அந்தக் காலத்தில் தங்களுக்கு நியாயமாய் பாத்தியதை யுண்டானபோது மேற்படி பாக்கி ஏற்பட்டதாயிருந்தாலும் முன்னிட்டு ஏற்பட்டதாயிருந்தாலும், அப்படிப்பட்ட விவகாரந் தொடருவதற்காவது தொடரப்பட்டிருக்கிற விவகாரத்தைப் பின்னும் நடத்துவதற்காவது தங்கள் மூலபுருஷர்களுக்குண்டாகிய அதிகாரத்தை உடையவர்களாவார்கள்; இந்தப் பிரிவின்படி அவர்கள் முதலில்செய்ய எத்தனிக்

கிற காரியத்தை கலெக்டருக்காவது அதற்காக அதிகாரமுடைய வேறே உத்தியோகஸ்தருக்காவது தெரியப்படுத்தவேண்டும்.

81. பணமாகவாவது தானியமாகவாவது செலுத்துவதற்கு பூமிக்குடையவர்களிடத்திலே ரசீதுபெற்றுக்கொள்ள ரயித்துகளுக்கு பாத்தியமுண்டு; குத்தகைத்தொகை முழுமையும் அவர்கள் செலுத்திவிட்டால், அவர்கள் பூரா ரசீது பெற்றுக்கொள்ளத்தக்கவர்களாவார்கள். யாருக்கு ரசீதுகொடுப்பதில்லையென்று மறுக்கப்படுகிறதோ அவர்கள் அதை கலெக்டரிடத்திலே சம்மேரி வியாச்சியந் தொடர்ந்து ருஜுவுசெய்வார்களாகில் தாங்கள் செலுத்திய தொகைக்கு இரட்டத்தனைக்கு அதிகப்படாமல் நஷ்டத்தை செலவுடனேகூட வரப்பற்றலாம்.

82. பூமிக்குடையவரிடத்திலிருந்து மனுவு பெற்றுக்கொள்வதின்பேரில், கலெக்டராவது அவரால் நேமிக்கப்பட்ட உத்தியோகஸ்தராவது தகுந்த முகாந்தரங் காணுகிறபட்சத்தில், ரயித்து செலுத்தவேண்டிய தொகைக்கு அவன் மாசூல் அல்லது பலனை அறுத்து எடுத்துக்கொண்டு போவதற்குமுன்னமே ஜாமீன்கொடுக்கும்படி அந்த ரயித்துக்கு உத்தரவுசெய்ய அதிகாரமுடையவராவார். அந்த ரயித்து அப்படி ஜாமீன்கொடாவிட்டால், அந்த மாசூல் அல்லது பலனில் மனுவுதாரனுக்குச் சேரவேண்டிய தொகைக்குச் சரியான பாகத்தை அவரிடத்தில் ஒப்பித்துவிட மேற்படி கலெக்டர் அல்லது உத்தியோகஸ்தருக்கு அதிகாரமுண்டு.

83. குத்தகைத்தொகையாக மாசூலில் ஓர் பாகத்தைப் பெற்றுக்கொள்ளுவதற்கு பாத்தியமுள்ள பூமிக்குடையவனெவனுகிலும் தனக்குத் தெரிவிக்காமலாவது தன்னுடைய கண்காண இல்லாமலாவது மாசூல் அறுத்துவிடப்பட்டதென்றும், தனக்குக்கொடுக்கவருகிற அல்லது தனக்காக வைத்திருக்கிற பாகம் குறைவாயிருக்கிறதென்றும்,பிரியாதுசெய்தால்,அதைக்குறித்து சம்மேரி வியாச்சியம் தாக்கல்செய்யப்படுவதின்பேரில், அந்த வியாச்சியத்தை விசாரணை செய்து, எவ்வளவு நியாயமாகத்தோற்றுகிறதோ அவ்வளவு ஜாஸ்தி தானியத்தையாவது பலனையாவது அதற்குச்சரியான கிரயத்தையாவது பூமிக்குடையவனுக்கு ரயித்துகொடுக்கும்படி தீர்ப்புசெய்ய கலெக்டருக்கு அதிகாரமுண்டு. பூமிக்குடையவனுக்குத் தெரிவித்து அவனுடைய சம்மதி பெற்றுக்கொள்ளாமல் மாசூலை அறுத்த

தற்காக இந்தியன் பினல்கோடின் 17-வது அத்தியாயத்திலுள்ள நிபந்தனைகளின்படி யாதொரு அபராதம் அல்லது தெண்டனையை அந்த ரயித்துக்கு விதிக்கவேண்டியதற்கு மேற்படி தீர்ப்பினாலே பாதகமுண்டாகமாட்டாது.

84. யாதொரு ரயித்தின்பேரிலாவது அவனுடைய ஜாமீன்தாரன் பேரிலாவது அவ்விருவர் பேரிலுமாவது விவகாரம் நடத்த பூமிக்குடையவர்களுக்கு அதிகாரமுண்டு. ஆயினும், பாக்கியும் வட்டியும் கோர்ட்டுச்செலவு முதலான செலவுகளும் சேர்ந்ததொகை மொத்தத்தைவிட அதிகமாக அவ்விருவரிடத்தில் வசூல் செய்யக்கூடாது.

85. பூமிக்குடைய வர்களாகிய அசமர்த்தாளுக்குரிய ஸ்திதியின் காரியநிர்வாகிகளும், சர்க்கார்தீர்வை பாக்கிக்காக ஜப்தியிலுள்ள நிலங்களையாவது சீவில்கோர்ட்டாருடைய உத்தரவின்படி ஏற்பட்ட நிலங்களையாவது விசாரணைசெய்கிற சர்க்கார் அதிகாரிகள், தங்களுடைய வசத்திலிருக்கிற பூஸ்திதி அல்லது நிலங்களின் சொந்தக்காரர்களே இந்த ஆக்ட்டிலுள்ள நிபந்தனைகளின்படி எவ்விதமாய் நடவடிக்கை நடத்தத்தக்கதோ அவ்விதமாகவே குத்தகைத் தொகை பாக்கிக்காக ரயித்துகள்பேரில் நடவடிக்கை நடத்த அதிகாரமுடையவர்களாய், அந்த பூஸ்திதி அல்லது நிலங்கள் தங்களுடைய விசாரணையிலிருக்கிறவரையில் பூமிக்குடையவர்களைப்போலவே நிர்ப்பந்தங்களுககுட்பட்டு, இந்த ஆக்ட்டின்படி பூமிக்குடையவர்களுக்குண்டாகிய அதிகாரங்களையெல்லாஞ் செலுத்தலாம்.

86. சர்க்கார்பேரிஜாரு குத்தகை செய்துகொள்ளுகிறவர்களெல்லோரும் தங்களுடைய உள்குத்தகைதாரர்கள் செலுத்தவேண்டிய குத்தகைத் தொகையைக் கண்டெழுதி உடன்படிக்கைகளை அந்த உள்குத்தகை தாரர்களிடத்தில் வாங்கிக் கொண்டிருப்பார்களாகில், இந்த ஆக்டிலுள்ள நிபந்தனைகளின்படி அந்த உள்குத்தகைத்தொகையைவசூல்செய்வதற்காக அவர்கள்பேரில் நடவடிக்கை நடத்த அதிகாரமுடையவர்களாவார்கள்.

87. வியாச்சியந் தொடரக்கூடாதென்று இதில் முன்னமே விலக்கப்பட்டிருப்பதுந்தவிர பூமிக்குடையவர்கள் முதலானவர்கள் தங்களுக்கு யுக்தமாகத் தோற்றினால் தங்களுக்கு வரவேண்டியகுத்

தகை அல்லது தீர்வை பாக்கிக்காக சிவில்கோர்ட்டுகளிலே வியாச்சியந் தொடரலாம். ஆனால் குத்தகைத்தொகையைக்குறித்த வியாச்சியங்களைத் தீர்மானிப்பதில் கோர்ட்டார் இந்த ஆக்டிலுள்ள நிபந்தனைகளை அனுசரிக்கவேண்டியது.

88. சென்னபட்டணத்து சட்டபுஸ்தகத்திலுள்ள 1802-ம் ளுடத்து 2-வது சட்டம் 12-வது பிரிவில் சொல்லியிருக்கிறபடி சென்னபட்டணத்து ராஜதானியின் சரஹத்துக்குள் குத்தகைத் தொகை அல்லது சர்க்கார் தீர்வையைவசூல்செய்வதற்கு இந்த ஆக்டிலுள்ள எந்த நிபந்தனையும் சம்பந்தப்படமாட்டாது.

89. அடியில்கண்டிருக்கிற சட்டங்கள்-வேறே ஆக்ட்டுகளையும் சட்டங்களையுமாவது வேறே ஆக்டுகளின பாகங்களையும் சட்டங்களின் பாகங்களையுமாவது ரத்துசெய்கிறமட்டிலும், இந்த ஆக்ட்டு வழங்கத்தொடங்குவதற்கு முன்னமே நடந்திருக்கிற நடவடிக்கைகள் அல்லது சங்கதிகளுக்குச் சம்பந்தப்படுகிறமட்டிலுந்தவிர இதனால் ரத்துசெய்யப்படுகிறது:—

1802ளுடத்து - 28 - வது - சட்டம்.
1802ளுடத்து - 30 - வது - சட்டம்.
1806ளுடத்து - 2 - வது - சட்டம், 4-வது 6-வது பிரிவுகள்.
1858ளுடத்து - 39 - வது ஆக்ட்டு.
1826ளுடத்து - 1 - வது - சட்டம்.

90. இந்த ஆக்டானது சென்னபட்டணத்து கவரன்மெண்டார் நிச்சயித்து சர்க்கார் கெஜட்டில் பிரசித்தஞ்செய்விக்கிற தேதிமுதற்கொண்டு வழங்கிவரவேண்டியது.

பொதுவான காரியங்களுக்காக எடுத்துக்கொள்ளப்பட்ட நிலங்கள். எடுத்துக்கொள்ளும் விதம்.

கவரன்மெண்டார் கைவசத்திலிராத நிலங்கள் பொதுவான காரியங்களுக்குக் காயமாகவேண்டியிருந்தால், அப்படிப்பட்ட நிலங்களை ஒரேரீதியாய் 1894ளுடத்து 1-வது ஆக்ட்டின் பிரகாரம் எடுத்துக்கொள்ளவேண்டும்; ஏனென்றால்:—அந்த ஆக்ட்டின்பிரகாரம நிலங்களைக் கிரகிப்பதினால் கவரன்மெண்டாருக்கு சாஸ்வதமான ஸ்வதந்தரம் ஏற்படுகின்றது. ஸ்வல்பகால உபயோகத்துக்காக நில

ங்களைக் கிரகிப்பதிலே, அந்த ஆக்ட்டை (VI-வது பாகம்) சாத்திய மான சந்தர்ப்பங்களில் பிரயோகிக்கவேண்டும்.

2. நிலம் எந்த இலாகாதாரருக்கு வேண்டியிருந்தாலுஞ்சரி இதில் பின்னால் கண்டிருக்கிற நிபந்தனை பிரகாரம் கலெக்ட்டர் எடு த்துக்கொள்ளவேண்டும்.

3. நிலமெடுத்துக்கோள்வதற்கான ஆக்ட்டை அமுலுக்குக்கோண்டுவரு வதற்குமுன்னே அனுசரிக்கவேண்டிய நடவடிக்கை.

இதரமான இலாகாதாரர்களுக்குப் பொதுவான காரியங்களுக் காகத் தேவையான நிலங்களை எடுத்துக் கொள்ளவேண்டுமானால், எந்த இலாகாவுக்குத் தேவையாயிருக்கிறதோ அந்த இலாகாவின் டிஸ்ட்ரிக்ட் தலைவரானவர் அந்த நிலங்களின்உருவப்படத்தைக்கூட வைத்துக் கலெக்ட்டருக்கு விண்ணப்பஞ்செய்துகொள்ளவேண்டும். அதன்மேல், கலெக்ட்டரானவர் தாமேயாவது தம்முடைய கீழுத்தி யோகஸ்தர்களில் ஒருவர் மூலமாகவாவது நிலம் தேவையாயிருக்கிற இலாகாவின் யாதொரு உத்தியோகஸ்தருடனே அந்த நிலமிருக் கிற இடத்தைப்போய்ப் பார்வையிடவேண்டும். அப்புறம் அந்தநில த்தில் முளையடித்து, அந்த நிலத்தை எடுத்துக்கொள்வதற்காகப் பிடிக்கும் உத்தேசமான செலவைக் கணக்கிடும்பொருட்டு அநுபந் தத்தில் காட்டியிருக்கிற நமூனாவின் பிரகாரம் அந்த நிலமிருக்கிற இடம் அதன் விஸ்தீரணம் முதலான விவரங்க ளடங்கிய ஒரு ஸ்டேட்மெண்டில் 5-முதல் 17-வரையிலுள்ள கலங்களில் செய்யப் பட்ட பதிவுகளுக்கு, கிராம அதிகாரியிடத்திலிருந்து பெறத்தக்க சங்கதிகளே ஆதாரமாகுமென்பதை விதியாக வைத்துக்கொள்ள வேண்டும். அந்த சங்கதிகள் சரியானவை என்பதற்கு அவர்களை உத்தரவாதிகளாகக் கொள்ளவேண்டும். ரெஜிஸ்ட்டர் செய்யப்ப ட்ட நிலத்தின் ரெவினியூ யாதொரு பாகத்துக்கு மாத்திரமே தே வையாயிருந்தால், அது சங்கதியை 7-வது கலத்தில் குறிக்கவே ண்டும்.

4. அந்த நிலத்தை எடுத்துக்கொள்வதில் அதன் சொந்தக்கா ரர்களுக்காவது அநுபோகதாரர்களுக்காவது ஏதாகிலும் ஆக்ஷேப னையிருக்குமாகில், அந்த ஆக்ஷேபனைக ளடங்கிய யாதொரு ஸ்டே ட்மெண்டை அவர்களிடத்தில் தவறாமல் வாங்கி அதை, பின்னால்

7-வது பாராவில் பிரஸ்தாபிக்கப்பட்ட விண்ணப்பத்துடன் கவர்ன்மெண்டாருக்கு அனுப்பவேண்டும்.

5. மூன்றாவது பாராவில் பிரஸ்தாபிக்கப்பட்ட ஸெட்டில்மெண்டில் காரியங்களுக்காக நிலத்தின்கிரயத்தை மதிப்பிடுவதிலே கலெக்டரானவர் பின் வருகிற விஷயங்களை அநுசரிக்கவேண்டும்:—

(1) நிலத்தின் கிரயமானது சாதாரணமாய் அதன் ஊர் விலையாக இருக்கவேண்டும்; அதாவது, அதைச் சாதாரண சந்தர்ப்பங்களில் விற்பனை செய்தால், என்னகிடைக்கக்கூடுமோ அந்தத்தொகையாகும்.

(2) இதை மதிப்பிடுவது கஷ்டமாயிருக்குமானால், அக்கம்பக்கத்தில அதைப்போன்ற நிலங்களின் ஊர் விலையை அநுசரிக்கவேண்டும்.

(3) இந்தவிஷயத்தைக்கூட அறியமுடியாத பக்ஷத்தில், நிலத்தின் மதிப்புக் கிரயத்தைப் பின் வருமாறு கணக்கிடவேண்டும்:—

(a) ரயத்துவாரி நிலங்களின் விஷயத்திலே அஸெஸ்மெண்ட் ஏற்படுத்தப்பட்ட பிறகு நிலத்தில் சாஸ்வதமான சீர் திருத்தங்கள் செய்யப்பட்டிருந்தாலன்றி மற்றப்படி, அஸெஸ்மெண்டுக்கு 15-மடங்காயிருப்பதாகக் கிரயத்தைக் கொள்ளவேண்டும்; அந்தப்படி சீர் திருத்தங்கள் செய்யப்பட்டிருக்குமாகில், அதன் மதிப்புக்கிரயத்தை, அதிலிருந்து தேறுகடையாகிற நிகர வருமானத்துக்கு 15-மடங்காகக் கணக்கிடவேண்டும்.

(b) இனாம் அல்லது ஜமீன்தாரி நிலங்களின் விஷயத்திலே—

(i) நிலத்திற்கு ஸர்வே அஸெஸ்மெண்ட், லைமாஷ் அஸெஸ்மெண்டாவது விதித்திருக்குமாகில், ஜமீன்தாரர் அல்லது இனாம்தாரருடைய மேல்வார சுவதந்தரத்தைப்பற்றிய பிரதிபலனை, அந்த அஸெஸ்மெண்டுக்கும் அதன் அளவுக்கேற்ற பேஷ்கிஸ்தி அல்லது குயிட்ரெண்டுக்கும் உள்ள வித்தியாசத்துக்கு 15-மடங்களவாகக் கணக்கிடவேண்டும்; நிலத்தின் அநுபோக ஸ்வதந்தரம் சொந்தக்காரரிடத்திலேயே யிருந்தாலும் சரி, யாதொரு குடியானவனிடத்திலிருந்தாலும் சரி, அதைப்பற்றிய பிரதிபலனை அஸெஸ்மெண்டுக்கு 15-மடங்களவாகக் கணக்கிடவேண்டும்.

(ii) நிலத்தின்மேல் அப்படிப்பட்ட அஸெஸ்மெண்டியாதொன்றும் விதித்திராவிட்டால், நிலத்தின் சொந்தக்காரருடைய மேல்வாரஸ்வதந்தரத்தைப்பற்றிய பிரதிபலனை, அந்த நிலத்தின் தீர்வைக்கும் அதற்கேற்ற பேஷ்கிஸ்தி அல்லது குயிட்ரெண்டுக்கும்உள்ள வித்தியாசத்துக்கு 15-மடங்களவாகக் கணக்கிடவேண்டும். இந்த விஷயத்திலே, சொந்தக்காரரே அநுபோக ஸ்வதந்தரத்தை நிலத்தில் உடைத்தாயிருந்தால், அந்த ஸ்வதந்தரத்துக்காகப் பிரத்தியேகமான யாதொரு பிரதிபலனும் கொடுக்கவேண்டிய அவசியமில்லை; ஏனென்றால், அது தீர்வைத்தொகையில் அடங்கியிருக்கும்; ஆயினும், அநுபோக ஸ்வதந்தரம் யாதொரு குடியானவனுக்கு இருந்தால், அதற்காக அவனுக்குக்கொடுக்கவேண்டிய பிரதிபலனை, அவன் கட்டுகிறதீர்வைக்கு 15-மடங்களவாகக் கணக்கிடவேண்டும்.

(iii) ஜமீன்தாரி கிராமங்களிலும் இனாம் கிராமங்களிலுமுள்ள தரிசு நிலங்களின் விஷயத்திலே, அவைகளின் மதிப்பிட்ட தீர்வையின் தற்கால விலைமதிப்பை அநுசரித்துப் பிரதிபலனைக் கணக்கிடவேண்டும். இந்தத் தற்கால விலைமதிப்பை நிஷ்கரிஷை செய்யவேண்டுமானால், முதலில், சாகுபடியிலிருக்கிற அதுபோன்ற நிலங்களின் விதங்களை அநுசரித்துத் தீர்வை மதிப்பிட்டுக்கொண்டு, அதன்பிறகு, அந்த நிலம் இன்னும் எத்தனை வருஷத்தில் ஏருழ தகுதியாகுமோ அதற்கேற்றபடி, அநுபந்தத்திலுள்ள ஸ்டேட்மெண்டின் இரண்டாவது கலத்தில் கொடுத்திருக்கிற சங்கியைப் பிரமாணத்தை அதற்குப் பிரயோகிக்கவேண்டும். ஆயினும், இந்தக்கால அளவை எவ்வளவேனும் சரியாகமதிப்பிட முடியாவிட்டால் தீர்வையின் தற்கால விலைமதிப்பை, அதன் மதிப்பிட்ட தொகைக்குப் பேற்பாதியாயிருப்பதாக நிஷ்கரிஷை செய்யலாம்.

6. யாதொரு விஸ்தாரமான பொதுவேலைக்காக நிலம்தேவையாக இருந்தால், பிரதிபலனை முடிவுசெய்வதற்கென்று ஏற்படுத்தப்படும் உத்தியோகஸ்தருக்காகப் பிடிக்கும் செலவை, நிலத்தை எடுத்துக்கொள்வதற்கான மதிப்புக் கிரயத்தில் சேர்த்துக் கணக்கிடவேண்டும். அதினாலுண்டாகிற அதிகச் செலவானது நிலத்தின் கிரயத்துக்காகக் கொடுக்கப்படுகிறதொகை குறைவதனாலும், பிரதிபலனை அதிதுரிதமாய் முடிவுசெய்வதனால் வட்டியும் இதரமான செலவுக

ளும் கூடிவருவதனுலும் பெரும்பான்மையாய் கிரவிக்கொண்டு போகும்.

7. நிலமெடுத்துக்கொள்வதற்காக இவ்வளவு பிடிக்குமென்று மதிப்பிட்ட செலவுத்தொகையானது பிரத்தியேகமாகவாகிலும், நிலம் எந்தக்காரியம் அல்லது ஏற்பாட்டுக்காகத் தேவையாயிருக்கிறதோ அந்தகாரியம் அல்லது ஏற்பாட்டின் மதிப்புத்தொகையின் பாகமாகவாகிலும் யாதொரு தகுந்த அதிகாரியால் ஜாரிசெய்யப்பட்டு, இதுசங்கதி கலெக்ட்டர் அறிந்துகொண்டபிறகு, அவர் சந்தர்ப்பத்திற்கேற்றபடி, ஆக்ட்டின் 6-வது பிரிவின்படி நிலத்தை சாஸ்வதமாக எடுத்துக்கொள்ளும்பொருட்டு அவசியமான ட்ராப் டிக்ளரேஷன் என்னும் விளம்பரத்தின் மசோதாவையாகிலும், ஆக்ட்டின் 35-வது பிரிவின்படி நிலத்தை ஸ்வல்பகாலம் அநுபோகிப்பதற்காக உத்தரவு கொடுப்பதற்கான யாதொரு விண்ணப்பத்தையாகிலும், அநுபந்தத்தில் கொடுத்திருக்கிற நமூனுவின் பிரகாரம், அதற்குரிய கவர்ன்மெண்ட் ஸெகிரிடேரியட் டிபார்ட்மெண்டுக்கு அனுப்பவேண்டும்.

ஆக்ட்டின்படி செய்வித்தபிறகு நடத்தவேண்டிய நடவடிக்கை.

8. மேலேபிரஸ்தாபிக்கப்பட்ட டிக்ளரேஷன் என்னும் விளம்பரத்தைப் பஹிரங்கப்படுத்தினபிறகு, ஆக்ட்டில் ஏற்படுத்தியிருக்கிற நடவடிக்கையை அநுசரிக்கவேண்டும்.

குறிப்பு.

நிலத்தை எடுத்துக்கொள்வதாக நேரிடும்போது நிலத்தின் கிரயத்தைப்பற்றி முதலில் போட்டமதிப்பு அதன் பெறுமானத்துக்கு மிகக்குறைவாயிருக்கிறதாக ஏற்பட்டால், கலெக்ட்டராவது அவருடைய வேலையை நடத்துவதற்சென்று பிரத்தியேகமாய் ஆக்ட்டின் 3-வது, 7-வது பிரிவுகளின்படி நியமிக்கப்பட்ட உத்தியோகஸ்தராவது அந்த நிலத்துக்காக முதலில் விண்ணப்பம் செய்துகொண்ட உத்தியோகஸ்தரை, அந்த நிலத்தை எடுத்துக்கொள்ளும் விவகாரத்தை முடிவுசெய்துவிடலாமா என்று விசாரிப்பது நல்லதாகும்.

9. தாழ்ந்த உத்தியோகஸ்தர்களுடைய ரிபோர்ட்டுகளை ஆதாரமாகக்கொண்டு கலெக்ட்டர்கள் தீர்மானங்கள் செய்பவார்; ஆனல், இந்த விவகாரத்தில் சம்பந்தமுடைய நபர்கள் தங்களுக்கு யுக்த

மாகத்தோற்றினால் நேரில் வந்து ஹாஜராகக் கூடியவர்களாயிருக்கும்படி, தீர்மானஞ்செய்யப்போகும் தேதியைக்குறித்து அவர்களுக்கு நோட்டீஸ் கொடுக்கப்பட்டிருக்கவேண்டும்.

தாழ்ந்த உத்தியோகஸ்தர்களால் ஒழுங்குசெய்யமுடியாத யாதொரு விவாதம் உண்டாகிற பக்ஷத்தில் கலெக்ட்டராவது தகுந்த அதிகாரம்பெற்ற இதரமான உத்தியோகஸ்தராவது அவ்விடத்துக்குப்போய் விவகாரங்களை நேரில் நடத்தவேண்டும்.

10. நிலமெடுத்துக்கொள்வதற்கான ஆக்ட்டில் 17-வது பிரிவு பிரயோகப்படுகிற அவசியமான விஷயங்களில்தவிர, 11-வது பிரிவின்படி தீர்மானம் செய்யப்பட்டபிறகே, ஆக்டின் 16-வது பிரிவில் அநுமதி கொடுத்திருக்கிறபிரகாரம் நிலத்தை ஸ்வாதீனம்செய்துகொள்ளவேண்டும்.

குறிப்பு.

நிலத்தை ஸ்வாதீனம்செய்துகொள்ளும் தேதிக்கும் பிரதிபலனைக்கொடுக்கும் தேதிக்கும் மத்தியிலுள்ள கால அளவில் உண்டாகும் மாசூலின் நஷ்டத்துக்காகப் பிரத்தியேகமாய்ப் பிரதிபலன் கொடுப்பதென்று ஆக்ட்டின் நிபந்தனைகளில் யாதொரு அம்சமுமில்லை. இதுவிஷயத்தில் உள்ளபாத்தியதைக்கு 34-வது பிரிவில் ஏற்பாடுசெய்திருக்கிறது. அதாவது, நிலத்தை அநுபோகிக்கத்தொடங்கும் தேதியிலிருந்து பிரதிபலனைக்கொடுக்கும் தேதிவரையில், முடிவாயிருக்கிற பிரதிபலன் தொகையின்மேல் நூற்றுக்கு 6 வீதமாக வட்டிகட்டிக் கொடுக்கவேண்டுமென்பதாம்.

11. பிரதிபலனைச் செலுத்துகிறவிதம்.

1. ரொக்கமாகக் கொடுப்பது.

ஆக்ட்டின் 11-வது பிரிவின்படி தீர்மானஞ்செய்தவுடனே கலெக்ட்டராவது தகுந்த அதிகாரம் பெற்ற வேறே உத்தியோகஸ்தராவது பிரதிபலனுக்கு ஹக்குதாரர்களா யிருப்பவர்களில் எவரேவர்கள் நேரிலாகிலும் பிரதிநிதிகள் மூலமாகவாகிலும் அந்நேரம் ஹாஜராகிறார்களோ அவர்களிடத்தில் பைசலான பிரதிபலனைக் கொடுத்துவிடவேண்டும். அப்படி ஹாஜராகாதவர்களுக்கு உடனே தாசில்தாரர் மூலமாகவாவது டெப்டி தாசில்தாரர் மூலமாகவாவது ஒரு நோட்டீசை அனுப்பவேண்டும். அந்த நோட்டீசிலே, தீர்மானஞ் செய்திருக்கிற சங்கதியைத் தெரிவிப்பதுமன்றி, குறிக்கப்படு

கிற கால அளவுக்குள்ளாக நேரிலாவது தகுந்தபடி அதிகாரங்கொ
டுக்கப்பட்ட எஜெண்டின் மூலமாகவாவது தீர்மானஞ்செய்யப்பட்ட
தொகையைப்பெற்றுக்கொள்ளாவிட்டால், அந்தப்பணம் ஆக்ட்டின்
31-வது பிரிவு (2) குறிப்பிட்டபாகத்தின்படி கோர்ட்டில் கட்டிவி
டப்படுமென்றுங் காணவேண்டும். ஆக்ட்டின் 45-வது பிரிவில் சொ
ல்லியிருக்கிற விதமாக நோட்டிசைச் சேர்ப்பிக்கவேண்டும். சேர்ப்
பிக்கப்பட்ட நோட்டிசை யநுசரித்தோ அல்லது வேறுவிதமாக
வோ, ஹாஜராயிருக்கிறநபர்கள் கலெக்ட்டர் கொடுப்பதாகச் சொல்
வதை ஏற்றுக்கொண்டாலுஞ்சரி, அல்லது தொகையைப்பெற்றுக்
கொள்ள அதற்கப்புறம் நேராகவாவது தகுந்தஅதிகாரங்கொடுக்கப்
பட்ட எஜெண்டுகள் மூலமாகவாவது கலெக்ட்டருக்கெதிரில் ஹாஜ
ரானாலுஞ்சரி, கலெக்ட்டரானவர் அநுபந்தத்தில்கண்ட B குறிப்பு
நமூனாவின்படி ரசீதைவாங்கிக்கொண்டு கூடுமானால் உடனே ரொக்
கமாகப் பணத்தைக் கொடுத்துவிடவேண்டும்; இல்லாவிட்டால்
கஜானாவில்பெற்றுக்கொள்ளும்படி உத்தரவுசெய்யவேண்டும். பணம்
வாங்கிக்கொள்ள ஒப்புக்கொண்டும் பணத்தைப் பெற்றுக்கொள்வ
தற்கு நபர்கள் ஹாஜராகாவிட்டால், B குறிப்பு நமூனாவின்படியுள்ள
கௌண்டர்பைல் ரசீதை அவார்ட் (தீர்மானஞ்செய்த) ஸ்ட்டேட்
மெண்டுகளைக்கொண்டுபூர்த்திசெய்து, பணத்தைப்பெற்றுக்கொள்ள
வேண்டியவர் கையெழுத்து செய்யவேண்டிய இடத்தைக் காலியாக
விட்டுவைத்து, ‘   , க்கு என் எதிரில் பணங்கொடுக்கப்பட்
டது என்பதை ‘   , க்குப் பணத்தைக் கொடுக்கவும்’ என்று
மாற்றிவிடவேண்டும்; அதன்பிறகு, பணத்துக்கு ஹக்குதாரர்க
ளிடத்தில் அந்தத்தொகையைச் செலுத்தும்பொருட்டு அவர்கள்
எந்த ஸப் டிரெஷரி ஆபிஸருடைய அதிகாரவரம்புக்குள் வசிக்கிறார்
களோ அந்த ஆபிஸருக்கு அசல்ரசீதை அனுப்பவேண்டும். இப்
படி அவரவர்களுக்குப் பணஞ்செலுத்தும்பொருட்டு பே ஆர்டர்களை
அனுப்பும் உத்தியோகஸ்தருக்கு, அந்த ஆர்டர்களை அநுசரித்துக்
கொடுக்கப்படும் பணங்களுக்காக ஸ்ப் டிரெஷரி ஆபிஸரானவர்
யாதொருகாலக்கிரமப்படி கணக்கு அனுப்பவேண்டும். கொடுப்பதா
கச் சொல்லப்பட்ட பிரதிபலன் தொகையைப் பெற்றுக்கொள்ளா
மல் மறுத்தாலுஞ்சரி, அல்லது குறித்தகாலத்துக்குள்ளாகத் தங்க
ளுக்குச் சேரவேண்டியபணங்களைப் பெற்றுக்கொள்ளாவிட்டாலுஞ்
சரி, அல்லது ஆக்ட்டின் 31-வது பிரிவு (2) குறிப்பிட்ட பாகத்தில்

சொல்லியிருக்கிற வேறே அசந்தர்ப்பங்கள் ஏதாவது நேரிட்டாலுஞ்சரி, அந்தப்பிரிவில் ஏற்படுத்தியிருக்கிற நடவடிக்கையை அநுசரிக்கவேண்டும்: ஏனென்றால், அப்படி அநுசரிப்பதனாலே, 34-வது பிரிவின்படி வட்டிச்செலவுகள் மேன் மேலும் ஏறாதபடி நிற்பதற்கு ஏதுவாகும்.

பழைய 1870-ம் வருஷத்து 10-வது ஆக்டின்படி பப்ளிக்வொர்க்ஸ் இலாகாதாரரால் பொதுவான காரியங்களுக்காக எடுத்துக்கொள்ளப்படும் நிலங்களுக்காகப் பிரதிபலன்கொடுப்பதைக்குறித்தும் அப்படிக் கொடுக்கப்படுபவைகளை மேற்பரிசோதனை செய்வதைக்குறித்தும் இந்தியா கவர்ன்மெண்டாரால் ஏற்படுத்தப்பட்ட விதிகளானவை அநுபந்தத்தில் காட்டப்பட்டிருக்கின்றன; இந்த விதிகளானவை 1894-ம் வருஷத்து 1-வது ஆக்டின் நிபந்தனைகளுக்கும் இந்த ஸ்டாண்டிங் ஆர்டரில் அடங்கியிருக்கிற திட்டங்களுக்கும் முரண்படாமலிருக்கிறபட்டில், கவர்ன்மெண்டைச்சேர்ந்த எந்த டிபார்ட்மெண்டாராவது நிலங்களை எடுத்துக்கொள்ளுகிற விஷயத்திற்கு அவசியமான மாறுதல்களுடன் பிரயோகிக்கப்படத் தக்கவைகளாகும்.

II. பணத்தை ரொக்கமாய்க் கொடுப்பதற்குப் பர்த்தியாகப் புதிய நிலமுதலானவைகளைக் கொடுப்பது.

ஆக்டின் 11-வது பிரிவின்படி தீர்மானஞ்செய்யப்பட்ட ரொக்கப்பணத்தைக்கொடுப்பதற்குப் பர்த்தியாக இதரமான நிலங்களைக் கொடுப்பதென்றாவது பேரீஜைதள்ளுபடி செய்வதென்றாவது அஸெஸ்மெண்டை ஒப்படை செய்வதென்றாவது பிரதிபலனுக்கு ஹக்குதாரர்களாகிய நபர்களுடனே ஏற்பாடுசெய்யவாகிலும், அப்படிப்பட்ட நபர் ஜமீன்தாரர் அல்லது இனாம்தாரராக இருக்கிற பக்ஷத்தில், சந்தர்ப்பத்துக்கேற்றபடி, பேஷ்கிஸ்தி அல்லது குயிட்ரெண்டாக குறைக்க ஏற்பாடுசெய்யவாகிலும் கலெக்டருக்காயினும், 3-வது, 7-வதுபிரிவுகளின்படி தகுந்த அதிகாரம்பெற்ற வேறு உத்தியோகஸ்தருக்காயினும் ஆக்டின் 31-வது பிரிவைச்சேர்ந்த 3-வது, 4வது உட்பிரிவுகளின்படி அதிகாரமுண்டு. எடுத்துக்கொள்ளப்பட்ட நிலத்துக்கு நபரானவர் பூரணபாத்தியதை யில்லாதவராய், அந்த நிலத்தைக்குறித்துக் கண்டிராக்ட் செய்யத்தகுதியில்லா

கவராகவாவது சிறிதுமட்டில் தகுதியுள்ளவராகவாவது (எப்படி யென்றால் தேவஸ்தான டிரஸட்டியாக) இருக்கிறபக்ஷத்தில், ரொக்கமாய்ப் பணஞ்செலுத்துவதற்குப் பர்த்தியாகமேலேசொல்லப்பட்ட ஏற்பாடுகளில் யாதொன்றைச் செய்வதற்குப் பிரதேச கவர்ன்மெண்டாருடைய அநுமதியைப்பெற்றுக் கொள்ளவேண்டும். 31-வது பிரிவின் 4-வது உட்பிரிவைச்சேர்ந்த மற்றவிஷயங்களில் அப்படிப்பட்ட அநுமதி அவசியமில்லை; அந்த விஷயங்களைக்கலெக்ட்டராவது வேறே உத்தியோகஸ்தராவது தம்முடைய சொந்த அதிகாரத்தின்மேல் பைசல் பண்ணலாம். ஆயினும், அப்படிப்பட்ட விஷயங்களடங்கிய யாதொரு ரிப்போர்ட்டை, போர்டாருக்குச் சங்கதி தெரியும்பொருட்டு, அநுபந்தத்தில் கண்டிருக்கிற நமூனாவின்பிரகாரம் அனுப்பவேண்டும். அப்படியனுப்புவதில் அந்த விஷயங்கள் எந்த அரைவருஷத்திற்குச் சம்பந்தப்பட்டவைகளோ அந்த அரை வருஷம் முடிந்ததுமுதல் ஒருமாதத்திற்குள்ளாகப் போர்டாரிடம் சேரும்படி ஏற்பாடு செய்யவேண்டும்.

12. பிரதிபலனாகிற பணத்துக்குப் பர்த்தியமாகப் புதுநிலங்கள் கொடுக்கப்படுகிற விஷயத்தில், எடுத்துக்கொள்ளப்பட்ட நிலங்களின் ஊர் விலையானது எந்த கோட்பாடுகளை அநுசரித்துக் கணக்கிடப்பட்டதோ அந்த கோட்பாடுகளை அநுசரித்தே அந்தப்புதுநிலங்களின் பெறுமான கிரயத்தைச் சாதாரணமாய்க் கணக்கிடவேண்டும். பரிவர்த்தனம் செய்வதைக்குறித்து ஏற்பாடு பண்ணுகையிலே, கலெக்ட்டரானவர் யாருக்காக ரொக்கபிரதிபலன் தீர்மானிக்கப்படுகிறதோ அந்த நபருடனே மாத்திரம் சாதாரணமாய் விவகாரம் நடத்தவேண்டும்; நிலத்தை தெரிந்தெடுக்கிற விஷயத்திலே நியாயமான கால அளவில் (கொடுப்பதாகச் சொல்லப்பட்ட தேதியிலிருந்து) ஆறுமாதகாலமென்று வைத்துக்கொள்வோம்; யாதொரு ஏற்பாடு செய்யமுடியாவிட்டால் தீர்மானஞ்செய்யப்பட்டிருக்கிற ரொக்கப்பிரதிபலனை வாங்கிக்கொள்ளும்படி நபருக்கு அநுமதிகொடுக்கவேண்டும். பரிவர்த்தனமாக நிலங்களைக்கொடுப்பதிலே, மற்றவிவகாரங்களில் சாதாரணமான தர்க்காஸ்து விதிகளின்படி கொடுக்கப்படும் நிலங்களைமாத்திரம் கொடுக்கவேண்டும். அதனால் குடியிருக்கிற ரயத்துக்களுக்கு உள்ளபடி நியாயமாய் வேண்டியிருப்பவைகளுக்கு யாதொருபாதகம் உண்டாகுமென்று கலெக்டருக்குத் திருப்தி

கரமாய்த் தெரியவருகிற விஷயங்களில் தவிர மற்றப்படி, விதிகளின் பிரகாரம் ஏற்பட்டிருக்கிற முன்னதாய்ப் பாவிக்கத்தக்க சிலாக்கியமான உரிமைகளை அநுசரிக்கவேண்டியதில்லை.

13. அனுபோகத்திலுள்ள நிலத்தின் அஸெஸ்மெண்டை பிரதிபலனுக்குப் பர்த்தியாக கொடுப்பதென்று ஏற்பாடு செய்கிற பக்ஷத்தில், முன்னதாக நிலங்களின் அனுபோகதாரர்களுடைய சம்மதியைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

14. பிரதிபலனுக்குப் பர்த்தியாக பேஷ்கிஸ்தி அல்லது குயிட்ரெண்டை குறைப்பதனால், எந்த ரொக்கத்தொகைக்குப் பர்த்தியாக அவ்வாறு தள்ளுபடி செய்யப்படுகிறதோ அந்த ரொக்கத்தொகையின் பதினைந்தில் ஒருபாகத்தைத் தள்ளுபடி செய்யவேண்டும்.

15. யாதொரு ஜாமீன்தாரர்வசத்திலாவது இனம்தாரர் வசத்திலாவது இருக்கிற நிலத்தின் பாகங்கள் பொதுவான காரியங்களுக்குத்தேவையாயிருந்தால், எடுத்துக்கொள்ளப்பட்ட ஜலத்துக்காகப் பிரதிபலன் பெறுவதோடுகூட சொந்தக்காரர்-அவருடைய மொத்தமான பேஷ்கிஸ்தி அல்லது குயிட்ரெண்டில் அளவுக்கேற்றபடி தள்ளுபடிசெய்யப்பெறுவதற்கும் அர்ஹராவார். பூஸ்திதியின் மொத்தத் தீர்வைக்கு பேஷ்கிஸ்தி அல்லது குயிட்ரெண்ட் எவ்வளவிருக்கிறதோ அந்த சங்கியாப் பிரமாண அளவாகவே, கைக்கொள்ளப்பட்ட நிலத்தின் தீர்வைக்குத் தள்ளுபடி செய்யப்பட்ட தொகை இருக்கவேண்டும்.

பொதுவான திட்டங்கள்.

16. முடிவு செய்யப்பட்ட பிரதிபலன் தொகையானது 50-ரூபாய்க்கதிகப்படாத சந்தர்ப்பங்களில் தவிர, நிலமெடுத்துக்கொள்வதைக்குறித்த ஆக்ட்டின் 11-வது பிரிவின்படி கலெக்ட்டர்களால் செய்யப்பட்ட தீர்மானங்களானவை எப்போதும் ரெஜிஸ்டர் செய்யப்படவேண்டும். கவர்ன்மெண்டார் நிலவுரிமையைக் கிரகிக்கிற விஷயத்தில் மூன்றாவது நபர்கள் மோசஞ்செய்யவொட்டாமல் தவிர்ப்பதே ரெஜிஸ்ட்ரேஷன் செய்தவன் கருத்தாகையால், ஆக்ட்டின் 3-வது, 4-வது பாகங்களின்படி செய்யப்பட்ட ரெபெரென்ஸ்களின் மேல் கோர்ட்டார்செய்யும் உத்தரவுகளை ரெஜிஸ்ட்ரேஷன்செய்வது அநாவசியமாம். எல்லா விஷயங்களிலும், அவசியமான திருத்தங்களைக் கிராமக்கணக்குகளிலும் செய்யவேண்டும்.

17. லோகல் போர்டுகளுக்காவது மியுனிஸிபாலிடிகளுக்காவது தேவையான நிலங்களைக்குறித்த உத்தரவுகள் 22 - A குறிப்பு ஸ்ட்டாண்டிங் ஆர்டரின் 2-வது, 7-வது, 8-வது பாராக்களில் காணப்படும்.

18. பொதுவான காரியங்களுக்காகத் தேவையான நிலங்களைக்கைக்கொள்ளுவதில் செய்யப்பட்டவிருத்தியையும், அதற்காகக் கொடுத்த பிரதிபலனையும் அநுபந்தத்திற் கண்டிருக்கிற நமூனைக்களின் பிரகாரம் காட்டுவதான ஸ்ட்டேட்மெண்டுகளைக் கலெக்ட்டர்கள் வருஷத்தின் பிரதிபாதி ஒவ்வொன்றுக்காகவும் முறையே ஜூலைமீ 31உக்கும் ஜனவரிமீ 31உக்கும் மேற்படாமல் போர்டாருடைய ஆபீஸில்போய்ச் சேரும்படியாக அனுப்பவேண்டும். இந்த ஸ்ட்டேட்மெண்டுகளில் இரண்டாவதுடனே, அதாவது, டிஸெம்பர்மீ 31உயோடு முடிவாகிற கால அளவுக்காக அனுப்பப்பட்ட ஸ்ட்டேட்மெண்டுடனே, 1888ஞு பிப்ரவரிமீ 7உ 118-ம் நம்பர் போர்டாருடைய நடவடிக்கையுடனே தெரிவிக்கப்பட்ட 1888ஞு ஜனவரிமீ 7உ (பலவகையான) 84-ம் நம்பர் கவர்ன்மெண்ட் உத்தரவினால் சிறிதுமட்டில் மாற்றப்பட்டிருக்கிற அதே மாதிரியாக வருஷ முழுமைக்கும் நடந்த விவகாரங்களின் மொத்தத்தைக் காட்டும் இரண்டு அப்ஸ்ட்ராக்ட் ஸ்ட்டேட்மெண்டுகளை யனுப்பவேண்டும். அதன்மேல், போர்டார் இவைகளையெல்லாம் ஒன்றாய்த்தொகுத்துவருஷாந்தர ஸ்ட்டேட்மெண்டைக் கவர்ன்மெண்டுக்கு அனுப்பவேண்டும்.

விட்டு விடுவது.

19. பொதுவான காரியங்களுக்காகஎடுத்துக்கொள்ளப்பட்ட நிலங்கள் பின்னால் விட்டுவிடப்படும்போது அவைகளை அடியிற்கண்டபடி பைசல் பண்ணவேண்டும்:—

I. நிலங்களானவை பிரதமத்தில் ரயத்துவார் ஸ்வதந்தர ஏற்பாட்டின்படி வைத்துக்கொள்ளப் பட்டிருந்தால், அக்கம்பக்கத்தில் அதுபோன்ற நிலங்களின் விற்பனைக்கிரயத்தை அநுசரித்து நிஷ்கரிஷை செய்யப்பட்ட யாதொரு சரியான கிரயவீதப்படி அந்த நிலங்களைப் பிரதம சொந்தக்காரர்களுக்குப் பட்டாவின்மேல் கொடுப்பதாகச்சொல்லவேண்டும்.

II. நிலங்களானவை பிரதமத்தில் இனாம் அல்லது ஜமீன் தாரியாகவும், அவைகளின் அநுபோக ஸ்வதந்தரம் பாயக்காரிகளுடைய

தாகவுமிருந்தால், அப்படிப்பட்ட ஸ்வதந்தரங்களின் தற்கால ஊர் விலைகளைக்கொடுத்துத் தங்களுடைய பழைய ஸ்வதந்தரங்களை மறுபடியும் கைக்கொள்ள இஷ்டமுண்டாவென்று சொந்தக்காரர்களையும் பாயக்காரிகளையும் கேட்கவேண்டும். பாயககாரிகளுக்குத் தங்கள் பழைய ஸ்வதந்தரத்தைப் பெற்றுக்கொள்ளப் பிரியமில்லாவிட்டால் காணியாட்சி ஸ்வதந்தரமும் பாயக்காரி ஸ்வதந்தரமும் ஆகிய இரண்டையும் அதே ஏற்பாடுகளின்படி சொந்தக்காரர்களுக்கே கொடுக்கலாம். ஆயினும் பாயக்காரிகளுக்கு நிலங்களில் பிரத்தியேகமாக அநுபோக ஸ்வதந்தர மில்லாவிட்டால், அந்த நிலங்களின் கிரயத்தைக் கட்டுவதன்மேல் அந்த ஸ்வதந்தரங்களைச் சொந்தக்காரர்களுக்கே மீண்டும் கொடுத்துவிடவேண்டும். எந்தவிதத்திலும், நிலங்களையெடுத்துக்கொண்டபோது, சங்கியாப் பிரமாணப்படி வஜா செய்யப்பட்டிருந்திருக்கும் பேஷ்கிஸ்தி அல்லது குயிட்ரெண்டை மறுபடியும் விதிக்கவேண்டும்.

III. மேற்சொல்லப்பட்ட ஏற்பாடுகளுக்குப் பிரஸ்தாபசொந்தக்காரர்கள் அல்லது காணியாட்சிக்காரர்கள் சம்மதிக்காவிட்டால், வருஷவாரித்தீர்வை கட்டித் தீரவேண்டுமென்றுசொல்லி, இவ்வளவென்று குறித்த கிரயமேற்படுத்தாமலே அந்த நிலங்களைப் பகிரங்கமான ஏலத்தில் விற்பனை செய்யவேண்டும்.

1894-ம் ௵ ஸெப்டம்பர் ௴ 1௳ 370-ம் நம்பர்
போர்டாருடைய நடவடிக்கை.

1894-ம் ௵ அக்டோபர் ௴ 30௳ 755-ம் நம்பர் கவரன்மெண்ட் உத்தரவு.

11-ம் நம்பர் ஸ்டாண்டிங் ஆர்டர் 5-வது பாரா,
(3) (b) (iii) குறிப்பிட்ட உட்பிரிவு.

தீர்வையின் தற்கால மதிப்பை நிஷ்கரிஷைசெய்வதற்கான விதங்கள்.

உத்தேசம் எத்தனைவருஷத்தில் நிலம் பயிரிட உதவும்போலிருக்கிறதென்பது.					தீர்வையின் தற்கால மதிப்பானது மதிப்பிட்ட தீர்வையில் எவ்வளவுக்கெவ்வளவாக இருக்கிறது.
1	வருஷமுதல்	2	வருஷம்வரையில்	...	9.
2	ஷை	4	ஷை	...	8.
4	ஷை	6	ஷை	...	7.
6	ஷை	9	ஷை	...	6.

9	வருஷமுதல்	12	வருஷம்வரையில்	...	5.
12	ஷை	16	ஷை	...	4.
16	ஷை	21	ஷை	...	3.
21	ஷை	28	ஷை	...	2.
28	ஷை	40வரையிலும்அதற்குமேற்பட்டும்			1.

11-வது நெ. ஸ்டாண்டிங் ஆர்டர் 7-வது பாரா.

1894-ம்ளுஷத்து I-வது ஆக்ட்டின் 6 வது பிரிவின்படி, பின்வருகிற ஷெட்யூலில் காட்டியிருக்கிற ஏகரா அளவுள்ள (ஏறக்குறைய இருந்தாலும் சரிதான்) நிலமானதுயாதொரு பொதுவானகாரியத்துக்கு, அதாவது, க்காகத் தேவையாயிருக்கிறதென்றும், ஆக்ட்டின்பிரகாரம்கலெக்ட்டர்செய்யவேண்டிய கடமைகளைச் செய்வதற்காக அதே ஆக்ட்டின் 3-வது, 7-வது பிரிவுகளின்படி நியமிக்கப்பட்டு, ஷை நிலத்தை எடுத்துக்கொள்வதற்காக உத்தரவுபெற்றுக்கொள்ளும்படி திட்டஞ்செய்யப்பட்டிருக்கிறாரென்றும் ஆலோசனை சபையிலுள்ள மஹாகனம்பொருந்திய கவர்னரவர்கள் இதனால் அறிக்கை செய்கிறார்.

11-ம் நம்பர் ஸ்ட்டாண்டிங் ஆர்டர், 11-வது பாரா.

போதுவான காரியங்களுக்காக எடுத்துக்கோள்ளப்பட்ட நிலங்களுக்காகப்பிரதிபலன் கோடுப்பதைக்குறித்து இந்தியாகவரன்மேண்டாரால் பிறப்பிக்கப்பட்டவ்திகள்.

1. அந்தந்த காலத்தில் வழங்கிவருகிற இலாகா விதிகளின்படி எஸ்டிமேட் (மதிப்பு) முதலானவைகளைக் குறித்து அவசியமான பீடிகா காரியங்களைத் தக்கபடி நடத்தினபிறகு, நிலமானது-கலெக்ட்டராலாவது, ஆக்ட்டின்படி கலெக்ட்டருடைய அதிகாரங்கள் கொடுக்கப்பட்டு பப்ளிக் ஒர்க்ஸ் இலாகாதாரருடைய வசத்தில் விடப்பட்டிருக்கிற யாதொரு பிரத்தியேகமான உத்தியோகஸ்தராலாவது எடுத்துக்கொள்ளப்படும்; இந்த இரண்டு விஷயங்களிலும் நடவடிக்கை வித்தியாசப்படுகின்றது.

2. ஆக்ட்டின்படி கலெக்ட்டருடைய அதிகாரங்கள் கொடுக்கப்பட்டும், இந்த வேலைக்கென்றே நியமிக்கப்பட்டும் பப்ளிக் ஒர்க்ஸ் இலாகாதாரருடைய வசத்தில் விடப்பட்ட உத்தியோகஸ்தர்கள் பப்ளிக் ஒர்க்ஸ் டிஸ்பார்ஸர்களாக எண்ணப்படுகிறார்கள்; மேலும்,

அவர்கள்-ஸிவில் அக்கௌன்ட் கோட் 24-ம் அத்தியாயத்தில் சொல்லியிருக்கிறபடிக்கான எக்ஸிக்யூட்டிவ் எஞ்சினியர்களைப் போலவே பணத்தொகைகள் (பண்டுகள்) சர்பரா செய்யப்படுவார்கள்; அப்படிப்பட்ட உத்தியோகஸ்தர்கள் பின்வருகிற நடவடிக்கையை அநுசரிக்கவேண்டும்.

3. நிலத்துக்குப் பாத்தியத்தை யுடையவர்கள் பிரதிபலன் தொகைக்குச்சம்மதித்து ஆக்ட்டின் 14-வது பிரிவின்படி தீர்மானஞ் செய்யப்பட்டபிறகு, அந்த உத்தியோகஸ்தரானவர் தீர்மானத்தின்படி பிரதி நபருக்குங் கொடுக்கவேண்டிய தொகைகளைக் கட்டுவதால் அநுபந்தத்திற்கண்ட (A குறிப்பு செய்திருக்கிற) நமூனாவின்படியாதொரு ஸ்டேட்மெண்டைத் தயார் செய்விக்கவேண்டும்; மேலும், அவர் தீர்மானஞ் செய்யப்படுகிற தேதியிலே, அந்த ஸ்டேட்மென்டின் ஒரு பிரதியில் கையெழுத்துசெய்து பிரஸ்தாப டிவிஷன் எக்ஸிக்யூட்டிவ் எஞ்சினியர் மூலமாக, தாம் யாரோடு கணக்கு விவகாரம் நடத்துகிறாரோ அந்த பப்ளிக் ஓர்க்ஸ் அக்கௌன்ட்ஸ் எக்ஸாமினருக்கு அனுப்பவேண்டும். அந்த எக்ஸிக்யூட்டிவ் எஞ்சினியர் அந்த ஸ்டேட்மெண்டின் 9-வது கலத்தைப் பூர்த்திசெய்து அதை எக்ஸாமினருக்கு அனுப்பவேண்டும். கவர்ன்மென்ட் ரெயில்வேக்களுக்காக எடுத்துக்கொள்ளப்பட்ட நிலங்களின் விஷயத்தில் அந்த ஸ்டேட்மெண்டை ரெயில்வேக்களைப் பற்றியகன்ஸல்டிங் எஞ்சினியர் மூலமாக அனுப்பவேண்டும். அந்தப்பிரதியில் கையெழுத்துப் போடுவதற்கு முன்னமே அந்த உத்தியோகஸ்தரானவர் தீர்மானத்தின்படி கொடுக்கவேண்டிய தொகைகளை அதில் சரியாகக் காட்டியிருக்கிறதாவென்று கவனமாய்த் திருப்திகரமாகத் தெரிந்துகொள்ளவேண்டும்; அல்லாமலும், ஸ்டேட்மென்டின் 6 வது கலத்தின் மொத்தத்தை அசலிலும், நகலிலும் தாமே எழுத்தால் எழுதவேண்டும்.

4. தீர்மானத்தின்படி சேரவேண்டிய தொகைகளைக் கொடுக்கையில் பணங்கொடுக்கப்படுகிற பிரதிநபருடைய ரசீதையும் உத்தியோகஸ்தரானவர் அநுபந்தத்திற்கண்ட (B குறிப்பு செய்திருக்கிற) நமூனாவின்படி யாதொரு பிரத்தியேகமான வௌச்சர்மூலமாக எழுதி வாங்கவேண்டும்; அதில், முந்திய பாராவிலே சொல்லப்பட்ட ஸ்டேட்மெண்டில் நபருக்குக் கொடுக்கவேண்டிய தொ

கையைக் காட்டுவதற்கான அம்சத்தின் பிரஸ்தாபம் அடங்கியிருக்க வேண்டும். பணங்கொடுக்கிற தேதியையும் அந்த வௌச்சரில் பதிவுசெய்யவேண்டும். உத்தியோகஸ்தரானவர் - தொகைகள் கொடுக்கப்பட்ட மாதத்தின் கணக்கை, யாரோடு தாம் கணக்கு விவகாரம் நடத்துகிறாரோ அந்த பப்ளிக் ஒர்க்ஸ் அக்கௌன்ட் எக்ஸாமினருக்கு அனுப்பும்போது தொகைகளைப் பெற்றுக்கொண்டவர்களுடைய ரசீதுகளையும் கூட அனுப்பவேண்டும்.

5. தீர்மானம் செய்ததேதிமுதல் ஒரு வருஷ காலத்திற்குள் பணத்தைப் பெற்றுக்கொள்ளவேண்டிய நபர்கள் பணத்தைப்பெற்றுக்கொள்ள ஹாஜராகாவிட்டால், அவர்களுக்குக் கொடுக்கவேண்டிய தொகைகளை, ரெவினியு டிப்பாசிட்டாகக் கஜானாவிலே கட்டி வைத்து, (C குறிப்பு செய்திருக்கிற) பின்வரும் நமூனாவின்படி உறுதிச்சீட்டு ஏற்படுத்தி வைக்கலாம். ஆயினும், டிப்பாசிட்டாகக் கஜானாவில் பணத்தைக்கட்டிவைப்பதைக் கூடியமட்டில் தவிர்க்கும்படி, பணத்தைப் பெற்றுக்கொள்ளவேண்டியவர்கள் பணத்தைப்பெற்றுக் கொள்வதற்கு ஆஜராகும்படியான பிரதி பிரயத்தனத்தையும் செய்யவேண்டும். பணத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டியவர்கள் டிப்பாசிட்டாக வைத்திருக்கிற தொகைகளைக்கொடுக்கும்படி கடைசியில் கேட்கும்போது சாதாரணமான ரெவினியு டிப்பாசிட்டுகளைப் போலவே அந்தத்தொகைகளைக் கலெக்டருடைய அதிகாரம் பெற்று அவர்களிடத்தில் கொடுத்துவிடவேண்டும்.

6. கொடுப்பதாகச் சொல்லப்பட்ட பிரதிபலனை அதற்குரிய நபர்கள் சம்மதித்து ஏற்றுக்கொள்ளாத காரணத்தினாலே, அவர்களுக்குக் கொடுக்கவேண்டிய தொகைகள் ஆக்டின் III-வது பாகத்தைச்சேர்ந்த நிபந்தனைகளின்படி கோர்ட்டாரால் செய்யப்பட்ட தீர்மானத்தினால் முடிவாகுமாகில், கோர்ட்டாருடையதீர்மானம் இன்னதென்று விசாரித்தறிந்தவுடனே, ஸ்பெஷல் ஆபீஸரானவர் தீர்மானத்தின்படி செலுத்தவேண்டிய தொகைகளைக் காட்டுவதற்கான A குறிப்பு நமூனாவின்படி ஒரு ஸ்டேட்மென்டைத்தயார்செய்து, 3-வது பாராவில்சொல்லி யிருக்கிற பிரகாரம், அதன் ஒரு நகலை சந்தர்ப்பத்துக்கேற்றபடி எக்சிக்யூட்டிவ் எஞ்சினியர் மூலமாகவாவது ரெயில்வேக்களைப்பற்றிய கன்சல்டிங் எஞ்சினியர் மூலமாகவாவது எக்ஸாமினருக்கு அனுப்பவேண்டும். அப்படிப்பட்ட தீர்மானத்தின்படிகொடுக்கவேண்டிய தொகைகளைக்கொடுக்கையிலே, அந்த உத்

தியோகஸ்தரானவர் பணங்கொடுக்கப்பட்டபிரதி நபரிடத்திலிருந்து B குறிப்பு நமூனாவின் பிரகாரம் ஒரு ரசீது வாங்கிக்கொள்ள வேண்டும்; அல்லது பணத்தைப் பெற்றுக்கொள்ளவேண்டிய நபர்கள் தீர்மானஞ்செய்யப்பட்ட தேதியிலிருந்து ஒருவருஷகாலத்துக் குள்ளாகப் பணத்தைப் பெற்றுக்கொள்ள ஆஜராகாவிட்டால், C குறிப்பு நமூனாவின்பிரகாரம் கஜானா உத்தியோகஸ்தரிடத்திலிருந்து யாதொரு ரசீதை வாங்கிக்கொள்ளவேண்டும்; சற்று முன்னே பிரஸ்தாபிக்கப்பட்ட ஸ்டேட்மெண்டில் கொடுக்கவேண்டிய தொகையைக் காட்டுவதற்கான பதிவின் பிரஸ்தாபம் அந்த ரசீதில் அடங்கியிருக்கவேண்டும். எந்த மாதத்தில் தொகைகள் கொடுக்கப் படுகின்றனவோ அந்த மாதத்துக் கணக்குகளை பப்ளிக் ஒர்க்ஸ் அக்கௌண்ட்ஸ் எக்ஸாமினருக்கு அனுப்பும்போது அந்த ரசீதுகளையும் ஷை உத்தியோகஸ்தர் அனுப்பவேண்டும்.

7. பணத்தைப் பெற்றுக்கொள்ளவேண்டியவர்கள் எந்த கிராமத்துக்குரியவர்களோ அந்த கிராமத்திலாவது அதன் சமீபத்திலாவது அவர்களுக்குச் சேரவேண்டிய பணத்தைச் சேர்க்கத் தம்மாலியன்றமட்டில் ஸ்பெஷல் ஆபீஸரானவர் ஏற்பாடு செய்யவேண்டும். இதனால் பணத்தைப் பெற்றுக் கொள்ளவேண்டியவர்கள் ஆஜராவது அதிக சுலப சாத்தியமாகும்; ஆகவே 5-வது பாராவின்படி டிப்பாசிட்டில் வைக்கவேண்டியதொகைகளின் சங்கியையும் குறைவாகும்.

8. சிவில் கோர்ட்டாருக்கு ரெபரென்ஸ்செய்யப்பட்டு, ஸ்பெஷல் ஆபீஸர் தமக்கென்று நியமிக்கப்பட்டவேலைகளினின்றும் விடுதலை செய்யப்படுகிறவரையில் கோர்ட்டார் தீர்மானஞ்செய்யாதிருக்கிற யாதொரு விஷயத்திலே, தீர்மானத்தின்படி சேரவேண்டி யிருக்கிற தொகைகளை கலெக்டர் கொடுக்கவேண்டும். அப்படிச் செய்வதில் கலெக்டரானவர், சிவில் கோர்ட்டில் தாமே ரெபெரென்ஸ் செய்தாற்போல, கீழே 9-வது, 10 வது பாராக்களில் சொல்லியிருக்கிற நடவடிக்கையை அநுசரிக்கவேண்டும்.

9. நிலமானது கலெக்டராலாவது அவற்கென்று நியமிக்கப்படாத வேறே யாதொரு சிவில் உத்தியோகஸ்தராலாவது எடுத்துக் கொள்ளப்பட்டால், அந்த கலெக்டராவது சிவில் உத்தியோகஸ்தராவது பப்ளிக்வொர்க்ஸ் டிஸ்பர்ஸர் ஆகமாட்டார்; ஆனால், அவர் தம்மாலாவது ஸிவில்கோர்ட்டாராலாவது செய்யப்பட்ட தீர்மானத்

தின்படி கொடுக்கவேண்டிய தொகையை ஸிவில் கஜானுவிலிருந்து வாங்குகிருர். அப்படிப்பட்ட கலெக்ட்டராவது ஸிவில் உத்தியோகஸ்தராவது தாமே தீர்மானஞ்செய்தவுடனேயாகிலும், ஸிவில் கோர்ட்டாரால் யாதொரு தீர்மானஞ்செய்யப்பட்டதென்று விசாரித்தறிந்தவுடனேயாகிலும், கொடுக்கவேண்டிய தொகைகளைக்காட்டுவதற்கான A குறிப்பு நமூனுவின்படி ஸ்டேட்மெண்டைத் தயார்செய்து, 5-வது, 6-வது பாராக்களில் சொல்லியிருக்கிறபிரகாரம் அதன் பிரதியொன்றைச் சந்தர்ப்பத்துக்கேற்றபடி, எக்ஸிக்யூட்டிவ் எஞ்சினியர் மூலமாகவோ அல்லது ரெயில்வேக்களைப்பற்றியகன்ஸல்டிங் எஞ்ஜினியர் மூலமாகவோ அது விஷயத்தில் சம்பந்தப்பட்ட பப்ளிக்வொர்க்ஸ் அக்கவுன்ட்ஸ் எக்ஸாமினருக்கு அனுப்பவேண்டும்.

10. தீர்மானத்தின்படி சேரவேண்டியிருக்கிற தொகைகளைக் கொடுக்கையிலே, கலெக்ட்டரானவர் பணங்கொடுக்கப்பட்ட பிரதி நபரிடத்திலிருந்தும் B குறிப்பு நமூனுவின்படி ரசீதை வாங்கிக்கொள்ளவேண்டும்; பணங் கொடுக்கப்பட்டவனுக்குச் சேரவேண்டிய தொகையைக் காட்டுகிற தீர்மானத்திலுள்ள பதிவின் பிரஸ்தாபம் அந்த ரசீதில் அடங்கியிருக்கவேண்டும். இந்த ரசீதுகள் தொகைகளைக் கொடுத்ததற்காகக் கஜானு உத்தியோகஸ்தருடைய வௌச்சர்களாகும்; அவைகளை அவர் அந்தந்த மாதக்கணக்குகளுடனே அந்தந்த ராஜதானியின் அக்கௌன்டன்ட் ஜெனராலுக்கு அனுப்பவேண்டும். அவர் அவைகளை வழக்கப்படி பப்ளிக்வொர்க்ஸ் அக்கவுன்ட்ஸ் எக்ஸாமினருக்கு அனுப்பிவிடுவார். பணத்தைப் பெற்றுக்கொள்ளவேண்டியநபர்கள் தீர்மானஞ்செய்யப்பட்டதேதியிலிருந்து ஒரு வருஷகாலத்துக்குள்ளாகப் பணத்தைப்பெற்றுக்கொள்ள ஹாஜராகாவிட்டால், அந்தத்தொகைகளை ரெவினியு டிப்பாஸிட்டில் வைத்து, 5-வது விதியில் ஏற்படுத்தியிருக்கிற பிரகாரம் C குறிப்பு நமூனுவின்படி ரசீதுகளை வாங்கிக்கொள்ளலாம்.

11. தீர்மானத்தைப் பற்றியாவது தீர்மானத்தைக் குறித்த ஸ்டேட்மெண்டைப் பற்றியாவது கஜானு உத்தியோகஸ்தருக்கு யாதொரு விசாரமுமில்லை; கலெக்ட்டருடைய அதிகாரத்தையாவது, பிரதிபலனை ஏற்படுத்தும் இதரமான உத்தியோகஸ்தருடைய அதிகாரத்தையாவது அநுசரித்து அவர்தொகைகளைக் கொடுக்கிருர். கலெக்ட்டரானவர் பணத்தைப் பெற்றுக்கொள்ளவேண்டிய

பிரதிநபருக்குச் சேரவேண்டிய தொகையைத் தனித்தனியாகவும் வாங்கலாம், அல்லது தீர்மானத்தின்படி ஏற்படுகிற மொத்தத்தொகையைத் தாமே பெற்றுக்கொடுத்து அட்வான்ஸாகவும் வாங்கலாம். தனித்தனியாக வாங்குகிறபக்ஷத்தில், B குறிப்பு நமூனுவின்படியுள்ள ரசீதில் அவர்மேற் கையெழுத்துசெய்து, 'ரொக்கமாக / செக்காக என்னெதிரில் கொடுக்கப்பட்டது, என்பதை 'கொடு' என்பதாக மாற்றி பணத்தைப் பெற்றுக்கொள்ளவேண்டியநபருக்குப் பணத்தைக் கஜானுவில் கொடுக்கும்படி செய்யவேண்டும்; பணத்தை அட்வான்ஸாக மொத்தத்தொகையாய் வாங்குகிறபக்ஷத்தில், தொகைகளைக் கொடுத்துவிட்டபிறகு, பணத்தைப் பெற்றுக்கொண்டவர்களுடைய ரசீதுகளைக் கஜானு உத்தியோகஸ்தரிடம் அட்வான்ஸுக்கு ஒத்திட்டுப் பார்க்கும்பொருட்டு அனுப்பவேண்டும். பணத்தைத் தனித்தனியாக வாங்குகிற விஷயத்தில்; பணம் கொடுக்கும்படி ஜாரி செய்யப்பட்ட நமூனுக்களின் அட்வைஸ் ஜாபிதா ஒன்றைக் கஜானு உத்தியோகஸ்தருக்கு அனுப்பவேண்டும்; தம்முடைய வரிசைக்கிரமப்படி அவர் பணங்கொடுக்கப்பட்ட ஆர்டர்களின் அட்வைஸை வாரந்தோறும் அனுப்பவேண்டும்.

12. யாதொரு ஸ்பெஷல் ஆபிஸரால் பணங் கொடுக்கப்பட்டிருந்தாலுஞ்சரி, கலெக்டரால் (அல்லது இதரமான ஸிவில் உத்தியோகஸ்தரால்) கொடுக்கப்பட்டிருந்தாலுஞ்சரி, இதை பப்ளிக் வொர்க்ஸ் அக்கவுண்ட்ஸ் எக்ஸாமினர் பரிசோதனை (ஆடிட்) செய்கையிலே, பணங்கொடுக்கப்பட்ட பிரதி அமிசத்துக்கும் B அல்லது C குறிப்பு நமூனுவின்படி யாதொரு ரசீது ஆதாரமாக இருக்கிறதா என்றும், அப்படிப்பட்ட ரசீதின் முகாந்தரமாகக் கொடுக்கப்பட்ட தொகையானது ஸ்டேட்மெண்டுகளில் காட்டியிருக்கிறபிரகாரம் தீர்மானத்தின்படி பணம் பெற்றுக்கொள்ளவேண்டியவருக்குக் கொடுக்கவேண்டிய தொகைதானு என்றும் பார்க்கவேண்டும். இதற்காக முன்சொல்லிய உத்தரவுகளின்படி, ஸ்டேட்மெண்டுகளின் பிரதிகளை அவர் வரப்பெற்றிருப்பார்.

13. வௌச்சர்களைப் பெற்றுக்கொள்ளும்போது எக்ஸாமினரானவர் (A குறிப்பிட்டநமூனு) அவார்ட் (தீர்மான) ஸ்டேட்மெண்டின் 8-வது கலத்தில் பதிவுகளைப் பூர்த்திசெய்யவேண்டும். பணத்

தைப் பெற்றுக்கொள்ள வேண்டியவருக்குப் பணங்கொடுத்ததையா வது, கஜானுவில் டிப்பாஸிட்டின்மேல் கட்டினதையாவது காட்டும் வௌச்சர்களையெல்லாம் வரப்பெற்றுக்கொண்டபிறகு, அவர் A குறிப்பு நமூனுவின்படி பூரணமான ஸ்டெட்மென்டின் பிரதியொன்றைப் பிரதான ரெவினியு அதிகாரிக்கு அனுப்பவேண்டும். இதனுடு எக்ஸாமினருடைய ஆடிட் (பரிசோதனை) பூர்த்தியாகிவிடுகிறது. பிரதிபலன் தொகையை ஏற்படுத்தும் அல்லது கொடுக்கும் உத்தியோகஸ்தர்களிடத்திலிருந்துவரும் இதரமான அல்லது இன்னும் அதிகமான எவ்விதகணக்குள் அல்லது ரிபோர்ட்டுகளும், மேலே சொல்லப்பட்டதொகைகளைக் கொடுப்பதைக்குறித்த எவ்வித ரிபோர்ட்டுகளும் எக்ஸாமினருக்கு அனுப்பப்படாமலே பிரதானரெவினியு அதிகாரியால் பைசல் பண்ணவேண்டும்.

14. மிலிட்டெரி ஒர்க்ஸ் இலாக்காவின்பொருட்டு நிலத்தை எடுத்துக்கொண்டு, அந்தக்கிரயத்தை அந்த இலாக்காவின்கணக்கிலே செல்லுவைப்பதானுல், மேலே ஏற்படுத்தப்பட்ட நடவடிக்கையை அநுசரிக்கவேண்டும். ஸ்டேட்மென்டுகளையும் கணக்குகளையும் மிலிட்டேரி வொர்க்ஸ் அக்கௌன்ட்ஸ் எக்ஸாமினருக்கு நேராக அனுப்பவேண்டும்.

15. பப்ளிக் ஒர்க்ஸ்இலாக்காவாவது மிலிட்டெரி ஒர்க்ஸ்இலாக்காவாவது அல்லாத வேறே யாதொரு இலாக்காவின்பொருட்டு நிலம் எடுத்துக்கொள்ளப்பட்டு, அந்த இலாக்காவின் கணக்கிலே கிரயத்தைச்செல்லுவைப்பதானுலும் அதே நடவடிக்கையைத்தான் அனுசரிக்கவேண்டும்; கொடுக்கப்பட்ட பணத்தொகைகளின் கணக்கைப் பரிசோதிக்கும் கணித உத்தியோகஸ்தரின் பெயரை பப்ளிக் ஒர்க்ஸ் அக்கௌன்ட்ஸ் எக்ஸாமினர் என்பதற்குப்பர்த்தியாக அமைத்துக்கொள்ளவேண்டும்.

16. பணவிஷயத்தில் கவர்ன்மென்டாருக்குட்படாமல் சுயேச்சையாயுள்ள யாதொரு முனிஸிபாலிட்டியின் பொருட்டாவது இதரமான கூட்டத்தாரின் பொருட்டாவது நிலம் எடுத்துக்கொள்ளப்படுகிற யாதொரு விஷயத்திலே, அதற்காகக் கொடுக்கப்படுகிற தொகைகளை, அப்படிப்பட்ட கூட்டத்தார் சாதாரணமாய்த் தொகைசெலுத்துவதைப்போலச் செய்வதற்கும் கணக்கு பரிசோதிப்பதற்கும் பர்த்தியாய், கவர்ன்மெண்டாருக்காக அந்த நிலம் எடுத்துக்கொள்ள

ப்பட்டதுபோலவே, தொகை செலுத்தவேண்டியதென்றும் கணக்கு பரிசோதிக்கவேண்டியதென்றும் பிரதேச கவர்ன்மெண்டார் திட்டஞ்செய்யலாம். பிரதேச கவர்ன்மெண்டார் அப்படிப்பட்ட உத்தரவு செய்யப்பட்டால், எடுத்துக்கொள்ளப்பட்ட நிலத்தின்பொருட்டுத் தொகைசெலுத்தும் கலெக்ட்டராவது இதரமான வுத்தியோகஸ்தராவது கஜானாவிலிருந்து பணத்தொகைகளை வாங்கி, இந்த விதிகளில் ஏற்படுத்தப்பட்ட விதமாகவே தொகைகளைச் செலுத்தி, இதற்கென்றேற்படுத்தப்பட்ட நமூனாக்களை யுபயோகித்து, சிவில் அக்கவுண்டண்ட் ஜெனரலுக்குக் கணக்கை ஒப்பிக்க வேண்டும். பிரதிபலன் மதிப்புக்கிரயத்தை முனிஸிபாலிடியாராவது வேறே இதரமான கூட்டத்தாராவது, பிரதேச கவரன்மெண்டார் திட்டஞ் செய்யும் தேதிகளிலும், தவணைகளிலும், கவரன்மெண்டாருடைய வரவு கணக்கிலே, அட்வான்சாகக் கட்டிவிடவேண்டும். கொடுக்கப் பட்ட தொகைகள், அட்வான்சாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட தொகையைவிட அதிகப்பட்டதாக அக்கவுண்டண்ட் ஜெனரல் ரிபோர்ட்டு செய்தவுடனே சர்க்காருக்கு இன்னும் கட்டவேண்டிய தொகையைக் கட்டிவிடவேண்டும். முனிசிபாலிடியாரிடத்திலிருந்தாவது, இதரமான கூட்டத்தாரிடத்திலிருந்தாவது வரப்பற்ற அட்வான்ஸ்களுக்கு நேராகச் செலுத்துந் தொகைகளைச் செல்லுவைத்து; அக்கவுண்டண்ட் ஜெனரலானவர் கணக்குகளையும் செலுத்தப்பட்ட தொகைகளையும் இந்த விதிகளில் சொல்லியிருக்கிறபடி விவகரிக்க வேண்டும்.

முற்றிற்று.

விஷய சூசிகை.

நெம்பர்	விஷயம்.
1	ரயத்துவாரி நிலங்களுக்குத் தீர்வை போடுவதைப்பற்றிய ஏற்பாடுகள்.
2	ஜமாபந்திகாலத்தில் அதிகமல்லது குறைவு ஏற்பட்டால் அதற்குத் தீர்வை.
3	புஞ்சைக்கு தண்ணீர்த்தீர்வை.
4	சொந்தக் கிணறு.
5	சொந்த ஏரி கட்டிக்கொள்வது.
6	ஜீர்ணமான சர்க்கார் ஏரிகளை குடிகள் மராமத்து செய்வது.
7	குடிகள் தாங்கல்களை மராமத்து செய்வது.
8	காட்டாறு, மடுவு இவைகளிலிருந்து ஜலம்பாய்கிற நிலங்களுக்குத் தீர்வை.
9	தனிமரமும், சர்க்கார் தோப்புகளும்.
10	சொந்தத்திற்கு வைக்கிற தோப்புகள்.
11	அக்கிரமமாய் நிலங்களில் ஆக்கிரமித்தல்.
12	இருபோக சாகுபடி.
13	ஜலம்பாயாத நஞ்சை நிலம்.
14	உடைந்துபோன ஏரியின் உள்வாய் நிலங்கள்.
15	ஹக்கு சாசனம்.
16	பட்டாவை மாற்றவேண்டிய விதிகள்.
17	நிலங்களை மாற்றுவது.
18	ஜமாபந்தி.
19	ரிமிஷன் அல்லது வரி தள்ளுபடி.
20	பட்டா நிலங்களில் குடிகளுக்கிருக்கும் சுதந்திரமும் கடமைகளும்.
21	கூட்டுப்பட்டா.
22	பட்டா கொடுத்தல்.
23	நிலங்களை உட்பிரிவாகச் செய்வது.
24	கவுல்கள்.
25	தீர்வைக்காக நிலத்தைப் பெற்றுக்கொள்ளவேண்டிய விதிகள்.
26	தர்க்காஸ்தின் விதிகள்.
27	தீர்வை யேற்படாத நிலங்கள் தர்க்காஸ்து.
28	நிலத்தை ராஜிநாமா செய்வது.
29	தீர்வையேற்படாத புரம்போக்குத்தரிசி நிலங்களை யினமாகக் கொடுப்பது.
20	வீடுகட்ட நிலம் கொடுப்பது.
31	ஜமீன் சொத்துக்கு வார்சு.
32	கிஸ்திசெலுத்துவது.

நெம்பர்	விஷயம்.
33	வருஷவாரி கிஸ்திவசூல்.
34	கிஸ்திவசூலைத் தள்ளிவைத்தல்.
35	பழமுதல் பாக்கிவஜா.
36	கிஸ்திவசூல் யார்செய்யலாம்.
37	1864௵ 2-வது ஆக்ட்டின்படி நடவடிக்கை.
38	சர்க்கார் பாக்கிக்காக விர்ப்பனைசெய்வது.
39	அப்புறப்படுத்திய நிலத்தை ரிவினியூ பாக்கிக்காக ஏலம்போடுவது.
40	பூமியின் சுவான்தாரன் இன்னானென்று சந்தேகமாயிருந்தால் நடவடிக்கை.
41	கவரன்மெண்டாருக்காக ஏலத்தில் வாங்குவது,
42	பிராசஸ் சேர்ப்பிப்பது.
43	சீவில் கோர்ட்டாரால் விற்கப்பட்ட நிலத்தின்பாக்கியைவசூல் செய்து.
44	ஷை கோர்ட்டாரால் ஜப்திசெய்த நிலத்தின் ரிவினியூ பாக்கியை வசூல் செய்வது.
45	துப்புச் சொல்லுகிறவர்களுக்கு வெகுமதி.
46	நிலவிர்த்திக்குக் கடன்வாங்குவது.
47	1831௵ 6-வது ஆக்டின்படி நடவடிக்கை.
48	இனாமும் அதைச்சார்ந்த சங்கதிகளும்.
49	இனாம் விஷயத்தில் கலெக்டர் வேலை.
50	வார்சு பரம்பரை.
51	இனாம்களை உட்பிரிவு செய்வது.
52	உள் குத்தகை முதலியது.
53	இராஜாங்கத்தார் எடுத்துக்கொண்ட இனாம்களுக்கு காம்பென்சேஷன் கொடுப்பது,
54	இனாம் நிலங்களுக்குத் தண்ணீர்த்தீர்வை.
55	மானியக்குறைவு அல்லது அதிகம்.
56	இனாம்களை விட்டுவிடுவது.
57	இனாம்களை விற்பது.
58	வழிப்போக்கர்களுக்கு தர்மசத்திரம்.
59	கோர்ட் ஆவ் வார்ட்ஸில் வரி வசூல்செய்வது.
60	ஷை தீர்வை வஜா.
61	பவுண்டு பண்டு.
62	ஜனனமரண ரிஜிஸ்டர்.
63	தேவாலய உற்சவம்,
64	அம்மை குத்துதல்.
65	வெள்ளத்தைப்பற்றி தர்க்கியடிப்பது.
66	தொத்துவியாதி சம்பவித்தபோது நடவடிக்கை.
67	தண்டுகளுக்கு வழியில் சாமான் கொடுத்தல்.

நெம்பர்	விஷயம்.
68	சர்க்கூட்டில் போகிற டிஸ்ட்ரிக்ட் ஆபீசர்களுக்கு சாமான் சேகரித்துக் கொடுத்தல்.
69	கிராமக் கணக்கு, தாலூகா கணக்கு.
	இரிகேஷன் விஷயமாய் ரிவினியூ செட்டில்மெண்டாரின் விதிகள்,
	PART II.
	இரண்டாம் பாகம்.
	சென்னபட்டணம் 1864௵த்து 2-வது ஆக்ட்.
	ஷை 1865௵த்து 8-வது ஆக்ட்.
	பொதுக்காரியங்களுக்கு நிலங்களை யெடுத்துக்கொள்ளும் பத்ததி.



உபயோகமுள்ள சட்டபுஸ்தகங்கள்.

	ரூ.	அ.	ப
ஹிந்து லா	1	4	0
ரெவினியூ லா	1	4	0
விவகாரசிந்தாமணி	2	4	0
சிவில் ல[illegible]	2	4	0
கிரிமி[illegible]	2	8	0
மக[illegible]	2	4	0

[illegible]நாவல்போன்ற ஆச்சரியமான புதுக்கதைகள்.

இரத்நவிமானம். வி. பி. தபால்செலவுள்பட ...	0	14	0
தாரு சகாசுவம்	0	14	0
நாளாகினி விஜயம்	0	14	0
சுலோசன விஜயம்	0	14	0

மேற்சொன்ன புஸ்தகங்களின் விபரமான கியாட்லாக்கை இப்புத்தகத்தின் முதலில் காணலாம்.

☞ ஒரேசமயத்தில் ஒவ்வொரு புஸ்தகத்திலும் 5 வாங்குகிறவர்களுக்கு ஒரு புஸ்தகம் இனமாய் அனுப்பப்படும்.

குறைந்தது 5 ரூ-க்கு புஸ்தகம் வாங்குகிறவர்களுக்கு தபாற்சிலவின்றி புஸ்தகமனுப்பப்படும்.

☞ எம். வி. புக்டிபோ,

வேபரி—மதராஸ்.